13702

உ

கொக்குவில்

கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

பிரபந்தத்திரட்டு

★

KOKUVIL

KIRUPAKARA SIVASUBRAMANIYA SWAMI KOVIL

(Puthukkovil)

7th June 1990.

255.34
சிவசுப்
SL1PR

திரு. வே. இரத்தினப்பிரகாசம்.
115/4, W. A. சில்வாமாவத்தை
கொழும்பு 6.

கொக்குவில்

கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

(புதுக்கோவில்)

255.34
S4PR
13702

கொக்கூர் புதுக்கோவில்

பிரபந்தத்திரட்டு

இஃது பிரமோதூத வருஷம் வைகாசி மாதம் 24 ம் திகதி கோவிலில் நடைபெற்ற இரதோற்சவத்தன்று வெளியிடப்பட்டது.

13702.



KOKUVIL

KIRUPAKARA SIVASUBRAMANIYA SWAMI KOVIL

(Puthukkovil)

7th June 1990.

உள்ளடக்கம்

பக்கம்

1. பதிப்புரை

2. சித்திவிநாயகர் ஒருபாவொருபது — 1

3. சித்திவிநாயகர் திருவுஞ்சற் பதிகம் — 17

4. கொக்கூர்க் கிருபாகர சிவசுப்பிரமணியர் பதிற்றுப்பத்தந்தாதி — 31

என்னுரை — செ. வேலாயுதபிள்ளை கனடா

அணிந்துரை — புலவர் கீரன் தமிழ்நாடு

5. கொக்கூர் ஸ்ரீ தண்டபாணி விருத்தம் — 56

6. கொக்கூர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஊசல் — 57

எச்சரிக்கை, கீர்த்தனங்கள் — உ. வே. சாமிநாதையர்

7. கொக்கூர் புதுக்கோயில் வேணுகோபாலன் திருவுஞ்சல் — 66

அ. நாகலிங்கம்

8. ஓமையந்தாதி — 72

சி. சிலம்புநாதபிள்ளை

சிறப்புப் பாயிரம் அ. சிவசம்புப்புலவர் உடுப்பிட்டி — 73

அ. குமாரசுவாமிப்பிள்ளை சுன்னாகம் — 76

சு. சரவணமுத்துப்பிள்ளை வரணி — 76

முன்னுரை செ. வேலாயுதபிள்ளை — 77

நன்றியுரை பதிப்பாளர் — 86

அரும்பதவிளக்கம் செ. வேலாயுதபிள்ளை — 95

9. சிலம்புநாதபிள்ளை — 106

10. வேணுகோபாலர் மீது பாடிய ஒருபா ஒருபஃது — 109

அணிந்துரை

திருமதி வசந்தா வைத்தியநாதன்

13702



சிவமயம்

பதிப்புரை

புதுக்கோவில் முருகன் மீது கொக்குவில் சபாரத்தின முதலியார் இயற்றிய பிரபந்தங்களுள் ஒரு பதிற்றுப் பத்தந்தாதியும் அடங்கியிருந்ததாக அறிகிறோம். ஆனால் யாம் அரிது முயன்று தேடியும் அது இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. எனவே தமிழ்ப் புலமை வாய்ந்த அன்பர் செ. வேலாயுதபிள்ளையை கொக்கூர் முருகன் பேரில் பதிற்றுப்பத்தந்தாதி இயற்றும் பணியில் ஈடுபடுத்தத் திருவருள் எம்மைத் தூண்டியது அவ்வன்பர் கொழும்பிலிருக்கும் போதே அவருக்கு யாம் சொல்லியிருந்த இவ் வேண்டுகோளை அவர் கனடா தேசம் 1988 பங்குனியில் செல்ல நேர்ந்தும் மறவாதிருந்து 1988 ஆடியில் "கொக்கூர்க் கிருபாகரர் பதிற்றுப் பத்தந்தாதி" என்னும் நூலை பிரபந்தத்தை முருகனருளால் நிறைவேற்றி யனுப்பியுதவினர். தமிழ் நாட்டுப் புலவர் கீரன் அவர்களது அணிந்துரை இந்நூலுக்கு அணி செய்கிறது. புதுக்கோவிற் சித்தி விநாயகர் மீது பாடப் பெற்ற "ஒருபாவொருபது" என்னும் பிரபந்தமும் அவ்வன்பர் கனடா விலிருந்து 1989 மாசியில் பாடி அனுப்பியவையே. "சித்தி விநாயகர்" திருவுஞ்ஞற் பதிகம்" என்னும் பிரபந்தத்தை 1987 புரட்டாசியில் அவர் பாடித் தந்தருளினர். புதுக் கோவிலான் தொண்டாக ஞான தானம் செய்துவரும் இச் செல்வனன்பருக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இவை யாவும் இன்று அச்சேறி இப் பிரபந்தத் திரட்டை அலங்கரிக்கின்றன.

கொக்கூர் ஸ்ரீ தண்டபாணி விருத்தமும், ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி ஊசல், எச்சரீக்கை, கீர்த்தனங்கள் முதலியன டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களால் 1891 ம் ஆண்டில் இயற்றியவை. இவற்றைக் கொக்கூர் முருகனுக்குப் பொருந்துமாறு அமைத்துச் சிறு மாற்றங்களுடன் இத்திரட்டில் சேர்த்திருக்கிறோம். "என் சரித்திரம்" என்னும் நூலில் மகா மகோபாத்தியாயர் என்ற பட்டம் பெற்ற இப் பெரியார் கீழ்க் காட்டியவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

கொழும்புத்துறையில் இருந்த அன்பர் தண்டபாணி ஸ்ரீ முத்துக்குமாரர் ஆகிய இரு மூர்த்திகளின் விஷயமாக சில செய்யுள்களை இயற்றித் தரவேண்டுமென்று விரும்பி எனக்கு எழுதினர். எனவே தண்டபாணி விஷயமாகப் பத்து விருத்தங்களும், ஸ்ரீ முத்துக்குமாரர் விஷயமாக ஓர் ஊசல், எச்சரீக்கையும், ஐந்து கீர்த்தனங்களும் இயற்றினேன்" உ. வே. சா. இப் பாடல்களை அழிந்தொழிய விடாமல் இருக்க வழி செய்த அன்பர் ஸ்ரீ நி. ச. தியாகராசா ஐயர் அவர்களிடமிருந்து 1986 ஆவணியில் இவை எமக்குக் கிடைத்தன. பக்திச் சுவை கனிந்த நூற்றுக் கணக்கான பாடல்களைப் பாடியிருக்கும் இப் பெரியாரின் தமிழ்த் தொண்டையும் புலமையையும் எமது இளஞ் சந்ததியினரும் அறிந்து கொள்ள இப் பனுவல்கள் வாய்ப்பளிக்கும் என்ற நம்பிக்கையிலேயே இவற்றை மீளப் பதிப்பித்து இத்திரட்டில் சேர்த்திருக்கிறோம். பலகாலமாகப் புதைந்து கிடந்த தமிழ் நூல்களை எடுத்துத் துலக்கி ஒளியூட்டி தமிழுலகம் கண்டு கற்று இன்புறச் செய்த தமிழ்த் தாத்தாவுக்கு யாம் வேறென்ன கைமாறு செய்ய முடியும்.

கடைசியில் சேர்க்கப்பட்டிருப்பது "ஒழையற்தாதி" என்னும் பிரபந்தம் இவை கொக்குவில் சின்னத்தம்பியின் புதல்வரான சிலம்பநாத பிள்ளையால் ஆக்கப் பெற்று 1880 ம் ஆண்டு விக்கிரம வருஷம் ஐப்பசி மாதம் பதிப்பித்து வெளியிடப்பட்டவை, இந் நூல் இன்று கிடைத்தற்கரிதானமையால் இத் திரட்டில் முழுமையாகச் சேர்க்கப்

பட்டு அரும்பதவுரை விளக்கத்துடன் தொகுத்தளித் துள்ளோம். விநாயகப் பெருமான் புகழ் கூறும் இப் பழைய பிரபந்தத்தை தமிழுலகம் காலங் காலமாகப் பேணிப்போற்ற வேண்டுமென்பது எமது வேணவா. 1976 ம் ஆண்டு ஆவணியில் வெளிவந்த கொக்குவில் இந்துக் கல்லூரிச் சஞ்சிகையிலிருந்தே இவ் வந்தாதியின் முதலாவது பாடல் எமக்கு அறிமுகமானது. அன்று தொட்டு முழு நூலையும் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த எமக்கு கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்கள் தம்மிடமிருந்த முதற் பதிப்பின் நட்டுச்சுப் பிரதியை 1988 ஆவணியில் தந்துதவினர்.

கோவில் விபரங்கள் அடங்கிய கொக்குவில் திருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மஹா கும்பாபிஷேக மலர் விசுவாவசு ஆண்டு பங்குனித் திங்கள் 10ம் நாள் (31 – 3 – 1966) முதன் முதலாக வெளிவந்தது, பின்னர் தேர்திருப்பணி மலரை சித்திரத்தேரில் வெள்ளோட்ட தினமான ருதிரோற்காரி ஆண்டு வைகாசிமாதம் 9ம் திகதி (23 – 5 – 1983) வெளியிட்டோம், தேர்த்திருப்பணி நன்கொடையாளர் பட்டியலும், வரவு செலவுக் கணக்குகளும், பக்திப் பாமாலைத் திரட்டும் அடங்கிய ''சித்திரத் தேர்ச் சிறப்பிதழ்'' இரத்தாட்சி ஆண்டு வைகாசி மாதம் 30 ம் திகதி (12–6–1984) வெளியிடப்பட்டது. மீண்டும் குரோதன வருடம் மார்கழித் திங்கள் ஏழாம் நாள் (22 – 12 – 1985) கொக்கூர்ப் புதுக் கோவில் வேணுகோபாலன் திருவுஞ்சலும், அகஷய ஆண்டு சித்திரை மாதம் (5 – 5 – 1986) 22 ம் திகதி சண்டேச மலரும் வெளிவரத் திருவருள் துணை நின்றது, மேற் கூறிய நூல்களின் தொடர்ச்சியாக இன்று ''கொக்கூர் புதுக்கோவில் பிரபந்தத் திரட்டு'' என்னும் நூலைக் கிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமான் பாத மலருக்கு அர்ப்பணமாக்கி வெளியிடவைத்த திருவருளை வழுத்துகிறோம்

இப்போ எங்கள் கோவிலில் மகா மண்டபம் பழுதடைந்து திருத்தியமைக்கப்பட வேண்டிய நிலையிலிருக்கிறது. இந்த திருப்பணியைத் தொடங்குவதற்கு ரூபா ஒருலட்சத்துக்கு மேல் தேவைப் படுகிறது, முருகன் அன்பர்கள் பணம் உதவி இத் திருப்பணியினையும் தொடங்கி நிறைவேற்ற வள்ளி தெய்வயானை சமேத கிருபாகரப் பெருமான் அருள் புரிவாராக.

''பாடப் படிக்கப் பயனு நினைக்கன்பு
கூடக் கருணை கொழித்தருள்வாய் - தேடவரும்
மந்தா நிலம் தவழும் மாமூர் மாணகர் வாழ்
கந்தா கடம்பாகு கா''

— மீனாட்சி சுந்தரம்பிள்ளை

இல: 15/4 டவிள்ளு ஏ. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை,
கொழும்பு. 6.
10 – 4 – 1989

செ. இரத்தினப்பிரகாசம்
புதுக்கோவில் தொண்டர் குழு
கொழும்பு

ஓம்
கணபதி துணை

கோக்குவிற் சித்திவிநாயகர் ஒருபா வொருப:து

திருச்சிற்றம்பலம்

(அகவல்)

1

திருமகள் மருமகள் இருவரும் மருவிவாழ்
அருமை யுடைய கொக்குவில் ஆங்கண்
கிருபா கரனெனக் கிளங்கும் முருகப்
பெருமான் கோயிலிற் பீடுற விளங்கும்
சித்தி விநாயகத் தேவே வணக்கம்

அத்தி முகத்தெம் ஐயனே வணக்கம்
ஒரு கொம் பிருசெவி முக்கண் நால்வாய்
ஐங்கரங் கொண்டருள் மங்கல மூர்த்தீ
பொற்புறு முடியும் பொன்னுதல் ஒடையும்
தெற்றிவெள் ளீரும் நேர்படு திலகமும்

பொன்னிற மேனியும் பன்மணி மார்பும்
இலங்குபூ ணூலும் இலம்போ தரமும்
துலங்கரைப் பட்டியும் தூயபட் டாடையும்
அங்குசம் கொம்புகொள் செங்கரம் வலத்தும்
பண்ணியம் பாசம் பரித்தகை இடத்தும்
கிண்கிணி வீக்கிய கிளிரு தாளும்

விளக்கக் குறிப்புகள்:-

இப் பாடலில் கோயிலிற் காணும் விக்கிரகத்தை வைத்துக் கொண்டு, விநாயகரின் அகில அண்டமும் அளாவிய திருப்பெருவடிவைச் சிந்திக்கும் முறைகூறப் படுகிறது.

மருமகள் – கலைமகள்; இலக்குமிக்குச் சரஸ்வதி மருமகள் முறையினர். மாமியும் மருகியும் ஒந்து வாழ்தல் அரிது என்னும் உலக வழக்குக்கு மாறுகக் கொக்குவிலில் செல்வமும் கல்வியும் பொருந்தியிருத்தலின் இவ்வாறு கூறப்பட்டதென்க. பீடுற மேம் பாடு பொருந்த; சைவ ஆலயங்களில் விநாயகருக்கு முதலிடம் கொடுக்கப்படுதலின். இவ்வாறு கூறப்பட்டது. அத்தி – யானை. நால்வாய் – நான்கும் வாய். நுதல் ஒடை – நெற்றிப் பட்டம். திலகம் – பொட்டு; சந்தனப் பொட்டின் மேல் சிந்தூரப் பொட்டும் இடுவது வழக்கம். இலம்போதரம் – தொங்கும் பெருவயிறு. ஒரு தந்த கொம்பு பிடித்த அபயகரமும், மோதகம் ஏந்திய கை வரதமும் ஆகும் (கணபதி உபநிடதம்) பண்ணியம் – பலகாரம்; இங்கே மோதகத்தைக் குறிக்கும். வீக்கிய – கட்டிய.

கொண்டு விளங்கும் கோலந் தோன்றினும்
அண்ட முகடுன் அணிமுடி யாமே
தண்மதி ஞாயிறு தழலெனும் முச்சுடர்
கண்மூன் றுகுங் கடவுள் நினக்கே

விண்ணகம் மார்பே விளங்குமீன் பூணே
நாற்றிசை தோளே நடுப்புவி வயிறே
பாற்கட லதுநின் பட்டுடை யாமே
பாதலத் துறையும் மணிமுடிப் பாந்தள்
ஆதரித் துன்னமக் காசன மாமே

என்றிவை முதலா இயல்புடை வடிவினொடு
ஒன்றிய தூய உருவிரு வகையாய்
விளங்குவை இறைவ விஸ்வயின் நீங்கி
விளங்கிய அறிவினர் உளங்கொளின் அல்லது
சிற்றறி வுடையேன் நினது
பெற்றி புகலுதல் பெருநவை யாமே

தழல் – நெருப்பு. விண்ணகமே நின் மார்பாகும். மீன் – நட்சத்திரங்கள்; நட்சத்திரங்களே மார்பில் விளங்கும் பலவகை ஆபரணங்களாகும். நடுப்புவி – மத்திய உலகம்; நடுப்புவியே வயிறாகும். பாற்கடலே பட்டு உடையாகும். 'ஸுக்லாம்பரதரம்' எனத் தொடங்கும் வடமொழி விநாயகர் வணக்கச் சுலோகத்தில், வெள்ளை ஆடை அணிந்தவராகக் கூறப்படுதலின், பாற்கடல் ஆடை யெனப்பட்டது. பாந்தள் – பாம்பு பாதலத் துறையும் பாந்தள் – ஆதிசேடன் எனப்படும் பாம்பு. ஆதிசேடன் விநாயகர் அடிகளைத் தாங்கும் ஆசனமாகும். தூய உரு – இறைவனுடைய உருவம், தோல் எலும்பு முதலிய தாதுக்களால் உண்டாகிய ஆன்மாக்களுடைய உருவம் போலாது, ஆன்மாக்கள் செய்யும் தியானம், பூசை முதலியவற்றின் பொருட்டுச் சத்தியாகிய திருவருட் குணங்களுள் இன்னது இன்னது இன்ன இன்ன அவயவம் என்று பாவிக்கப்படும் உருவமாதலின் தூய உரு வெனப்பட்டது. இருவகை – ஆகமங்கள் விதித்தமுறைப்படி அமைந்த விக்கிரக வடிவம், அகில அண்டமும் அளாவிய திருப் பெருவடிவம் (விஸ்வ ரூபம்) என்னும் இருவகை. விஸ்வயின் நீங்கி விளங்கிய அறிவினர் – சிவன்முத்தர் – பெற்றி – தன்மை, இயல்பு. நவை – குற்றம்.

2

நவையில் காட்சியின் நல்லோர் கண்ட
சிவமெனும் அத்தச் செம்பொருள் நின்னின்
வேறன் றுயினும் விஸ்வநுகர் உயிர்க்குப்
பேறருள் வானுள் பெற்றி பிறிதாய்ச்
சிவனுமை பயந்தமுற் சேயெனச் சிவத்தின்
தவலருங் குணங்கள் சார்ந்து நின்றனை
ஆத்தி சூடி அமர்ந்த தேவதீ
மூத்த பிள்ளை யாயின முறைமையை
நூலோர் பலவிதம் நுவலுவர் யானும்
மேலோர் வழக்கினை மீள உரைப்பன்

ஆணவ உருவாம் அசுரனின் வலியால்
மாணழிந் தெய்த்த மாலயன் முதலாம்
விண்ணவர் தங்குறை கூறி வேண்டலும்
கண்ணுதல் உமையுடன் காட்சி மண்டபத்தில்
எழுதிய யாகீன இணையீன நோக்கிச்
செழு மறை முதலிச் சிந்தனை செய்ய

விளக்கக் குறிப்பு:-

(இப்பாடலில் விநாயகரின் தோற்றமும் கணபதியான வரலாறும் கூறப்படுகிறது)

காட்சி – அறிவு. நனவயில் காட்சிமின் நல்லோர் – ஒன்றிய சித்தையால் நியாவித்து உண்மை கண்ட முனிவர். சிவம் எனும் செம்பொருள் – 'பிரமம்' என வேதமும் 'சிவம்' என ஆகமமும் சுட்டும் அந்தப் பரம்பொருள், அந்த என்பது உலகறி சுட்டு. சிவமெனும் செம்பொருள் நீயே; ஆயினும், ஆன்மாக்களுக்கு முத்தி அருளுதற் பொருட்டு நீ வேறு தன்மை யுடையையாய்ச் சிவனுக்கும் உமைக்கும் மூத்த பிள்ளையாயினை என்றவாறு. பேறு அருள்வான் – பேறு அருளும் பொருட்டு, பயந்த – பெற்ற நவலருங் குணங்கள் – கெடுதலில்லா எண்குணங்கள். சிவனுடைய எண்குணங்களையே விநாயகரும் கொண்டவர் என்றவாறு. ஆத்தி சூடி – ஆத்தி மாலை அணிந்த சிவன். அமர்ந்த தேவன் – விரும்பும் கடவுளாகிய விநாயகர். விநாயகர் தோற்றத்தனம் புராணங்கள் பலவிதம் கூறுமாயினும், யான் உயர்ந்தோர் கூறும் மரபினைப் பின்பற்றிக் கூறுவேன் என்றவாறு. ஆணவ உருவாம் அசுரன் – கசமுகன்; அவன் ஆணவமே உருவானவன். மாண் – மாட்சிமை; எய்த – இழைத்த. மால், அயன் முதலிய வானவர் என்ன. காட்சி மண்டபம் – சித்திரமண்டபம். இணை – ஆணும் பெண்ணுமாகிய சோடி. மறை முதல் – பிரணவம்.

ஆங்கப் பிரணவம் ஒருவடி வாகிப்
பாங்குறு கயமுகப் பாலனாய் வந்து
வடியுறு கொம்பொடித் தசுரனை வாட்டி
அடிதோமும் அமரர் அல்லல் கடிந்தனை

வலியழிந் தசுரன் எலியாய் வருதலும்
வாகன மாகென வரங்கொடுத் தருளினை
ஏக தந்தத் தெம்பெரு மானுனைக்
கணங்களுக் கிறையாய்க் கடவுளர் தேர்தலும்
கணபதி யாகிக் கத்தனு மானாய்

மாலயன் கிழா மற்று மொருவர்
மேலிலா மையினால் விநாயக னானாய்
வழிபடு வோர்க்கு வருமிடர் போக்கியும்
வழிபடா தார்க்கு வல்லிடர் ஆக்கியும்
விக்கினை சுரனென விளங்குதல்
கொக்குவில் அமர்ந்த கோர்வன தருளே

வடியுறு – கூரிய. கசமுகாசுரன் பிற ஆயுதங்களால் வெல்லப்படாத வரபலம் பெற்றிருந்தமையால், கயமுகர் தமது வலக் கொம்பை ஒடித்து அசுரன் மீது எறிய, அது அசுரனின் மார்பைப் பிளந்து மீண்டுவந்து கயமுகர் கையில் அமர்ந்தது. வலிய

முந்த அசுரன் பெருச்சாவியாகி வர, கயமுகர் அதனை வாகனமாக்கி அருள் செய்தார் (ஆணவம் என்னும் மூல மலமே கசமுகன் என்னும் அசுரனாக உருவகிக்கப் பட்டது. அதற்கு அழிவில்லையாதலின், வாகனமாக அடக்கி யாளப்பட்டது.) கடவுளர்– தேவர் கயமுகர் கணபதியான வரலாறு. சுந்தன் – கடவுள், (கடவுள் என்பது ஏகனாகிய இறைவனையே பொதுவாகக் குறிக்கும்; கடவுளர் எனும் பன்மை வடிவம் கீழ்ப்பட்ட தேவர்களைக்குறிக்கும்) மாலும் அயனும் தமக்குக் கீழாக, வேறொருவர் மேலாக இல் லாமையின் 'விநாயகன்' என்னும் பெயர் பெற்றார்என்க விக்கினேசுரன் என்பதன் விளக்கம் கூறப்பட்டது: வழிபடுவோருக்கு வரும் இடர் களைதல் –அறக்கருணை (சிஷ்ட பரிபாலனம்); வழிபடாதார்க்கு இடர் வருவித்தல் – மறக்கருணை (நிக்கிரகம்) இரண் டும் இறைவனுடைய அருட் செயலே.

3

அருள்மந்ம பொழியும் ஆனை முகவ
பொருள் வகை தேரின் பொருவில் பொருள் நீ
இருள் மலத் தழுந்தும் உயிர்களுக் கிரங்கி
வருவாய் பலப்பல வடிவினில் நீயே
உலகொடு நுகர்பொருள் உடலிலை ஈந்து

நலமுற விஞைசெய நல்வளி நாட்டினாய்
விஞைசெய் றிவும் விஞைத்திறன் வெற்றியும்
நினைப்பவர்க் கருளும் நீர்மையை அதனால்
வல்லபை தேவியை மடிமேல் வைத்து
வல்லபை கேள்வனும் வயங்குவை அன்றியும்

புத்திசித் தியெனும் பூவையர் இருவரை
ஒத்திரு மருங்கினும் ஒருங்குடன் வைத்துச்
சத்தி கணேசனுய்த் தரிசனம் தருவாய்
இத்திறம் அன்றியச் சக்திகள் தம்மை
உன்னுளே கரந்துவைத் தொருவனுய் நிற்பதும்
உன்னியல் பென்பதை உணர்த்துவை உன்றனை

விளக்கக் குறிப்பு:-

(இப்பாடலில் விநாயகரின் சக்திகளும் கோலவிகற்பங்களும் கூறப்படுகின்றன)

யானைக்கு மும்மதம் வடிவதைப் புலவர்கள் இலக்கணமாகக் கூறுவர். ஆதலால் யானை முகத்து விநாயகருக்கும் மும்மதம் கூறுவர் சிலர். ஆயின், தகை மாத்திரம் யானைத் தலையாதலின், கன்ன மதம் கபோல மதம் என்னும் இருவகை மதங்களே விநாயக ருக்குக் கூறுதல் ஏற்புடைத்து. இங்கே, அருளே மதமாக உருவகிக்கப்பட்டது. பொரு வில் பொருள் – ஒப்பு இல்லாத மெய்ப் பொருள். இருள் மலம் – ஆணவ மலம். விஞை செய்யறிவு – புத்தி; விஞைத்திறன் – வல்லபம்; வெற்றி – சித்தி. விநாயகரின் ஒரு மூர்த்தம் "வல்லபை விநாயகர்" என்பது; வல்லபை தேவியை மடிமீது இருத்தி வைத்திருக்கும் தோற்றம் அது. மற்றொரு மூர்த்தம் – சித்திகணேசர் என்பது; இருபக் கத்திலும் புத்தி, சித்தி என்னும் இரு சக்திகளை வைத்திருக்கும் மூர்த்தமே இது. (தஞ்சை, திருவாலவாயில் சக்திகணேசர் விக்கிரகம் தனி சிறந்தது.) சைவக் கோட்

பாட்டில் சக்தியோடு இறைவன் பின்னமில்லாமல் இருப்பவன். ஆகையால், இலங்கையிலுள்ள கோயில்களில் தனித்திருக்கும் விநாயகர் தமது சக்திகளைத் தம்முள்ளே கரந்து வைத்துள்ளார் என்பது உய்த்துணரத் தக்கது.

சிறுறு மேனி செய்யதே யெனினும்
காருறு மேனியுங் காட்டிநின் றருள்வாய்
கரிமுக முள்ள கடவுளென் றுலும்
நரமுகங் கொண்டும் வரமருள் வாயே

கண்டத் தாரம் கண்டிகை யன்றியும்
வெண்டலை மாலை மீலதலு முண்டே
உலகெலாம் மக்கள் உலவணங் குவதால்
பலவகைக் கோலம் கொள்ளலுன் பண்பாம்
வீட்டிலும் மன்றிலும் வீதிக் கரையிலும்

கோட்டிலும் வயலிலும் கொழுமர நிழலிலும்
காட்டிலும் காக்குங் கடவுளென் றுனக்கு
நாட்டிடும் உருவம் நவிபல வாமே
கொத்தலர் சோலைக் கொக்குவில் உறையும்
சித்தி விநாயகத் தேவே உன்னை

எத்நிறம் அன்பர்கள் ஏத்துவர்
அத்நிறம் நிற்பதுன் அருளினுக் கியல்பே

செய்யது – செந்நிறத்தது. காருறு மேனி – கரிய மேனி. ஆகமங்கள் விநாயகர் செந்நிறத்தவர் என்று கூறுகின்றன. ஆயினும், நூல்களில் செம்மேனியும் கருமேனியும் கூறப்படுகின்றன. ('வேழத் திருமுகத்துச் செக்கர் மேனி விநாயகனே' – கபிலர் மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை – 3 ; 'நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்' ஔவை: விநாயகர் அகவல்). கரி முகம் – யானை முகம். நரமுகம் – மனித முகம். திருச்செங்காட்டங்குடியில் விநாயகர் நரமுகத்தோடு விளங்குகின்றார். கண்டம் – கழுத்து. ஆரம் – முத்துமாலை. கண்டிகை – பதக்கம். வெண்டலை – மண்டையோடு, (கபால மாலையணிந்த கபாலவிநாயகர் சிலையொன்று யாவா நாட்டிலிருந்து சில ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்குக் காட்சிக்காகக் கொண்டுவரப்பட்டது.) மிலதல் – அணிதல். உலகெலாம்... — இந்தியா, இலங்கை மட்டுமல்லாமல் நிபெத்து, பர்மா, இந்தோசீனா, சீனு, யப்பான் முதலிய இந்து, பௌத்த மணம் வீசும் எல்லா நாடுகளிலும் விநாயகர் வழிபடப்படுகிறார். மன்று – பொதுவிடம். கோடு – நீர்க்கரை (ஆற்றங்கரை, குளங்கரை) கொழுமர நிழல் – ஆல், அரசு, மருது போன்ற பெரிய நிழல் தரும் மரங்களின் கீழ் கொத்தலர் – கொத்தாக மலரும் மலர்களையுடைய.

4

இயல்பினில் வேறுய் இயைபினில் ஒன்றுய்
உயிர்க்குணர் வூட்டி உடனுய் நின்றே
உலகுயிர் புரக்கும் ஒருபரம் பொருளே
பலபல சமயம் பாரினிற் படைத்து
மன்பதை யுலகம் மனவளர்ச் சியிலில்

முன்பினுஞ் சிறக்கும் முறைமையில் வகுத்தாய்
சமய வாதிகள் தத்தம் நூல்வழி
அமையும் அளவையின் அறிந்த அளவே
அவ்வவர் உள்ளச் சாயலை ஆங்கு
வெல்வே றுருக் காட்டி விளங்கும்

பனிங்கென நிற்கும் பான்மை உணராது
தூளங்கு மனத்தேன் தொடர்ந்த கல்வியில்
அணுவைப் பிளந்ததன் அகத்துள அமைப்பை
நுணுகி ஆயும் நுழைபுலங் கொண்டு
பொருளியல் பாயும் பௌதிகம் முதலா

அருளில வாகும் அறிவியற் கலைகள்
பல்லா யிரமெனப் பல்கிப் பெருகிச்
செல்லா நிற்குமிச் செய்மதி யுகத்தில்

விளக்கக் குறிப்புகள்:-

(இப்பாடலில் பரம்பொருளின் உண்மை இயல்பும், இக்கால விஞ்ஞானத்தின் விளைவும் கூறப்படுகின்றன)

இயல்பினில் – பொருட்டன்மையினால் – இயைபினில்– கலப்பினால், ஒருபரம் பொருளாகிய நீ, பொருட்டன்மையினால் உலகு, உயிர் ஆகியவற்றின் வேறுயும், கலப்பினால் (உடலும் உயிரும் போல) ஒன்றுயும், உயிருக்கு உயிராய் நின்று உணர்வூட்டுவதனால் உடனுயும் நிற்பாய் என்றவாறு. மன்பதை – மக்கட்பன்மை. முன்பினும் சிறக்கும் முறை – மலர்ச்சி அல்லது கூர்ப்பு (evolution). மக்கள் மனவளர்ச்சியினால் மேன்மேலும் சிறக்கும்வண்ணம் நீயே பல பல சமயங்களை உலகில் உண்டாக்கினாய், அளவை – தருக்கப் பிரமாணம், பல்வகைச் சமயவாதிகளும் –தத்தம் சமய நூல் வழியிலே சென்று அங்கே கூறப்பட்டுள்ள பிரமாணப்படி அளந்து அறிந்த வண்ணம் தத்தம்மனச் சாயலையே உன்பாற் கண்டு வெவ்வேறு தெய்வங் கொள்ளுமாறு நீ பனிங்குபோன்று நிற்பாய் – தூளங்கு மனத்தேன் – நீ பனிங்குபோல நிற்கும் மெய்ம்மையை உணராமையால் மனிதரே கடவுளைத் தத்தம் மனம் போனவாறு படைத்து விட்டனர் என்று, கடவுள் நம்பிக்கை இழந்து கலங்கிய மனத்தேன். நுழைபுலம் – கூர்த்த மதி, பொருளியல்பு ஆயும் பௌதிகம் (Physics) முதலிய அறிவியற் கலைகள். அருளில வாகும் அறிவியற் கலைகள் – இறையருள் உண்மையை ஒப்புக்கொள்ளாத விஞ்ஞானக் கலைகள். செய்மதி யுகம் – செயற்கைச் சந்திரனைப் (Satellife) படைத்துள்ள விஞ்ஞான யுகம்.

விஞ்ஞானம் ஒன்றே மெய்ஞ்ஞானம் என்றும்
செஞ்ஞா யிற்றைத் மதவெனத் தொழுதல்

அஞ்ஞா னத்தின் அடைவே என்றும்
உலகுயிர் கடந்த உணர்வுடை முதற்பொருள்
இலையே என்றும் இயற்கையின் வேறுய்
இறையென ஒருபொருள் இருப்புக் கோடல்
குறைபா டுடைய குழந்தைமை என்றும்

நாத்தமும் பேற நாத்திகம் பேசுவோர்
சாத்திரம் ஒருசில சற்றே கற்றபின்
உன்னிலே மறுத்தே ஊழ்வினை வசத்தால்
இன்னலுற் றேற்குன் இருப்பினை உணர்த்திப்
புல்லறி வதனைப் போக்கி உய்யும்
நல்லறி வூட்டியுன் தாளினை நாட
வைத்தனை கொக்குவில் வந்துறை
சித்தி விநாயகச் சிந்தாமணியே.

கதவு – தெய்வம், பல நாட்டவரும் சூரியனையே கடவுளாகக்கருதி வழிபட்டமை விஞ்ஞானத்தின் விளைவே என்றும், உலகையும் உயிர்களையும் கடந்து நிற்கும் அறிவுடைய மூல காரணப் பொருள் இல்லையே என்றும், இயற்கைக்கு வேறுகக் கடவுள் என்று ஒரு பொருள் இருப்பதாகக் கொள்ளுதல் பலவீனமுடைய குழந்தைப் பண்பே என்றும் நாத்தமும்பேற நாத்திகம் பேசும் பகுத்தறிவுவாதிகள், விஞ்ஞானவாதிகள் போன்றவர் கள் எழுதிய பல சாத்திரங்களுள் ஒரு சிலவற்றைச் சிறிதளவே கற்றபின், நீ உள்ளாய் என்பதை ஊழ்வினை வசத்தால் மறுத்துப் பேசி இடருழந்த எனக்கு, உன் உண்மையை உணர்த்தி, என் புல்லறிவை போக்கி, நான் உய்வதற்கான நல்லறிவை ஊட்டி, உன் திருவடிகளையே பற்றி நிற்கச் செய்தாய் என்றவாறு, இப்பகுதியில் நூலாசிரியர் தமது சொந்த அனுபவத்தைக் கூறியுள்ளார்.

5

மணிநிற மாயோன் மருகன் என்றும்
அணிமயில் ஊர்வோன் அண்ணன் என்றும்
கன்னியர் மூவர் கணவன் என்றும்
மன்மதன் தலைக்கு மைத்துனன் என்றும்
சிவகுடும் பத்துச் சேட்டன் என்றும்

பவமிலா உனக்குப் பவமுறை கூறி
மண்ணுல கந்தவர் வழுத்துவர் அன்றியும்
கண்ணுதல் உந்தை கையகத் திருந்த
மாமுனி தந்த மாங்கனி யதனைக்
காமுறு நீயும் கந்தனும் கேட்க

உலகினை முந்துற வலம்வரு மவற்கே
இலக்குமிக் கனியினை ஈவேன் என்றலும்
இனையோன் மயில்மிசை இவர்ந்து வருமுன்
வினைஇ அம்மையப் பரையுடன் வணங்கி
மாங்கனி பெற்று மகிழ்ந்தாய் அன்றியும்
வாங்குவில் வேடர் மனையிடை வள்ளியைக்

விளக்கக் குறிப்புகள்

(இப்பாடலில் மக்கள் உலகியல் முறையை விநாயகருக்கு ஏற்றிக் கூறுதல் சொல்லப்படுகின்றது)

மணி – நீலமணி. மாயோன் – திருமால். அணிமயில் ஊர்வோன் – முருகன். அணிமயில் – அழகியமயில். கன்னியர் – வல்லபை, சித்தி, புத்தி என்னும் சக்திகள், மன்மதன் திருமாலுக்கு மகனுதலின், விநாயகருக்கு மைத்துனனுவான். சேட்டன் –

மூத்தபின்னோ, பவம் – பிறப்பு, பவமுறை பிறப்புப் பற்றிய உறவு முறை, உந்தை உன் தந்தை, மாமுனி – நாரதர். காமுறும் – விரும்பிய, இலகும் – விளங்கும், இவர்ந்து-ஏறி ஊர்ந்து. வலோ இ – சுற்றி வந்து, வலம் வந்து, அம்மையப்பரை உடன் வலோ இ வணங்கி என்று கொண்டு கூட்டிப் பொருள் கொள்க. உடன் – அக்கணமே வாங்கு வில் – வளைந்த வில்.

களவினில் மருவக் கருதிய கந்தன்
உளமுறை உன்னை நீனைத்தலும் உடனே
களிமுய் வந்தவன் கருத்தினை முடித்தாய்
நளிர்மதி சூடிய நம்பன் மேனுள்

முப்புர மெரிசெய முனையுமுன் உன்னை
ஒப்புடன் நிலையா ஒருபினை கருதி
அச்சுதன் முதலா அமரர் புனைந்த
முச்சகத் தேரினை அச்சிறச் செய்தாய்
இன்னணம் நூலோர் இயம்புவ எல்லாம்

உன்னுங் காலென் உணர்வினை மயக்கும்
பத்தர்கள் பரவக் கொக்குவிற் பதிவாழ்
சித்தி விநாயகத் தேவ நின்னருள்
பெற்றவர் அறியின் அல்லது
மற்றவர் அறிவரோ நின்னிடை மயக்கே.

களவினில் மருவ – தமிழ் அகத்தினை ஒழுக்கமாகிய களவு முறையில் அனைய, (முருகப்பெருமான் முதியோன் வடிவில் வள்ளியிடம் வந்து, அவள் கொடுத்த தேனொடு கலந்த தினை மாவினை உண்டு, விக்கி, நீர்கேட்டு, வள்ளியுடன் நீர்த்துறைக்குப் போகையில் அண்ணனை நினைக்க, அவர் கவிழுக வருதல் கண்டு அஞ்சிய வள்ளி, முதியோன் வடிவில் நின்ற முருகனை முதுகுப் புறமாக அனைத்தாள் என்பது வரலாறு. அகத்தினையில் இது களிறுதரு புணர்ச்சி எனப்படும்.) தளிர்மதி – குளிர்ச்சியான பிறைச் சந்திரன். நம்பன் – சிவபெருமான் அச்சுதன் – திருமால், முச்சகத்தேர் – சுவர்க்கம், மத்தியவுலகம், பாதலம் ஆகிய மூவுலகையுமே தேராகச் சமைத்துச் சிவபெருமான் போருக்குச் செல்வதற்குத் தேவர்கள் கொடுத்தனர் என்பது வரலாறு. அச்சிற – அச்சு முறிய (அச்சு + இற) இன்னணம் – இங்ஙனம், இவ்வாறு (இன்ன + வண்ணம்) நூலோர் – புராண காரரும் பிறநூல் செய்தோரும். இயம்புவ – சொல்வன மயக்கு – பிரமிக்கச் செய்யும் செயல். உன்னிடமாக வைத்து நூலோர் கூறும் மயக்கை உன்னருள் பெற்றவர்க்கன்றி மற்றவர்க்கு அறிதல் அரிது என்க.

6

மயக்கறு காட்சியின் மாசில் மனத்தவர்
துயக்கறு சிந்தையில் தோன்றும் தூய
உருவினை யாவைத் திருமுக முடைமை
பிரணவம் யானென உணர்த்திய பெற்றியே
இருதினை இணைந்த திருவுருத் தாங்குதல்

இருதிணை உயிர்க்கும்யான் இறையெனு மாறே
முக்கண் உடைமை முச்சுடர் விழியுடை
நக்கன் யானென நவிற்று மாறே
தும்பிக் கையின் தொல்வடி வயிராம்
அம்பினைச் சிவமெனும் இலக்கினில் அழுந்த

எய்யும் வில்லென எண்ணி உயிர்கள்
உய்யும் வகையினை உணர்த்திய வாறே
தோற்செவி இரண்டு தொங்குதல் எல்லா
ஆற்றலு முளேனெனத் தேற்றிய வாறே
ஒருகோ டுள்ளமை ஒருமையி னோர்க்குப்

பரஞா னந்தரும் பதியெனு மாறே
ஐங்கரன் என்றல் ஐந்தொழில் இயற்றும்
சங்கரனே யானெனச் சாற்றிய வாறே
முன்கை ஒன்றில் மோதகம் ஏந்துதல்
இன்பம் சவேன் என்பதோர் குறிப்பே

விளக்கக் குறிப்புகள்

(இப்பாடலில் விநாயகரின் உறுப்பு முதலியவற்றுக்குத் தத்துவ விளக்கம் கூறப்படுகின்றது)

துயக்கறு – சோர்வு அற்ற, உருவினை – உருவமுடையாய். இருதிணை – உயர் திணையும் அஃறிணையும். அதாவது மனித உடலும் யானைத் தலையும் முச்சுடர் – சூரி யன், சந்திரன், அக்கினி. நக்கன் – சிவபெருமான். தும்பிக்கையின் தொல்வடிவு – 'ஓ' என்னும் தமிழ் எழுத்தின் வடிவம். தும்பிக்கை வில்லாகவும், உயிர் அம்பாகவும், சிவம் (பிரமம்) இலக்காகவும் உருவகிக்கப்பட்டுள்ளன. தோற் செவி – புறச்செவி; செவி கள் எல்லாமறிதல், எல்லாமியற்றல் என்னும் வல்லமைகளைக் குறிக்கும். ஒரு கோடு ஒற்றைக் கொம்பு, ஒருமையினோர் – மனம் ஒன்றிய மெய்யுணர்வுடையோர். மோதகம்– பேரின்பம் பயக்கும் ஞானத்தைக் குறிக்கும். இக்கரம், வரமளிக்கும் கையாகும்.

கோடா யுதத்தை கொடுவினை மாய்த்து
வீடுதரு வேனென விளக்குவ தாமே
அங்குசம் ஏந்துதல் ஐம்புல யானையைப்
பங்க முறுத்தும் பான்மைக் குறிப்பே
பாசக் கையது பணியார் தம்மை

வீசி வயக்கலே விளக்குங் குறிப்பே
பேழை போலும் பெருவயி றுடைமை
ஊழி முடிவில் உலகெலாம் உதரத் (து)
அடக்கி மீளப் படைப்பேன் யானென
ஏடுக்கத் நியல்பினை உணர்த்திய வாறே

செவ்விய இருதாள் செயலறி வென்னும்
அவ்விரு சத்தியை ஆளுதற் குறிப்பே
சிற்றெலி ஊர்தல் சீவரிற் கரந்துள
பற்றினை மேற்கொளும் பரிசுணர்த்துவதே
எங்கிவை முதலா இயல்புந் தோற்றமும்

ஓங்குமுன் பெருமை உணர்த்தவும் உணராப்
பொறியில் மாக்கள் புல்லறி வாண்மையை
வெறிகமழ் சோலைக் கொக்குவில் விநாயக
சிறுவர்தம் செய்கையிற் படுத்து
முறுவலித் திருப்பைநீ மூவா முதலே. 10

கோடாயுதம் – கொம்பாகிய ஆயுதம்; கோட்டாயும் எனவரற்பாலது விகாரத்தான் கோடாயுதம் என நின்றது. கொடுவினை – ஆணவ மூலம் ஆன்மாக்களிடத்துத் தொக்கு வல்வினை வயக்குதல் – வசப்படுத்தல், வழிக்குக் கொணர்தல். தம்மை என்னும் இரண்டாம் வேற்றுமை வயக்கல் என்னும் வினைப் பெயரோடு முடிந்தது. ஒடுக்கம் – தனு கரண புவன போக்கியங்களை முதற் காரணத்தில் ஒடுக்குதல், இது இறைவன் செய்யும் ஐந்தொழிலில் அழித்தல் எனப்படும். செயல் – கிரியாசத்தி; அறிவு – ஞான சக்தி. சீவர் – ஆன்மாக்கள்; எலி வாகனம் ஆன்மாக்களுள் மறைந்திருந்து அளிக்கும் கள்ளத்தன்மையான உலகப் பற்றினை வென்றடக்குவதைக் குறிக்கும். மேற்கொள்ளல் – வென்றடக்கல், பரிசு – பண்பு, தன்மை, பொறியில் மாக்கள் – திருவில்லா மக்கள். மாக்கள் ஐயறிவுடைய உயிர்கள், வெறி – வாசனை.

7

மூவா முதலே மூவருந் தந்தொழில்
ஓவா தூருற்ற உனைநினை வாரெனின்
ஆவா உன்னருள் ஆற்றலுக் களவிலை
நாவால் அவற்றை நவில்வதும் நன்றே
வீண்டுமை சாபங் கொண்டொரு பாம்பாய்ப் 5

பண்டுனை வேண்டப் பரித்தருள் புரிந்ததும்
இந்திரன் முன்னுள் இந்நிலம் வந்து
வந்தனை செயற்கென வைத்தகா வளர
நீர்தந் ததுவென நினைந்துனை வேண்டச்
சீர்மிகு பொதியின் தெய்வமா முனிவன் 10

கரக நீரைக் காகமாய்க் கவிழ்த்துப்
பெருகு காவிரிப் பெயர்பெற வைத்ததும்
குறுமுனி துரத்தக் குறும்புச் சிறுவனைப்
முறுவலித் தோடியம் முனிக்கருள் செய்ததும்
வியாசன் வேண்ட மேருவில் பாரதம் 15
தயாவுடன் கொம்பினுல் எழுதிய தகவும்

விளக்கக் குறிப்புகள்:-

(இப்பாடலில் விநாயகர் செய்த திருவருட் செயல்கள் கூறப்படுகின்றன)

மூவர் திருமூர்த்திகள். ஓவாது – ஒழியாமல் உளுற்ற – செய்ய, ஆவா – வியப்புக் குறிக்கும் ஓர் இடைச்சொல். வீண்டு – திருமால், உமை சாபமிட்ட வரலாறு; ஒரு போது சிவனும் உமையும் கவறு விளையாடிய போது, உமையவள் வெல்லவும் சிவனே வென்றவரெனத் திருமால் பக்கஞ் சார்ந்து சொன்னதனால், பாம்பாகுக வென்று உமை சாபமிட்டாள். பாம்பாகி அலைந்த விட்டுணு விநாயகரை வழிபட்டுப் பழைய

வடிவம் பெற்றார். வந்தனை செயற்கு – சிவ பூசை செய்வதற்கு. வைத்த கா – சிங்காழியில் உண்டாக்கிய பூங்கா. தெய்வமா முனிவன் – அகத்தியன். கரகம் – கமண்டலம். குறுமுனி – அகத்தியன் குறும்புச்சிறுவன் – விநாயகர் காகமாகிக் கமண்டல நீரைக் கவிழ்த்த பின், குறும்பு செய்யும் பிரமசாரிச் சிறுவனாகி நிற்க, அகத்தியன் துரத்திக் குட்ட வர, நிமித்துத் தமது சுயவடிவைக் காட்டி அருள்செய்தார். வியாச முனிவர் மகாபாரதத்தைச் சொல்ல, விநாயகர் அதை மேருமலையில் தம் ஒடிந்த கொம்பினால் எழுதினார் என்பது வரலாறு.

கோகரு ணத்நிற் குறியினை வைத்து
வேகத் திராவணன் வேண்டிய வாறே
குட்டித் தலையிற் கும்பிடும் அடியருக் (கு)
இட்ட சித்திகள் ஈவதற் கிசைந்ததும் 20

திருக்கயி லீக்கண் சேரன் உலாவை
அருத்தியோ டரன்முன் அரங்கேற்ற எழுகையில்
அவ்வையிங் கிலையெனக் கவ்வை கொள்ளலும்
புவனியில் உன்னைப் பூசித் திருந்தவள்
தவறிழைக் காமல் தடுத்தவள் வாயால் 25

அகவலுங் கேட்டபின் ஆதரித் தவனைத்
திகழுங் கயிலையிற் சேர்த்தநின் திறமும்
நாரையூர் நம்பி நயந்தமு தூட்டச்
சீராய் உண்டதும் திருமுறை வைப்பிடம்
கண்ணுற அவற்குக் காட்டிய கருணையும் 30

வெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவற்கு
வேதா கமங்களை விளக்கிய மாண்பும்
நாதா கொக்கதில் நம்பா கனவிலும்
மறவா திருக்கவென் மனதில்
உறைவாய் கருணைக் குறைவிடம் நீயே.

குறி – சிவலிங்கம். இராவணன் கயிலையிற் சிவபிரானிடமிருந்து இலிங்கம் பெற்று இலங்கைக்குக் கொண்டு செல்கையில், தேவர்கள் வேண்டியவாறு விநாயகர் கோகர்ணத்தில் ஒரு பிராமணச் சிறுவனாக இராவணனைச் சந்தித்து, அவன் நீர்க்கருமம் செய்து வரும்வரை சிவலிங்கத்தை நிலத்தில் வைக்காமல் சுமந்து நிற்பதாகப் பெற்று, அவன் அப்பாற் செல்லுதலும் நிலத்தில் வைத்தார். இராவணன் அதைப் பெயர்க்க முடியாமையால் கோபங் கொண்டு குட்டவர, விநாயகர் தமது சுய வடிவத்தோடு காட்சி தந்து வரங் கொடுத்தார் என்பது வரலாறு. வேகத்து இராவணன் – கோபித்த இராவணன். சேரன் – சேரமான் பெருமாள் நாயனார். உலா – திருக்கயிலாய ஞானவுலா அருத்தி – ஆசை. கவ்வை – கவலை, துன்பம். தவறிழைக்காமல் – பூசையை விரைந்து செய்யும் தவறு இழைக்காமல், தடுத்து அவள் வாயால் என்க. அகவல் – விநாயகரகவல். நம்பி – நம்பிஆண்டார் நம்பி. திருமுறை – மூவர் தேவாரம். கனவிலும் என்ற உம்மையால் நனவில் மறவாமை தானே பெறப்படும்.

8

நீயே யாவையும் நிகழ்த்துவை ஆயினும்
தூயோய் அவற்றில் தோய்தலில் லாயே
இன்பொடு துன்பும் இரவொடு பகலும்
அன்பொடு வன்பும் அறிவொடு மடமும்
மெய்யொடு பொய்யும் மேலொடு கீழும்

உவ்வொடு விளிவும் ஊழொடு மதியும்
நன்றொடு தீதும் நரகொடு துறக்கமும்
என்றிவை முதவா இரட்டைகள் விரவிய
உலகினைப் படைத்துப் பலபல உயிர்கள்
வாழுதற் கான சூழலும் வகுத்தாய்

மனவறி வில்லா மற்றய உயிர்கள்
இனவிருத் தியுடன் இயற்கைச் சமநிலை
பேணிம் விந்தை பெரிதே ஆயினும்
மானுறு மாந்தர் மனவறி வினையான்
என்னென் றுரைப்பேன் இரங்குவன் எந்தாய்

உன்குறிப் புணர்ந்திங் குய்ய முயல்வோர்
ஒருசில ராகப் பலரோ உலகம்
தருநல மெல்லாம் தமக்கென வரைந்து

விளக்கக் குறிப்புகள்:-

(இப்பாடலில், உலகிலே மாந்தர் பலர் அழிவுப் பாதையில் நடந்து தமக்கும் பிறர்க்கும் பெருங்கேடு விளைப்பதையிட்டு ஆசிரியர் இரங்குகின்றார்)

தோய்தல் இலாய் – உன் முன்னிலையிலே உயிர்களின் செயற்பாடுகள் நிகழ்ந்தாலும், நீ அவற்றில் தோயாமல் தூய்மையாய் இருக்கின்றாய். விளிவு – இறப்பு. ஊழ்– விதி. துறக்கம் – சுவர்க்கம். மனித இனம் அல்லாத ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர்கள் எல்லாம் சூழலுக்கு இசைந்து வாழ்ந்து, தம்மினத்தைப் பெருக்கி, இயற்கைச் சமநிலை பேணிவரும் முறை பெரும் வியப்பைத் தருவதாகும், மாணுறு மாந்தர் – மனவறிவுடன் சிறந்த மானிடர், மாணுறு மாந்தருள் ஒரு சிலரே உன் குறிப்பை உணர்ந்து, படைப்பின் நோக்கத்தைப் பழுதுபடுத்தாமல், தாமும் உலகமும் ஈடேறப் பாடுபடுகின்றனர். பலரோ தமக்கென வசமும் தறுகண்ணராய்ச் சுயநலம் பெருக்கி வாழ முயல்கின்றனர். வரைந்து – எல்லைப்படுத்தி.

கொலையுங் களவும் கொள்ளையும் போரும்
புலையும் படிறும் பொய்மையும் பூசலும்

அழிவும் மறமும் அட்டூழியமும்
இழிவும் தீங்குமென் றின்னா பெருக்கிப்
பழியும் பாரார் பாவமும் எண்ணார்
அழியும் வகையே அல்லும் பகலும்
முயலுவர் அந்தோ முழுதுணர் வோயே

நல்வழி யொழுகும் நல்லார்க் காத்தும்
அல்வழிச் செல்லும் அழிம்பர்த் தடிந்தும்
அறம் மறம் ஆகிய அவ்விரு கருணைத்
திறஞ்செய் வாயெனத் தெருட்டத் தெளிந்தேன்
ஆயினும் கொடியோர் செயலுக் கழிந்து

நாயினும் இனிய தயாபர கொக்கூர்
உறையும் விநாயக உனக்கென் குறைகளை
முறையிட் டமைதி பெறவே முயல்வேன்
நாடுகள் எங்கணும் நல்லோர் நலியக்
கேடு புரியும் கீழோர் கேட்டில்
ஓடி மீள்கென உள்ளி
ஆடல்பார்த் திருப்பைகொல் அறியேன் யானே.

படிறு – வஞ்சனை. பூசல் – சண்டை, இழிவு – ஈனச்செயல், இன்னு – துன்பம் விளைக்கும் செயல்கள், அல்வழி – தீயவழி. அழிம்பர் – கொடியோர். தடிந்தும் – தண்டித்தும் நீ நல்லோரைக் காத்து அறக்கருணையும், தீயோரைத் தண்டித்து மறக்கருணையும் செய்வாய் என்பதைப் பெரியோர் உணர்த்த உணர்ந்தேன். செயலுக்கு + அழிந்து – மனம் புண்ணுகி வருந்தி. நலிய – துன்புற. ஓடி மீழ்க என – ஒடுமட்டும் ஓடிக் களைத்து. மீளுவாராக என்று. உள்ளி உள்ளத்தில் எண்ணி. ஆடல் பார்த்து இருப்பை கொல் – அல்வாறு மனந்திருந்தி வருவோரை ஆளும் பக்குவம் பார்த்துக் கொண்டு இருக்கின்றாய் போலும். ஆடல் என்பது சிலேடை. இச் சொல் ஆள் + தல் எனவும், ஆடு + அல் எனவும் இருவகையாகப் பிரிக்கப்படும். ஆடு + அல்என்று பிருத்திப் பொருள் கொள்ளும் போது விளையாடலைப் பார்த்துக் கொண்டிருக்கிறாயா? என்று கேட்பதாகவும் கொள்ளலாம்.

9

யானுணை மறப்பினும் எணைமற வாதே
ஊனுடல் இயக்கும் உயிரினுக் குயிராய்க்
கரந்துள் இருந்தென் கள்ளம் அகற்றி
அரந்தை கெடுத்தென் அகக்கண் திறந்து
சிக்கென உணையான் சிந்தையால் பற்றக்

கொக்குவிற் பதியிற் கோயில் கொண் டருளிய
சித்தி விநாயக சிந்தாமணியே
பத்தி யெனுமெய்ப் பைபுகுந் நுலவா
உள்ளூரன் என்னும் முள்ளடி யரணமும்
தெளியகம் என்னும் வளிமுகமூடியும்

ஏமுற அணிந்துன் நாமஞ் செபித்துச்
சரியையிற் சரியை சரியையிற் கிரியை
சரியையில் யோகம் சரியையில் ஞானம்
என்னுமிம் முறையே எண்ணுநாற் பாதமாம்
துன்னரும் படிகளில் துணிவுடன் ஏறி

விளக்கக் குறிப்புகள்:-

(இப்பாடலில் மெய்யுணர்வு பெறும் பொருட்டுச் செய்யும் முயற்சி மலையேறலாக (Mountaineering) உருவகிக்கப் பட்டுள்ளது.)

உளனுடலை இயக்குவது உயிர். அவ்வுயிரை இயக்குபவர் உயிருக்கு உயிரான கடவுள் என்பது இரண்டாம் அடியின் கருத்து. அரந்தை – துன்பம்; உன்னை மறந்ததனால் உண்டான துன்பம் என்க. மெய்ப்பை – உடலை மூடும் சட்டை; இங்கே மலையேறுவோர் அணியும் விசேடமான காற்சட்டை மேற்சட்டை (Eider - down Coat and Trouser) பத்தியே மெய்ப்பையாம் உலவா உள்ளுரன் – குறைவுபடாத மனத்திண்மை முள்ளடியரணம் – மலையேறுவோர் அணியும் முட் சப்பாத்து (Spikes); அடியரணம் – சப்பாத்து. (Boots) உள்ளுரனே முள்ளடியரணம். தெளியகம் – தெளிந்த உள்ளம், வளிமுகமூடி – சுவாசிக்கும் முகமூடி. (ox jgen - mask) ஏமுற – பாதுகாப்பாக. தெளியகமே வளிமுகமூடி, நாற்பாதம் – சரியை, கிரியை, யோகம் ஞானம் என்பன. இவையொவ்வொன்றையும் நந்நான்காக விகற்பிக்க வரும் பதினாறும் படிகளாகும். (மலையேறுவோர் பனிக் கோடரியால் படிகளை வெட்டிச் செல்வர்.) துன்னரும் படிகள் – கிட்டுவதற்கு அரிய மலைப் படிகள்.

உறுதி யென்னும் உலோக முளைகளைச்
செறியக் கடாவிச் செல்விய ஊக்கமாம்
கயிற்றினைப் பிணித்துக் கைகளாற் பற்றி
முயற்சியிற் சலிக்காது முன்னுந்துமுன் னேறிக்
காம மென்னுங் கடும்புயல் வருங்கால்

நேம மாகிய ஒதுக்கிலில் நிலையி
எய்துதற் கரிதாய் ஏமுற வோங்கிய
மெய்யுணர் வென்னும் மேதகு வெற்பில்
பைப்பய இவர்ந்து பசுகர ணமொழித் (து)
ஒப்பில் சிவகரணம் ஒருங்குபெற் றொளிரும்

ஞானத்தில் ஞானமாம் நவியுலர் ஒங்கல்
உச்சியை அடைந்நங் கோவா தொளிரும்
அச்சிவ சோதியைக் கலந்தனு பவிக்க
வைத்தனை போலும் சைவ
சித்தாந் தமெனும் செம்மைசால் நெறியே.

உலோக முளைகள் – பாறையில் அறைவதற்கான உலோகத் தறிகள் (Metal pegs) உறுதியே உலோக முளைகளாகும். கடாவி – அறைந்து, ஊக்கமே கயிறாகும் (ope) முளைத்து முன்னேறி – மனஞ் சோராமல் மேல் நோக்கிச் சென்று, காமம் – ஆசை; உலக போகங்களை அனுபவிக்கும் வேட்கை. கடும் புயல் – கொடிய பனிப்புயல் (Snow - storm) காமமே கடும்புயலாகும், நேமம் – நியமம், நித்திய கரும அனுட்டானங்கள், விதிமுறை காமமாகிய கடும்புயல் வீசும்போது, நேமமாகிய மலையொதுக்கில் (Shelfer) நின்று எளைப்பாறி, நிலையி – தங்கினின்று ஏமுற ஓங்கிய – பார்ப்பவருக்கு மயக்கம் உண்டாகுமாறு உயர்ந்துள்ள, மெய்யுணர்வு – மெய்ஞ்ஞானம், மேதகு – மேம்பாடுடைய வேற்பு – மலை மெய்யுணர்வே மலையாகும், பைப் பைய – மெல்ல மெல்ல, இவர்ந்து – ஏறி, பசுகரணம் – தற்போதச் செயல், சிவகரணம் – ஆன்மாவின் செயலற்ற நிலையில் நிகழும் பதியின் செயல். ஞானத்தில் ஞானம் – உச்சியில் அடிவைத்தற்கான இறுதிப் படியாகும். ஒவாது ஒளிரும் – முடிவில்லாது சுடர் விடும் சித்திவிநாயக, சிந்தாமணியே..... செம்மைசால் நெறி வைத்தனை போலும் என முடிக்க.

10

தெறியின் நீள நிலைப்பவர் சித்தத்
தறியில் அன்புத் தொடரால் தளைந்து
நிறுத்த நிற்பாய் நின்னருள் வேண்டிப்
புறத்தும் அகத்தும் புவிதராம் அடியார்
அப்பமும் பொரியும் அவலும் சுண்டலும்

முப்பழம் பாலும் மோதகம் வடையும்
சருக்கரைச் சாதமும் கருப்பங் கழியும்
விருப்புடன் படைத்து விநயமாய் நின்று
வலமிட மாக முட்டிக்கை மாற்றித்
தலையில் மும்முறை குட்டித் தண்டனிட்டுக்

கும்பிடக் கொக்குவிற் கோயி லமர்ந்த
எம்பெரு மானே ஏக தந்தனே
நாத்திகம் பேசிய நாவால் நாயேன்
பாத் திறம் அறியேன் பாடும் பனுவலில்
அடங்காப் பெருமையை ஆயினும் எனது

மடம் பொறுத் தருள்வாய் மங்கல மூர்த்தீ
அம்பிகை பயந்த ஆனையே போற்றி
தும்பி முகத்துத் தூமணி போற்றி
ஐந்தொழில் புரியும் ஐங்கர போற்றி
சித்தையில் தெவிட்டாத் தேனே போற்றி.

விளக்கக் குறிப்புகள்:-

(இப்பாடலில் ஆசிரியர் விநாயகரைப் போற்றி வரம் வேண்டுகின்றார்)

நெறி – யோக நெறி, நீள நிலைப்பவர் – தியானஞ் செய்பவர்; சித்தத்தறியில் – சித்தமாகிய கட்டுத் தறியில். அன்புத் தொடரால் – அன்பாகிய சங்கிலியினால், தளைந்து – கட்டி.. விநாயகரை யானையாக உருவகித்து, யோகியர் சித்தத்தில் அன்பாற் கட்டுவர் என்பது உருவக அணி, கருப்பங் கழி நறுக்கிய கரும்பு (கரும்பு யானை விரும்பி உண்பது) முட்டிக்கை – முட்டியாகப் பிடித்த கைகள் தண்டனிட்டு – நிலத்தில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து. பனுவல்– பாடல் 'என் பனுவலில் அடங்காத பெருமையுடையாய் ஆயினும் உன் பெருமையை என் பாடலில் கூற முனைந்த எனது அறியாமையைப் பொறுத்தருள்வாய்' என ஆசிரியர் வேண்டுதல் செய்கின்றார்.

அணைப்பவர்க் கின்பம் ஆனாய் போற்றி
இணைவே றில்லா இறைவா போற்றி
ஓமெனும் பொருளாய் ஒளிர்வாய் போற்றி
தோமறு ஞானச் சோதீ போற்றி
வித்தையை நல்கும் விநாயகா போற்றி

முத்தியை அருளும் முதல்வா போற்றி
கணபதி போற்றி கயமுகா போற்றி
குணமிலாய் போற்றி குணமுளாய் போற்றி
போற்றி போற்றி பூரணை போற்றி
ஏற்றென் அடிமைக்(கு) இரங்குவாய் போற்றி

நிஷ்பால் வேண்டுவ நிகழ்த்தக் கேளாய்
என்பால் அன்புவைத் தின்பாய்ப் பழகிய
உற்றார் நண்பர் உறவினர் அன்றியும்
மற்றோர் யாவரும் மகிழ்வொடு வாழ
அருளுக எந்தாய் அடியனுன்
திருவடி நிழற்கீழ் வாழுந் திருவே.

ஓம் ஓம் உது மெய்

தெவிட்டாத் தேன் – ஏனைய நேன் ஓரளவு உண்டபின் வெறுப்பை உண்டாக்கும்; இத்தேன் உண்ண உண்ண மேன் மேலும் ஆசையைப் பெருக்கும். தோமறு – குற்றம் இல்லாத. குணமிலாய் – நிர்க்குணப் பிரமமாய் விளங்குவாய். குணமுளாய் – சகுணப் பிரமமாய்ப் படியிறங்கி ஏருவோய். ஏற்று – எனது அடிமையை ஒப்புக் கொண்டு அடிமை – தொழும்பு. அடிமைக்கு இரங்குவாய்; அடிமையை என்பது இடம் நோக்கி வருவிக்கப்படும். வேண்டுவ – வேண்டுவன. நிகழ்த்த – எடுத்துச் செல்ல. 'அருளுக' என்பது இடைநிலைத் தீவகமாய் முன்னும் பின்னும் சென்று பொருள் முடிக்கும். உற்றார், நண்பர், உறவினர், மற்றோர் யாவரும் மகிழ்வோடு வாழ அருளுக; அடியன் உன் திருவடி நிழற்கீழ் வாழும் திரு அருளுக, என்று முடிக்க. திரு. முந்நியின்பம்.

கொக்குவிற் சித்திவிநாயகர் ஒருபாவொருபஃது என்னும் இந்நூல் முன்னூட் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியராயும், இலங்கைக் கல்விச் சேவைப் பிரதம கல்வி அதிகாரியாயும் கடமையாற்றி இளைப்பாறி, இப்போது கனடா நாட்டில் வசித்து வருபவரான

செல்வேளன்பர் செ. வேலாயுத பிள்ளையவர்களால்
அன்பர் செ இரத்தினப்பிரகாசம்
அவர்களின் வேண்டுகோட்படி ஆக்கப்பட்டது.

காணகி வீதி,
ஒட்டாவா, ஒந்தாரியோ
கனடா.
1989 - 01 - 24.

செ. வேலாயுதபிள்ளை

ஓம்
கணபதி துணை

கொக்கூர்ப் புதுக்கோயிற் சித்திவிநாயகர்

திருவூஞ்சற் பதிகம்

எச்சரீக்கை, பராக்கு, லாலி, மங்களம்.

(விளக்கக் குறிப்புகளுடன்)

இவை
கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்,
கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னைநாள் ஆசிரியரும்,
இலங்கைக் கல்விச் சேவைப் பிரதான கல்வியதிகாரியாயிருந்து இளைப்பாறியவருமான

செவ்வேளன்பர் செ. வேலாயுதபிள்ளை அவர்கள்
பாடியவை

அகஇய ஆண்டு புரட்டாதி மாதம்

1987

கொக்கூர்ப் புதுக்கோயிற்

சித்திவிநாயகர் திருவூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

காப்பு

உலகுபுக ழீழவள நாடாந் தாயில்
ஒளிவிளங்குந் திருமுகத்துக் கழகு செய்யும்
திலகமெனத் திகழுமெழிற் கொக்கூர் மேவும்
சித்திவிநா யகர்பேரி லூஞ்சல் பாடப்
பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கு மந்தப்
பரம்பொருளே துணையாக நிற்கு மென்றே
அலகிலருட் சோதியினை யகத்தி ருத்தி
அஞ்சலித்துச் செஞ்சொல்லால் வழுத்து வேனே.

நூல்

ஆரணங்க ளைவைநான்குங் காலங் காக
அரியசிவா கமங்களுயர் விட்ட மாக
ஏரணங்கு கலைஞானம் வடங்க ளாக
ஏற்றமுறு முபநிடதம் பலகை யாகத்
தாரணமாம் பிரணவமே விதான மாகத்
தத்துவங்கள் முத்துவடத் தொங்க லாகச்
சீரணங்கு கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேறீ ராடூ ஞ்சல். (1)

பொருளோங்கு சாத்திரங்கள் தண்ட தாகப்
பொதுமறையாற் திருக்குறளே தகழி யாக
அருளோங்கு திருமுறைகள் திரிக ளாக
அடியருளத் தொழுமன்பே நெய்ய தாகத்
தெருளோங்கு சிவஞானச் சுடர்கொ ளுத்திச்
செய்தமைத்த திருவிளக்கி னொளிரின் றேங்கத்
திருவாழுங் கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேறீ ராடூ ஞ்சல். (2)

திங்களொடு செங்கதிரோன் கவிகை தாங்கத்
தீக்கடவுள் சுடருந்தீ வட்டி தாங்கச்
சங்கரனுர் தோழன்பொன் னடைப்பை நாங்கச்
சமுத்திரரா சன்பன்னீர்ச் செம்பு தாங்கச்
புங்கவனு மனிலன்பூங் கவரி வீசப்
புரந்தரனுங் கரங்கூப்பிப் புகழ்கள் பேசச்
சிங்கலிலாக் கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேறீ ராடூ ஞ்சல். (3)

நாமகளும் பூமகளு மூஞ்ச லாட்ட
நாரதருந் தும்புருவும் யாழ்கள் மீட்ட
ஏமருவு காந்தருவர் கீதம் பாட
எழிலாரு மரம்பையர்கள் நடன மாடப்
பூமருவு பிரமன்கைத் தாளம் போடப்
புத்தேளி ரெல்லாரும் வந்து கூடச்
சிமருவு கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடீ ரூஞ்சல். (4)

சிவபெருமா னுமையுடனே சேர்ந்து வந்து
சிந்தைமகிழ்ந் தருணேக்கஞ் செய்து நிற்கு
தவவீரர் புடைசூழ விசையோ கிற்க
நாரணனு நல்லாசி கூறி நிற்கப்
பவளமணித் திருமேனி தழுவுஞ் சத்தி
பாங்காயுந் திருவுருவிற் கரந்து நிற்கச்
சிவமருவுங் கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடீ ரூஞ்சல். (5)

சுந்தரஞ்சேர் மணிமகுடந் தலையின் மின்னச்
சூரியனேர் பொற்சுட்டி நுதலின் மின்னக்
கந்தமலி மலர்மாலை கழுத்தின் மின்னக்
கனகமணிப் பூணுரம் மார்பின் மின்னப்
பந்தனமா யரைதனிலே பாம்பு மின்னப்
பாதார விந்தத்திற் சிலம்பு மின்ன
செந்தமிழ்வாழ் கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடீ ரூஞ்சல். (6)

பூதியணி நெற்றியிலே பட்ட மாடப்
பொன்முடியிற் பொருந்துமுத்துச் சரங்க ளாட
காதிலணி குண்டலங்கள் கதிர்விட் டாடக்
கழுத்திலணி முத்தாரம் பதக்க மாடத்
தீதகற்றும் படைக்கலங்கள் கரத்தி லாடத்
திகழரையிற் பட்டாடை சுச்சு மாடச்
சீதவயற் கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடீ ரூஞ்சல். (7)

ஆதிசிவன் மகனரே யாடீ ரூஞ்சல்
அஞ்சுகரப் பெருமானே யாடீ ரூஞ்சல்
போதமருள் மெய்ப்பொருளே யாடீ ரூஞ்சல்
புத்தி சித்தி புணர்ப்பவரே யாடீ ரூஞ்சல்
மோதகத்தை யுகந்தவரே யாடீ ரூஞ்சல்
முத்தியின்பந் தருபவரே யாடீ ரூஞ்சல்
சீதகழுங் கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடீ ரூஞ்சல். (8)

அத்திமுக முடையவரே யாடீ ரூஞ்சல்
அகரவுயி ரானவரே யாடீ ரூஞ்சல்
வித்தைவலந் தருபவரே யாடு ரூஞ்சல்
விக்கினங்கள் தீர்ப்பவரே யாடீ ரூஞ்சல்

முத்திநிலை சேர்ப்பவரே யாடூ ரூஞ்சல்
மும்மலங்கள் தீர்ப்பவரே யாடூ ரூஞ்சல்
சித்தருறை கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடூ ரூஞ்சல். (9)

சைவநெறி தழைத்தோங்க வாடூ ரூஞ்சல்
சதுர்மறையா கமம்விளங்க வாடூ ரூஞ்சல்
துய்யதமிழ் செழித்தோங்க வாடூ ரூஞ்சல்
தொழுமடியார் துயர்நீங்க வாடூ ரூஞ்சல்
தெய்வவழி பாடோங்க வாடூ ரூஞ்சல்
திருத்தலங்கள் சிறந்தோங்க வாடூ ரூஞ்சல்
செய்விளங்கு கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடூ ரூஞ்சல். (10)

வாழி

அருமைவரு தமிழ்வாழி யறங்கள் வாழி
அஞ்செழுத்து வாழிபசு நிரைகள் வாழி
கருமைவரு முகில்வாழி கழனி வாழி
கடவுளுறை தனிவாழி கருணை வாழி
இருமைதரு கலிவாழி யீழம் வாழி
இருநிலத்தி லறவோர்தம் மாட்சி வாழி
திருமருவு கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகர்பாதஞ் சிறந்து வாழி.

திருச்சிற்றம்பலம்

எச்சரிக்கை

திருச்சிற்றம்பலம்

சிவனுர்தரு கயமாமுகத் தேவே — எச்சரிக்கை
சிவமூர்த்தியின் வேறன்றெனுங் கோவே — எச்சரிக்கை (1)

ஒங்காரமே யுருவாய்வரு பொருளே — எச்சரிக்கை
ஆங்காரம தழித்தாட்கொளு மருளே — எச்சரிக்கை (2)

வலவைக்கொடி படருங்கொழு கொம்பே — எச்சரிக்கை
உலகத்தவர் நலனுக்கொரு நம்பே — எச்சரிக்கை (3)

மாயாசுரர் பகைவீட்டிரு மருந்தே — எச்சரிக்கை
வியாப்பொருள் விழைவார்க்கொரு விருந்தே — எச்சரிக்கை (4)

இடையூறெனு மிருளோட்டுவிண் மணியே — எச்சரிக்கை
விடையேறிய வழலாடிகண் மணியே — எச்சரிக்கை (5)

ஆயுங்கலி யகத்துந்தரு மாநி — எச்சரிக்கை
தோயுந்தொறு மின்பந்தரு சோதி — எச்சரிக்கை (6)

அல்லல்கெடுத் தாளும்மருட் குன்றே — எச்சரிக்கை
தொல்லிவினே தொலைக்கும்மிபக் கன்றே — எச்சரிக்கை (7)

பாசாங்குசங் கரமேந்திய பரமே — எச்சரிக்கை
மாசாதிவல் வினைபோக்கிடும் வரமே — எச்சரிக்கை (8)

உலகெங்கணும் வழிபட்டிடு மோவே — எச்சரிக்கை
குலவுந்தமிழ்க் கொக்கூருறை கோவே — எச்சரிக்கை (9)

மாவின்கனி மகிழுங்கண பதியே — எச்சரிக்கை
காவிற்பொலி கொக்கூர்க்கொரு கதியே — எச்சரிக்கை (10)

திருச்சிற்றம்பலம்

பராக்கு

திருச்சிற்றம்பலம்

சித்திதரு மத்திமுகத் தேவே — பராக்கு
சிவனுளத்திற் சிவணிநிற்குந் தேவே — பராக்கு (1)

ஆகுவின்மீ தேறியூரு மண்ணலே — பராக்கு
அன்பருள்ளத் தமர்ந்திருக்கு மண்ணலே — பராக்கு (2)

எடுத்தவினை முடிக்கவரு ளேந்தால் — பராக்கு
எச்செயற்கு முற்கணிற்கு மேந்தால் — பராக்கு (3)

காகமாகிக் கமண்டலத்தைக் கவிழ்த்தீர் — பராக்கு
கயிலையிலே யவ்வையினை வைத்தீர் — பராக்கு (4)

கயமுகனைக் கட்டழித்த களிறே — பராக்கு
கந்தரெண்ண வந்தணைந்த களிறே — பராக்கு (5)

போகமோக்கும் ஞானயோகம் புணர்ப்பீர் — பராக்கு
புத்திசித்தி வல்லபங்கள் புணர்ப்பீர் — பராக்கு (6)

குறுமுனிக்கு வரமளித்த கோவே — பராக்கு
குலையத்தை வயிற்றடக்குங் கோவே — பராக்கு (7)

மூர்த்திபதி னைந்துடைய முதலே — பராக்கு
முகத்திலொரு கையுடைய முதலே — பராக்கு (8)

விக்கினங்கள் போக்கவல்ல வீரரே — பராக்கு
வீடுபேறு மருளவல்ல வீரரே — பராக்கு (9)

கோடதனை யாயுதமாக் கொண்டீர் — பராக்கு
கொக்கூரை யிடமாகக் கொண்டீர் — பராக்கு (10)

திருச்சிற்றம்பலம்

லாலி

திருச்சிற்றம்பலம்

லாலீ லாலி லாலீ லாலி — லாலி
நீலமேவி யுமைபயந்த நீதரே — லாலி (1)

நும்பி முகத்துச் சோதி வடிவே — லாலி
நம்பி யழைக்க விபமாய் வந்தீர் — லாலி (2)

நம்பி படைத்த லமுத முண்டீர் — லாலி
நம்பு மடியர் நடலை தீர்ப்பீர் — லாலி (3)

வேத முடியில் வீற்றிருப்பீர் — லாலி
போத மருளி வீடு தருவீர் — லாலி (4)

ஒது கலிக ளுணர்த்துங் குருவே — லாலி
தீது போக்கி யருளுந் திருவே — லாலி (5)

எண்ணும் பொருள்க ளெல்லா மானீர் — லாலி
எண்ணுங் கரும முடிக்க வருவீர் — லாலி (6)

உண்ணின் றியக்குங் குடிலைப் பொருளே — லாலி
விண்ணும் மண்ணு நிறையு மருளே — லாலி (7)

மிக்கவ ரிலாத விநாயக மூர்த்தீ — லாலி
விக்கினம் போக்கும் விநாயக வேந்தே — லாலி (8)

திக்கெலாந் தொழுநி றைந்த தேவே — லாலி
கொக்குவில் சிறக்க வந்த கோவே — லாலி (9)

லாலீ லாலி லாலீ லாலி — லாலி
லாலி லாலி லாலீ லாலி — லாலி (10)

திருச்சிற்றம்பலம்

மங்களம்

திருச்சிற்றம்பலம்

மங்களம் மங்களம் மங்களம் சயசய
மங்களம் மங்களம் மங்களம்

கற்பக விநாயகர்க்குக் கணபதிக்கு — மங்களம்
சொற்பதங் கடந்தசோதி சொருபருக்கு — மங்களம் (1)

நீறிலங்கு நெற்றிகொண்ட நித்தருக்கு — மங்களம்
ஆறிலங்கு சடையர்தந்த வத்தருக்கு — மங்களம் (2)

பிரணவ வடிவினர்க்குப் பிள்ளோயார்க்கு மங்களம்
சரவண பவர்க்குமூத்த சங்கரர்க்கு மங்களம் (3)

ஆருவாக னத்தமர்ந்த வமலருக்கு மங்களம்
நாகபூட ணத்தரிந்த நாதருக்கு மங்களம் (4)

சிந்துர முகத்தருக்குச் செல்வருக்கு மங்களம்
இந்திளம் பிறைநிகர்த்த வெயிற்றருக்கு மங்களம் (5)

மாங்கனியை விரகிற்பெற்ற வல்லபர்க்கு மங்களம்
பாங்கிற்சித்தி புத்திவைத்த பரமருக்கு மங்களம் (6)

வல்லபை மணாளருக்கு வரதருக்கு மங்களம்
நல்லவை செய்பவர்க்கு நர்த்தருக்கு மங்களம் (7)

அவ்வையைக் கைலேசேர்த்த வைங்கரர்க்கு மங்களம்
தெவ்வரைத் தேய்த்தழிக்குந் திரருக்கு மங்களம் (8)

மூக்கனி யுகந்தவர்க்கு முதல்வருக்கு மங்களம்
கொக்குவின் மேவுமொற்றைக் கொம்பருக்கு மங்களம் (9)

விக்கினங்கள் தீர்க்குமெங்கள் விநாயகர்க்கு மங்களம்
கொக்குவிற் பதியுகந்த குணேசருக்கு மங்களம் (10)

மங்களம் மங்களம் மங்களம் சயசய
மங்களம் மங்களம் மங்களம்.

திருச்சிற்றம்பலம்

விளக்கக் குறிப்புகள்

காப்பு

அந்தப் பரம்பொருள் – பிரமம் எனப்படும் பொருள். இங்கே விநாயகரே அந்தப் பரம்பொருளென்று குறிக்கப்படுகின்றார். நூலாசிரியர் அப்பரம்பொருளே மனம் மொழி மெய் ஆகிய முக்கரணங்களாலும் வழிபட்டமை காண்க.

பாடல்

(1) ஏரணங்கு - அழகு பொருந்திய, ஏர் - அழகு, அணங்குதல் - பொருந்துதல் தாரணம் - தாரணை, நிலைவிலிருத்துதல், நந்நூல்களோ 96 என்றும், 36 என்றும் நூல்கள் வேறு வேறுக வகைப்படுத்திக் கூறும்.

(2) சாத்திரங்கள் - சிவஞான போதம் உள்ளிட்ட 14 சித்தாந்த சாத்திரங்கள்.

(3) சங்கரனார் தோழன் - குபேரன்; சமுத்திரராசன் - வருணன்; அனிலன் - வாயு; தவன் புரந்தரன் - இந்திரன்; சிங்கவிலர் - (சிங்கல் + இல்லா) கெடுதல் இல்லாத; சிங்கல் - கெடுதல், குறைதல்.

(4) ஏமருவு காந்தருவர் - களிப்புப் பொருந்திய காந்தருவர்; ஏம் + மருவு = ஏமருவு; ஏம் – களிப்பு, இன்பம்; புத்தேளிர் - தேவர்கள் சீமருவு - திருமகள் உறையும்; சீ - திருமகள்

(5) பவளமணித் திருமேனி - பவளம் போன்ற அழகிய திருமேனி; விநாயகருடைய திருமேனி செந்நிறமானது என்றும், கருநிறமானது என்றும் நூல்கள் குறிப்பிடுகின்றன. வெவ்வேறு மூர்த்தங்களில் வெவ்வேறு நிறங் கூறப்படும். பவளத்திற் செம்பவளமுமுண்டு, கரும்பவளமுமுண்டு திருமேனி தழுவுஞ் சத்தி - வல்லபை, விநாயகர் பொதுவாகப் பிரமசாரி என்றே கருதப்படுகிறார். ஆயினும், நூல்கள் அவருக்கு வல்லபை என்னும் ஒரு சத்தி உண்டென்றும்; சித்தி, புத்தி என்னும் இரு சத்திகள் உண்டென்றும் கூறும். சைவக் கோட்பாட்டிலே இறைவனது திருவருளே சத்தியெனப்படும். ஆகவே, விநாயகரது திருவருளே அவருடைய சத்தியாகும். இச் சத்தி தொழில் வேறுபாட்டால் புத்தி என்றும், வல்லபை என்றும், சித்தி என்றும் வேறு வேறுகக் கூறப்படும் செயலைச் செய்யும் மதிநுட்பமே புத்தி; செய்யும் திறமையே வல்லபை; செயல் வெற்றியே சித்தி. வல்லபையை மடிமீது வைத்திருக்கும் மூர்த்தி ''சத்திகணபதி'' எனப்படும் சித்தி புத்திகளை இருபக்கத்திலும் வைத்திருக்கும் விநாயக மூர்த்தமும் உண்டு. இலங்கையிலும் தென்னகத்திலும் பெரும்பாலான விநாயகர் திருவுருவங்கள் சத்தியின்றித் தனியாகவே காணப்படுகின்றன. இந்த நுட்பத்தை விளக்கும் வகையிலே பாடலின் மூன்றும் அடி அமைந்திருப்பது காண்க.

திருமேனி தழுவுஞ் சத்தி ஒன்றே; அது வல்லபை அச்சத்தியே சித்தி புத்தி என்னும் இருவராக இருபக்கத்திலும் (பாங்காயும்) நிற்கும்; அது விநாயகரது திருமேனியில் மறைந்தும் (திருவுருவிற் கரந்தும்) நிற்கும். ''பாங்காயும் திருவுருவிற் கரந்தும் நிற்க'' என்றும் ''பாங்காய் உம் திருவுருவிற் கரந்தும் நிற்க'' என்றும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு சொற்களைப் பிரித்து பொருள் கொள்க. சிவமருவுங் கொக்கூர் இங்கே சிவம் என்பதற்கு மங்கலம் என்றும் சிவநெறி என்றும் பொருள் கொள்ளப்படும்.

(6) சூரியனேர் - (சூரியன் + நேர்) சூரியனைப் போலப் பிரகாசிக்கும்; சுட்டி - நெற்றிப் பட்டம்; பந்தனம் - உதரபந்தனம். அரைப்பட்டி. விநாயகரது உதரபந்தனம் பாம்பெனக் கந்தபுராணைக் காப்புச் செய்யுள் கூறுவது காண்க பாதாரவிந்தம் - பாத தாமரைகள்.

(7) பூதி - திருநீறு; படைக் கலங்கள் - பாசம், அங்குசம், கொம்பு முதலியன.

(8) புத்தி சித்தி புணர்ப்பவர் - தம்மை வழிபடுவோர்க்குப் புத்தியையும் சித்தியையும் பொருந்தச் செய்பவர்; சீ திகழும் - இலக்குமி விளங்கும் சீ - இலக்குமி, என்பது செல்வம், அழகு முதலியவற்றைக் குறிக்கும்.

(9) அத்திமுகம் - யானைமுகம்; அகரவுயிரானவர் - எவ்வாறு அகரம் எழுத்துக்களுக் கெல்லாம் முதலாக (தோற்றுவாயாக) உள்ளதோ, அவ்வாறே விநாயகரும் உலகம் யாவற்றுக்கும் முதலாக (தோற்றுவாயாக) உள்ளார். வித்தை வலம் - கல்வியும் வல்லமையும்; சித்தர் - விநாயகரை வழிபட்டுச் சித்திபெற்றவர்; சைவ சித்தாந்திகள் என்றும் பொருள் கொள்ளலாம்.

(10) துய்ய தமிழ் - தூய தமிழ்; செய் விளங்கு - வயல்கள் விளங்குகின்ற.

வாழி

தளி - கோயில்; அறவோர் தம் ஆட்சி வாழி என்றும், அறவோர் தம் மாட்சி வாழி என்றும் இருவகையாகவும் பொருள் கொள்க.

★ ★ ★

எச்சரிக்கை

(1) விநாயகரும் சிவமூர்த்தியும் வேறல்லர், ஒருவரே என்பது கருத்து.

(2) விநாயகரது யானைமுகம் ஓங்காரமாகிய பிரணவத்தை குறிக்குமென்ப.

(3) வலவைக் கொடி - வல்லபை என்னும் சத்தி; நம்பு - பற்று.

(4) வியாப்பொருள் என்றும் அழியாத மெய்ப்பொருள்.

(5) விண்மணி - சூரியன்; அழலாடி – சிவபெருமான்.

(6) ஆயுங்கலை - அறுபத்து நான்கு கலைகள்; ஆராய்ந்து கற்பதற்குரிய கலைகள். தோயுந்தொறும் இன்பந்தரு சோதி – எல்வாறு கலைகளை ஆயுந்தோறும் அறிவின்பம் பெருகுகின்றதோ, அவ்வாறே விநாயகரது தியானத்தில் அழுந்துந்தோறும் பேரின்பம் பெருகிவரும் என்பது கூறப்பட்டது.

(7) அருட்குன்று - அருளாகிய மலை; தொல்லை வினை - பிறவிகள் தோறும் ஈட்டிய பழவினை; இபக் கன்று - யானைக் கன்று; இபம் - யானை.

(8) மாசாதி வல்வினை ஆணவம் முதலிய கொடிய வினைகள்; மாசு - குற்றம், இங்கே மூலமலமாகிய ஆணவத்தைக் குறிக்கின்றது. வரம் - மேலானது.

(9) உலகெங்களும் - கணபதி வழிபாடு இந்தியாவில் மட்டுமின்றி, திபேத்து, நேபாளம், சீனா முதலிய பலநாடுகளிலும் பண்டு பரவியிருந்ததென ஆராய்ச்சியாளர் கூறுவர் இன்று அமெரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களிலும் இந்து மக்கள் கணபதிக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்கின்றனர். குலவுந்தமிழ்க் கொக்கூர் - தமிழ் குலவும் கொக்கூர் என மாறுக. தமிழ் என்பது தமிழ் மொழியையும் இனிமையையும் குறிக்கும்.

(10) மாவின் கனி மகிழும் விநாயகரின் இடக்கைகளில் ஒன்றிலே இருப்பது மோதகம் என்றே பொதுவாகக் கூறப்படுவதுண்டு. ஆனால், விநாயக மூர்த்தியின் இலக்கணங் கூறும் ஆகமம் மோதகத்திற்குப் பதிலாக மாம்பழத்தை குறிப்பிடுகின்றது. இன்னும் நாரதமுனிவர் சிவபெருமானிடங் கொடுத்த மாம்பழத்தை முருகனோடு போட்டியிட்டு விநாயகர் சாதுரியமாகப் பெற்ற கதையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

★ ★ ★

பராக்கு

(1) சிவனுளத்திற் சிவனி நிற்குந் தேவு - சிவபெருமான் விநாயகரைத் தியானிப்பதை நூல்கள் கூறுகின்றன. திரிபுரதகனம் நிகழ்ந்த வேளை தேரிற் புறப்பட்ட சிவபெருமான் தடை நிகழக் கண்டு, தம் மைந்தன் விக்கினேஸ்வரனை நினையாது புறப்பட்டதை உணர்ந்து, அக்குறையை நீக்க விநாயகனைத் தியானித்ததாகப் புராண வரலாறு கூறும். சிவனுதல் - பொருந்துதல்.

(2) ஆகு – பெருச்சாளி. கயமுகாசுரனை விநாயகர் தமது கொம்பை யொடித்துத் தாக்கிய போது, அவன் அஞ்சிப் பெருச்சாளியுருக் கொள்ள. விநாயகர் அப்பெருச்சாளியை தமது வாகனமாக்கினர் என்பது புராண வரலாறு. மக்கள் மனத்திற் கரந்திருக்கும் களவு வஞ்சனை போன்ற தீய குணங்களே பெருச்சாளியாக உருவகித்துக் கூறப்படுவதாகப் இதற்கு விளக்கங் கூறுவர்.

(4) காகமாகிக் கமண்டலத்தைக் கவிழ்த்தது: விநாயகர், இந்திரன் வேண்டு கோளுக் கிணங்கி அகத்திய முனிவரிடமிருந்த கமண்டல நீரைக் காகவுருக் கொண்டு கவிழ்த்து, அவை சிர்காழியில் வைத்த நந்தவனத்தைச் செழிக்கச் செய்த வரலாறு இங்கே குறிப்பிடப்படுகிறது.

கயிலையில் அவ்வையை வைத்தது: ஔவையார் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் கயிலைக்குச் செல்ல விரும்பி, விநாயகர் பூசையை விரைந்து செய்ய, விநாயகர் ஔவையை நோக்கி "அவர்கட்கு முன்னே உன்னைச் சேர்ப்பிக்கிறேன்; பூசையை அவதானமாகச் செய்" என்று சொல்லிப் பூசையை முடிப்பித்து, அவரைத் தமது தும்பிக்கையால் எடுத்துச் சுந்தரருக்கு முன்னமே கைலையில் விட்டார் என்பது வரலாறு.

(5) கந்தரெண்ணை வந்தணைந்தது: முருகன் திசைப்புனங் காவல் செய்த வள்ளியை வசப்படுத்த விரும்பி, அண்ணலை மனத்திலே எண்ணி அழைக்க, விநாயகர் ஆனையுருவோடு அங்கே சென்று வள்ளியை அச்சுறுத்தித் தம்பியின் விருப்பத்தை நிறைவேற்றினார்.

(7) குறுமுனிக்கு வரமளித்தது: காகவுருவோடு சென்று அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்து, நீரைக் காவிரிநதியாகப் பாயவிட்டு, விநாயகர் ஒரு பிரமசாரி யுருக்கொண்டு நீங்க, அதுகண்ட அகத்தியர் கோபங் கொண்டு பிரமசாரியைத் துரத்திக் குட்ட வர பெருமான் அவர் கைக்கு எட்டாது ஓடித் தமது திருவுருவத்தைக் காட்டி அகத்தியருக்கு வரமளித்தார். குறுமுனி - அகத்தியர் குவலயத்தை வயிற்றடக்கும் கோ: விநாயகர் பிரபஞ்சம் முழுவதையும் தமது வயிற்றிலே அடக்கி வைத்திருப்பவர் என்னும் உண்மையைக் குறிக்க அவருக்குப் பேழைவயிறு கூறப்படுகின்றது.

(8) மூர்த்தி பதினாறுவடிய முதல்: விநாயகருக்கு பின்வரும் பதினாறு மூர்த்தி பேதங்கள் நூல்களிலே கூறப்படும்: (1) பால கணபதி, (2) தருண கணபதி, (3) பக்த கணபதி, (4) வீர கணபதி, (5) சக்தி கணபதி, (6) துவச கணபதி, (7) பிங்கள கணபதி, (8) உச்சிட்ட கணபதி, (9) விக்கினராச கணபதி, (10) கூப்பிர கணபதி, (11) ஏரம்ப கணபதி, (12) இலட்சுமி கணபதி, (13) மகா கணபதி, (14) புவனேச கணபதி, (15) நிருத்த கணபதி, (16) ஊர்த்துவ கணபதி.

★ ★ ★

லாலி

(4) நம்பி படைத்த அமுதமுண்டது: திருநாரையூர் விநாயகருக்குப் பூசை செய்து வந்த சிவவேதியர் வேற்றூருக்குப் போயிருக்கையில், அவருடைய, மகனான நம்பியைத் தாயார் அப்பூசையின் பொருட்டு அன்ன முதலிய கொடுத்தனுப்பினார். நம்பி அன்ன முதலியவற்றைப் படைத்து அவற்றைப் புசிக்க வேண்ட, பிள்ளையார் புசிக்காதிருந்ததால் நம்பி தனது தலையைச் சிலாமேலே மோத எண்ணினார்; அவ்வேளை பிள்ளையார் அவரைத் தடுத்து அமுது செய்தருளினார். நடலை - நடுக்கம், துன்பம்.

(7) குடிலைப் பொருள் - பிரணவத்தின் உட்பொருள்.

★ ★ ★

மங்களம்

(2) சொற்பதம் கடந்த சோதி: விநாயகர் மனம் வாக்குகளுக்கு எட்டாத சோதி வடிவானவர். சொற்பதம் - சொல்லாற் குறிக்கப்படும் நிலை.

(3) சங்கரர் - நன்மை செய்பவர். தந்தையிடம் காணப்படும் இயல்புகள் மைந்தனிடமும் காணப்படுதலின், விநாயகர் சங்கரரெனப்பட்டார்.

(4) நாகபூடணம்; விநாயகருக்கு உதரபந்தனமும் பூணூலும் பாம்புகளென நூல்கள் கூறும்.

(5) சிந்துரமுகம்: யானை முகம் என்றும், செந்திலகம் அணிந்த முகம் என்றும் இருவகையாகவும் பொருள் கொள்க. சிந்துரம் - யானை, செந்திலகம் இந்திளம்பிறை - இளம் பிறைச் சந்திரன்; இந்து - சந்திரன். எயிற்றர் - கொம்பையுடையவர்.

(7) நர்த்தர் நிருத்த கணபதி.

(10) குணேசர் இறைவனுக்குக் குணங்கள் இல்லையாயினும், அன்பர்கள் ஏற்றிக்கூறும் அருட்குணங்கள் அவருக்கு உண்டென்பது மரபு. அத்தகைய எண்குணங்களைச் சைவ நூல்கள் கூறும். அவையாவன: தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பன.

உ

வேலும் மயிலுந் துணை

கொக்கூர் பதிற்றுப் பத்தந்தாதி

என்னுரை

எனக்கு அறிவு அரும்பத் தொடங்கிய பச்சிளம் பருவத்திலே என் பாட்டியார் சொன்ன செய்தி யொன்று முருகக்கடவுள் பற்றிய எண்ணத்தை என் மனத்தில் ஊன்றி விட்டது: அதுவரையும் என் பாட்டியாரே என்னைப் பெற்ற அன்னை யென்று நம்பி வந்தேன்; அவரையே ''அம்மா'' என்று அழைத்து வந்தேன். ஆனால், என்னை ஈன்ற அன்னை எனக்கு இரண்டு வயதாகுமுன்னே இறந்துவிட்டாராம்; என்னைப் பெறுவதற்கு முதல்நாள், என் அன்னை நித்திரையிலே கையில் வேலுடன் தோன்றிய முருகக் கட வுளைக் கனவிற் கண்டாராம்; அதனாலே எனக்கு வேலாயுதபின்னை என்று பெயர் வைக்கப்பட்டதாம்.

பாட்டியார் இந்த உண்மையை உணர்த்தியபின், எத்தனையோ இரவுகளில் என் அன்னையை நினைத்து கண்ணீர் வடித்தேன். அப்போதெல்லாம் அன்னை கனவிற் கண்ட முருகப் பெருமானும் என் நினைவுக்கு வருவார். காலப் போக்கிலே, அன்னை பற்றிய உணர்வு என் அடிமனத்திலே புதைந்து விட்டது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நான் கல்வி பயின்ற காலத்தில் தமிழ் மீது எனக் குத் தனியான ஈடுபாடு ஏற்பட்டது. பெற்ற அன்னைக்குப் பதிலாக, என் அறிவை வளர்த்த தமிழ் அன்னைமீது அன்புவைத்தேன். யாப்பிலக்கணம் கற்குமுன்னரே தமிழ் அன்னை மீது மரபுமுறையான பாடல்களைப் பாடினேன். அந்தக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து வந்து எங்கள் கல்லூரியில் ''தமிழும் முருகனும்'' என்னும் பொருளிலே சைவத் தமிழ்ப் பேரறிஞர் ஒருவர் சொன்மழை பொழிந்தார். அவர் சொன்ன கருத் துக்களுள் ''முருகனே தமிழ்க் கடவுள்; முருகனே தமிழர் கண்ட செம்பொருள்; தமிழ் வடிவானவனே முருகன்'' என்பவை என் உள்ளத்தில் ஆழப் பதிந்து விட்டன. எனது தமிழ்க் காதல் முருக பக்திக்கு வழிவகுத்தது.

பின்னர், இலங்கைப் பல்கலைக் கழகத்திற் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் விபுலா னந்த அடிகளிடம் தமிழ் கற்கும் பேறு கிடைத்தது. அப்பெரியாரின் அன்புக்கும் ஆளானேன். ஆனால், என் ஆசை நிறைவேறு முன் அடிகள் இவ்வுலக வாழ்க்கையை ஒருவி விட்டார்!

புண்பட்ட உள்ளத்தோடு என் சொந்த ஊரிலே, கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஆசிரியத் தொழிலே மேற்கொண்டேன். பின்னர்க் கொழும்பு மாநகரம் சென்று அர சாங்கப் பணிபுரியலானேன். அக்காலத்தில் புலவர் திவ்ய கருணையாய பாண்டியனாரின் தொடர்பு ஏற்பட்டது. விபுலானந்த அடிகளிடம் கற்கமால் விட்ட குறையைப் புல வர் பாண்டியனாரிடம் தொடர்ந்தேன். பல ஆண்டுகளாக அவரிடம் தமிழும் சைவ சித்தாந்தமும் பாடங்கேட்டேன். அப்புலவர் பெருமான் வாயாலே ''தமிழ்ப் புலவன்'' என்று பாராட்டலும் பெற்றேன்.

இடைக் காலத்திலே என் முன்னை வினையாற் போலும், மேனாட்டுச் சிந்தனையாளர் களின் பகுத்தறிவு வாதம் என் மனத்தைக் கவர்ந்தது. நூற்றுக்கணக்கான நூல்களை ஆர்வத்தோடு படித்தேன். அதன் விளைவாக எனது தெய்வ நம்பிக்கை தளர்ந்தது 'மனிதனே தன் மனம் போனவாறு கடவுளைப் படைத்து விட்டான்' என்று நம்பினேன்

பின்னர் எதிர்பாராத வகையிலே என் வாழ்க்கையிற் சிக்கல்கள் தோன்றிப் பெரும் புயலாக மாறி என்னைக் கலக்கின. செய்வதறியாது திகைத்தேன். என் பகுத்தறிவு வாதம் அதற்குத் தீர்வுகாண உதவவில்லை. அப்போது அன்பர் ஒருவர் எனக்கு ஆறுதல் கூறி, ''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது'' என்னும் வள்ளுவர் வாய்மொழியின் வாய்மையை வலியுறுத்தினர். அந்த அன்பர் என் பொருட்டாக நல்லூர்க் கந்தனையும் வேண்டினர். விரைவிலே என் அகவிருள் அகன்றது. அடிமனத்தில் மறைந்திருந்த முருக பக்தி மறுமலர்ச்சி பெற்றது. முருகன் தோன்றுத் துணையாய் நின்று அருள்புரிவதை என் அனுபவத்திலே உணரலானேன். முருகன், சிவன் உமை, விநாயகன் திருமால் எல்லாரும் ஒரே பரம்பொருளின் வெவ்வேறு தோற்றங்கள் என்பதையும் தெளிந்தேன்.

இந்தக் காலகட்டத்திலேயே அன்பர் திரு. செ. இரத்தினப்பிரகாசம் அவர்களின் தொடர்பு ஏற்பட்டது. இவரும் இவருடைய இளவல் திரு நடராசாவும் கொக்குவில் இந்துக்கல்லூரிப் பழைய மாணவர்கள். இப்போது கொழும்பில் இருந்து கொக்குவிலிற் ''புதுக்கோயில்'' என்று பொதுவாக வழங்கப்படும் திருபாகர சிவசுப்பிரமணியர் கோயிலுக்குத் தொண்டு புரிந்து வருகின்றனர். 1983 ஆம் ஆண்டில் ''தேர்த் திருப்பணி மலரும்''. அடுத்த ஆண்டில் ''பத்திப் பாமாலையும்'' வெளியிட்ட பின்னர், அன்பர் இரத்தினப்பிரகாசம் கொக்கூர்ப் பெருமான் மீது பதிற்றுப்பத்தந்தாதி ஒன்று பாடுவிக்கும் ஆர்வத்தால் என்னை அணுகினர். அவருடைய வேண்டுகோளை மறுக்க முடியாமையினால், சமயம் வாய்க்கும் போது பாடித்தருவதாக இசைந்தேன்.

அதிவீரராமபாண்டியராற் பாடப்பட்டதும் ''குட்டித் திருவாசகம்'' என்று போற்றப்படுவதுமான ''திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி'' என்னும் நூலைப்பற்றி அறிந்திருந்தேனேயினும் அந்நூலையேனும் வேறு பதிற்றுப் பத்தந்தாதி நூல்களையேனும் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திலது. பிரபந்தத்தின் இலக்கணத்தை வைத்துக் கொண்டு நூலைப் பாடலாமென எண்ணியிருந்தேன். இதற்கிடையில், அன்பர் இரத்தினப்பிரகாசம் அரிதின் முயன்று தமக்குக் கிடைத்த 'பிரமீசர் பதிற்றுப்பத்தந்தாதி' 'கச்சி ஆனந்தருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி' என்னும் இரு நூல்களைத் தமது கைப்பட எழுதிய ஏட்டை என் பார்வைக்குத் தந்துதவினர். திருவாவடுதுறை ஸ்ரீ கச்சியப்பமுனிவராற் பாடப்பட்ட இவ்விரு நூல்களும் முனிவருடைய கல்விப் புலமையையும் செய்யுளியற்றும் திறமையையும் வெளிப்படுத்தியபோதும், படிப்பவர் மனத்தை உருக்கும் பத்திச்சுவை குன்றியனவாகவே எனக்குத் தோன்றின. அவற்றைப் படித்துப் பார்த்த என் மனைவியாரும் படிப்பவர்களுக்குச் சிரமத்தைத் தரும் தேங்காய்ப் பாகத்திற் பாடாமல், எளிதிற் பொருள் விளங்கும் நிராட்சைப் பாகத்திற் பாடுவதே நல்லது என்று எனக்கு ஆலோசனை கூறினர்.

''குட்டித் திருவாசகம்'' எளிமையும் சிவபெருமான் மீது பத்தியுண்டாக்கும் பண்பும் உடையது. அதுபோலவே எனது நூலையும் பாடவேண்டுமென எண்ணியிருந்தேன். இதற்கிடையில், நான் பிறந்து வளர்ந்த இலங்கையை விட்டு, நெடுந் தொலைவிலுள்ள கனடா நாட்டிற் சென்று குடியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ''எல்லாம் முருகன் செயலே'' என்று மனத்தை திடப்படுத்திக் கொண்டு, மனைவியாரும் நானும் கனடாவிற்குப் புறப்பட்டோம். புதிய சூழ்நிலைக்கு ஓரளவு பழக்கப்பட்டதும், அன்பர் இரத்தினப்பிரகாசத்துக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற எண்ணினேன்.

முருகன் மீது எனக்குள்ள பத்தியை பழகு தமிழிலே பாடத் திட்டமிட்டு, புதுக் கோயிற் சித்தி விநாயகரைக் குறித்துக் காப்புச் செய்யுளைப் பாடினேன். அதன் பின், தடையின்றி நூல் விரைவிலே முற்றுப் பெற்றது. முன்னவனே முன்னின்றுல் முடியாதது ஒன்றும் இல்லை யன்றே!

நூலைப் படித்துப் பார்த்து அன்பர் இரத்தினப்பிரகாசமும், இளவல் நடராசாவும் தங்கள் நயப்பைக் கடிதமூலம் எனக்குத் தெரிவித்தனர். அவ்வளவோடு அமையாமல், தமிழ் நாட்டுப் புலவர் கீரனிடமிருந்தும் நூலுக்குத் திறனையும் பாங்கிலமைந்த அணிந்துரை யொன்றையும் பெற்று, அதன் பிரதியை எனக்கு அனுப்பி வைத்தனர். எல்லாம் திருபாகர சிவசுப்பிர மணியன் அருள் என்றே, பாராட்டுகளைப் பணிவுடன் ஏற்றுக் கொள்கின்றேன். அணிந்துரை தந்துதவிய புலவர் கீரனுக்கும், அதனைப் பெறுவதற்கு அருமுயற்சி செய்த அன்பர்களுக்கும் என் உள்ளங்கனிந்த நன்றி உரியதாகுக. அவர்களுக்குக் கிருபாகரப் பெருமான் எல்லா நலங்களையும் அருளுவாராக.

இப் பதிற்றுப்பத் தந்தாதியைப் படிக்கும் ஒரு சிலரேனும் உள்ளம் உருகி, முருகப் பெருமான்பாற் பத்தி வைப்பாராயின், அதுவே அடியேனுக்கு மனநிறைவைத் தருவதாகும்.

2173 காணகி வீதி,
ஒட்டாவா, ஒந்தாரியோ,
கனடா.
1988-12-27.

செ. வேலாயுதபிள்ளை.

அணிந்துரை

கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னாள் ஆசிரியரும், கல்வித்துறையின் முதல்வமை அதிகாரியாகப் பணியாற்றியவருமான தமிழறிஞர் செ. வேலாயுதபிள்ளை அவர்கள் ''கொக்கூர்க் கிருபாகர சுப்பிரமணியர் பதிற்றுப் பத்தந்தாதி'' என்னும் இவ்வரிய நூலை இயற்றியுள்ளார்.

மரபு வழிப்பட்ட பதிற்றுப் பத்தந்தாதியை எழுதுவோர் குறைவே. சங்க காலத்தும் அருகியிருந்த இந்நூல் மரபு, திருக்கனைவப் பதிற்றுப் பத்தந்தாதி தோன்றிக் ''குட்டித் திருவாசகம்'' என்று போற்றப் பெற்றதும் மீண்டும் புலவர்கள் மத்தியில் விளக்கம் பெறுவதாயிற்று.

பதிற்றுப் பத்தந்தாதி என்றால் நூறு பாடல்களைக் கொண்டது என்பதும் ஒரு பாடலின் அந்தம் பிறிதொரு பாடலின் ஆதியாக அந்தாதி முறையில் தொகுக்கப் படுவது என்பதும் பலராலும் அறியப்பட்டது.

தீவினைகளை நீக்குவதே திரு முருகன் வேல், கந்தபுராணத்துள் எல்லாம் வல்ல சிவபெருமான் ''பானீன முருக்கிப் பல்லுயிர்க்கும் பருவரல் புரிந்த'' சூரனைக் கொல்ல வேல்விடச் செய்ததும் செவ்வேள் அங்ஙனமே செய்தவாறு போல இந்நூலாசிரியரும் இன்றைய நாள் நாட்டில் சூழ்ந்திருக்கும் தீமை நீங்க வேல் விடவேண்டுதல் மிகப் பொருத்தமுடையது.

''நாட்டில் ஓங்கிடும் மறச்செயல்களை நசுக்கி நல்லறம் வேலினை மீட்டும் ஓர்முறை விடுவாயோ?'' எனக்கேட்பது அழகானது; பொருத்தமானது.

தனிமனிதன் வாழ்வில் தோன்றும் ஆசைக்கு ஓரளவில்லை அதுவெல்லை கடந்தது. அதை வளர விடுவதாலேயே ஒருமனிதன் தான் கெடுவதுடன் சமூகத்தையும் கெடுக்கிறான். அதனால் ஆசைக்கு வேலி அமைப்பதே வாழ்வுப் பயிரைக் காக்கும் இக்கருத்தை

''அதுவும் இதுவும் வேண்டும் என்று
அல்லும் பகலும் அலைவீர்காள்
அதுவும் இதுவும் கிடைத்தாலும்
ஆசைக் கெல்லை யுண்டாமோ?''

என்று கேட்டு அவ்வானந்தக் கனலை அவிக்க கொக்கூரான் பதுமமலரைப் பற்றச் சொல்லும் பாங்கு மிக அழகியது.

இந்நூலில் கந்தன் கருணை வெள்ளமெனப் பொழிகிறது. வேண்டுவோர் குணக்கடல் குளித்துப் பயன் கொள்வீர்.

ஆசிரியரின் ஆற்றொழுக்கான நடையே அவர் புலமையைக் காட்டும்.

நன்றியுடன்
புலவர் கிரன்

876, டாக்டர் ராமசாமி சாலை,
கே. கே. நகர், சென்னை 600078,
தொலைபேசி 422065.
16-8-88

சிவமயம்

கொக்கூர்க் கிருபாகர சிவசுப்பிரமணியர்

பதிற்றுப் பத்தந்தாதி

காப்பு

சத்திதன் பாலன் செவ்வேள்
சண்முகப் பரமன் சைவ
வித்தகன் கொக்கூர் மேய
வெற்றிவேற் பெருமான் மீது
பத்தியாற் பதிற்றுப் பத்தந்
தாதியான் பாடு தற்குச்
சித்திவி நாய கன்றன்
திருவடி காப்ப தாமே.

நூல்

திருவேறு முகங்க ளாறுந் திசையெலாங் கருணைகால
இருபாலும் மங்கை நல்லார் இன்னருள் சுரத்தி ருப்ப
ஒருவேலைக் கையி லேந்தி ஒளிர்மஞ்ஞை மீத மர்ந்தே
முருகாநீ கொக்கூர் வாழ மூர்த்தியாய் அமைந்தாய் வாழி. (1)

வாழ்வித மாய மென்றும் வருமுடல் மண்ணு மென்றும்
பாழ்மொழி கூறு வார்தம் பக்கநாம் சேர மாட்டோம்
கூழ்வளந் திகழுங் கொக்கூர்ப் பதியிலுன் கோலங் கண்டால்
ஏழ்பிறப் பெடுத்தும் நின்னை ஏத்தவே விழைவோம் எந்தாய் (2)

தாயினு மினியா யின்பத் தமிழுக்குக் குழைவா யென்றே
ஆய்தமிழ்ப் புலவோருன்னை அன்பினுற் பாடி யுந்தார்
நாயினுங் கடையே னைந்த நலமெண்ணிக் கொக்கூர் மேய
சேயுனைப் பாடலுற்றேன் சேந்தனே கடைக்க ணிப்பாய் (3)

பாயிருள் சீத்துத் தோன்றும் பானுவே யென்ன வேலாற்
காய்ச்சினந் தவுணர் தானை கட்டழித் தமரர்க் காத்த
சேயுனை நருனை வேண்டிச் செந்தமிழ்க் கொக்கூர்க் சேர்ந்தேன்
நோயெலாம் போக வென்பால் நோக்கினைத் திருப்பு வாயே. (4)

வாயினைப் பெற்ற பேறுன் வண்மையை வழுத்த லென்றே
ஆயதற் கலாது லெல்லாம் அறுதியிட் டுரைத் தலாலே
நேயநெஞ் சினனுய் யானும் நின்புகழ் சொலவி ழைந்தேன்
தாயனே கொக்கூர் வாழுஞ் சோதியே யருளு கண்டாய். (5)

(அ. ப வி.): 1. திரு + ஏறும் + முகம் = திரு:- கண்டாரால் விரும்பப்படுந் தன்மை அழகு. மஞ்ஞை மயில்; கொக்கூர் வாழ - கொக்குவில் மக்கள் வாழ்வடைய.

2. கூழ் – உணவுப் பொருள்; 'படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்' என்னும் குறள் காண்க.

3. சேய், சேந்தன் என்பன முருகன் பெயர்கள்.

4. பாயிருள் – எங்கும் பரவிய இருள்; பானு – சூரியன் சீத்தல் - நீக்குதல்.

கண்களால் உனது கோலங் கண்டபின் மற்றோர் காட்சி
உண்டெனக் கலவிற் ருனும் உணர்கிலேன் உயர்வொப் பில்லாய்
வண்டுபண் மிழற்றுஞ் சோலை வளஞ்செறி கொக்கூர் மேய
அண்டர்நா யகனே யென்னை ஆட்கொள்ள தென்று கொல்லோ. (6)

என்றியா னுளனே வன்றே என்னுள்ளே நீயுமுள்ளாய்
அன்றுனை யறியா மல்யான் அலைகையாய்த் திரிந்து முன்றேன்
பின்னையுன் றிருவென் னுள்ளே பிறந்திடக் கருணை செய்தாய்
மன்றலங் கொக்கூர் மேய மணியுனக் கடிமையானே. (7)

யானெனுஞ் செருக்கின் நீங்கேன் யாதியான் செய்வேன் அந்தோ
தானவர் கோனை யன்று தண்டித்துன் பணிக்கு வைத்தாய்
தேனமர் காச்சூழ கொக்கூர்த் தேவேயென் குறைகள் போக்கி
ஏனனை நின்ப ணிக்குப் பணித்திலை இன்னும் ஐயா. (8)

ஐயனே வள்ளி காந்தா அமுதனே அன்பர்க் கெல்லாம்
மெய்யனே முதகா கொக்கூர் மேவிய சிவகுமாரா
செய்யனே மஞ்ஞை யூர்தீ தேவகுஞ் சரிம ணுளா
உய்யவென் உளத்து ளென்றும் உறைந்திட வேண்டு கின்றேன். (9)

வேண்டுவ வேண்டு வார்க்கு விரைந்துநீ யருள்வை யென்றே
ஈண்டுவர் அடியர் யானுன் இன்னருள் வேண்டி நிற்பேன்
கூண்டுவிட் டுயிர்போங் காலைக் கொக்குவிற் கோவே யுன்றன்
காண்டகு கோலங் கண்டு கைதொழ அருள்வாய் கந்தா. (10)

வேறு

கந்த மலரொடு தூப மேந்திக்
காரிகை யார்கடங் கணவ ரோடே
வந்து வலஞ்செயக் கொக்கூர் மேவி
வரங்கள் அளித்திடும் வள்ளி கேள்வா
சிந்தை யில்லுனை வைத்து வாழ்த்தித்
தியானஞ் செய்திடும் அடிய ருக்கும்
அந்த வாறருள் செய்கு வாயோ
அடிய னேயுமாண் டருள் வாயோ. (11)

ஓமெ னும்பதப் பொருளை யுள்ளவா(று)
உணர்த்த வறிகிலா அயனைக் குட்டினாய்
காமனைப் பொடி செய்த தாதைக்குக்
கருத குங்குரு வாய மர்ந்தனை

(அ. ப வி.): 6. உயர்வொப் பில்லாய் - உயர்வும் ஒப்பும் இல்லாத முழுமுதலே.

7. அலகையாய் - பேயாக (அலகை பேய்) மன்றலங் கொக்கூர் - மணமலிந்த அழகிய கொக்குவில்; மன்றல் என்பது நெடுந் தெருவுமாம்.

8. யாதியான் = யாது + யான்; தேன் - தேன் வண்டுகள்.

9. மஞ்ஞை யூர்தீ - மயில் வாகனனே. (வினி.

10. வேண்டுவ - வேண்டப் படுவன; ஈண்டுவர் - வந்து நெருங்குவர். கூண்டு - கூடு, இங்கே உடம்பைக் குறிக்கின்றது. காண்டகு - காணத்தக்க.

11. காரிகையார்கள் தங் கணவரோடே.

மாம ரஞ்செறி கொக்கு விற்பதி
மன்னு வேலநீ செய்யு மாடல்கள்
தர்ம தக்குண நிறைந்த நம்மனோர்
தாமு ணர்ந்திட வல்ல ரல்லரே. (12)

அல்லல் வந்தடும் போதுன் அடியவர்
அழைக்கு முன்னவர்க் கபய மருளுவை
சொல்ல ரும்மிடர் செய்த சூரனைத்
தோகை யாயுனைச் சுமக்க வைத்தனை
செல்வர் வாழ்திருக் கொக்கூர் மேவிய
சேந்த னேயுனக் கன்பு செய்திடின்
தொல்லை வல்வினை துன்பு றுத்துமோ
துகள்பட் டல்வினை மாயுந் திண்ணமே. (13)

திண்வ ரைபொடி யாக வேலினைச்
செலுத்தி ஞய்சிவ சுப்ர மணியனே
மண்வ ரைப்பினில் வந்து கொக்குவில்
மங்க லப்பதி கோயில் கொண்டனை
பெண்க ளிருவரை மருங்கி லிருத்தினுய்
பேறு பெற்றன விண்ணும் மண்ணுமே
கண்க ளிற்படுங் கடவுள் நீயெனக்
கலியு கத்திலுன் பெருமை நாட்டினுய். (14)

நாட்டி லோங்கிடும் மறச்செ யல்களை
நசுக்கி நல்லறம் நாட்ட வேலினை
மீட்டு மோர்முறை விடுவை யோவினும்
மீட்சிக் காலம்வந் தணுக வில்லையோ
வேட்டு வர்குல மகனை வேட்டவா
விரும்பிக் கொக்குவிற் பதிய மர்ந்தவா
தேட்ட மென்பதுன் அருளைத் தேடலே
திருவ ருட்குநான் அருக னல்லனே. (15)

அல்ல வேசெயுங் கொடிய ராழவும்
அன்பு செய்குவோர் அருளி லோங்கவும்
தெல்வ யல்கள்சூழ் கொக்கு விற்பதி
நெடிது வாழவுங் கோயில் கொண்டவா
சொல்வ ளத்தெரி புலவர் குழுவுடன்
சூழ்ந்து நற்றமிழ் ஆய்ந்த வேலவா
அல்லும் பகலுநின் அருட்க டல்குடைந்
தாடு வாரினி வீடும் விழைவரோ. (16)

(அ. ப வி.): 13. தாமதக் குணம் சாத்வீகம், இராசதம், தாமதம் என்னும் மூக் குணங்கள் கடையானது. இருள் மலம் மிகுந்த குணம் நம்மனோர் நம்போன்றவர்.
13. தோகையாய் மயிலாய் 'தோகை' மயிலுக்கு ஆகுபெயர்.
14. பேறு பெற்றன விண்ணும் மண்ணும் - தெய்வானையை மணந்ததால் விண்பேறு பெற்றது; வள்ளியை மணந்ததால் மண் பேறு பெற்றது.
15. விடுவையோ? இன்னும் மீட்சிக்காலம் வந்து அணுகவில்லையோ? என்க.
16. அல்ல - நன்றல்லாதவை; தீய செயல்கள். உன்பால் அன்பு செய்வோர் உன் அருளில் ஓங்கவும் என்றவாறு. நற்றமிழ் ஆய்ந்தவா - முருகன் தலைச் சங்கப் புலவருள் ஒருவனாய் அமர்ந்து தமிழ் ஆய்ந்தான் என்பது களவியலுரைப் பாயிரத்திற் காணப்பட்டது.

விழைவு செயலுயிர்க் கூட்டி மெய்யுணர்
வித்தை கூட்டுவான் வள்ளி குஞ்சரி
குழக னுயொரு வேலு மேந்தினுய்
குமர நின்றிருக் கோல மெய்ம்மையை
உழுவ லன்பினர் உணர்வ ரன்றிமற்
றுலக ரெங்ஙனம் உணர மாட்டுவார்
மழைவ ளஞ்செறி கொக்கு விற்பதி
மன்னு வாயடி சென்னி சேர்ப்பனே. (17)

சேர வந்தவர் சிந்தை மேவிநீ
தேனும் பாலும்போல் இனிமை நல்குவாய்
தூர நிற்பவர் நின்ன ருட்டிறம்
துய்க்கும் பேறிலர் துயரி வாழ்வரே
ஈர நெல்வயல் சூழுங் கொக்குவில்
இருந்த குள்செயும் எழிற்கு மாரனே
பேரொ ராயிரம் பூண்ட பெரியனே
பேதை யேன்செயும் பிழைபொ றுப்பையே. (18)

பொறுப்ப துன்கடன் என்று னீச்சரன்
புகுந்த வன்புகல் வேறெ னக்கிலை
வெறுப்ப னெசெயும் வீண ஞயினும்
வேல நின்பெயர் நாவி லோதுவேன்
உறுப்பெ லாந்திரு நீறு பூசிய
உத்த மர்நிறை கொக்கு விற்பதி
சிறக்க மேவிய சிவகு மாரனே
சிறிய னேனைக்கை விடுதல் நீதியோ. (19)

நீதி யாலுனை நினைப்ப வர்மனம்
நிறைத்து சொல்லரு மின்ப நல்குவாய்
ஆதி யிற்பரப் பிரம மானநீ
அருளினுலுருக் கொண்டு வந்தனை
வேதி யர்மறை யோதி வாழ்த்திட
விரும்பி மேவினை கொக்கு விற்பதி
நீது தீர்த்துன தடியர் குழுவினுட்
சிறிய னேனையுஞ் சேர்த்து வைப்பையே. (20)

(அ. ப. வி.): 17 விழைவு - இச்சை; செயல் - கிரியை; மெய்யுணர் வித்தை - ஞானம். இம்மூன்றும் முருகனுடைய சத்திகள். இச்சையை ஊட்டும் சத்தி, வள்ளி; கிரியை ஊட்டும் சத்தி, தெய்வானை; ஞானத்தை ஊட்டுஞ் சத்தி, வேல். முருகன் உயிர்களுக்கு இச்சையையும் கிரியையையும் ஊட்டி ஞானத்தைக் கூட்டுபவன் என்பதை ஆலன் திருக்கோலம் உணர்த்தும். கூட்டுவான - கூட்டும் பொருட்டு; உலகர் - உலகியலில் மூழ்கி முருகனை மறந்திருப்போர்.

19. என்று உனைச் சரண் (என்று + உனை = என்றுனை)

20. ஆதியிற் பரப்பிரமமான நீ - 'பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் உருவமாகி ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனனுலகமுய்ய' என்ற கந்தபுராணச் செய்யுளடி காண்க.

வேறு

[உலகர்க்கு அறிவுறுத்தல்]

வைத்தநிதி மாடுமனை வாழ்வென் றெண்ணி
மதிமயங்கிக் கதியிழந்து மாள்வீர் கேண்மின்
கைத்தலத்திற் பாசமொடு காலன் றூதர்
கைப்பற்ற வருங்காலை யாது செய்வீர்
எய்த்துழந்து பெற்றநிதி யுமக்கு வேறோ
எட்டுணையு முதவாதென் றறிகி லீரோ
மைத்தடங்கண் உமையபந்த மைந்தன் கொக்கூர்
மன்னுகிரு பாகரன்முள் பற்றின் உய்வீர். (21)

உய்ந்திடவே வழியுமக்குக் கூறு கின்றேன்
உலகத்துப் பொருளெல்லாம் பொருளா காவே
ஐந்துகரத் தானனமுக் கிளையோன் கொக்கூர்
அறுமுகவன் அவன்முள்மெய்ப் பொருளாங் காணீர்
தைந்துருகி அவன் கோயில் வலம்வந் தென்றும்
நாவாரத் திருப்புகழைப் பாடி யாடி
மைந்தனவன் வள்ளிதெய்வ யானை யோடு
மயிலமர்ந்த எழிற்கோலம் கண்டு வாழ்வீர். (22)

வாழ்நாளை வீழ்நாளாய்ப் போக்கி மண்ணை
மதித்துமனம் கல்லாக்கி மடிவீர் கேண்மின்
வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிவ குத்த
வள்ளுவனார் தெள்ளுரையை மனத்துக் கொண்மின்
கிழ்வானத் தெழுகின்ற ஞாயி றேபோற்
கிளர்சுமரன் கொக்கூரிற் கோயில் கொண்டான்
ஆழ்வீர்கள் அவனன்புக் கடலில் என்றும்
அதுவேநற் கதியாகும் ஐயமின்றே. (23)

இன்றியாம் இளையோம்பிற் காண்டு மென்றே
இருந்துலக வின்பத்திற் றிளைப்பீ ராயின்
என்றுநமன் வருவனென்ப தறிவீர் கொல்லோ
எதிர்காலம் நுமதாணை நிற்ப தாமோ
இன்றேயிப் போதேநீர் கொக்கூர்க் கேகி
இளமுருகன் புதுக்கோயில் இறைவன் முனில்
அன்றலர்ந்த மலர்கொண்டர்ச் சனைகள் செய்தே
ஆட்படுவீர் அவனுக்கே அன்பு செய்வீர். (24)

(அ. ப. வி.): 21. எய்த்து – வருந்தி; உழந்து – முயன்று எட்டுணையும் – எள் ளளவும் (எள் + துணை)

23. வள்ளுவனார் தெள்ளுரை – திருக்குறளின் கடவுள் வாழ்த்து

24. இன்று + யாம் = இன்றியாம். பிற் காண்டும் – இளமை கழிந்த பின்னர்க் கடவுளைப் பற்றிச் சிந்திப்போம். காண்டும் – காண்பாம்.

செய்களிலே செஞ்சாலி விளையுங் கொக்கூர்ச்
சேயோனே ஒருகால்நீர் சென்று காணின்
பொய்யான அன்பெல்லாம் புறத்தொ துக்கிப்
புதுக்கோயிற் பெருமாற்கே ஆளா வீர்கள்
மையார்ந்த விழியார்மேல் வைக்கு மன்பில்
மாகாணி யளவேனும் அவன்பால் வைப்பின்
எய்தாத பேரின்பம் எய்து வீர்கள்
எள்ளவும் மனநோக வையான் ஐயன். (25)

ஐயவன் அருளுக்கோர் எல்லை யில்லை
அழகென்னில் அவனழகே அழகாம் ஐயோ
பொய்யான அழகின்பாற் காதல் வைத்துப்
பொறிகலங்கி மதிமயங்கிப் போற்று வீர்காள்
செய்யாருங் கொக்கூரிற் கோயில் கொண்ட
சிவகுமார்ன் சேவடியைச் சென்று சேர்மின்
மெய்யான பேரின்பம் நுகர்ந்து நீவிர்
மேதினியிற் பிறந்தபயன் எய்துவீரே. (26)

வீரத்துக் கொரு தெய்வம் கந்த னென்று
விளம்புகின்றன் கண்ணபிரான் கீதை நூலில்
கோரத்துக் கிவனென்றே சொல்லுஞ் சூரன்
கொடுமையினைக் கைவேலாற் போக்கி வானோர்
ஆரத்தை மார்பணிந்தான் அவன்கொக் கூரில்
அடியவருக் கருள்செய்வான் கோயில் கொண்டான்
நேரத்தை வீணுகப் போக்கா மேநீர்
நேரேசென் றவன்றனைப் பற்றி நிற்பீர். (27)

பற்றறுத்தால் வீடென்று பகரும் நூல்கள்
பற்றறுக்க விழைவீரேற் பகரக் கேண்மின்
மற்புயத்த தாரகன்முன் மாயத் தாலே
மலையாகி நின்றனை மார்பங்கீண்டான்
கற்றவர்வாழ் கொக்கூரிற் கோயில் கொண்டு
கற்றூர்க்கும் மற்றூர்க்கும் காட்சி நல்கி
அற்புதனாய் விளங்குகிறன் அவன்றாள் பற்றின்
அகப்பற்றும் புறப்பற்றும் அழியக் காண்பீர். (28)

காணுமிடம் எங்கணுமே கந்தன் கோலம்
காணுமொரு துரியநிலை கூடப் பெற்றால்
மாணுமிந்தப் பிறப்பினிலே வீடு கிட்டும்
மற்றிதற்கு வழியொன்று கூறக் கேண்மின்
வாணுதலார் வள்ளிதெய்வ யானை யோடு
வாகான மயிலேறிக் கொக்கூர் மேவித்
தாணு வவன் இருக்கின்றன் அவனை நாளும்
தரிசித்துத் தியானித்தல் வழியா கும்மே. (29)

(அ. ப. வி.): 25. செய் – வயல், செஞ்சாலி – செந்நெல், மாகாணி அளவு – நிறைய அளவு; பதினறிலொரு பங்கு. 26. மேதினி – பூமி.

27. அருள் செய்வான் – அருள் செய்யும் பொருட்டு.

28. கீண்டான் – பிளந்தான். அகப்பற்று – நான் என்னும் உட்பற்று; புறப்பற்று – எனது என்னும் வெளிப்பற்று.

29. துரியநிலை – சுத்தநிலை, நான்காம் அவத்தை. வாணுதலார் – ஒளிபொருந்திய நெற்றியுடையவரான. வாகான – அழகான, தாணு – நிலைபேறுள்ளவன், கடவுள்.

ஆகுமா றுளதேனும் அறியீர் போலும்
அற்பகலாய் அல்வழியில் அகலுதல் என்னே!
தேகமிது நிலையாது வாய்த்த போதே
தேமாவின் சோலைசெறி கொக்கு விற்கண்
ஆகமதூல் விதிக்கமைந்த ஆல யத்தில்
அறுமுகனைத் தரிசிப்பீர் அவற்கே யாளாய்ப்
பாகுபோல் மனமுருகிக் கண்ணீர் வாரப்
பைந்தமிழால் அவன்புகழைப் பாடு வீரே. (30)

வேறு

பாடுதற் கமைந்தவன் பார்வதி பாலகன்
சூடுதற் கமைந்தவை சுந்தரன் சேவடி
ஆடுதற் கமைந்ததந் சுழகன் மாமயில்
கூடுதற் கமைந்தது கொக்கூர்க் கோயிலே (31)

கோவினைக் கும்பிடக் கொக்கூர்க் கேகுமின்
நாவினில் அவன்பெயர் நாளும் நவிலுமின்
பாவினில் திருப்புகழ் பண்ணொடு பாடுமின்
தீவினை தீர்த்திடும் தேவினைத் தெளிமினே. (32)

தெளிவினைத் தருவது சேந்தன் திருமுகம்
ஒளியினைத் தருவது முருகன் உடம்பிடி
குளிர்நிழல் தருவது கொக்கூ ரான்பதம்
களியினைத் தருவது கந்தன் கருணையே. (33)

கருவினை யறுத்திடுங் கந்தன் கழலினை
அருவினை யறுத்திடும் ஆறெழுத் தருமறை
குருவருள் கூட்டிடுங் கொக்கூ ரான்பணி
திருவினை யாக்கிடுஞ் செவ்வேட் சுடிமையே. (34)

அடியேனிற் பாதல தப்பாற் சென்றிடும்
முடியெனில் அண்ட முகட்டினு மோங்கிடும்
வடிவொடு கொக்குவில் வந்துறை குமரனைக்
கடிமலர் கொண்டு கைதொழல் கடனே. (35)

கடன்மடை திறந்தென கருணை பொழிபவன்
மடவரல் வள்ளியை மணந்த மயிலவன்
திடமுறு முனிவருந் தேவருந் தொழுதிட
இடமுறக் கொக்குவில் இருந்தருள் வானே. (36)

---

30. ஆகுமாறு – ஆக்கத்துக்கான வழி, அல்வழி – நன்றல்லாத வழி, அற்பகலாய் – இரவு பகலாய்.

33. உடம்பிடி – வேல், ஒளி – ஞானம்.

34. ஆறெழுத்தருமறை – முருகனுக்குரிய சடாச்சரமந்திரம் அது குமாரயநம என்பது; சரவணபவ என்றுங் கூறுவர்.

வானவர் துயர்கெட வரையீனப் பிளந்தவன்
தானவர் தலைவனைத் தடிந்தருள் புரிந்தவன்
மானமர் நோக்கிதெய் வானயை மணந்தவன்
கோனவன் கொக்குவிற் கோயில்கொண் டானே. (37)

கொண்டலின் அருண்மழை பொழிபவன் குமரன்
தொண்டருக் கெளியவன் விண்டுவின் மருகன்
தண்டமிழ் முனிக்கருள் செய்தவன் சாமி
தண்டலைக் கொக்குவிற் றளியுறை பவனே. (38)

உறையவன் யாங்களும் யாவினு முள்ளான்
மறைகளுந் தேடரும் மறைபொரு ளானவன்
இறையவன் உறைவான் எமக்கருள் நல்கிக்
குறைதவிர்த் தாண்டிடக் கொக்குவில் குறித்தே. (39)

குறியென வொன்றிலன் குணமிலன் பேரிலன்
அறிவினுக் கெட்டான் ஆயினும் அருள்வான்
குறியொடு குணமுங் கொண்டுகொக் கூரில்
நெறியுற நின்றுன் நிழல்வரு வீரே. (40)

வேறு

வாரீர் உலகீர் உமக்கொன்று
வகுத்துச் சொல்வன் கேளீரே
நீராக் கவலைக் குள்ளாகித்
தினமும் அவலப் படுகின்றீர்
காராள் கொக்கூர்ப் பதிமேவிக்
கந்தன் கிருபா கரனங்கே
ஆரா வமுதம் வழங்குகின்றுன்
அள்ளிப் பருக முந்துமினே. (41)

மின்னல் போலும் உலகின்பம்
மிகுத்துப் பேசும் மடவோரே
உன்னிப் பார்ப்பின் அவ்வின்பம்
உவர்த்துப் போகும் இன்னாவில்
மன்னும் மாறுப் பேரின்பம்
மற்றுன் றுண்டு கொக்கூரில்
தன்னேர் இல்லாத் தலைவன்றுள்
சாரும் இன்பம் அதுவாமே. (42)

---

38. கொண்டலின் - மழைமுகில் போல, விண்டு - வீட்டுனு, திருமால். தண்டலை - சோலை, தளி - கோயில், பவன் - கடவுள்.

39. 'இறையவன்... கொக்குவில் குறித்து உறைவான்' என்ற கொண்டுகூற்றுநிலை.

40. அருள்வான் - ஆன்மாக்களுக்கு அருளும்பொருட்டு.

41. 'வருவீர்' என்ற மேற்செய்யுளின் இறுதிச்சீர் அடுத்த செய்யுளின் தொடக்கத்தில் ''வாரீர்'' என நின்றது.

42. உவர்த்துப்போகும் – வெறுத்துப்போம்.

அதுவும் இதுவும் வேண்டுமன்றே
அல்லும் பகலும் அலைவீர்கள்
அதுவும் இதுவும் கிடைத்தாலும்
ஆசைக் கெல்லை யுண்டாமோ?
கதுவும் ஆசைக் கனலடங்கக்
காதல் செய்து கொக்கூரான்
பதும மலர்த்தாள் பற்றியருட்
பரவை மூழ்கித் திளைப்பீரே. (43)

திளைக்கும் உலகத் தின்பமெலாம்
சிறுபோ தினிக்கும் நீர்மையவே
இளைத்துப் போவீர் முடிவினிலே
இன்பக் கானல் நீராமே
தொளைக்குங் கவலை தொலைத்தற்கு
தோகை மயிலோன் கொக்கூர்க்கோர்
விளக்க மாக நிற்கின்றான்
விளைப்பீர் பத்திப்பயிரினையே. (44)

பயிலுங் கல்வித் துறையெல்லாம்
பரக்கக் கற்றும் பாழான
வயிறு வளர்க்கும் வகைகளையே
வாழ்க்கைக் குறிக்கோ ளாக்குவீரோ?
உயிருக் குறுதி தேடுவீரேல்
உள்ளான் போடு கொக்கூரான்
மயிலும் வேலுந் துணையென்று
மதித்து வாழ்த்தக் கற்பீரே (45)

கற்றுங் கேட்டுஞ் சிந்தித்தும்
காண்டற் கரிய பரம்பொருளைப்
பற்றும் வழியொன் றுண்டதுதான்
பத்தி யாகும் பணிவோர்தம்
குற்றங் களைந்து கோதாட்டக்
கொக்கூர்க் குமரன் என்றுமுளான்
பெற்ற யாக்கைப் பயனெய்தப்
பெருமான் பணிகள் செய்வீரே. (46)

செய்யுங் கருமம் யாவுமவன்
சேவை யென்று மதிப்பீரேல்
பொய்யுங் களவும் வஞ்சனையும்
புகலில் லாமற் போய்விடுமே;
அய்யன் கிருபா கரன்கொக்கூர்
அமர்வான் அவன்றன் பணிநிள்ளல்
உய்யும் மார்க்கம் பிறதேடி
உலகீர் அலைய வேண்டாமே. (47)

---

43. கதுவும் – கவ்வும்; பரவை – கடல்.
ஆசைக் கனல் அடங்க... அருட் பரவை மூழ்கித் திளைப்பீர் என்பதிலுள்ள நயம் நோக்கற்பாலது.

44. நீர்மைய – தன்மையுடையன. தொளைக்கும் – மனத்தைத் துளைக்கும்.

46. கோதாட்ட – சிறாட்ட.

47. ஒவ்வொருவரும் தாம் உயிர் வாழ்வதற்காகச் செய்யுந் தொழிலே இறைவனுக்குச் செய்யும் சேவையென்று மதிப்பாராயின், சமூகத்திலே பொய், களவு, வஞ்சனை ஆகிய குற்றங்கள் தங்குமிடம் இல்லாமல் மறைந்துவிடும் என்றவாறு.

வேண்டத் தக்க இவையென்றும்
வேண்டா தனமற் றிவையென்றும்
யாண்டும் அறிந்து நல்குமிறை
யாணர்க் கொக்கூர்ப் பதிமேவிக்
காண்டற் கினிய கோலமொடு
காட்சி தருவான் அவனருளே
வேண்டித் தொழுமின் தொழுவீரேல்
வேண்டும் வரங்கள் தருவானே. (48)

தருணம் வாய்த்த போததனைத்
தவற விடுதல் சாலாதே;
கருணை வள்ளல் கொக்கூரில்
கந்த கோட்டத் துறைகின்றான்.
தருணர் முதியர் யாவீரும்
சார்வீர் அவன்பால் இப்போதே
மரணம் வருங்கால் அச்சமிலை
மயில்மேல் வருவான் வேலோனே. (49)

வேலும் மயிலுந் துணையென்று
வீரம் பேசி இருப்பிரேல்
காலன் முனும் அணுகாமல்
காத்து நிற்பான் கைகூப்பிச்
சிலம் மிக்க கொக்கூரில்
செவ்வேட் பெருமான் பணிசெய்யக்
காலம் பெறவே வாருங்கள்
காப்பான் என்றுங் கூடம்பனே. (50)

வேறு

[நெஞ்சொடு சினத்தல்]

கடம்பணிந்த மலர்மார்புங் கரங்கொண்ட தனிவேலும்
இடம்பெறவே எழிற்கொக்கூர் எழுந்தருளும் இறைவனவன்
உடம்பினுளே உயிர்க்குயிராய் உளன்கண்டாய் மடநெஞ்சே
இடம்பெயர்ந்து நெடுந்தூரம் இருப்பினுமென் இரங்கலையே. (51)

இரங்குபவன் உயிர்ப்பொருட்டாய் இருநிலத்தைப் படைத்தளிப்பான்
பரங்கருணைத் தடங்கலே பகைதணிக்கப் படையெடுத்தான்
கரங்குவிவார்க் கருளுதற்காக் கவின்பெறுகொக் குவிலமர்ந்தான்
சிரந்தாழ்த்தி அவனடியிற் சிலமலர்வைப் பதுகடனே. (52)

---

48. வேண்டத்தக்க – இறைவனிடம் வேண்டத்தக்கவை. யாணர் – புதுவருவாய்.
49. கந்தகோட்டம் – முருகன்கோயில் (கந்தன் + கோட்டம் = கந்தகோட்டம்) கோட்டம் – கோயில், தருணர் – இளையர்.
50. வேலும் மயிலும் துணையென்று வீரம்பேசி இருப்பாரிடம் இயமனும் அஞ்சிக் கைகூப்பிக் காத்து நிற்பான் என்றவாறு.
51. இருப்பினுமென்–இருந்தாலும் என்ன?

கடனடுவிற் பெருமரமாய்க் கரந்துநின்ற அசுரன்றன்
உடல்பிளக்கச் சுடரிலைவேல் உருவியவன் திருவருளால்
வடவிலங்கை மருவுகொக்கூர் வளநகரில் உறைகின்றான்
இடர்கெடுக்க விரும்புதியேல் இறையவற்காட் படுவாயே. (53)

வாய்க்கினியான் மலைக்கினியான் வணங்குபவர் உடற்கினியான்
நோய்க்குமருந் தவனுவான் நுணுக்கரிய உணர்வாவான்
தாய்க்குநிகர் தலையளியான் தமிழ்க்கொக்கூர்த் தளியுறைவான்
போய்க்காண்பாய் புதுத்தேரிற் பொலியுமவன் அழகினையே. (54)

அழகினுக்கோர் அழகாவான் அருமறைதேர் பொருளாவான்
கழகமதிற் றமிழாய்ந்த கருதரிய புலவனவன்
மழலையிள மடநல்லார் மருங்கணைக்கும் மணவாளன்
பழனவளஞ் செறிகொக்கூர்ப் பதியுறைவான கழல்பணியே. (55)

பணிகின்று யிலைநெஞ்சே பலகவலை வளர்க்கின்றாய்
பிணிநின்ற வுடலுக்கே பெரும்பற்று வைக்கின்றாய்
மணிவென்ற மயிலூர்தி மகிழ்கொக்கூர் மருவியவன்
பணிநிற்கத் துணிவையெனிற் பலதலைப்பட் டுழலாயே. (56)

பலதலைமைக் கடிமையாய்ப் பணிந்ததெலாம் இனிப்போதும்
உலகியலை உணருதியேல் உவகையெலாம் உவர்ப்பாகும்
மலமகல வழிகொக்கூர் மருவியவன் மலரடியில்
தலைபடவைத் தவன்பணியில் தவறுமல் ஒழுகுவதே. (57)

ஒழுக்காறு கடைப்பிடிக்கா துழல்கின்றாய் மடநெஞ்சே
அழுக்காறு தவிர்க்கவழி யறிந்திருந்துங் கடைப்பிடியாய்
முழுக்காத லொடுகொக்கூர் முருகனைநீ வழிபட்டால்
வழுக்காமல் உயிரோம்ப வழிதருவான் சிவசுதனே. (58)

சிவமெனுஞ்செம் பொருளொன்றே செயல்வகையாற் குமரனென
நவவடிவம் எடுத்ததென நவையறநீ துணிமனமே
பவனென்றும் மகனென்றும் பகருவதோர் உபசாரம்
சிவசுப்ர மணியனைநீ நிருக்கொக்கூர்ப் பதிக்காணே. (59)

கண்ணுதலான் திருவிழியிற் கனற்பொறியா யெழுந்துபினர்
எண்ணரிய சரவணத்தில் எழில்முருகாய் உருவாஞன்
மண்ணகத்தில் உயர்கொக்கூர் மகிழ்ந்துறைவான் அவனழகைக்
கண்ணுறுதல் தவிர்த்தாலும் அகக்கண்ணிற் படுங்காணே. (60)

---

53. கடனடுவில்–கடல் நடுவில்; வளநகர்–வளம் பொருந்திய கோயில், நகர்–கோவில்.
55. பழனவளம் – வயல்வளம்.
56. மணிவென்ற மயில் – நீல மணியின் நிறத்தை வென்ற நிறமுடைய மயில். பல தலைப்படுதல் – மனம் பலவழியில் அலைதல்.
57. பல தலைமைக்கு அடிமையாய்–உலகியலிற் பல அதிகாரிகளுக்குக் கீழ் அடங்கி நடந்து.
58. வழுக்காமல் – ஒழுக்கத்தினின்றும் தவறுமல்.
59. பவன் – சிவன். சிவசுப்பிரமணியன்–சிவமாகிய சுப்பிரமணியன்; சிவனுஞ் சுப்பிர மணியனும் வேறல்லர், ஒருவரே என்ற உண்மையைக் காண்பாய். உபசாரம்–ஒன் றன்தன்மையை மற்றொன்றின்மேல் ஏற்றிப் பொருந்துமாறு கூறுவது.
60. பினர்–பின்னர் என்பதன் விகாரம். நெடுத்தொலை நாட்டில் வதிவதால் நேரே கண்களாற் காணுதல் இல்லையாயினும், முருகன் எழிலுருவம் மனக்கண்ணிற் படும்; அதனைக் காண் என்பது ஈற்றடியின் கருத்து.

வேறு

காணுக கந்தனின் கோலம்
மாணுறு கொக்குவிற் கேகி
ஆணவ மலமற வாழ்த்திப்
பேணுக வவன்றிருப் பேரே. (61)

பேரோ ராயிர முடையான்
சீரார் கொக்குவிற் கோமான்
நேரார் உரமடு வேலான்
ஆரா வமுதவன் றனே (62)

தானே தனிமுத லானுன்
வானேர் இடர்கெடுத் தாண்டான்
கானுர் கொக்கூர் உகந்தான்
ஆனை இன்பத் தருமே. (63)

நருமை வரும்பய னுய
முருகன் கொக்கூர் அமர்வான்
பெருமை யுடைய பிரானே
இருமை வினைகடி வானே. (64)

கடிவான் திய வினைகள்
கொடியாக் குக்குட முயர்ந்தான்
குடியார் கொக்குவிற் குமரன்
வடிவேல் கைதொழு மின்னே. (65)

தொழுமின் தொண்டீர்கள் தொழுது
கழிமின் பொய்ம்மை கழித்துக்
குழுமிக் கொக்கூர்த் தனிநின்(று)
அழுமின் தருவான் ஆக்கமே. (66)

ஆக்கி யாவும் அழிப்பான்
காக்கும் அருளினன் கொக்கூர்
நோக்கி இருந்தனன் நோன்றுன்
பூக்க நும்முடி மேலே. (67)

மேலன யாவினும் மேலோன்
வேலவன் கொக்கூர் விமலன்
நூலறி புலவன் நோன்றுன்
சால நுமக்குச் சரணே. (68)

சரவண பவனுஞ் சண்முகன்
பிரணவ முணர்த்திய பெருமான்
வரமருள் கொக்கூர் வள்ளல்
மரண பயந்தவிர்ப் பானே. (69)

பானுவை வென்றிடு மொளியான்
மானிகர் நோக்கியர் மணுளன்
கோனவன் கொக்கூர்க் குமரன்
ஞான நலத்தரு வானே. (70)

வேறு

வானு டளித்த குஞ்சரியை
வதுவை செய்த வயலீரா
தேனேத் நிணையோ டுணத்தந்த
செவ்வா ய் வள்ளிக் குருகியவா
ஆனுப் புலமைக் குகதாசன்
அன்புக் குருகிக் கொக்கூரிற்
கோனுய் நின்றுய் நாயடியேன்
குறைதீர்த் தாளக் குறியாயே. (71)

குறிய முனிக்குத் தமிழ்ந்த
குறிஞ்சிக் கிழவா கொக்கூரா
அறிவில் முதிர்ந்த அவ்வையுடன்
ஆடல் புரிந்த அயில்வேலா
இறைவன் நூலுக் குரைதேர்ந்த
இளையோய் தமிழால் உணப்பாடச்
சிறியன் ஆசைப் பட்டனனென்
சிறுமை யெண்ணிச் சிரிப்பாயே. (72)

---

62. நேரார் – பகைவர்; உரம் அடும் – வலிமையை அழிக்கும்.
63. கான் – வாசனை; ஆனை – அமையாத.
64 இருமை வினை கடிவான்-நல்வினை தீவினைகளான கன்மபந்தத்தைப் போக்கியருள்வான்
65. குக்குடம் – கோழி; கோழிக்கொடியை உயர்த்தியவன் என்க.
67. நோன்றுன் – பகைவரை அழித்துத் தொண்டரைக் காக்கும் வலியதாள்.
70. பானுவை – சூரியனை; மானிகர் – (மான் + நிகர்) மானையொத்த.
71. ஆனுப் புலமை அமையாத (நிறைந்த) புலமையுடைய குகதாசர் ச. சபாரத்தின முதலியாரின்.
72. அவ்வையுடன் ஆடல் புரிந்தது இடைச் சிறுவனுய், சுட்டபழம் கேட்ட ஔவைக்கு நாவற் கிளையை ஆட்டிப் பழங்களை மண்ணில் உதிர்த்த வரலாறு. இறைவன் நூலுக்கு ; இறையனர் களவியலுக்குக் கடைச்சங்கப் புலவர் பலர் செய்த உரைகளுள் நக்கீரன் உரையே சிறந்ததென மெய்ப்பாட்டினுல் உணர்த்தியமை.

திரித்துப் புரங்கள் எரிசெய்த
சிவனூர் பேணுஞ் சிவகுருவே
விரித்த குடையைப் பிடித்தாடி
வீரியாட் டயர்ந்த விறல்வீரா
தரித்த நீற்றுக் குறியுடையார்
சாருங் கொக்கூர்த் தலியுறைவாய்
எரித்தென் வினையை நீருக்கி
என்று கொள்வ தெப்போதே. (73)

போதார் கொக்கூர்ப் புதுக்கோயிற்
பொலியுங் கிருபா கரமூர்த்தீ
நாதா ஆற்றுப் படைசொன்ன
நக்கி ரன்றன் இடர்தீர்த்தாய்
வாதா டியசெந் தமிழ்ப்புலவர்
வழக்குத் தீர்த்த நடுவோனே
ஆதா ரமெனக் குனையன்றி
ஆரும் உலகில் இலையன்றே. (74)

அன்றும் உன்னைக் காணுமல்
அன்பு வைத்தேன் அறுமுகவா
இன்றும் உன்னைக் காணுமல்
இரவு பகலாய் இரங்குகின்றேன்
துன்றும் காச்சூழ் கொக்கூரில்
தூண்டா விளக்காய் ஒளிர்சோதீ
என்றும் உன்றன் அடிநிழலில்
இறுமாந் திருக்க வரமருளே. (75)

வரம்பின் கருணைப் பெருங்கடலே
வானு டளித்த வயவீரா
சுரும்பெண் மொழியாள் வள்ளியைமுன்
களவில் மணந்த கதிர்வேலா
கரும்பார் பொழில்சூழ் கொக்கூரிற்
சுடருஞ் சோதி சுகுமாரா
இரும்பாம் மனத்தென் எனையீர்த்தாய்
இனிநீ என்ன செய்வாயே. (76)

வாயின் உள்ளாய் மனத்துள்ளாய்
வணங்கும் உறுப்புக் களிலுள்ளாய்
தாயின் இனியாய் தயாநிதியே
தண்ணூர் வயல்சூழ் கொக்கூரிற்
கோயில் உள்ளாய் குமரேசா
கூறின் எங்கும் உள்ளாயே
நோயிற் கிடந்து மாள்வே னை
நோக்கி இருத்தல் அழகாமோ. (77)

அழகா தமிழா திருப்புகழாம்
அமுதம் உண்ட அயில்வேலா
குழகா குமரா குமரகுரு
கூறுந் தமிழுக் குருகியவா
உழவார் கொக்கூர் உலத்துறையும்
ஒப்பில் கிருபா கரமுருகா
அழவோ வைத்தாய் எனையிங்கே
அறுமா முகத்துப் பெருமானே. (78)

மானேர் நோக்கின் மடந்தையரை
மருங்கில் வைத்த மணவாளா
வானேர் மண்ணேர் யாவர்க்கும்
வாழ்வின் முடிவே வடிவேலா
தேனேர் பொழில்சூழ் கொக்கூரிற்
திகழும் மணியே செவ்வேளே
ஏனே இன்னும் எனக்கருளா(து)
இருப்பாய் உள்ளம் இளகாயே. (79)

காயுஞ் சினத்துத் தாரகன்றன்
காயம் பிளந்த கதிர்வேலா
பாயுங் கங்கை சடைமடுத்த
பரமர் கருதுங் குருநாதா
ஆயுங் கலைகள் செழித்தோங்கும்
அழகார் கொக்கூர் அமர்வோனே
நேயம் மறந்த பிழைபொறுப்பாய்
நெடுவேல் விடுவாய் வீழ்மேலே. (80)

---

73. விரித்த குடை : முருகன் அசுரரோடு பொருதபோது குடைக்கூத்தாடிய வரலாறு.

74. வாதாடிய : (72 இல்) உரைதேர்ந்த செய்தி. களியலுக்குக் கடைச்சங்கப் புலவர் ஒவ்வொருவரும் தாம்தாம் செய்த உரையே சிறந்ததென வாதாடியபோது உருத்திரசன்மனார் அவர்கள் உரைகளைக் கேட்டு நக்கீரர் உரையே சிறந்ததென மெய்ப்பாட்டினால் உணர்த்தினர். உருத்திரசன்மனர் முருகனின் அமிசமாதலால் முருகன்மேல் அச்செய்தி ஏற்றிக் கூறப்பட்டது.

76. கரும்பார் — வண்டுகள் மொய்க்கின்ற.

78. தமிழா — இனியவனே, தமிழ் என்பதற்கு இனிமை, இன்பம் என்னும் பொருள்கள் இலக்கியங்களில் காணப்படுகிறது. தமிழில் காதல் கொண்டவன் என்றும் பொருள் கொள்ளலாம். உழவார் உழவு + ஆர் உழவுத்தொழில் நிறைந்த,

80. உன்மேல் நேயம் மறந்தது என் ஊழாலேயாம். அந்த ஊழ் அழியுமாறு உன் வேலை விடுவாய் என்பது சுற்றடியின் பொருள்.

வேறு

[தலைவி தலைவன்பால் தூது விடல்]

ஊழலாலே இயங்குகின்ற வளியே வாராய்
உனையொன்று நானிரப்பன் நல்குவயோ?
கீழாகி மேலாகி நடுவு மாகிக்
இளரொளியாய் விளங்குகின்ற எனது நாதன்
கூழாருங் கொக்கூரில் இந்துக் கல்விக்
கோட்டத்துக் கயலுள்ள கோயி லுள்ளான்
தாழாமல் என்னிலைமை செவியிற் சொல்லின்
தையலிவள் உயிர்தந்த தரும மாமே. (81)

தருவளருங் காவெங்கும் பறந்து சென்று
தண்டேனே யுண்டுமகிழ் வண்டே நீவா
பொருவருமூ விருமுகமும் புயமுந் நான்கும்
மூண்டருளு மெம்பெருமான் உளங்க வர்ந்தான்
திருவளருங் இலங்கையிலே வடபா லுள்ள
செழும்பதியாங் கொக்கூரிற் கோயி லுள்ளான்
உருகுகின்றேன் அவன்பொருட்டாய் ஒருகால் நீபோய்
உறுதுயரம் அவற்கெடுத்துக் கூறுவாயே. (82)

கூறுமொழி கேட்டுநிதங் கூறக் கற்றுய்
கூண்டிலிருந் தென்கிளியே உனைவி டுப்பேன்
சோறுபழம் பாலுடனே வாயில் வைப்பேன்
சோராமல் என்றூதாய்ச் செல்வா யம்மா
ஆறுமுகப் பெருமானென் ஐயன் கொக்கூர்
ஆலயத்தில் அமர்ந்துள்ளான் அவன்பா வேகி
மாறுமுகங் கொண்டால்யான் வாழேன் என்று
மறுமொழிபெற் றென்பால்நீ வாரா யின்னே. (83)

வார்கடலின் கரைமருங்கே இறைதேர் கின்றுய்
வண்குருகே என்குறையைக் கேளா யோநீ
சீர்பொருகு கொக்கூரில் உறையுஞ் சேந்தன்
சிவகுமர மணியனவன் எனைம றந்தான்
ஏர்பறித்தான் உளம்பறித்தான் என்செய் கோயான்
என்நிலைமை அவற்கெடுத்துச் சொல்லு வாயே
நீர்பெருகு கண்களுடன் நிற்கின் றேனை
நீக்குவது தவறென்று கழறு வாயே. (84)

---

81. வளி – காற்று; காற்றைத் தலைவி தூதுவிடுவதாக அமைந்துள்ளது இப்பாடல்.

82. கா – சோலை; வண்டுவிடுதூது தண்டேன் – தண் + தேன்.

83 கூறும் மொழி நிதங் கேட்டுக் கூறக் கற்றுய் என்று கொண்டு கூட்டிப் பொருள் கொள்க. நிதம் – அநுதினம். என் தூதாய்ச் செல்வாய் அம்மா. இன்னே – இப் பொழுதே.

84. குருகு விடு தூது. குருகு – நீர்ப்பறவை; கொய்யடி நாரை. வண்குருகே என்றது தலைவியின் உளக்குறிப்பு. அதாவது 'நீ எனக்கு உதவும் வள்ளன்மை உடையாய்' என்பது, ஏர் – அழகு கழறுவாய் – இடித்துச் சொல்லுவாய்.

வாயலகில் உணவருந்தும் போதெல் லார்தான்
வள்ளலவன் பெயாசொல்லி வைத்த வாறு
நீயறிதி யன்றேயென் பூவைப் பிள்ளாய்
நின்னீயிரந் தொருவரதான் கேட்பன் கேளாய்
நாயகன்கொக் கூர்க்கோமான் எனும றந்தான்
நல்லாரும் அப்பதிக்கே இப்போ தேகி
நோயெனது நுவலுதிநீ யவன்செ விக்கே
நோய்செய்யான் உனக்கவன்நீ அஞ்சா தேகே. (85)

அஞ்சிறைய மடவனமே துணையோ டாடி
அல்லிமலர்ப் பொய்கையிலே நீந்து கின்றாய்
கெஞ்சியுனைக் கேட்கின்றேன் இரங்து வாயோ
கேளாவான் கொக்கூரிற் கோயி லுள்ளான்
நெஞ்சவர்க்குப் பறிகொடுத்தேன் நிறையி ழந்தேன்
நினைவகலான் அவனென்னை நினைக்கு மாறே
மஞ்சினிலே பறந்துகிரு பாக ரற்கென்
மாற்றமொன்று சொல்லிவர வேண்டு வேனே. (86)

வேண்டியபோ தெப்போதும் விண்ணூ டாக
விரும்புமிடம் பறந்துசெலும் மகன்றில் காளைன்
வேண்டுதலைக் கேட்டருள்வீர் வெற்றி வேலன்
விண்ணவர்க்கு வாழ்வளித்த விசாகன் எங்கோன்
காண்டகுதோர்ச் சிறப்புடைய கொக்கூர்க் கோயிற்
கண்ணுள்ளான் என்னுள்ளம் கவர்ந்து சென்றான்
ஆண்டொருகாற் செல்வீரேல் அவன்பால் நண்ணி
அளியன்யான் படுந்துயரஞ் சொல்லு மின்னே. (87)

மின்னுகின்ற எழிற்றோகை விரித்து மெல்ல
மிதித்தாடும் இளமயிலே சொல்லக் கேளாய்
உன்னனைய ஒருமயில்மீ தூருஞ் செல்வேள்
உறைகின்றான் கொக்கூரிற் புதுக்கோ யிற்கண்
என்னிறையும் என்னுளமுங் கவர்ந்த கள்வன்
என்பாலே வருவானென் றிருந்து நொந்தேன்
அன்னவனே உன்முதுகில் ஏற்றி வந்தென்
ஆகமுறத் தழுவுதற்குத் தருவாய் நீயே. (88)

---

85. பூவை விடு தூது. தலைவி தான் அன்பாக வளர்த்த பூவையைப் 'பிள்ளாய்' என்று விளிக்கின்றாள்

86. அன்னம் விடு தூது. அனம் – அன்னம் என்பதன் விகாரம். கேளாவான்–அன்பன் கேள் – அன்பு. நிறை – மனத்தைக் கட்டுப்படுத்தி நிறுத்திவைத்தல். மஞ்சு – மேகம், முகில், மாற்றம் – செய்தி, சொல்.

87. மகன்றில் – அன்றில். அன்றில்கள் ஆணும் பெண்ணும் இணைபிரியாது இருப்பதால் பன்மையாற் சுட்டப்பட்டன. அளியன் – இரங்கத்தக்கோன்.

88. ஆகம் – மார்பு. மயிலைத் தூதுவிடல்.

நீயலையே சிறுகுயிலே மலர்கள் கோதி
நித்தமுமென் நெஞ்சுருகக் கூவு கின்றாய்
நோயெனக்குச் செய்வதைநீ யறியாய் கொல்லோ
நுவலக்கேள் என்னுள்ளங் கவர்ந்தான் கொக்கூர்க்
கோயிலுளான் குமரவேள் குறிஞ்சிக் கோமான்
குன்றுதொறும் ஆடுவான் கூர்வேல் கொண்டான்
வாயிலிக்க அவன்பெயரைக் கூறு கின்றேன்
வள்ளலவன் எனையணைக்க வரக்கூ வாயே. (89)

கூவியழுந் தொண்டருளங் களிக்க வந்து
குறித்தவரம் தருவானெங் கொக்கூர்க் கோமான்
தேவியுமை பெற்றசுதன் சேந்தன் செவ்வேள்
திருமுருகன் ஆறுமுகன் சிவசு மாரன்
ஆயினும் எனக்கினியன் அன்னை தந்தை
அன்புடைய உடன்பிறந்தார் உற்றார் நண்பர்
யாவருமே எனக்காவான் அவனை அன்பால்
யாத்துநீ என்பாலே கொணர்வாய் நெஞ்சே. (90)

வேறு

நெஞ்சினில் நேயமொடு பணிசெய்யும் நெறியினர்க்குச்
சஞ்சலந் தீர்க்குஞ் சரவணன் கொக்குவில் சார்ந்திருக்க
வெஞ்சினத் தெல்வர் வெறியாடி வந்து குதறினாலும்
அஞ்சுவ தில்லை அடியார் அவன்றன் அடைக்கலமே (91)

அடைக்கலம் முன்னர் அமரர்க் களித்த அறுமுகவன்
படைக்கல மாயொரு வேலினைப் பற்றிப் பழமுதிர்கா
உடைப்பெருங் கொக்கூர் உறைதின் றனவற் காட்படுமின்
கிடைக்கரும் பேறுகிடைக்குப் கிலிபோம் ஐயமின்றே. (92)

ஐயமில் லாதுணர் காட்டியுடைய வடியவர்க்குக்
கையிலோர் வேலுடன் காட்சி தருங்கிரு பாகரன்முன்
மெய்யடி யார்தொழக் கொக்குவில் மேவியிருப் பதனால்
உய்தியை வேண்டுவீர் உற்றநல் வாய்ப்பினைப் பற்றுமின்னே. (93)

பற்றிலு லாகும் பவமெனக் கூறுநூல் பற்றுநீங்கின்
உற்றிடும் வீடெனல் உண்மையே யிந்த வுலகத்தின்
பற்றினை நீக்க விரும்புவீர் வந்துடன் பற்றுமின்காள்
கற்றவர் வாழுநற் கொக்கூர்க் கடம்பன் கழலிணையே. (94)

---

88. கூவும் குயிலே வேண்டுதல். குயில் தன் துணையை அழைக்க இயல்பாகக் கூவுவது தலைவிக்கு வேதனையைத் தருகிறது. அதனாலே அவள் அக்குயிலையே தன் தலைவனைத் தன்பால் வருமாறு கூவும்படி வேண்டுகின்றாள்;

90. நெஞ்சுவிடு தூது,

91. தெல்வர் – பகைவர்.

92. பழமுதிர்கா – பழங்கள் உதிரும் சோலைகள். ('பழமுதிர்சோலை' என்பது முருகன் விரும்பி உறையும் இடங்களுள் ஒன்று. கொக்கூரும் பழமுதிர் காவுடையது.)

93. காட்சி – மெய்யறிவு.

94. பவம் – பிறப்பு. நூல் கூறும் என முடிக்க. கூறும் + நூல் = கூறுநூல்.

இணையிலாப் பேரெழில் கொண்டவன் இன்பத் தமிழ்தெரிந்தோன்
பிணையெனு நீள்விழி வள்ளிதெய் வானையர் பேணுநாதன்
அணைபவர்க் காநந்தம் அளிப்பவன் கொக்கூர் அமர்ந்துள்ளான்
துணையெனப் பற்றுமின் வேலனை வேறு துணையெதற்கே. (95)

எதுபெரி தென்றுமுன் அவ்வையைக் கேட்ட எழில்முருகன்
முதுமறை தேடியுங் காணு முழுமுத லாங்கவனே
மதுமலர்க் காச்செறி கொக்குவில் மன்னி மகிழ்ந்துறைவான்
எதுவரின் என்னென் றிருப்பார் இறையடி பற்றினரே. (96)

அடியிணை அங்கைத் தொகுதி அறுமா முகத்தழகால்
வடிவார் கமலத்தை வாட்டும் முருகன்கொக் கூருவந்து
கடியார் புறுக்கோயி லுள்ளான் அவன்றிருக் கோயிற்கண்
படிய டிக் கிடந்திலேன் பங்கயக் காட்டெழில் பார்ப்பதற்கே. (97)

பார்பதம் அண்டம் அனைத்துமாய் நின்ற பரமநாதன்
சூர்முத லாய பகைதடிந் தாண்ட சுடர்வேலவன்
சீர்மிகு கொக்கூர்த் திருத்தல மன்னு கிருபாகரன்
தேர்மிசை யூருங் காட்சியைக் கண்டோர் திருவினரே. (98)

திருவள ரீழத் திருமுகத் திட்ட திலகமாகும்
குருவளர் கொக்கூர்க் குமரகோட் டத்தொளி காலுகின்ற
ஒருமணி யாறு முகமணி யொப்பிலாச் செங்கேழ்மணி
திருமணி சிந்தைக் கினிய சிவமணி சிந்திப்போமே. (99)

சிந்தைக் கினியன் செலிக்கு மினியன் தினமுநாவால்
வந்திப் பதற்கினியன் கொக்கூர்க் குமர வடிவேலன்
அந்திப் பொழுதெழு ஞாயிறு போலு மழகனைநாம்
சிந்திப்போம் வல்வினை சிந்திப்போம் சேர்வம் அவன்திருவே. (100)

திருச்சிற்றம்பலம்.

---

95. பிணை – பெண்மான்; பெண்மானின் விழிபோன்று மருண்ட பார்வையுடைய நீண்ட விழிகளையுடைய வள்ளியும் தெய்வானையும் என்றவாறு.

96. பெரியது எது, அரியது எது, இனியது எது என்று அவ்வையிடம் கேட்டுப் பாட்டுப் பெற்ற வரலாறு. முருகன் முழுமுதல் என்று முடிக்க, அந்த முதல்வனே கொக்குவில் மன்னி உறைவான். எதுவரினும் என்? என்று கலங்காது இருப்பர் இறையடி பற்றினோர்.

97. அடிஇணை, அழகிய பன்னிரு கைகள், ஆறுமுகங்கள் ஆகியவற்றின் அழகினால் நன்னிறமுள்ள செந்தாமரையை ஒளிமங்க வைக்கும் முருகன் என்க. வடிவு – நன்னிறம், காந்தி, அழகு. முருகனுடைய அடிமுதலியனவும் செந்தாமரைகளே. அவற்றைக் கண்டு இயற்கையான தாமரை வாட்டமுறுகின்றது என்பது கற்பனை. கடி – காவல், நறுமணம் முருகனது கோயில் வாயிற்படியாய்க் கிடந்தால் அந்த அடிமுதலிய தாமரைக் காட்டின் எழிலை எந்நாளும் பார்த்துக்கொண்டிருக்கலாமே. அந்தப்பேறு கிடைக்கவில்லையே! என வருந்துகிறார் ஆசிரியர்.

98. சூர் முதலாய – சூரன் முதலிய: தடிந்து ஆண்ட – வலியழித்து ஆட்கொண்ட.

99. ஈழத்திருமுகத்து – ஈழமாதாவின் திருமுகத்தில், நிலகம் – பொட்டு. நிலகம்போன்றது கொக்கூர் என்றேனும், கொக்கூர்க் குமரகோட்டமென்றேனும் பொருள் கொள்ளலாம். குரு – மேன்மை, பிரகாசம். செங்கேழ்மணி – செந்நிறமணி, கேழ் – நிறம்.

100. அந்திப் பொழுது – காலை அந்தி, விடியல், எழுஞாயிறு, உதய சூரியன். அழகனை நாம சிந்திப்போம்; அதனால் நமது வல்வினை சிந்திப்போம் (அழிந்துபோம்); நாமும் முருகனுடைய திருவைச் சேர்வோம். திரு – முத்திப்பேறு. அனைவரும் அவனைச் சிந்தித்து முத்தியின்பம் பெறவேண்டும் என்பதால் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வாய்ப்பாட்டால் பிரபந்தத்தை முடித்துள்ளார் ஆசிரியர்.

ஸ்ரீ தண்டபாணி தோத்திரம்

*

ஸ்ரீ முத்துக்குமாரசாமி ஊஞ்சல்

முதலியன

1891-ம் ஆண்டில்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்

இயற்றியவற்றைக் கொக்கூர் முருகனுக்குப் பொருந்துமாறு

சிறு மாற்றங்களுடன் பதிப்பிக்கப்பட்டவை.

கொக்கூர்

ஸ்ரீ தண்டபாணி விருத்தம்

காப்பு

குயில்வாழ் பொழிற்கொக்கூர்க் கோநகர்வாழ் செவ்வேள்
அயில்வாழ் மலர்க்கை யமலன் — மயில்வாழ்
பெருமான் றணைத்துதிப்பப் பேதையே னெஞ்சில்
வருமா லொருகோட்டு மா.

(குறிப்பு) பொழில் - சோலை, கோ - சிறந்த. செவ்வேள் - முருகப் பெருமான். அயில் - வேல். ஒரு கோட்டு மா - ஒரு தந்தத்தையுடைய யானை; விநாயகர்.

விருத்தம்

கங்கை நதியு மிளமதியுங்
கவின்ற வேணிப் பரமார்திருக்
கண்கள் களிப்பத் தோன்றடிகள்
கருணைப் பிழம்பாத் திருவுருவைச்
சங்கை யறவிங் கெளிதடியேன்
தரிசித் தல்ல கண்டமெலாம்
தணப்பக் காட்சி தந்தனையித்
தமியேன் புரிந்த தவமென்னே
கொங்கை யுறுபூங் கடம்பணியுங்
குருந்தே பிறவிப் பிணிமருந்தே
குலவு மன்பர்க் கொருவிருந்தே
குணமா மலையே மலையேந்தி
தங்கை யிருகண் மணியனைய
தனையா தனையா வரும்புகழத்
தழைக்கும் வளமார் கொக்கூர்வாழ்
தண்ட பாணிப் பெருமாளே. 1.

(குறிப்பு) கவின்ற - அழகைத் தந்த. வேணி - சடைமுடி. அடிகள் என்றது முருகனை. சங்கை அற - சந்தேகம் நீர. அல்லகண்டம் - துன்பம் (தேவாரம்). கொங்கை உறு பூம் கடம்பு - வாசனையைத் தன்னிடத்தே கொண்ட அழகிய கடப்பமாலை. குருந்தே-குழந்தையே. மலையேந்தி-கோவர்த்தன மலையை ஏந்தி நின்ற திருமால். உமையைத் திருமாலின் தங்கை என்றல் மரபு. தனையா - திருக்குமாரனே. தன யாவரும் புகழ - தனை (தன்னை) என்றது கொக்கூரை.

பூவும் புனலுஞ் சுடருநறும்
புகையு மேந்தி நினையன்பிற்
பூசித் தறியே னனுதினமும்
போற்றி நினையே நினைந்துருகி
மேவும் பெரியர்ப் பணிந்தொழுகும்
விதமு மறியேன் கொடும்பிணியை
வீட்டி யெனையு மொருபொருளா
மேவி யாண்ட விதமென்னே
வாவு மிளமான் மகளிருகண்
மணியே யவண்முன் வருகனியே
வஞ்ச வவுணர்ப் பொரும்பகையே
வானோர்க் கருளும் பெருந்தகையே
தாவுந் தகரூர் தருள்பழுத்த
தனிக்கற் பகமே தயைசான்றோர்
தழைக்கும் வளமார் கொக்கூர்வாழ்
தண்ட பாணிப் பெருமானே. 2.

(குறிப்பு) சுடர் - விளக்கு. புகை - தூபம். பெரியர் என்றது முருகக் கடவுளின் அடியாரை. வீட்டி - அழித்து. வாவும் இளமான் - தாவுகின்ற இளமை பொருந்திய மான். மான் மகள் - வள்ளியம்மை. கணி - வேங்கை மரம். அவள் முன் வரு கனியே - வள்ளியம்மையார் தினைப்புனம் காத்திருந்த காலத்தில் முருகக்கடவுள் அவர் இருக்குமிடம் சென்று வேங்கை மரமாக நின்றார் என்பது வரலாறு. தகர் - ஆட்டுக்கடா; நாரதருடைய யாகத்திலிருந்து எழுந்த ஓர் ஆட்டுக்கடாவை முருகப்பிரான் அடக்கி வாகனமாக கொண்டார் என்பது வரலாறு. தயை சான்றோர் - அருள் நிறைந்த பெரியோர்.

துற்றார் தரங்க வாரிதியுந்
தொலையா வன்றிற் பெயர்க்கிரியுந்
தொலைத்து விளங்கு மயிற்படையைத்
தொழுது பொழுது கழிப்பேனைப்
பற்றா மகளிர் விழிக்கடலும்
பணைத்த கொங்கைப் பொருப்புமிகப்
பகைத்து வருத்தி மனமயங்கப்
பண்ணா நின்ற விஃதென்னே
அற்றார்க் குதவு மாநிதியே
அமரர்க் கொருசே னாபதியே
ஆனை மகளி னருதுணையே
அல்லற் பரவைக் கிரும்புணையே
சற்றாய் பவர்க்கு மருண்முருகா
தாமோ தரன்றன் திருமருகா
தழைக்கும் வளமார் கொக்கூர்வாழ்
தண்ட பாணிப் பெருமானே. 3.

(குறிப்பு) துற்று ஆர் தரங்க வாரிதி - நெருங்கி ஆரவாரிக்கும் அலை களையுடைய கடல். அன்றில் பெயர்க் கிரி - கிரவுஞ்சம் என்னும் பறவை யின் பெயரையுடைய மலை; அதாவது கிரவுஞ்ச கிரி. அயிற்படை-வேலா யுதம். ஒரு கடலையும் மலையையும் தொலைத்த வேலாயுதத்தைக் கைதொ ழுது பொழுதுபோக்குவேனே, வேறொரு கடலும் மலையும் வருத்துவது என்ற கருத்து முதல் இரண்டு அடிகளில் தோற்றுகிறது. அல்லல் பரவை-துன்பக் கடல், புணை - தெப்பம். சற்று ஆய்பவர்க்கும்-சிறிது நேரம் தியா னிப்பவர்க்கும். அருள் முருகா - அருள் செய்கின்ற முருகப்பெருமானே. தாமோதரன் - திருமால்.

பரித்த வுடையு மலர்த்தொடையும்
பணியு முதலாம் பொருள்பலவோர்
பனவ குமரர்க் களித்திடவும்
பகைத்த தகுவர் வாழ்புரத்தை
எரித்த பெருமா னிடைச்சீற்றம்
ஏது மின்றிச் தந்தாயென்
றியம்பி மகிழ்வித் திடுதலினுல்
எம்மான் பொறையை யென்றறிந்தேன்
விரித்த வொளிகொ ளயில்வேலா
மெய்யன் புடையார்க் கணுகூலா
விமலன் விழிதந் திடுபாலா
விறல்கொ ளவுணர் குலகாலா
தரித்த கருணை மிகுசீலா
சாற்று சதுமா மறைநூலா
தழைக்கும் வளமார் கொக்கூர்வாழ்
தண்ட பாணிப் பெருமானே. 4.

(குறிப்பு) பரித்த - உடுத்திய, தொடை - மாலை, பணி - அணிகலங் கள், பனவ குமரர்-அந்தணச் சிறுவர்; என்றது சண்டேசுவரரை. விசார சருமர் என்ற அந்தணச் சிறுவர் சிவபூசை செய்துகொண்டிருந்தபோது, தம் தந்தையார் இடையூறு செய்ய அவர் காலைத் துணித்தார். பிறகு சிவபெருமான் இவருக்குமுன் தோன்றிச் சண்டேசுவரப் பதவியையளித்துத் தாம் உடுத்த உடையையும், புனைந்த பூணையும் பிறவற்றையும் கொடுத் தருளினர் என்பது வரலாறு. சுவாமிக்குப் பூசைசெய்த நிர்மாலியத்தால் சண்டேசுவரரைப் பூசிப்பதும், சுவாமிக்குப் படைத்த நிவேதனத்தையே இவருக்கும் படைப்பதும் பிறவும் இன்னும் வழக்கமாக உள்ளன. தகுவர்-அசுரர், தந்தாய் - தந்தவனே; தந்தையே எம்மான் என்பது விளி. பொறையை - பொறுமையையுடையாய், சிவபெருமானது விழிகளினின்று தோன்றிய அனற்பிழம்பே முருகக்கடவுள் அவதாரமாதல் பற்றி விமலன் விழி தந்திடு பாலா என்றது. சதுமாமறை - நான்கு பெரிய வேதங்கள். பின்னுள்ள அடிகளில் அமைந்துள்ள பிரகாரம் படித்து இன்புறற்குரியது.

உலகிற் பிறந்து பருவமுறை
யுற்று மரிக்கும் பசுப்போலா
தோங்குங் கவுரி மடவரல்பா
லுற்று விருத்த வுருவாதி
இலகப் பூனந்து விளையாடும்
இறைசே யெனற்கோ வள்ளிமுனம்
எய்தி விருத்த வுருவாதி
எடுத்து விளையாட் டயர்ந்தனையே
அலகில் கருணைப் பெருக்காறே
அடியேஞ் செய்த தவப்பேறே
ஆனைக் கிளைய வரியேறே
அவுணர் குலத்தை யடுமாறே
சலச மடவார்க் கிடமாகித்
தரும முதலா நாற்பொருளும்
தழைக்கும் வளமார் கொக்கூர்வாழ்
தண்ட பாணிப் பெருமானே. 5.

(குறிப்பு) பசுப்போலாது-ஆன்மகோடிகளைப்போல் அல்லாமல், கவுரி மடவரல் பால்...இறை; இவ்வரலாறு திருவிளையாடற் புராணத்தில் விருத்த குமார பாலரான படலத்திற் கண்டதாகும். அத்தகைய தந்தைக்கு மகன் என்பதற்கு ஏற்ப நீயும் விருத்த உருவாகி விளையாடினை. அலகு இல்-அளவற்ற, ஆனை - விநாயகர், அரியேறே-ஆண் சிங்கம் போன்றவனே, சலச மடவார் - தாமரை மலரிலுள்ள பெண்கள்; என்றது திருமகளையும், கலை மகளையும்.

ஆறு முகங்கொண் டொருமுகமா
அடியார்க் கருளுந் திறமதுதான்
ஆறு சமயங் களுக்குமிறை
ஆதி நீயென் றுணர்த்திடவும்
பேறு முகக்கு மிதையறியாப்
பேதை மாக்க ணினதடியைப்
பேணு தந்தோ பெருந்துன்பப்
பிறந்தைப் பரவை யழுந்துவரால்
பாறு முகக்கும் பறந்தலையிற்
பகைத்த வவுணப் படைதொலையப்
பாற்றி யமரர் பெயர்நிலைப்பப்
பண்ணுங் கருணைப் பண்ணவனே
சாறு முகக்கு மறுகுதொறும்
தரும பரிபா லனம்புரிவோர்
தழைக்கும் வளமார் கொக்கூர்வாழ்
தண்ட பாணிப் பெருமானே. 6.

(குறிப்பு) ஒருமுகமா - ஒருமிக்க; பூரணமான முகம் தண்டபாணிக்கு ஒன்றேயாதல் பற்றி இங்ஙனம் கூறியதென்றலுமாம், 'ஆறுமுகங் கொண்டு ஒருமுகமாக அருளும் திறம்' என்பது ஒரு நயம். முருகன் பெருமையை உணரமாட்டாதார் மாக்கள் ஆவர்; மாக்கள்-ஆறறிவின்றி ஐயறிவினையே யுடையார். பிறந்தைப் பரவை - பிறவிக்கடல். பாறு - கழுகுகள். பறந்தலை - போர்க்களம். பாற்றி - கெடுத்து. சாறு - திருவிழா. மறுகு-வீதி. பண்ணவன் - தேவன்.

சேதிப் பரிய தவவொழுக்கச்
செல்வம் வாய்ந்த குறுமுனிக்குச்
செவ்வே தமிழின் இலக்கணத்தைச்
செப்பி யருளி யொப்பில்லா
ஆதிச் சங்கத் திடைமேய
வதனு லெம்மான் றமிழ்ப்பரம
ஆசா னென்ப தறிந்தடைந்தேன்
அகற்று தளித்த வின்கடனே
சாதிப் பைம்பொற் றருவாதி
தழைப்ப வொருமாப் பெருமுதலைத்
தடிந்தே யிருமுன் னேர்துயரம்
தணப்ப வரிமா முகற்றொலைத்தோய்
தாதிற் பொலிபூஞ் சோலைகளும்
சலச மலர்நீர் வாவிகளும்
தழைக்கும் வளமார் கொக்கூர்வாழ்
தண்ட பாணிப் பெருமானே. 7.

(குறிப்பு) சேதிப்பு அரிய - இடையறுத, குறுமுனி-அகத்திய முனிவர், அகற்றுது அளித்தல்-நீக்கிவிடாது காத்தல், சாதிப் பைம்பொன்தரு வாதி-தேவருலகில் உள்ள கற்பகதரு முதலியன. மா பெருமுதலை - மாமரத்தின் பெரிய அடியை; என்றது மாவின் வடிவாகிக் கடலில் நின்ற சூரனை; இம் மரத்தைத் தடிந்ததனால் வானவர் நாடு விடுதலை பெற்று அங்குள்ள கற் பகதரு முதலியன ஏற்றம் பெற்றன என்க. அரி - இந்திரன். அரிமா முகன் - சிங்கமுகாசுரன்.

நிலையில் பதிமுன் முப்பொருளின்
நிலைமை யாய்த லன்றியென்றும்
நிலைத்த பதிமுன் முப்பொருளின்
நிலைமை யாய்தல் சிறிதுமிலேன்
கலையின் மதிநின் றிருமுகமாம்
கலைமா மதிக ளிருமூன்றும்
கருதிக் கொடிய வினையிருளைக்
கடிந்து வாழ்வ தென்றுகொலோ

அலையி லின்ப வாரிதியே
அமலா னந்தப் பெருவாழ்வே
அருண்மா மழைபெய் யம்புதமே
அளிமே வுறுபூங் கற்பகமே
தலையி லிரந்தோன் பெறுமணியே
தவத்தோர் நுகரு மருமருந்தே
தழைக்கும் வளமார் கொக்கூர்வாழ்
தண்ட பாணிப் பெருமானே. 8.

(குறிப்பு) நிலையில் பதிமுன் முப்பொருளின் - நிலையற்ற மண், பெண், பொன் என்ற முப்பொருளினது; முன் - முதலான. நிலைத்த பதிமுன் முப் பொருள் என்றது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளே. கலையின் மதி நின் திருமுகமாம் - கற்ற கலைகளினுல் மதிக்கக்கூடிய உன்னுடைய திருமுகங் களாகிய, கலைமா மதிகள் - பதினாறு கலைகளும் கூடிய சந்திரர்கள், அலை இல் - அலைகள் இல்லாத; அலைதல் இல்லாத என்று இன்பத்திற்கு ஏற்றினும் அமையும். வாரிதி - கடல். அமல ஆனந்தம்-குற்றமற்ற ஆனந்தம், அம் புதம் - மேகம், அளி - வண்டு, கருணை (சிலேடை). தலையில் இரந்தோன்- பிரம கபாலத்தில் பிட்சையெடுத்த சிவபெருமான்.

அங்க மடிகட் கருள்விழியின்
அநங்க னுய வறிவிலியென
அங்கம் புகுந்து வருத்துவனுல்
அன்னுன் கரியைப் புரந்தநர
சிங்க மளித்த மைந்தனெனிற்
றேவே தெய்வச் சிம்புளருள்
செல்வ னலையோ வவனுமொரு
தெல்வோ திருவாய் மலர்ந்தருள்வாய்
பங்க மளித்த சிதடரென்றும்
பார்த்தற் கரிய பரஞ்சுடரே
பரங்குன் றுதி யிருமூன்று
படைவீட் டுறையும் பரம்பரனே
சங்க மளித்த நூனயந்தேர்
தருவோர் தருவோ ரெஞ்ஞான்றும்
தழைக்கும் வளமார் கொக்கூர்வாழ்
தண்ட பாணிப் பெருமானே. 9.

(குறிப்பு) அடிகட்கு அங்கம் அருள் விழியின் - தேவரீருக்கு உடலை அருளிச் செய்ததற்குக் காரணமாயிருந்த சிவபிரானுடைய கண்பார்வையால். அநங்கன் ஆய - உடல் இல்லாதவனுன, அன்னுன் - அந்த மன்மதன், கரியைப் புரந்த நரசிங்கம் - கஜேந்திரன் என்னும் யானையைக் காத்த திருமால், சிங்கம் யானையைக் காத்தது என்பது நயம். சிம்புள் - சரபமென்ற பறவை. இரணிய கசிபுவைக் கொன்று கர்வங்கொண்ட நரசிங்க மூர்த்தியைச் சிவ பெருமான் சரபப் பறவையாக வடிவெடுத்து அடக்கினர் என்பது வரலாறு.

நரசிங்கத்தின் (அதாவது திருமாலின்) மகன் (மன்மதன்), அந்நரசிங்கத்தை அழித்த சரபத்தின் (அதாவது சிவபெருமனின்) மைந்தனுக்கு எம்மாத்திரம் என்றபடி. தெவ்வோ - பகைவனே. கிதடர்-மூடர். பங்கம் அளித்த கிதடர் - பாவத்தின் பயனுய்ப் பிறந்த மூடர். இருமூன்று படைவீடு-திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம் குன்று தோறுடல், பழமுதிர்சோலை என்பன. நூல் நயம் தேர்தருவோர் - நூலின் நயங்களை ஆராய்பவர்கள். தருவோர் - கொடையாளர்.

கலந்தே மென்றுட் கலவாத
கபடர் புரியுங் கொடுஞ்செயலால்
கண்ணுங் கருத்தும் புண்ணுகிக்
கலங்கி மலங்கிக் கனகணிலா
தவந்தே னந்தோ நீவெறுப்பின்
ஆற்றே னுற்றே னுற்றேனுல்
அஞ்ச லொழிதி யெனவடியேற்
கருளச் சமய மிஃதாமால்
பலந்தேய மறத்தி னுரங்குன்றும்
பரங்குன் றுதிப் பலபொருப்பும்
பயின்றே யடியர் துயரமெலாம்
பாற்றி விளங்குங் குருமணியே
சலந்தே யறிஞ ருளத்தமுதே
தளர்வில் வணிகர்க் கிடமாகித்
தழைக்கும் வளமார் கொக்கூர்வாழ்
தண்ட பாணிப் பெருமானே. 10.

(குறிப்பு) கலந்தேம் என்று உட்கலவாத கபடர் என்றது முகம் நட்டு அகம் வேர்க்கும் வஞ்சகரை. கனகண் - பற்றுக்கோடு; ஆதரவு, அலந்தேன் - வருந்தினேன், ஆற்றேன் என்பது துன்ப மிகுதி பற்றி மும்முறை அடுக்கிவந்தது. அஞ்சல் ஒழிதி - பயத்தை விடுவாயாக. மறத்தின் உரம் குன்றும் பரங்குன்று - பாவத்தின் வலிமை குறையும் திருப்பரங்குன்றமென்னும் திருத்தலம். பொருப்பு - மலைகள். சலம் தேய் அறிஞர் - கோபம் தீர்ந்த அறிஞர்.

உ

ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஊசல்

காப்பு

தமாலநிறத் தோன் மருகர் தண் கொக்கூர் முத்துக்
குமாரர் திரு ஊசலின்கண் கூற - எமாதிடுக்கண்
எல்லா மகற்றி யிவிதவிக்கும் பன்னபங்கள்
எல்லா மொருகோட் டிபம்

(குறிப்பு) தமாலம் - பச்சிலை. எமாது எம்முடைய; ஆது என்பது ஆறனுருபு. இபம் - யானை. கூற இபம் நமக்கள் எல்லாம் அளிக்கும் என்று கூட்டுக.

விருத்தம்

பூமேவு மிமயமிரு வடிவி னின்றுற்
போன்மிளிர் பொற் றூணமிசை வயிரவிட்டத்
தேமேவு தரளவடம் பூட்டு மொன்பான்
எரின்மணிக ளிழைத்திடுபொற் பலகை சாலத்
தூமேவு கங்கைநதித் திரைகள் வார்ந்து
துற்றபல்பூச் சரவணத்தின் ரூற்றங் காட்டக்
கோமேவு மதனிலெழுந் தருளி முத்துக்
குமாரசுரு மாரரே யாடூ சூசல். (1)

(கு - பு) இரு தூண்களுக்கு இரண்டு இமயமலைகள் உவமம்; இது இல் பொருளுவமம். ஏ மேவு தரள வடம் - அழகு பொருந்திய முத்து வடம்; ஏ - அழகு; தரளம் - முத்து. கோ மேன்மை.

திருகாற்று மொருபூதத் தெவ்வை மாய்ப்பச்
சிறந்திடுநக் கிரனுர் செப்பு மொப்பில்
முருகாற்றுப் படையொருபா லன்பர் பாட
முன்னரிய சந்தவகை மொழிந்தே யுள்ளம்
உருகாற்று மருணகிரி நாத ரன்பின்
ஒதுதிருப் புகழொருபா லன்பர் பாடக்
குருகாற்று மிலஞ்சிகுலாங் கொக்கூர் முத்துக்
குமாரசுரு மாரரே யாடூ சூசல். (2)

(கு - பு) திருகு ஆற்றும் - வஞ்சனையைச் செய்யும். தெவ்வை - பகைவனே; பூத மாதிய பகைவனே என்க. முன்னரிய - கருதுதற்கு அரிய உருகு ஆற்றும் உருக்கத்தைச் செய்யும்; 'கோகுக்குக் கம்பன் கருணைக் கருணகிரி' (தனிப்பாடல்) குருகு – நீர்ப் பறவைகள். இலஞ்சி - பொய்கை. குலாம் - குலாவும்; பொருந்தியுள்ள.

வானேங்கு பரங்குன்றிற் றெய்வ யாணை
மணந்தாடுந் திருவுச லாட்டும் வாசக்
காணேங்கு வரைக்குறவர் மகளை வேட்டுக்
களித்தாடுந் திருவுச லாட்டு முன்னுத்
தேனேங்கு திருவினையாட் டொன்றுங் காணுச்
சிறியேங்கண் டானந்தந் திளைக்கு மாறு
கூனேங்கு வளைமுரலீர்க் கொக்கூர் முத்துக்
குமாரசுகு மாரரே யாடு ரூசல் (3)

(கு - பு) தெய்வயாணை ..... திருவுசலாட்டு— தெய்வயாணையைத் திருமணஞ் செய்து ஆடிய திருவுசல் ஆட்டு. கான் - காணகம். வரை - மலை. வேட்டு - மணஞ் செய்து. முன்னு - முதலாக. கூனேங்கு வளை முரல் நீர் - கூன் மிகுந்த சங்குகள் ஒலிக்கும் நீரையுடைய.

மாதவனுந் திருமகளும் வாணி யோடு
மலரவனுஞ் சசியொடுவா சவனு மேனி
ஆதவமா ரரம் பையரோ டமரர் தாமும்
அகமகிழ்ந்தே நிதமுச லாடி வாழத்
நீதவமார் சூர்முதலா தியர்க டம்மைச்
செற்றருளு மருட்கடலே யாடு ரூசல்
கோதவமி லறிஞர்செறி கொக்கூர் முத்துக்
குமாரசுகு மாரரே யாடு ரூசல். (4)

(கு - பு) மாதவன் - திருமால். மலரவன் - பிரமன். சசி - இந்திராணி வாசவன் - இந்திரன் ஆதவம் - ஒளி; உடல் ஒளிமயமான அரம்பையர் என்க சூர் - சூரன் நிது அவம் ஆர் சூர் நீமையும் சேடும் நிறைந்த சூரன். கோது அவம் இல் அறிஞர் - குற்றமும் பயனின்மையும் இல்லாத அறிவு படைத்தவர்.

தோலாத பெருவிறல்கொள் சூரன் றன்னைத்
தொலைத்தபெருஞ் சூரரே யாடு ரூசல்
மாலாத விறற்சிங்க வதனன் றன்னை
மாய்த்தருளுஞ் சிங்கமே யாடு ரூசல்
சீலாதி யகன்றகரி வதனன் றன்னைச்
செற்றருளு மதகரியே யாடு ரூசல்
கூலாதி யழகுறுநீர்க் கொக்கூர் முத்துக்
குமாரசுகு மாரரே யாடு ரூசல். (5)

(கு - பு) விறல் - வலிமை. மாலாத - மயங்காத. சிங்கவதனன் - சிங்கமுகாசுரன். சீலாதி - ஒழுக்கம் முதலியவை. கூலாதி - தானிய வகைகள். கூலம் - தானியம்.

சரவணத்தி னுறும்பதுமப் பாயன் மீதே
தங்கிலினை யாட்டயர்ந்தீ ராடு ரூசல்
இரவணையு முடலவுணர்த் தொலைத்துத் தேவர்
இவங்கலைக்காத் தருள் புரிந்தீ ராடு ரூசல்
பரவணையு மன்புடையோர் நினைந்த வாங்கே
பசுமயிலின் வந்தருள்வீ ராடு ரூசல்
குரவணையும் பொழில் குழுங் கொக்கூர் முத்துக்
குமாரசுகு மாரரே யாடு ரூசல். (6)

(கு - பு) இரவு அணையும் - இரவை ஒத்த; அதாவது கரிய பரவு அணையும் - வணங்கல் செய்யும்; பரவு - வணங்கல். நினைந்த - வேண்டியவை. குரவு நறுமணம்.

வழுத்துபல குணவாள ராடூ நேசல்
வள்ளிதிரு மணவாள ராடூ நேசல்
பழுத்தவருட் டனமுடையீ ராடூ நேசல்
பசுமயில்வா கனமுடையீ ராடூ நேசல்
முழுத்தவிரு முத்தலத்தீ ராடூ நேசல்
முற்நான்கு கைத்தலத்தீ ராடூ நேசல்
கொழுத்த தமிழ் தெரிபவர் வாழ் கொக்கூர் முத்துக்
குமாரசுரு மாரரே யாடூ நேசல். (7)

(கு - பு) வழுத்து - துதிக்கின்ற; அன்பர் சொல்லித் துதிக்கின்ற பல குணங்களை யுடையவர் என்க. குணவாளர் என்பது விளி. அருள் தனம் - அருளாகிய செல்வம் முழுத்த இருமுத் தலம் - (முருகனருள்) முதிர்ச்சி பெற்ற திருப்பரங்குன்றம் முதலிய ஆறு படைவீடுகள். கொழுத்த தமிழ் – செழுமையுடைய தமிழ்.

அலகில்பெரு விறல்வகையோர் வகையார் பாட
அடியவருக் கருள்வகையோர் வகையார் பாட
நிலவுமெழில் வகையிலையோர் வகையார் பாட
நிலைத்ததமி முருள்வகையோர் வகையார் பாட
மலரலங்கல் படிந்தெழுந்து வண்டு பாட
மங்கையர்க ணடம்புரிந்து மகிழ்ந்து பாடக்
குலவுவள மலிந்திலகு கொக்கூர் முத்துக்
குமாரசுரு மாரரே யாடூ நேசல். (8)

(கு - பு) அலகு – அளவு. பெருவிறல்வகை - பெரிய வல்லமை வகைகளை. ஓர் வகையார் - ஒரு திறத்தார். அலங்கல் - மாலை. இலகு – விளங்குகின்ற.

மழைத்தவரு ணிறைவிழியீ ராடூ நேசல்
மலரவனுக் கறை மொழியீ ராடூ நேசல்
இழைத்தகுட ரயிற்படையீ ராடூ நேசல்
இருமருங்குங் குயிற்படையீ ராடூ நேசல்
தழைத்தசிறை மயிற்பரியீ ராடூ நேசல்
தணிகையெனு மெயிற்புரியீ ராடூ நேசல்
குழைத்தமலர்ப் பொழில்குலவு கொக்கூர் முத்துக்
குமாரசுரு மாரரே யாடூ நேசல். (9)

(கு - பு) மழைத்த - குளிர்ச்சியான; அருள் நிறை விழியீர் எனக்க மலரவன் - பிரமதேவன். அயிற்படை - வேற்படை. இருமருங்கும் குயிற்படையீர் - வலம் இடம் ஆகிய இருபக்கங்களிலும் முறையே வள்ளி தெய்வயானை என்னும் இரு குயில்களையுடையீர் குயில் – ஆகுபெயராக நின்று குயில் போலும் மொழியுடைய பெண்களைக் குறிக்கின்றது. மயிற்பரி மயில்வாகனம்; பரி என்பது இங்கே வாகனம் என்னும் பொருளது. எயில் - மதில்.

நர்மேவு நான்மறையா கமங்கள் வாழ
நவவீரர் முதலான நலத்தோர் வாழ
ஏமேவு சித்தாந்த சைவம் வாழ
இணையில்புக ழெழுந்தெழுத்தா றெழுத்து வாழத்
தேமேவு செந்தமிழ்ச் சொல் செறித்து வாழத்

தெண்டிரை நீர் கலவீழத் தேயம் வாழக்
கோமேவு கொக்குவிலூர் வாழ முத்துக்
குமாரகுரு மாரரே யாடு சூசல். 10;

(சு - பு) நாமேவு நான்மறை - பிரமனது நாவிலே பொருந்திய நால் வேதம் நவவீரர் - வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரன், வீரமகேச்சுரன், வீரபுரந்தரன், வீர மார்த்தாண்டன், வீரராட்சதன், வீராந்தகன், வீரதீரன், என்னும் பெயருடைய வரும் முருகக் கடவுளுக்குத் துணைவருமான வீரர் ஒன்பதின்மர். ஏ மேவு - சிவனுடைய முதன்மையை விளக்கும் ஏ - சிவன் ஐந்தெழுத்து பஞ்சாட்சரம்; ஆறெழுத்து-சடாட்சரம். தே மேவு செந்தமிழ்ச் சொல் - தேவார திருவாசகம் முதலிய தெய்வத் தமிழ்ப் பாடல்கள். சுலவு - சுற்றியுள்ள. கோ மேவு - மேன்மை பொருந்திய; முருகக் கடவுள் விரும்பியுறைகின்ற.

எச்சரிக்கை

இராகம் - சாவேரி தாளம் - உருபகம்

திருவேசெழு மணியேசுவைத் தேனேகரி முகல்பின்
வருவேலவ கொக்கூர்ப்பதி வாழ்வேயெச் சரிக்கை. (1)

வேலாகழற் காலாமயின் மேலாமசுற நூலா
மூவாவளக் கொக்கூர்ப்பதி முருகாவெச் சரிக்கை. (2)

சூராதியர் பேராதிக டொலீயப் பொரும் பெரும்போர்
வீராதிப கொக்கூர்ப்பதி விமலாவெச் சரிக்கை. (3)

தேவா தமிழ்ப் பாவாவறச் சேவாகனன் மதலாய்
காவார்தரு கொக்கூர்ப்பதிக் கந்தாவெச் சரிக்கை. (4)

குறமாதெனுங் கொடிசேர் கொழு கொம்பேகுண மலீயே
அறமார்தரு கொக்கூர்ப்பதி யரசேயெச் சரிக்கை. (5)

கந்தாமலர்க் கடம்பாவள்ளி கந்தாவெனீ யாள
வந்தாய்நிருக் கொக்கூர்ப்பதி வாழ்வேயெச் சரிக்கை. (6)

புலவோர்புரி யிகறீர்த்தருள் போதாசம வேதா
பலவார் பொழிற் கொக்கூர்ப்பதிப் பரமாவெச் சரிக்கை. (7)

நிராதெய்வ சேனுபதி தெவிட்டாவமு தலீய
பேராநிருக் கொக்கூர்ப்பதிப் பெருமானெச் சரிக்கை. (8)

ஈசாபவ நாசாவிக வாசாபிர காசா
தேசாநிருக் கொக்கூர்ப்பதிச் செல்வாவெச் சரிக்கை. (9)

ஏகாவல்லி மோகாமயிற் பாகா பர யோகா
நாகார்புனற் கொக்கூர்ப்பதி நாதாவெச் சரிக்கை. (10)

கோதாதிக ஞடையாரொடு கூடாதெனை யாளும்
நாதாநிருக் கொக்கூர்ப்பதி நம்பாவெச் சரிக்கை. (11)

மயிலேறிய வழகாமதி வதனுபகம் பொழிலிற்
குயிலேறிய கொக்கூர்ப்பதிக் கோமாவெச் சரிக்கை. (12)

மலமூன்றுமெய் யடியார்களீ மருவாதரு மைலா
நலமூன்றிய கொக்கூர்ப்பதி நாதாவெச் சரிக்கை. (13)

பஞ்சானன முடையாரருள் பஞ்சானன மீனயாய்
மஞ்சார்பொழிற் கொக்கூர்ப்பதி வாழ்வேயெச் சரிக்கை. (14)

நாராயணன் மருகாபுகழ் நவவீரர்க ளரசே
சுரரார்பொழிற் கொக்கூர்ப்பதிக் கந்தாவெச் சரிக்கை. (15)

மண்ணுரையும் பெண்ணுரையும் வருத்தாவித மருளும்
அண்ணாநிருக் கொக்கூர்ப்பதி யரசேயெச் சரிக்கை. (16)

அழையாமுவம் விரைந்தோடிவந் தடியார்க்கரு ளத்தா
வழையார் பொழிற் கொக்கூர்ப்பதி மணியேயெச் சரிக்கை. (17)

பயனூரறு படைவீடெனும் பாலாவயில் வேலா
நயனூர்தரு கொக்கூர்ப்பதி நாதாவெச் சரிக்கை. (18)

காலாயுதக் கொடியாய்கழற் காவாவுமை பாலா
சேலார்புனற் கொக்கூர்ப்பதிச் செல்வாவெச் சரிக்கை. (19)

மிணியாதிக ளறுகாதெனைப் பேணும் பெய ராளா
தணிகாசல கொக்கூர்ப்பதிச் சாமீயெச் சரிக்கை. (20)

(குறிப்பு)

4. அறச் சேவாகனன் - தருமமாகிய இடபத்தை வாகனமாகவுடைய சிவபெருமான் கா – சோலை, ஆர்தரு - நிறைந்த.

7. புலவோர்புரி திகல் - இறையனூர் களவியலுக்கு எவர் கூறிய உரை சிறந்ததென் பது பற்றிக் கடைச்சங்கப் புலவருக்குள் உண்டான பிணக்கு; முருகப் பெருமான் உருத்திரசன்மராகி அவதரித்து எல்லாருடைய உரைகளையும் கேட்டு, நக்கீரர் உரையே சிறந்த தென்பதைக் குறிப்பினாற் காட்டிச் சங்கப் புலவர்களின் பிணக் கைத் தீர்த்தார் என்பது வரலாறு.

9. தேசா - ஒளியையுடையவனே.

10. நாரு - சங்கு; நீர்வாழ் உயிர்களுள் ஒன்றுமாம்.

13. மலம் மூன்று - ஆணவம், கன்மம் மாயை. அமலா - மலமற்றவனே.

14. பஞ்சானன் - ஐந்து முகங்களையுடைய சிவபெருமான். பஞ்சானனம் - சிங்கம் மஞ்சு - மேகம்.

17. வழை - சுரபுன்னை.

18. நயன் - நயம்.

19 காலாயுதம் - காலை ஆயுதமாகக் கொண்டது; அதாலது கோழி சேலார் - சேல் மீன்கள் நிறைந்த.

கீர்த்தனங்கள்

(1)

இராகம் – சுருட்டி, தாளம் – சம்பு

பல்லவி

ஆறுமு கனேச்சி தானந்த ரூபினை
அனுதினம் நினை மனமே.

அனுபல்லவி

வீறும் பசுமயி லேறும்வி நோதனே
மெய்யன்பர்க் குவகையின் விளம்புமெய்ப் போதனே (ஆறு)

சரணங்கள்

1. வள்ளிதெய் வானை மனமகிழ் நாதனே
வானவ ரனுதினம் வணங்கும் பொற் பாதனே
வெள்ளீலே வேலணி விமலவி சாகனே
மெய்ப் பொரு ளாயென்றும் விளங்குறு மேகனே (ஆறு)

2. பந்த மறுத்தருள் பாலிக்குங் கந்தனே
பரமனற னுதல்விழிப் பால்வரு மைந்தனைக்
கந்த மிகுந்த கடம்பணி மெய்யனைக்
கமல பா வலைக்குட்டுங் கையனை யையனே (ஆறு)

3. மலய முனிக்குத் தமிழ் வழங்குஞ்செவ் வாயனே
வாழ்த்தி வணங்குமன்பர் மனத்துறை தூயனே
அலையவி டாதென்னை யாண்டவு தாரனே
ஆனை தனன்றம்பி யாகிய தீரனே (ஆறு)

4. அதிர்கட லடக்கிய வற்புதத் தேவனே
ஆறெழுத் தின்பொரு ளாகிய கோவினே
முதிர்சினைச் சூரனை முடித்தருள் வீரனே
மொழியுங்கொக் கூர்நகர் முத்துக்கு மாரனே (ஆறு)

(குறிப்பு) சித் + ஆனந்தம் – சிதானந்தம்; சித் – அறிவு; ஆனந்தம் – இன்பம்
வீறும் – பெருமையுடைய.

1. விளங்குறும் ஏகனே – விளங்குகின்ற ஒருவனேயான இறைவனே.
2. கமலபவன் – தாமரையிற் பிறந்தவன்; பிரமன்
3. மலய முனி – பொதிய மலையில் எழுந்தருளியுள்ள அகத்திய முனிவர்.
4. அதிர்கடலடக்கியமை – முருகப் பெருமான் உக்கிர குமாரராக அவதரித்து மதுரையிலிருந்து அரசு செய்தகாலை இந்திரன் ஏவலால் வருணன் கடலைப் பொங்கச் செய்து மதுரை நகரை அழிக்க முயன்ற போது, உக்கிரகுமாரர் கடல்கவற வேல் விட்டு அதன் சீற்றத்தை அடக்கினார் என்பது வரலாறு. ஆறெழுத்து "குமாராயநம" என்னும் முருக மந்திரம்.

(2)

இராகம் – சகுனி; தாளம் – ஆதி

பல்லவி

கொக்குவிற்பதி வாசனே
குறத்தி வள்ளி நேசனே

அநுபல்லவி

பக்குவர் தொழு வேலனே
பரமசிவன் தரு பாலனே (கொக்கு)

சரணங்கள்

1. அலுதினை முனதிரு வனச மலரடியை
எனதுள நினைவுற வினிதருள் புரிமதி (கொக்கு)

2. நம்புல னுன்றிக வெம்பிய வெனதுளம்
அம்பர சுகமெனு மம்புதி யுறவருள் (கொக்கு)

3. இயலிசை முதலிய நயலுறு தமிழியல்
மயலற வெனதுள முயலுற வருள்புரி (கொக்கு)

(குறிப்பு) 1. வனசம் – தாமரை.

2. அம் பர சுகம் எனும் அம்புதி – அழகிய மேலான சுகம் என்னும் கடல்; அம்புதி – கடல்

(3)

இராகம் – செஞ்சுருட்டி தாளம் – ஆதி

பல்லவி

உன்னை நம்பினேன் ஐயா
உமையருள் மெய்யா

அநுபல்லவி

அன்னை தந்தை நீயே
ஆண்டவனிப் பாயே (உன்னை)

சரணங்கள்

1. நெஞ்ச மெங்கு மோடி நினைத்தவை தேடி
வஞ்சர் சொல்லின் வாடி வருந்திப் பின் பாடி (உன்னை)

2. அஞ்ஞான நீங்க ஆனந்தந் தேங்க
மெய்ஞ்ஞான மோங்க மிகக்களி தூங்க (உன்னை)

3. சிமையவுல் லாச தெய்வயாஜை நேச
இமையவ ரீச எழுற் கொக்கூர் வாச (உன்னை)

(குறிப்பு) 3. சிமைய உல்லாசா; சிமையம் – மலை.

(4)

இராகம் – துஜாவந்தி தாளம் – சாபு

பல்லவி

உலக மறவாத ஒருவர மடியேனுக்
குவந்தருள் புரிந்திடு வாயே

அனுபல்லவி

நலமலர்ப் பொழிற் செந்தி னகரிலெ ழுத்தருளி
நம்பு மடியவர்க் கின்ப மருள்புரி
நாத பரசுக போத வனுதினம் — (உலக)

சரணங்கள்

உலவும் பசுமயிலு முனது திருவுருவும்
ஒழிவின்றி நினைப்பதெந் நாளோ – துன்பம்
பலவும் புரியுமைந்து புலனுக்கு யான்றெண்டு
பண்ணிச்செ லுமடிமை யாளோ – வளம்
குலவும் பரங்கிரித் தேனே – சுர
குலங்களைக் காத்தருள் வோனே – எங்கும்
நிலவும் பரம்பொரு ளியென் றறிந்த தொண்டர்
நிறைந்த பழனியி லுறைந்த குருபர
நீப மணிந்தப்ர தாப சுரவர — (உலக)

நாலத்தி லெங்கெங்குஞ் சஞ்சரித் தெவரையும்
தாங்கியென் னுள்ளந்தன் னாடும் – பிறர்
சாலப் புகழ்ந்திடின் மகிழ்ந்நுசற் றிகழ்ந்திடின்
தளர்ந்து சலித்துமிக வாடும் – எழிற்
கோலக் குலாசலத் தோளா – நெய்வ
குஞ்சரி வள்ளிமண வாளா – அரும்
சீலத் தவர்பலர் திரண்டு கனிந்நுதுதி
செய்து நறுமலர் கொய்து பூசனை
செய்யு மேரகத் தைய வனுதினம் — (உலக)

1. மலையிடை யகப்பட்டு வருத்துநக் கிரர்தம்
வருத்த மகற்றவயில் விடுத்தாய் . நெஞ்சம்
உலவி லருணகிரி யார்திருப் புகழைக் கேட்
டுவந்து பெருங்கருணை கொடுத்தாய் – பெருங்
கலியின் முடிந்தவொரு மணியே – வள்ளி
கண்களித் திடத்தோன்றுங் கனியே – கன
மலினிற் பரன்விழி வருமுரு காமயில்
வாகனு சுர ரேகநாயக
மக்கள் போற்றுநற் கொக்கூர் வளர்பர — (உலக)

(குறிப்பு) 1. நீபம் – கடம்பு 3. கணியே – வேங்கை மரமே.

மங்களம்

ராகம் – சுருட்டி தாளம் – சாபு

மங்களம் மங்களம் — சுகுமாரா
மங்களம் மங்களம்

1. பங்கச நயனவுத் துங்கவி சாகவி
டங்ககுக சிகிதுரங்க - மலர்ச்
தொங்கல ணிபுயவி வங்கல முகவருட
சங்கரி சுத தமிழ்ச் சங்கவுத்தாரா (மங்களம்)

2. ஸச மிகுந்ததுக்க நாச சுசனவிசு
வாச தெய்வருஞ்சரி நேச - மிகு
வாசக் கடம்பணியுந் தேச மிகு ஸ்வயம்ப்ர
காச திருப்பழனி வாசசர் வேசா (மங்களம்)

3. வேதம ளுகர கிதசு சனபசு
போதவி நாசவி நோத - சுர
பாதப கரமது சூதன விதிகர
கேதநி வாரக நாதல நிதா (மங்களம்)

4. பாலலோ சனனருள் பால சுவைமிகுந்த
பாலன மொழிவள்ளி பால – தண்டைக்
கால வசுரகுல கால – மறைபுரியும்
ஓல பருதிநிகர் கோல செவ்வேலா (மங்களம்)

5. மத்த கரிவதன னேத்தெறு நிறலின்மி
குத்தக ரிக்கினைய வத்த – பரி
சுத்த நிராமய நித்த வகிலசக
கர்த்த கொக்கருறை முத்துக்குமாரா. (மங்களம்)

(குறிப்பு)

1. விடங்க – அழகனே. சிகி துரங்க – மயிலாகிய குதிரையை (அதாவது வாகனத்தை) உடையவனே. தொங்கல் – மாலை புய விலங்கல் தோள்களாகிய மலைகள்.

3. சுர பாத கர – கற்பகத்தைப் போன்ற கைகளையுடைய; பாதபம் – மரம். விதி – பிரமன். சுர கேதம் – தேவர்களின் துக்கம்; கேதம் – துக்கம்

4. பால லோசனன் – நெற்றிக் கண்ணையுடையவன். பால் அன்ன மொழி வள்ளி – பால் போன்ற இனிய மொழிபேசும் வள்ளி; வள்ளி பால – வள்ளியைப் பக்கத் தில் வைத்திருப் பவனே; வள்ளியைப் பாலிக்கின்றவனே எனினும் அமையும். மறை புரியும் ஓல – வேதங்கள் எப்போதும் சொல்லும் ஓம் என்னும் ஒலிவடிவா னவனே. பருதி – சூரியன்.

5. மத்தகரி வதனன் – கயமுகாசுரன். அத்தன் – தலைவனே நிராமய – தூயவுடம் பினனே. அகில சக கர்த்த – முழு உலகையும் படைத்தவனே.

ஓம் நமோ நாராயணாய

கோக்கூர்ப் புதுக்கோவில்

வேணுகோபாலன் திருவூஞ்சல்

அ. நாகலிங்கம் அவர்கள் பாடியது

திருச்சிற்றம்பலம்

காப்பு

நீணிலத்து நின்றிசைத்த குழலி னோசை
நிலநிறைந்து வானகத்தும் பரவ வூதும்
வேணுகோ பாலனிசை யூஞ்சல் பாட
விரவியென துள்ளத்துள் விஞ்சி நின்று
காணுமிட மெலாநிறைத்து காட்சி நல்கும்
கணபதியே காப்பாக நிற்ப வென்றே
பேணியவன் திருவடிக்கே சென்னி சேர்த்துப்
பிரணவத்தை யோதியுளே சிந்திப் பேனே

குறிப்புகள்:

காப்புச் செய்யுளில், திருவடியிற் சென்னி (தலை) சேர்த்துப் பிரணவத்தை ஓதி அப்பிரணவப் பொருளை மனத்துள்ளே சிந்தித்தல் கூறப்படுதலின், மெய்யினாலும் மொழியினாலும் மனத்தினாலும் வழிபடுகின்றார் ஆசிரியர்.

நூலிலே, வேணுகோபாலனை ஒருமை வாய்ப்பாட்டால் விளித்து, 'ஆடரூஞ்சல்' எனப் பன்மை வாய்ப்பாட்டால் விதந்முடிபு கொடுத்தது வழுவாயினும், திருமகளும் பூமகளுமாகிய தேவியர் இருவரையும் உளப்படுத்திக் கூறுதலின் வழுவமைதியாயிற்று. இது 'முன்னிலை கட்டிய ஒருமைக் கிளவி, பன்மையொடு முடியினும் வரைநிலையின்றே, ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் (சொல். 455) அமைத்துக் கொள்ளப்படும்.

நூல்

சிரிலங்கு செம்பொன்னுற் கால்கள் சேர்த்துச்
சிறந்தொளிகால் வயிரத்தால் விட்டம் பூட்டி
ஏரிலங்கு மிரத்தினநல் விதாவ மாக
எழிலுடனே மாணிக்கப் பலகை சேர்த்து
நேரிலங்கு முத்துவடம் நிரலத் தூக்கி
நிறைவுடனே யமைந்ததோ சூஞ்சன் மீது
வாரிலங்கு மடவார்க ளிருபான் மேவ
வளர்வேணு கோபாலா வாடூ சூஞ்சல். (1)

வளர் சோமன் சூரியனுங் குடைபி டிக்க
வந்துநம னுடைவாளே தாங்கி நிற்க
அளகர்கோ வடைந் தடைப்பை யேந்தி நிற்க
அங்கியவ ளெளிதிறைதி வர்த்தி தாங்க
வளியவனு மெழிலிறைசா மரையி ரட்ட
வண்மைநிறை கொக்கூரை நீங்கா தென்றும்
வளம்பலவு மடியவர்கட் குதவும் வள்ளால்
வளர்வேணு கோபாலா வாடூ சூஞ்சல். (2)

கன்றுலே விளவெறிந்த கமலக் கண்ணு
களியுடனே யுறிதிருடுங் கரும்பே தேனே
குன்றுலே மழைதடுத்துக் கோக்கள் காததாய்
குருந் தொசித்துக் கோபியர்கள் மானங் கொண்டாய்
நின்றுடிக் காளிங்கன் கொடுமை தீர்த்தாய்
நிலையாகப் புதுக்கோயில் வாசங் கொண்டாய்
என்றுமே யிதஞ்செய்வா யெங்கள் கோவை
எழில்வேணு கோபாலா வாடூ சூஞ்சல். (3)

நறுமலர்க ளுடன்முடித்த குஞ்சி யாட
நல்லவரை மிசையுடுத்த பட்டு நீடக்
குறுநகைசெய் செவ்வாயிற் குறும்பு சேரக்
கோக்குலங்க ணுற்புறமுந் துள்ளிச் சூழ
நிறைநீல மேலிபழ கொழுஞ்சோர
நின்றநிலை கண்டவர்க ளன்பு கூர
நறையொழுகு பொழில்சூழ்ந்த கொக்கூர் மன்னும்
நயவேணு கோபாலா வாடூ சூஞ்சல. (4)

---

1. நிரல – நிரையாக; நிரலுதல் என்னும் வினை நிரையாதல் என்னும்பொருட்டு.

2. வளர் சோமன் – சந்திரன்; அளகர் கோன் – குபேரன்; அங்கி – தீக்கடவுள் வளியவன் – வாயுதேவன்

3. உறி திருடல் – உறியில் உள்ள வெண்ணெயைத் திருடல்; உறி – தானியாகு பெயர், குருந் தொசித்து – குருந்த மரங்களை முறித்து; வாசம் – உறைவிடம்

4. குஞ்சி – ஆணின் தலைமயிர்; நல்ல அரை – இலக்கணம் அமைந்த அரை; நய வேணு – இன்பஞ் செய்யும் புல்லாங்குழல்; நயம் – இன்பம்; நன்மை

தேலகியா ரகத்துதித்த தெய்வச் சாலீ
சிறந்தயசோ தைவளர்க்க வளர்ந்தாய் வஞ்சப்
பூவரச னுங்கஞ்சன் புணர்ப்பி னீங்கிப்
புவிகாக்கத் தலையெடுத்தாய் புலமை சான்ற
நாவரசர் நற்புலத்திற் செழித்தாய் முற்றி
நற்கருணைக் கதிரீன்று நன்மை செய்தாய்
வாவிநிறை கொக்கூரின் வளஞ் சிறக்க
வருவேணு கோபாலா வாடூ ரூஞ்சல். (5)

வெண்ணெயுணும் வேட்கைமிக வுறியி லேறி
விடுதொறும் விரும்பியுண்ட வெறுவாய்க் கள்வா
பண்ணெழுகும் பாட்டிசைத்துக் குழல் கொண் டூதிப்
பண்டுபசு நிரை மேய்த்த பவள வாயா
துண்ணெனவே கோபியர்க டுயர மெய்தத்
துடுக்குடனே யவராடை கவர்ந்த சோரா
விண்ணளவு மாடமலி கொக்கூர் மேய
வேணுகோ பாலனே யாடூ ரூசல். (6)

பார்த்தனுக்குப் போர்முகத்துக் கீதை யோதிப்
பற்றறவே பணி செய்யும் வகையுங் காட்டிப்
போர்த் தொழிலே முற்று வித்தாய் புவியின் பாரம்
போக்குதற்கு நீசெய்த புணர்ப்புத் தானே
தீர்த்தனே செங்கண்ணு கருணா வாழ்வே
திருமகளும் பூமகளுந் தோயு மார்பா
கீர்த்திமிகு கொக்கூரிற் குடிய மர்ந்தாய்
இளர்வேணு கோபாலா வாடூ ரூஞ்சல். (7)

வாய்முத்தந் தருதாயர் வடந்தொட் டாட்ட
வாணியவள் வாழ்த்தெடுத்தே யாசி கூற
நோய்நீங்கு கோபியர்கள் சீர்த்தி யெல்லாம்
நுவன்றுவந்து பல்லாண்டு பாடிப் போற்ற
வாய்தல்வரு வவிதையர்கள் வணங்கி மண்ட
மலர்மகளு நிலமகளு மருவிச் சேர
ஆய்தமிழோர் சேர்கொக்கூ ரகலா தென்றும்
அணிவேணு கோபாலா வாடூ ரூஞ்சல். (8)

---

5. சாலீ – நெற்பயிர் (விவி); புணர்ப்பு – வஞ்சனை; நாவரசர் – நல்லிசைப் புலவர் கண்ணனை நெற்பயிராக உருவகம் செய்யப்பட்டுள்ள (முற்றுருவக) நயம் காண்க.

6. வெறுவாய்க் கள்வா – வாய்க்கு உணவுகிடைக்காமல் வெண்ணெய் திருடியுண்ட கள்வன் என்றது இகழ்வது போலப் புகழ்தலாம். வெறுமை + வாய் – வெறு வாய். விண்ணளவு – வானை முட்டும்; அளவுதல் – அளாவுதல், பொருந்துதல்.

7. புணர்ப்பு – சூழ்ச்சி; பூமகள் – பூமாதேவி; இளர் வேணு – மேன்மேலும் வளரும் (இசையை எழுப்பும்) புல்லாங்குழல்.

8. நோய் நீங்கு கோபியர்கள் – பிறவிப்பிணியினின்றும் விடுபட்ட கோபிகைகள்; சீர்த்தி – மிகுபுகழ்; நுவன்றுவந்து – (நுவன்று + உவந்து) சொல்லி மகிழ்ந்து; வாய்தல் – வாசல்; மண்ட நெருங்க.

பஞ்சவர்க்குத் தூதுவனே யாடீ ரூஞ்சல்
பார்த்தனுக்குச் சாரதியே யாடீ ரூஞ்சல்
தஞ்சுடைய நாகணையா யாடீ ரூஞ்சல்
நான்மறையி னுட்பொருளே யாடீ ரூஞ்சல்
கஞ்ச மகள் காதலனே யாடீ ரூஞ்சல்
கமலக்கண் ணுடையவனே யாடீ ரூஞ்சல்
விஞ்சைகள் வல்லவனே யாடீ ரூஞ்சல்
வேணுகோபாலனே யாடீ ரூஞ்சல் (9)

பொங்குகடற் பள்ளியனே யாடீ ரூஞ்சல்
பூபாரம் தீர்ப்பவனே யாடீ ரூஞ்சல்
சங்கொருகை யுடையவனே யாடீ ரூஞ்சல்
சக்கரநற் படையானே யாடீ ரூஞ்சல்
மங்குனிற மேனியனே யாடீ ரூஞ்சல்
மாசுகளைந் தாள்பவனே யாடீ ரூஞ்சல்
வெங்கடநற் கிரியானே யாடீ ரூஞ்சல்
வேணுகோ பாலனே யாடீ ரூஞ்சல் (10)

வாழி

மறையவரும் வானவரும் வாழி வாழி
மழைபொழிந்து வளஞ்சிறக்க மாசு நீங்க
முறைதவறு மன்னவர்தர் மோங்கி வாழ்க
முத்தமிழின் நிறம் வாழ்க முனிவோர் வாழ்க
நிறைதவரு நல்லொழுக்க நீடி நிற்க
நித்தனது திருவருளே நிறைந்து பொங்க
அறைபுனல்சூ ழுலகமெலா மமைந்து வாழ்க
அன்புநெறி தழைத்தோங்க வறமும் வாழ்க.

9. நாகணையாய் – (நாக + அணையாய்) பாம்பினை அணையாக உடையவனே; கஞ்ச மகள் – இலக்குமி; கஞ்சம் – தாமரை; விஞ்சை – மாய வித்தை

10. மங்குனிற மேனி – (மங்குல் + நிறம் + மேனி); மேகம் போன்ற கருநிற மேனி. மங்குல் – மேகம்; வெங்கட நற்கிரி – திரு வேங்கடமலை; வேங்கடம் என்பது வெங்கடமென நின்றது குறுக்கல் விகாரம்

எச்சரிக்கை

திருச்சிற்றம்பலம்

1. இசை பின்படர் நிரை மேய்த்திடு மிறையே — எச்சரிக்கை
நசையாலுறி வெண்ணெய்கவர் கள்வா — எச்சரிக்கை

2. குன்றுன் மழை தடுத்தேநிரை காத்தாய் — எச்சரிக்கை
கன்முல்வில வெறிந்தேகனி யுருத்தாய் — எச்சரிக்கை

3. ஐவர்க்குறு துணையாகிய வண்ணு — எச்சரிக்கை
பைவைத்துறு நாகம்பட நடித்தாய் — எச்சரிக்கை

4. ஆண்டாளணி மாலையுகந் தணிந்தாய் — எச்சரிக்கை
பூண்டோய்முலை மகளை மார்புற வைத்தாய் — எச்சரிக்கை

5. செங்கண்ணர வணையிற்றுயில் கொள்வாய் — எச்சரிக்கை
சங்கம் மொரு கையேந்திய தலைவா — எச்சரிக்கை

6. புல்லாங்குழ லூதிவரு புனிதா — எச்சரிக்கை
முல்லைநில முதல்வா செங்கண முராரீ — எச்சரிக்கை

திருச்சிற்றம்பலம்

பராக்கு

திருச்சிற்றம்பலம்

1. திருமா லிருஞ்சோலைத் தேவே — பராக்கு
திருவேங் கடம்பிரியாச் செம்மால் — பராக்கு

2. மதுரா புரிக்கரசே வள்ளால் — பராக்கு
துவரா புரியாண்ட தூயா — பராக்கு

3. பிருந்தா வனவழகா பிரானே — பராக்கு
வருந்தா வணமருளு மாதீ — பராக்கு

4. கச்சி வரதப்பா கண்ணு — பராக்கு
நச்சி யுறைதிருடு நம்பீ — பராக்கு

5. வண்ணை மகிழ்ந்துறையும் வரதா — பராக்கு
நன்னிப் பொன்னுலை நயந்தாய் — பராக்கு

6. கொக்கூர்ப் புதுக்கோயிற் கோவே — பராக்கு
இக்கு வைட்கத்தா ஈசா — பராக்கு

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:-

6. இக்கு வேட்கத்தா – இக்கு வேட்கு + அத்தா – மன்மதனுக்குத் தந்தையே என்பது புராண மரபு. இக்கு – கரும்பு; இக்கு வேள் – கரும்பை வில்லாயுடைய மன்மதன்.

லாலி

திருச்சிற்றம்பலம்

1. லாலீ லாலீ லாலீ லாலீ லாலீ
கோபியர் காதல் கொண்டு களித்தாய் லாலி.

2. நல்லோர் வாழ நண்ணினை ஞாலம் லாலி
பொல்லார் பொன்றப் புனைர்ப்புகள் செய்தாய் லாலி.

3. முரளீ தரனே முராரி லாலி லாலி
அரவ மீதே அறிதுயில் கொள்வாய் லாலி.

4. சங்கொடு கையாய் சார்ங்க வில்லாய் லாலி
பொங்கு பாற்கடற் புத்தமு தானாய் லாலி.

5. ஆயர் பாடியில் ஆடல் புரிந்தாய் லாலி
நேயங் கொண்டு நேர்வார்க் கருள்வாய் லாலி.

6. கொச்சூர்ப் புன்னைக் கோமளர் கோவே லாலி
சக்கர தாரி சாந்த மூர்த்தி லாலி.

திருச்சிற்றம்பலம்

மங்களம்

திருச்சிற்றம்பலம்

1. மங்களம் மங்களம் மங்களம் சய சய
மங்களம் மங்களம் மங்களம்.

2. வையம் முற்று மிசைபரப்பும் வள்ளலுக்கு மங்களம்
கையிற் சங்கு கொண்டிலங்கு கடவுளுக்கு மங்களம்.

3. பஞ்சவர்க்குத் தூதுசென்ற பண்ணவற்கு மங்களம்
நஞ்சு தங்கு பாந்தளாடு நம்பிறைக்கு மங்களம்.

4. உரலிலேறி வெண்ணெயுண்ட வுத்தமற்கு மங்களம்
அரவு பாய லாயுறங்கு மாண்டகைக்கு மங்களம்

5. புதிய கோயிற் புன்னைநீழற் கோவலற்கு மங்களம்
நிதிய நல்கு மலர்மகட்கு நிலமகட்கும் மங்களம்.

6. மங்களம் மங்களம் மங்களம் சயசய
மங்களம் மங்களம் மங்களம்.

திருச்சிற்றம்பலம்

குறிப்புகள்:-

3. பண்ணவன் – கடவுள்; பாந்தள் – பாம்பு. இங்கே 'காளிங்கன்' என்ற பாம்பைக் குறித்தது.

4. பாயல் – படுக்கை; பாயலாய் உறங்கும் ஆண்டகை என்க. ஆண்டகை–புருடோத்தமன்.

5. கோவலன் – கோபாலன்.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

ஓமையந்தாதி

இஃது

யாழ்ப்பாணத்து வண்ணைநகர்

ம. அமரசிங்க உபாத்தியாயர்

அவர்களது மாணாக்கருளொருவராகிய

கொக்குவில்

சீ. சிலம்பநாதபிள்ளையால்

பாடப்பட்டு

யாழ்ப்பாணத்து நல்லூர்

சயம்புநாதர் வீரசிங்கம் அவர்களால்

யாழ்ப்பாணம்

சைவப்பிரகாச, யந்திரசாலையில்.

பதிப்பிக்கப்பட்டது.

விக்கிரம ஹ ஐப்பசி கக உ

1880

உ

சிவமயம்

சிறப்புப் பாயிரம்.

சுப்பிரமணியசுவாமி தொண்டராகிய

யாழ்ப்பாணத்து உடுப்பிட்டி

அ. சிவசம்புப்புலவர் அவர்களால்

இயற்றப்பட்ட

நேரிசை யாசிரியப்பா.

உலக மதித்திடு மோமையம் பதியி
னலகி லருட்கட லாகிவீற் றிருந்து
போகமு மோக்கமும் போற்றுநர்க் குதவிடு
மேக முதல்வ னியானே முகத்தோ
னென்னிலு மனியனேற் கினியனுய்த் திகழும்
பன்னிரு புயப்பரா பரன்முன் னிளவ
லாரணம் பரவுமா னந்த நாடகப்
பூரண வரன்முதற் புதல்வனேப் கரன்மேற்
பெருந்தமிழ் நூல்களும் பிறதிற நூல்களுந்
திருந்திடக் கற்றுணர் செய்யநுண் மதியான்
பரமத கண்டனப் பனுவலும் பான்மைய
திரமத நூல்களுஞ் செல்வித செய்தோன்
றுழ்வில்சித் தாந்த சைவமே மேனிலை
வாழ்வுத விடுமென வழாஅலின் றுணர்ந்தோன்
பதமலர் முடிப்பிரான் பவளந் தழைத்த
பதமலர் விழுங்கிய பத்திசா லுளத்தா
னுறக் கரத்திலே டஞ்சக் கரத்தையன்
பூறக் கலுவிலு மொழிவறச் செபிப்போன்
வன்னத் தம்பனே மலருறழ் செங்கரச்
சின்னத் தம்பிமால் செய்தவத் துதித்தோ
னிறைதருங் கல்வியு நிதியமும் புண்ணியத்

துறையுங் கொடையுந் தூய்மையும் பத்தியு
மன்பும் விரதமு மறிவு மடக்கமு
மின்பு முதலா வெனைத்துநிலை நின்ற
குலம்பெறு மாக்கள்வாழ் கொக்குவில் வாசச்
சிலம்ப நாதச் செம்மனன் முயந்து
பாக லகையினுட் பயிஞளி கேர
பாகமுங் கதலி பாகமு மெனவு
மினியியற் கிதுவே யிலக்கிய மெனவுநூ
னனியுணர்ந் தோர்கொள நவின்றவத் தாதியை
நயந்திகழ் திராவிட நடவைமுற் முேங்க
வியந்திரத் திடுவித் திசையிற் கிளர்ந்தன
னுலத் தாலமிழ் தாக்கிய கோனருட்
சீலத் தாலமர் திருவ நீ டளியு
மங்கதன் பாங்கரி னவிர்தரு மேனைய
புங்கவர் வாழுறூஉம் பொன்னந் தளிகளு
மேத்திய சிறுவருக் கென்றுநூ லுணர்த்திடு
மேத்திய சைவ வித்தியா சாலையுங்
கண்ணீர்க் கடற்படீஇக் கருங்கடற் படியா
வெண்ணீற் முெளிகிளர் மெய்த்தவர் மடமுங்
குழுவுறு பிணிகளைக் குறைத்தரு ணிலையாய்
வழுவற நிவந்தொளிர் வயித்திய சாலையுங்
குண்டையுந் தன்னமுங் குடமுங் கெழீஇயற
லுண்டுவந் துலவுறு முலவறு மோடையு
மேலெறி யாதப வெப்பந் தணித்திட
வாலிய வட்டையில் வளர்நிழற் றருவு
மறம்பெரி தோங்கிட வறிஞருக் குதவிமெய்
திறம்பிடா தோம்புறுந் செல்வர்மா மனையும்
வடகட றென்கடன் மறுபுல நதியெலா
மடனறப் பருகிய மதியினுர் மனைய
மள்ளற் கடற்புவி யடங்கலு மடைந்து
கொள்ளக் குறைபடாக் கோலவான் கூலமு
மருத்தமுஞ் சாலியு மாடையுங் குறையா
விருத்திய வாணிக வியன்பெரு நிலையமுங்
கந்தர விகுணிகர் கடுந்திறன் முழக்கமுச்
சிந்துர மாய்கதிர்ச் செந்நெலங் கழனியு
மாங்குயி னினமென வரிவையர் குரறெரீ இக்
கூங்குயி லேங்கிடுங் குவிர்மலர்ப் பொழிலு
மவநந் தணித்தெரு வகந்தொறும் விராஅய்த்
தவநந் தணித்திடுந் தண்ணீர்ப் பந்தலு
மோதரு மழற்பசி யுடற்றிட நலிவுறூஉ
மாதுலர்க் குதவிடு மன்னசத் திரமுங்

கற்பக நாட்டினைக் காசினியாகப்
பொற்பமர் தூளயிற் பூீதரும் வீதியு
மின்னன பிறவுமூற் றெல்லீயற் றேங்கி
மன்னில பேரெழில் வண்ணமா நகரான்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவிடுங் கொடையான்
றேற்றமிக் கிசைதருந் தொல்லர சறிய
வீற்றிருந் திடுதவ மேன்மைகொள் வாழ்விலு
னின்புடைப் புலவர்க ளீன்றசெங் கவியெனும்
பொன்புரை பொற்றெடை புனைந்த புயத்தான்
றேங்குளக் குன்றினிற் றேன்மழை நான்றென
வோங்குநல் லவர்வயி னுரைக்குமின் மொழியான்
றண்ணளி வழிந்துசந் ததமு நிறைந்தேமூஉம்
வண்ணமா மதிநிகர் வதனமண் டலத்தான்
வாரொலி கருங்குழன் மாதுகு மடநலா
ரூரு மொண் மடலிடை யொளிருமெய்ச் சித்தசன்
பீடுசா னளினநப் பின்லீயற் பகலுவந்
தாடுமா ரப்பகட் டத்தவா கத்தினுன்
றிகைதொறு நடாத்திடுஞ் சிதைவறு மாக்க
வகைபெறு மூதிய வாணிகத் தலைமையான்
சங்கவா ரிதியுறீ இத் தங்கமாண் குவைதரூஉ
மங்கல வளங்குலாம் வங்கவ ளத்தினுன்
றக்கமெய்ப் பத்தியிற் சங்கர னரு
ளக்கமும் பூதியு மகலா வடிவினுன்
றிப்பிய நிகம சிவாகம புராண
மெய்ப்பய னமுதினை விளையினி தருந்தினுன்
காவலர்க் கியறருங் கருமத் திறம்பல
தாவற வளர்த்திடுந் தகைகொள்யூ கத்தினு
னம்புய வணிமுத லணிகள்வா டாதுற
வம்புய ருற்பல மலரணி யணிந்தோன்
சலவள நிலை கெழூஉந் தண்பணை முதலா
நிலவள வாரியி னிரம்பிய செல்வன்
கதமற மெறிந்திடுங் கனக ராய
முதலி மரபெழூஉ முதிர்புகழ்த் தகையான்
பாரறு தவத்தினம் பலவாண வள்ளலை
வார்முற் றுளபிதா மகனு யுடையான்
சுகவள விலருளிய சுயம்பு நாத
மகபதி பயந்தருள் மாண்புடைச் சயந்தன
பார்வளர் பதிதோறும் பரந்த
சீர்வளர் வீர சிங்கக் குரிசிலே.

ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலை உபாத்தியாராகிய

சுன்னாகம் ம - ா - ா - ஸ்ரீ

அ. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள்

சொல்லிய

ஆசிரிய விருத்தம்

சொல்லரிய வளம்படைத்த ஓமை வாழுந்
தும்பிமுக வைந்துகரத் தோன்ற லுக்கு
மல்லல்பெறும் பொருளமைத்திட் டழகு வாய்ப்ப
மாசறுமோ ரந்தாதி மாலை யீந்தான்
செல்வமிகுங் கொக்குவினு கரிகன் சீர்த்தி
சேர்ந்தசின்னத் தம்பிதவச் செல்வன் கல்வி
வல்லவர்கள் கொண்டாடப் பலநூ லாய்ந்து
மகிழ்சிலம்ப நாதகவி வள்ள றனே.

சைவ உதயபானு பத்திராதிபராகிய

வல்வெழு ம - ா - ா - ஸ்ரீ

சு. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள்

சொல்லிய

கட்டளைக் கலித்துறை

ஓமைக் கணபதிக் குள்ளன் பொழுக வுவப்புமிக்குத்
தாமங் குலவுமந் தாதியென் மாலையைத் தந்துரைத்தான்
சேமம் பெறுநிதி சேர்ந்தசின் னத்தம்பி செல்வனெழிற்
காமன் சிலமபனன் ஞதன் கவிச்சக் கரவர்த்தியே.

ஆக்கியோன் பெயர்

பூதக ணுதிபர் போற்றிட வோமைப் புரத்துறையும்
வேதச முகம் புகழ்வி ரகத்தி விநாயகன் மேல்
ஓதினன் செந்தமி ழந்தாதி நூறு முயர்சிலம்பு
நாதானன் ரேது மெழினல்லை மாநகர் நாவலனே.

முன்னுரை.

ஒமையந்தாதி என்னும் இந்நூல் இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கு முன்னே கொக்குவிலிப் பிறப்பிடமாகக் கொண்ட சிலம்பநாதபிள்ளை என்பவரால், இலங்கையின் வடபாலுள்ள வவுனியா மாவட்டத்திலே ஒமந்தைப் பதியிற் கோயில் கொண்டருளிய வீரகத்திப்பிள்ளையார் மீது பாடப்பட்ட பிரபந்தமாகும். இது கட்டளைக் கலித்துறை யால் அந்தாதித் தொடையிற் பாடப்பட்ட நூறு செய்யுள்களையும் ஒரு காப்புச் செய் யுளையுங் கொண்டது; சொற்சுவை, பொருட்சுவை பொருந்தியது; விநாயகப் பெரு மான் பாற் படிப்போர் நெஞ்சைப் பதிவிக்கவல்ல பத்திச்சுவை நிரம்பியது.

இவ்வரிய நூல், யாழ்ப்பாணத்து நல்லூர் சயம்புநாதர் வீரசிங்கம் அவர்களால் 1880 ஆம் ஆண்டாகிய விக்கிரம வருடம் ஐப்பசி மாதம் 11 ஆம் தேதி, யாழ்ப்பாணத் துச் சைவப்பிரகாச யந்திரசாலையிற் பதிப்பிக்கப் பட்டது. இன்று, இவ் வருமந்த பிர பந்தம் கிடைத்தற் கரிதாகி விட்டதால், அரிதிற் கிடைத்த முதற பதிப்புப் பிரதி யொன்றன் துணையோடு, அரும்பதவுரை விளக்கத்துடன் மீளப் பதித்து வெளியிடப் படு கின்றது. முதற் பதிப்புக்கு யாழ்ப்பாணத்து உடுப்பிட்டி அ. சிவசம்புப் புலவர் சுன்ன கம் அ. குமாரசுவாமிப்பிள்ளை, ஊரெழு சு. சரவணமுத்துப்பிள்ளை ஆகியோர் சிறப்புப் பாயிரம் அளித்துள்ளவர்.

இந்நூலை ஆக்கிய சிலம்பநாதபிள்ளை என்பவர் கொக்குவில் வாசியான சின்னத் தம்பியின் புதல்வரென்றும், யாழ்ப்பாணத்து வண்ணை நகர் ம. அமரசிங்க உபாத்தியா யரின் மாணாக்கரென்றும், பெருந்தமிழ் நூல்களும் பிற திற நூல்களும் திருந்திடக் கற்ற செய்ய நுண்மதிய ரென்றும், சைவசித்தாந்தமே உயர்நிலை உதவுமென ஐயந்திரிபற உணர்ந்த வரென்றும், சைவத்தின் பெருமையை விளக்கவும் பரமதத்தின் பொய்ம்மை யைக் காட்டவும் நூல்கள் செய்தவரென்றும் சிறப்புப்பாயிரச் செய்யுளால் அறிகின்றோம்.

இவர், ஒமையந்தாதி என்னும் இந்நூலை ஆதாரமாகக் கொண்டு நோக்குங்கால் இதன் ஆசிரியர் ஒமந்தைப் பதியில் நீண்டநாள் வாழ்ந்து அதன் இயற்கைக் காட்சிகளை யெல்லாம் நன்கு இரசித்தவரென்பதும், ஒமந்தை விநாயகப் பெருமானிடத்து மாறாத பத்திகொண்டு ஒழுகியவரென்பதும் அப் பெருமான் அருளால் நன்மையெல்லாம் பெற்று எண்ணிய எண்ணமும் முற்றப் பெற்றவரென்பதும் தெரிய வருகின்றன (செய் 9.)

ஒமைப்பதியின் நீர்வளத்தைக் குறிக்குமிடத்து, 'குளங்குலவும் ஒமை' யென்றும் (செய். 30), 'வாரேறு வாவி புடைசூழும் ஒமை' யென்றும் (செய். 15), நீடிப் பெருகு நதியுகள் வாவி நெடுங்கமுகைச் சாடிப் பழமுதிரச் செய்யும் ஒமை' யென்றும் (செய். 78), சிறப்பித்துக் கூறுகின்றார் ஆசிரியர். இன்னும் அப்பதியின் சோலைவளத்தை 'தங்கு தெங்கம் பொழில் சூழ்ந்துயர் ஒமை' யென்றும் (செய் 55), 'வாழை நெருங் கும் வயலரு கெங்கணும் வான் கரும்பு, தாழை நெருங்கும் கனிகள் கிளைக்கத் தரளஞ் சிந்தும், மாளு நெருங்கும் மதில் ஒமை' யென்றும் (செய். 56) 'போதாருந் தண் டலை சூழ்தரும் ஒமை' யென்றும் (செய். 86), கவிநலங்கனியச் சித்திரித்துக் காட்டு கின்றார்.

ஓமந்தையின் காட்டு வளத்தை வருணிக்குமிடத்து, அங்கே கவுதாரிப் புட்கள் கோபங் கொண்டு சண்டையிடுவதையும் (செய். 5), மதங்கொண்ட யானைகள் போர்புரிவதை யும் (செய். 75), ஓயாமல் உலவும் மந்திக் கூட்டம் பாயுந் தோறும் உயர்ந்த பலா மரங்களின் கனிகள் உதிர்வதையும் (செய். 46), விளா மரங்களிலின்று வீழ்ந்த கனி களைக் காட்டு யானைகள் விரும்பி உண்பதையும் (செய். 41), முகில்கள் முழங்க எதிர் நின்று மயில்கள் ஆடுவதையும் (செய். 57), சந்தன மரங்கள் வாசனை வீசுவதையும் (செய். 20), புளி மாமரங்கள் கவியுதிர்ப்பதையும் (செய். 46), கவிஞர் நம்மனக்கண் முன் நிறுத்தி இன்புறுத்துகின்றார்.

இனி, விநாயகப் பெருமானின் அருட்செயல்களையும் திருவிளையாடல்களையும் கூட் டும் பல புராணக் கதைகளை ஆசிரியர் ஆங்காங்கே குறிப்பிடுகின்றார். இவற்றுட் சில வருமாறு.

(1) அகத்திய முனிவர் விநாயகரைப் பாடிப் பரசிப் பலவரம் பெற்றது (78),

(2) ஆதிசேடன் விநாயகரை உபாசித்து சசன் முடியில் அமர்ந்தது (80),

(3) இந்திரன் வேண்டுகோட்படி விநாயகர் அகத்திய முனிவரின் கமண்டல நீரைக் காகவுருவிற் சென்று கவிழ்த்துக் காவிரி நதியாகப் பாயவிட்டது (40),

(4) இராவணன் விநாயகரைப் போற்றித் தொழுது தீவினை நீர்த்தது (75),

(5) உமை விநாயக சதுர்த்தி விரதமனுட்டித்துச் சங்கரனைத் திருமணஞ் செய்தது (81)

(6) உமையின் சாபத்தாற் பாம்புருவெய்திய திருமால் விநாயகரைப் பூசித்து வரம் பெற்றது (39),

(7) கங்கையில் புதல்வனாக விநாயகர் தோன்றியது (32),

(8) கயமுகாசுரனைத் தேவர் பொருட்டு விநாயகர் கொன்றது (34),

(9) சித்தூரனுடைய வரத்தையும் வலியையும் விநாயகர் கொடுத்தது (76),

(10) சிவன் திரிபுரங்களை எரிப்பதற்கு விநாயகரைத் நியாவித்தது (82),

(11) சிவனை வலம்வந்து விநாயகர் மாங்கனி பெற்றது (10),

(12) திருச் செங்காட்டங் குடியில் விநாயகர் சிவலிங்கம் நிறுவி வழிபட்டது (7),

(13 முருகன் வள்ளியை மணப்பதற்கு உதவி வேண்ட, விநாயகர் யானை வடிவுடன் வள்ளியின் நினைப்புனத்துக்குச் சென்றது (34),

(14) பரசுராமன் விநாயகரைப்பூசித்து வலிமையும் சிரஞ்சீவித்தன்மையும் பெற்றது (77)

(15) மன்மதன் விநாயகரை வழிபட்டு அழகும் அதிகாரமும் பெற்றது (79),

(16) மும் மூர்த்திகளும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில் களைச் செய்ய விநாயகர் வரமளித்தது (91),

(17) விநாயகர் பிரமன் கல்வியராகிய சித்தி, புத்தி என்பவரைத் திருமணஞ் செய் தது (74),

இன்னும் விநாயகப் பெருமானே வழிபட்டு வரம் பெற்றவர்களுள் அகத்தியர், இந்திரன், உருக்குமாங்கதன், கர்த்தமன், காசிபன், கிப்பிரப்பிரசாதன், குகன், சண்முகன் சந்திரன், சந்திராங்கதன், தக்கன், திரிபுரன், நளன், மாயன், வல்லாளன், வீமன், முதலியோர் கூறப்படுகின்றனர்.

இனி விநாயகப் பெருமானின் திருநாமங்களாகப் பின்வருவன கூறப்பட்டுள்ளன.

அஷ்டமுகந்தவன், ஆறுமுகன் முன்னவன், இலம்போதரன், உருண்டி விநாயகன், உபய மயூரன், ஏரம்பன், ஐங்கரன், ஒரு கோட்டன், ஒற்றைத் தந்தன், ஓம் பொருள் கங்கை புதல்வன், சுசானல் நயன், கணபதி, கணேசன், கரிமுகன், கற்பக விநாயகன், கைக்களிறு, சித்தாமணி விநாயகன், சிவசுதன், தந்தாயுதன், துதிக்கரன், தூமத்துவசன், படநாக பூடணன், பாசாங்குசதரன், பாலசந்திரன், மகோதரன், மகோற்கடன், மத்தகயமுகன், மூடிகவாகனன், வக்கிரதுண்டன், வலவைகதேசன், வலவைமணாளன், வல்லபைபாகன், விக்கினகரன், விக்கினராசன், விக்கின விநாயகன் வேலவன் முன்னோன்.

இவை தவிர யானையைக் குறிக்கும் கயம், கரி, களிறு, குஞ்சரம், கைம்மலை, சிந்துரம், தந்தி, மதாவளம், மாதங்கம், வாரணம் என்னும் பெயர்களும் இப் பனுவலில் விநாயகரைக் குறிக்க வளங்கப்பட்டுள்ளன.

நூலாசிரியர், ஓமை விநாயகரின் சிரைப் பசுங்கிளிகள் வாக்கியமாகக் கூறுவதையும், வனங்களெங்கும் கடக்குரல் செய்து குயில்கள் பாடுவதையும் காதாரக் கேட்டும், மயிற் குழாங்கள் நடமாடுவதைக் கண்ணாரக் கண்டும் அப்பெருமான்பால் நிறைந்த அன்பு கொண்டு தாம் பிறப்படைந்தமையை (67) உள்ளம் உருகிப் பலபடப் பாடியுள்ளார், தாம் பெற்ற இன்பத்தை ஏனையோரும் பெறவேண்டுமென விழைந்து, அவர்களைத் தூண்டுகின்றார்.

அப்பெருமானைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிகளில் நின்று வழிபடுவோர் முறையே சாலோகம், சாமீபம், சாரூபம் சாயுச்சியம் ஆகிய முத்திகளைப் பெறுவர் என்பதை 23 முதல் 26 வரையுள்ள செய்யுள்களில் எடுத்துக் கூறுகின்றார். மேலும், சித்திரை முதற் பங்குனி இறுதியாகவுள்ள பன்னிரு மாதங்களிலும் ஓமை நாதனுக்கு இன்ன இன்ன உணவுகளை நிவேதித்து வழிபடுவோர் இன்ன இன்ன பதங்களைப் பெறுவர் என்பதனை 44 முதல் 55 வரையுள்ள செய்யுள்களிலே அருமை பெற எடுத்துக் கூறுகின்றார். இன்னும், காசியில் இறக்கினும், திருவாரூரிற் பிறக்கினும் தில்லையம்பலத்தைத் தரிசிக்கினும் முத்தி கிட்டுமென முன்னோர் கூறியிருப்பினும் ஓமைப் பதி முருகக்கண் சித்தியாதவர்க்கு அப்பேறு கிடையாது என்று இந்நூலாசிரியர் சாதுரியமாகக் கூறுகின்றார் (75)

வடமொழி இலக்கியச் சுவைஞர் கவிகளில் நடையையும் பொருளுணர்த்தும் பாங்கையும் கருத்திற் கொண்டு அவற்றைத் திராட்சாபாகம், கதலீபாகம், நாளிகேரபாகம் என மூன்றாக வகைப் படுத்திக் கூறுவர். இவற்றுள்ளே திராட்சைப்பழம் போல முயற்சி அதிகமின்றி அநுபவிப்பதற்கு எளிதான இனிய செய்யுள் நடை திராட்சாபாகம் எனப் படும்; வாழைப் பழத்தைத் தோலுரித்து வாயிலிட்டுச் சுவைப்பதுபோல ஓரளவு முயற்சியுடன் சொற்களைப் பிரித்துப் பொருளுணர்ந்து சுவைக்கத்தக்கதாயுள்ள இலகுவான செய்யுள்நடை கதலீபாகம் எனப்படும்; நாளிகேரம் என்பது தேங்காய். தேங்காயின் மட்டை முதலியவற்றை உரித்து நீக்கி, உள்ளேயிருக்கும் வலிய ஓட்டை உடைத்து, அதனுள்ளிருக்கும் பருப்பைக் கடித்து மென்றுலன்றி அதன் இனிப்பை அறிய இயலாதது போல, மிகவருந்திச் சொற்களைச் சந்திபிரித்துக் கொண்டு கூட்டிப் பொருளை அறிய வேண்டியிருக்கும் கடின செய்யுள் நடை நாளிகேர பாகம் எனப்படும். இப்பிரபந்தத்தில் வரும் பல செய்யுள்கள் கதலீ பாகமாகவும், சில செய்யுள்கள் நாளிகேர பாகமாகவும், இன்னுஞ் சில செய்யுள்கள் திராட்சா பாகமாகவும் உள்ளன. திராட்சாபாகமாகச் செய்யுள் செய்வது தம்புலமைக்கு இழுக்காகுமென எண்ணுவதால், தமிழ்ப் புலவர் பலர் பெரும்பாலும் நாளிகேரபாகமாகவும், கதலீ பாகமாகவும் கவிபாடுவதையே விரும்புவர். அக் கொள்கை பற்றிப் போலும், இந் நூற்குச் சிறப்புப்பாயிரஞ் செய்த சிவசம்புப்புலவர்.

"பாக வகையினுட் பயினளி கேர
பாகமுங் கதலி பாகமு மெனவும்
இனியியற் கிதுவே யிலக்கிய மெனவுநூல்
நனிபுணர்ந் தோர் கொள நவின்ற வந்தாதி"

என்று பாடியுள்ளார்.

நன்றியுரை

தாம் கண்ணுங் கருத்துமாகப் பேணிவந்த ஒமை யந்தாதி முதற்பதிப்பின் தட்டச்சுப் பிரதியை யாம் படியெடுப்பதற்கு எமக்குத் தந்துதவியதற்காக கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்களுக்கும்.

தட்டச்சுப் பிரதியைச் செவ்வை பார்த்து வேண்டிய திருத்தஞ் செய்ததோடு, நூல்முழுவதற்கும் அரும்பதவுரை விளக்கமும் இப்பதிப்புக்கு முன்னுரையொன்றும் எழுதியும் உதவியதற்காக திரு. செ. வேலாயுதபிள்ளை அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பதிப்பாளர்

உ

கணபதி துணை

ஓமையந்தாதி

காப்பு

சீர்கொண்ட வோமை நகருறை வீரகத்திப் பிள்ளைமேற்
பார்கொண்ட செந்தமி ழந்தாதி பாடப் பரிவுடனே
ஏர்கொண்ட வின்சொற் பொருட்சுவை நல்குவ வீசனருள்
கார்கொண்ட கோட்டுக் கயிலைக் கணேசன் கழலிணையே.

நூல்

அருளா யணுகினர்க் காரொளி யாயணு காதவர்க்கு
மருளா யெழிலுறு மோமையில் வாழு மதகரியே
தெருளா யதுசற்று மில்லா தயருஞ் சிறியனுண்மைப்
பொருளாய நின்னிரு பாதாம் புயங்களைப் போற்றிடவே. 1.

போற்று நினைவுடை யோர்செல்வங் கல்வி பொருந்துபுகழ்
தேற்றுமெய்ஞ் ஞான நிரம்பி யருட்பயன் சேர்ந்திடுவார்
கூற்று வரினுமஞ் சாநெஞ்ச ராகிக் குலாவிடுவார்
சாற்றுநல் லோமையிற் றங்கித்தஞ் சிந்தை தரித்துனையே. 2.

உனையே கடவுளென் றோர்ந்துகொண் டேனினி யோமையில்வாழ்
அனையே நிகர்தரு மைங்கர னேயெனை யாண்டுகொள்வாய்
தினையே யளவு மளியின்றித் தீங்கினைச் செய்துதிரிந்
தனையே யெனத்தள்ளிற் றஞ்சம் பிறிதில்லை சத்தியமே 3.

சத்திய மான பொருளாகி யோமையிற் றங்குமுனைத்
துத்தியஞ் செய்பவர் கான்வழிச் செல்லிற் றுயரஞ் செயா
மெத்திய பூத மலகை நரியொடு வெய்யபக
டத்தி யடுபுலி யேனங் கரடி யரவங்களே. 4.

அரவம் புலியொ டுறவாட வேணி யணிந்தவன்சீர்
பரவம் பலத்துநின் றாடும் பரமன் பயந்ததுதிக்
கரவம்பு கொண்ட குணத்தேனை முன்னின்று காத்தருளாய்
சிரவங் கறுவி யமர்புரி யோமைச் செழுஞ்சுடரே. 5.

சுடர்சுடர் மூன்றுமுக் கண்ணு வுடையவன் றொன்மைந்தனே
தொடர்தொடர் நுண்ணிடை வல்லை பாகவெஞ் சூரனேமுன்
அடரடர் வேலவன் முன்னவ னேயெனை யஞ்சலென்றே
படர்பட ராதருள் செய்வாய்தல் லோமையிற் பண்ணவனே. 6.

பண்ணவர் வீண்ணவ ரெல்லாம் பணிந்து பரவிடுமக்
கண்ணவன் றன்னைச்செங் காட்டி னிறுவிக் கடல்புடை சூழ்
மண்ணவர் தாமும் வழிபட்டு நித்திய வாழ்வுதனை
அண்ண வருள்புரிந் தாயோமை மேவிய வற்புதனே. 7.

அற்புத மான வடிவுடை யாயெனை யாதரித்துக்
கற்புத விக்கவி பாடுந் நிறநல்கிக் கற்றுணர்ந்த
சொற்புதர் கூட்டத்தி லுற்றிடச் செய்தனை சோதியின்னும்
பொற்புத வற்றீடு மோமையின் மேவிய புண்ணியனே. 8.

புண்ணிய பாலப் பருப்புண ராத புலைய னேநீ
நண்ணிய வோமைப் பதிக்கரு கேவைத்து நன்மையெல்லாம்
பண்ணிய தற்புத மாமது வன்றியும் பாரினில்யான்
எண்ணிய வெண்ணமு முற்றுவித் தாயினி யென்குறையே. 9.

குறையும் பிறையணி யீசனைச் சூழ்ந்துகொக் குக்கனியை
நிறையும் பரிவுட னேற்று வயங்கொளு நின்மலனே
உறையுங் குணக்குன்ற மேயோமை மேவிய வுத்தமனே
இறையும் மிலியுனை யான்மற வாமலின் றேத்துவனே. 10.

ஏத்து மடியரெக் குற்றஞ் செயினு மிலிதெனவே
காத்துப் பயனளிப் பாய்நின் னருட்டிறங் கண்டவர்யார்
கூத்துப் புரிசூழ கற்குமுற் றேங்குறங் குமரனென்றே
ஓத்தும் புகலு முனையோமை வாழ்வுகந் தூற்றவனே. 11.

உற்றவர்க் குற்ற வருவா யினையிவ் வுலகபந்தம்
அற்றவர்க் கற்ற வொளியாகி நின்றனை யாரணங்கள்
கற்றவர் தாமு மறியாருன் மாயையின் காரணத்தை
மற்றவ ராருணர் வாரோமை மேவிய வாரணமே. 12.

வாரணன் மாதுலன் மன்மதன் மைத்துனன் மாரனைஞ்செய்
காரணன் றந்தை முருகனுன் றம்பி களங்கமிலாப்
பூரண ஞான நீயிம் முறைகொள் புதுமைதன்னை
ஆரணந் தாமு முணர்வரி தோமையி லங்கரனே. 13.

கரவாமற் கள்வர்க ளோடிணங் காமற் கனவிலும்பொய்
விரவாமற் பற்பல் மத்தத்தோர் தொழுதிடும்வேற் றுத்தெய்வம்
பரவாம லோமைப் பதிமற வாமற் பலரிடஞ்சென்
றிரவாம லீவரத் தந்தரு ளாயெங்க ளேரம்பனே. 14.

ஏரேறு மாதமும் மாரி பொழியவு மேருழவர்
சீரேறு நெற்சுவை மீட்டவு மீட்டிய செந்நெற்கொண்டு
நேரேறு மைம்புலத் தாரேம்பல் செய்யவு நீயருளாய்
வாரேறு வாவி புடைசூழு மோமையின் மாதங்கமே. 15.

மாதங்க வாமத்தன் மைந்தா வலவை மணாளவென்றே
பாதங்க ளேத்துதித் தோமையின் மேவிய பண்ணவற்கு
நாதங் கலிக்கு மணியொன்று செய்வித்து நல்கிடுவோர்
ஓதங்க மாறு மறைநாலு மோதி யுணருவரே. 16.

உணரு முருக்கொண் டுயரோமை வாழ்வுறு மோம்பொருளே
இணரு மறுகு மெடுத்தருச் சிக்கு மிதமுடையோர்
வணருங் குழலர மாதர்கள் கூடி மகிழ்ந்துமணம்
புணரும் படிகற்ப தாருவி னீழல் பொருந்துவரே. 17.

பொருந்தும் பலவகை யோவிக டோறும் புகுந்துமனம்
வருந்தும் படியினி வையாம லுன்றன் மலரடிக்கீழ்
அருந்துஞ் சுகமுற வைத்தெனி யேனையு மாட்கொள்ளுவாய்
திருந்துஞ் சிறப்புய ரோமையில் வைகிய சிற்பரனே. 18.

பரமுறு மோமெனு மக்கர ரூபப் பழம்பொருளே
திரமுறும் வெள்ளி வரைமுத லாகிய தெய்வத்தலம்
தரமுறு மன்றெனச் சாதித் தெவருநீ தரித்திறைஞ்ச
உரமுறு மோமையி லுற்றுய பூப முகந்தவனே. 19.

கந்தித்துச் சந்தனக் காச்சூழ மோர்மையிற் கண்டுதினைச்
சந்தித்து நின்றெரு தேங்காய் தகர்த்துத் தனிப்படர்வோர்
சிந்திக்துச் செல்லுங் கருமங்கண் முற்றிச் திருப்பிவந்து
வந்திக்து மண்ணவர் வாழ்த்திட வைகி மகிழுவரே. 20.

மகிழுவ ரோமைப் பதியடைந் தேர்ரின்ப வாழ்வுபெற்றுத்
திகழுவர் சீருஞ் சிறப்பு மடைவர்செய் தீவினையோர்
இகழுவ ருண்மை யிவரா ணவமுனை தன்னையெங்ஙன்
அகழுவ ரோவறி யேனத்த னேநின் னருட்டிறமே. 21.

திறத்தை யடைவ ருஜீவயோமை தன்னிற் றெரிசித்தவர்
அறத்தை யடைவ ரவரஜி லாண்டமு மாண்டிருப்பார்
நிறத்தை யடைவர்பி னின்ஞ ரருஜீவயு நேர்ந்தடைவர்
மறத்தை யடைபவ ரல்லர் பிறப்பையு மாற்றுவரே. 22.

மாற்றித் துகளிஜீ யாமயம் பூசி மணிவிளக்கம்
ஏற்றித்தொல் லோமைப் பதிவா ழிறைவர்க் கினியதொடை
ஆற்றிப் புஜீவித் தவன்ற னரும்புக ழார்வமுடன்
சாற்றித் திரிபவர் சாலோக் கியபதஞ் சாருவரே. 23.

சாரு மருஞுட ஞெமையின் மேவிய தற்பரஜீச்
சேரு மலரவி தீபாதி கள்கொண்டு சீருடனே
தேரு நியமம் வழுவாது பூசஜீ செய்திடுவோர்
ஆரும் புகழ்பெறு சாமீப் பியத்தை யடைகுவரே. 24.

அடையுங் கருஜீ யுடஞெமை மேவி யமர்ந்தவஜீப்
புடைபெயர் வின்றி யிதயத்து வைத்துப் புலனடக்கி
இடைதிகழ் யோகத் திருந்து பயிலு மியல்புடையோர்
தடையின்றி யேயுயர் சாரூப் பியத்தினிற் றங்குவரே. 25.

தங்க வலியறச் சாயுச் சியபதஞ் சார்ந்திடுவார்
துங்க மலபரி பாக மொருந்தித்தந் தொல்லறிவு
சிங்க வலைய லோமைப் பராபரன் சிற்சொரூபம்
பங்க மறவொளி ரச்சிவ ஞானம் பதிந்தவரே. 26.

பதித ரெனினு முயரோமைப் பண்ணவன் பத்தரென
விதிதரு வேட மெடுத்தன ரேலடி வீழ்ந்திறைஞ்சித்
துதிதரு முண்டி தனியவர்க் கூட்டித் தொழும்புசெய்வோர்
மதிதரு யானெனை தென்னுஞ் செருக்கினை மாற்றுவரே 27.

உவாழி சூழல கோருண்ம ஞெமை யுரூர்களெனில்
அவரா ருயிருக் குறுதிப் பயனடை யாதவரே
எவரா யினுநின் பதியடைந் தோர்பய னெய்தியிடுந்
தவரா னவ ரென்று நன்றனு மாலிக்கத் தக்கவரே. 28.

தச்கார் தகாரெனப தன்னுய ரோமை தனிற்பரிவாய்ப்
புக்கார் புகாதவ ராலறிந் தேனினிப் போற்றிசெய்து
மிக்கார் நினக்கன்பு வேண்டுவன் வேரெனறும் வேண்டுகினேன்
மைக்கா ளக மலிமகள் பெற்ற மதாவளமே 29.

வளங்குல வும்புவியோர்க் கொன்றுசொல் வன்மனத் துக்கொள்வீர்
குளங்குல வோமைப் பதிபுகு வீரெனிற் கோதகற்றி
உளங்குல வுற்றிடச் செய்துயர் வாழ்வு முமக்குதவும்
களங்குல வுங்கண்டத் தண்ணலுண் டாக்கிய கற்பகமே. 30.

கற்பணி யாலய ரோமை வளநகர்க் கைக்களிறு
பொற்பணி பூணு மொருகோட் டிலேடு பொலிந்ததுமுன்
எற்பணி வேழத் தரளத்தில் வந்த திறப்பிலது
சொற்பணி கேட்பது நால்வாயி லேடு துலங்குவதே. 31.

துலங்கிய வோமைக் கயங்கங்கை யாற்றினிற் றோன்றிமுன்னுள்
இலங்கு ரிசத வெற்பினி னின்ற திறைமையுடன்
நிலங்கிளர் வுற்றசெங் காட்டிற் றிரிந்தது நீங்கியபொன்
விலங்குறு நாலரைக் காலது வெய்ய வீணையில்லதே. 32.

இல்லது முள்ளது மாகி விளங்குவ தென்றுமுள்ள
தல்ல திடையினிற் றோற்றமில் லாத தரிபடைத்த
நல்ல துடைவை நறைதுற்று மோமையி னண்ணுங்கரி
யில்ல திரத வடையாதி யுண்டி கடின்றதுவே. 33.

நின்றது பற்பல வேழத்தைத் தோற்றிடிற் றேவருக்காய்க்
கொன்றது மூண்டொரு வேழத்தைக் கூறுங் குறியிலது
நின்ற துயிர்தொறு நீக்கமில் லாம லிறைந்துமுன்னம்
சென்றது வல்லி வரைப்புனத் தோமையிற் சிந்துரமே. 34.

சிந்துரத் தீட்டு நுதலணி யோடையுஞ் செஞ்சடைமேல்
முந்துர விட்ட பிறையுமுக் கண்ணு முகரமும்
செந்துர ரறுமுகன் முன்னவ னுமுன் றிருவடியும்
வந்து ரவர்தொழு மோமைப் பதியு மறப்பரிதே. 35.

மறந்து நிலேந்நில ராகிய வானவர் வந்திறஞ்சச்
சிறந்து விளங்கிய வோமா புரியினிற் சிந்த லேயைத்
துறந்து பணிக டொடங்காது காலந் தொலைத்திடுவோர்
பிறந்து பிறந்தவ ராவர் சுதியொன்று மெய்திலரே. 36.

எய்தும் வளஞ்செறி யோமைத் தலத்தவ ரென்றுமுவக்
குய்யும் பணிகள் புரிந்தும் புகழ்ந்து முவப்புடனே
துய்ய மலர்கொய்து நின்னடிசாத் தித்தொழு துங்கண்ணீர்
பெய்துந் திரிவரல் லான்மதி யார்கள் பிறதெய்வமே. 37.

புரத்துய ரோமைப் பதியுறு சுங்கை புதல்வனுக்குத்
திரத்துயர் கும்ப மதியி லருச்சனை செய்வித்தவர்
வரத்துயர் பண்ணவர் யாரும் வணங்க மகிழ்வுடன்போய்த்
தரத்துயர் மாயவன் வைகுண்ட லோகத்திற் றங்குரே. 54.

தங்குதெங் கம்பொழில் சூழ்ந்துய ரோம்மைத் தலந்தனிலே
பொங்கு கயமுகன் கொண்டு விளங்கிய புண்ணியற்குப்
பங்குனி மாதம் பரிவொடு பூசனை பண்ணுவிப்போர்
மங்குத லின்றி யொளிர்சிவ லோகத்தில் வாழுவரே. 55.

வாழை நெருங்கும் வயலரு கெங்கணும் வான்கரும்பு
தாழை நெருங்குங் கனிகள் சிதைக்குத் தரளஞ்சிந்தும்
மாழை நெருங்கு மதிலோமை வாவலன் வாதமெழுந்
நீழை நெருங்குமக் காலத்தி லென்ற னெதிர்நிற்பனே. 56.

எதிர்நின்று மஞ்ஞைக ளாடிடுங் தாரண மென்னனவே
அதிர்கின்ற மேகங்க ளாராய்ந் திடாம லறல்பொழியும்
முதிர்கின்ற சோலை புடைசூழ மோமையின் முன்வவனைக்
கதிர்கின்ற நெஞ்சி னினைப்பவர்க் கில்லை கலகங்களே. 57.

இல்லை யெனுமொழி யில்லாச் களம நிவிதுறையும்
தொல்லை வளம்பதி யாமோமை மேவிய துயனிடம்
செல்லும் வணங்குந் தொழுந்திருத் தொண்டுகள் செய்யுமங்ஙன்
நில்லு மிருமுல கிருமக் கிவ்ப நிலைத்திடுமே. 58.

நிலையு மறிவோடு கல்வியுஞ் செல்வமு நிழ்புகழும்
புலையுங் கொலையுங் களவுந் தவிரும் புதுமதியின்
கலையு மலையுந் தரித்தவ னின்ற கடாங்கவிழ்கைம்
மலையுறு மோமைப் பதிவைகி வாழ்ந்திடு மாந்தருக்கே. 59.

தருக்குவ ரீச னடியாரைக் கண்டவர் தாளிலன்பு
பெருக்குவர் பேணி யமுதுட் டுவர்முற் பிறவிகினை
அருக்குவ ரோதுந் தமிழ்வேதம் பாடி யணையவர்நெஞ்சும்
உருக்குவர் முன்னவ ஞைமைப் பதியுறை யுத்தமரே. 60.

உத்தம மாகு மவர்செய்யுந் தானங்க ளுள்ளவெலாம்
சத்திய வாசகங் கூறுவ ரன்றிய சந்தியத்தைச்
சித்தந் தவின்மறந் துந்நினை யார்கள் சிவகுதனும்
மத்த கயமுகன் வைரிய வோமையின் மானவரே. 61.

மாட மூடைய ரேயன்றி யாவர்க்கும் வஞ்சஞ்செயும்
சுவ முறுசுண முள்ளவ ரல்லாமை யந்தந்த
நானந் தடவு குழலுமை யீன்றரு ணற்புதல்வன்
வானம் பரவிட வைகிய வோமையின் மைந்தர்களே. 62.

மைந்த பரனுமை தந்த மகோதர மன்னுமொற்றைத்
தந்ததந் தாயுத மூடிக வாகவன் சாருமன்பர்
பந்த மகற்றும் பராபர வோமைப் பதியவென்றே
வந்தனை செய்தனை வோருநின் னுமம் வழுத்துவரே 63.

வழுத்த வணங்கத் தொழநாச் சிரங்கை வழங்கினைத்
தழுத்தித் தரிசிக்க கண்க ளுதவினை யாபிரங்கள்
பழுத்துநி ரோமைப் பதியினின் ரெண்டுபரி விற்செய்து
விழுத்தக வெய்தவுஞ் செய்தனை விக்கின விநாயகனே. 64.

செய்யுள் 64. இக் கட்டளைக் கலித்துறையின் முன்றும்படி சற்று இலக்கணம் வழுவியது போலக் காணப்படுகிறது. முலத்தில் இருப்பது அது வாயின. இதனை பழுத்துநி ரோமைப் பதியினின் ரெண்டு பரிவிற் செய்து என்றே சீர்பிரித்துக் காட்டல் வேண்டும்; அவ்வாறு சீர் பிரிக்குங் கால் ஈற்றுச்சீரான பரிவிற் செய்து என்பதனை அலகிடும் போது பரி விற் செ(ய்)து என ஒற்றுநீக்கி அலகிட்டு புளி மாங்கனிச் சீராகக் கொள்ளல் வேண்டும்; கட்டளைக் கலித்துறையில் இவ்வாறு சிறுபான்மை புளிமாங்கனிச்சீர் வருதலும் உண்டு.

இனி முன்றுமடியையும் பின்வருமாறு திருத்தினால் வழு இல்லையாகும் பழுத்துநி ரோமைப் பதியினின் ரெண்டு பரிவினற்றி பரி விலுற் றி என்பது "கருவிளங்காய்"ச் சீராகி, கட்டளைக் கலித்துறையின் இலக்கணத்துக்கு அமைந்ததாகும்.

"பழுத்துநி ரோமைப் பதியினின் ரெண்டுபரி விற் செய்து" என்று சீர்பிரித்தால் நான்காம் சீரும் ஐந்தாம் சீரும் கட்டளைக் கலித்துறை இலக்கணத்துக்குப் பொருந்தாமற் போய்விடும.

விக்கின ராச வுடுண்டி விநாயக மேதகைய
வக்கிர துண்ட கணேச கணபதி வானுலகிற்
சக்கர னுக்கருள் சிந்தா மணியெனச் சாற்றியெட்டுத்
திக்கினுள் ளோர்புகழ் வாரோமை மேவிய செல்வனையே. 65.

மேவிய துமத் வசபால சந்திர மேதினியிற்
முவில் வலவை கணேச மகோதகட தண்ணளிசேர்
ஓவி னுபய மயூரக சானன னூபவென்றே
தேவிய லோமைப் பதியனைத் தேவருஞ் சிந்திப்பரே. 66.

சிந்தனை செய்வர் திருமாலும் வேதனுந் தேடியென்றும்
வந்தனை செய்வர் சுராசுரர் தத்த மனத்தினுள்ளே
பந்தனை செய்வர் பரனு முமையுமிப் பார்தனிலே
நிந்தனை நீங்கிய வோமை விநாயக நின்றனையே. 67.

நாயக னேபர மானந்த ரூப நரவடியே
துய கரிமுக தும்புரு நாரதர் சொல்லினிய
காயகர் போற்றிடு மோமைப் பதியுறை காரணநந்
தாயனை யாயுனை யேயடைந் தேற்கென்ன தாழ்வினியே. 68.

தாழாத் தலையுந் தயங்கிய வோமைத் தலத்தவனைச்
குழாப் பதமுந் தொழாதகர முந்துதித் துக்கண்டு
வாழாத நாவும் விழியு முடையரை வையகத்தில்
பாழாக வேன்படைத் தான்மலர் மீதுறை பண்ணவனே. 69.

பண்ணூர் மொழிக்குற மாதெனைச் சேரப் பரிவுடனே
அண்ணா வுதவென் றறுமுக னேத்திட வங்கவன்முன்
நண்ணா வருள்செய்து மீண்டிடு மோமையி னாயகனைக்
கண்ணாரக் கண்டவர் துன்பக் கடற்கரை கண்டவரே. 70.

கண்டு நிகரு மொழிய யிராணி கணவனுக்கார்
விண்டுவும் பூவி லுறையும் விரிஞ்சனும் விண்ணவரும்
மண்டு தவஞ்செய் முனிவரு மோமையில் வாழுமுன்றன்
தொண்டு புரிவரென் றானின்றன் மேன்மை சொலவரிதே 71.

அரியானு மன்ப ரகத்திருப் பானு மடைந்தவருக்
குரியானும் யாவு முடையானும் வஞ்ச ருளத்திலுற்றுத்
தரியானுந் தன்னிக ரில்லானு மிந்தச் சகத்தினுக்கோர்
கரியானு மோமைப் புரியானென் றால்வினைக் கட்டறுமே. 72.

கட்டா ரளக மடந்தையர் தந்திடுங் காதல்வ லைப்
பட்டா ரிருளை யடையுமப் பாதகர் பாலுறவைக்
கிட்டாம னின்னன்பர் கூட்டத்தை யான்சென்று கிட்டும்வண்ணம்
தட்டாம னீயரு ளாயோமை மேவுந் தயாபரனே. 73.

பரனே பலமுனி வோர்தொழு தேத்தப் பயனளித்த
வரனே பிரமன் பெறுகண் னியரைமணஞ் செய்சர்வே
சுரனே பலநதிகு ழோமையூ ரிற்றுலங் கும்விக்ன
கரனே யுனையடைந் தேனெனைக் காத்தல் கடனினக்கே. 74.

கடநாகம் போர்புரி யோமையில் வைகுங் கணேசதுத்திப்
படநாக பூடண பாசாங் குசதர பத்தருள்ளம்
திடனுக வாழு மிலம்போ தரவென் றிராவணன்முன்
திடனுகப் போற்றித் தொழுதுதன் றீவினை தீர்த்தனனே. 75

திரத் துவமுறு மெய்கண்ட தேசிகர் தேசிகனே
வீரத் துவசிந் துரன் வரமும் விறலும் நிதி
காரத் துவமுங் கெடுத்த கசானன காலன்வரும்
நேரத்து வந்தருள் வாயோமை மேவு நிருமலனே. 76.

மலமலி யுங்குண முள்ளோ ருளத்தினில் வந்துபுகா
நலமலி யோமை நகர்தனில் வாழ்வுறு நம்ப னேமுன்
வலமலி யும்பரசி ராமன்பூ சித்துலக மையெய்தி
நிலமலி யும்புக ழோடின்றும் வாழ்வினி னீடினனே. 77.

நீடிப் பெருகு நதியுகள் வானோ நெடுங்கமுகைச்
சாடிப் பழமுதி ரச்செயு மோமைத் தயாநிதியைத்
தேடிப் பலர்புக ழுங்குறு மாமுனி சேவைசெய்து
பாடிப் பரவிப் பலவரம் பெற்றனன் பாரினிலே. 78.

பாரிற் பொலியும் பகங்கினி பூண்டு பரத்ததென்றற்
றேரிற் பொலியு மதனனு பாசித்துத் தென்னிலங்கை
ஊரிற் பொலியு முயரோமை வாழ்வுகந் துற்றவனுல்
ஏரிற் பொலியு முருவு மிறைமையு மெய்தினனே. 79.

தினகர மண்டலந் தன்னோ யளாவிச் சிறந்தொளிரும்
களக மதிலுய ரோமைப் பதியுறை கர்த்தனேமுன்
பனகவி ராசனு பாசித்து வேண்டும் பயனெய்தி
அனக வடிவுகொ ளீசன் முடியு லமர்ந்தனனே. 80.

அமையந் தெரிந்திமை யோரோமை மேவிய வங்கரனுர்
தமையருச் சிக்குஞ் சதுர்த்தி விரதத் தபோபலத்தால்
இமையந் தருமுமை கங்கை மருவுமு னெய்திச்சிவ
சமையந் தொழுஞ்சங் கரனோ மணந்தின்பஞ் சார்ந்தனனே. 81.

சாருங் கயிலே வரைதன்னில் மேவுஞ் சயம்புவிண்ணுேர்
ஆரு முயமுப் புரத்தை யழற்சிரை யாக்கியதும்
தேருங் கவிஞர் கவிபாடு மோமைச் செழும்பதியிற்
சேருங் கரிமுக முன்னவ னுர்மத் திரபலமே. 82.

பலமிகு சண்முகன் மாயவன் வலாரி பனிக்ககிரோன்
குலமிகு பண்ணவர் தக்கன் றிரிபுரன் கோதில்குசன்
நலமிகு கர்த்தமன் வீமன்வல் லாள னளனிவர்கள்
வலமிகு மோமையி னாதனைப் பூசித்து வாழ்ந்தனரே. 83.

தனமோங் கியகிப் பிரப்பிர சாதனித் தாரணியில்
மனமோங் கியசந் திராங்கதன் மாசறு மாதவத்தால்
இனமோங் தியருக்கு மாங்கதன் காசிப லின்னும் பலர்
வனமோங்கு மோமைப் பதியை யுபாசித்த மாண்பினரே. 84.

சித்தமும் வாக்குஞ் செயலுமென் றெண்ணுந் திரிகரண
சுத்தமில் லோருநின் னோமா புரிவலஞ் சூழ்ந்துகொண்டு
நித்தமு மங்குறை வாரெனி னியுநன் னேயமுடன்
புத்தமு தாகி யுறைவா யவருளப் போதினிலே. 85.

போதாருந் தண்டலை சூழ்தரு மோமைப் புரத்தில்வந்தே
ஆதார மாகிய நின்னருட் கோலமு மைங்கரமும்
காதார் விழிவல் லபையுறை பாகமுங் காணரிய
பாதார விந்தமுங் காணப்பெற் றேனென்றன் பாக்கியமே. 86.

பாக்கிய மேதுசெய் தேனுய ரோமைப் பதியினின்சீர்
வாக்கிய மாகப் பசுங்கிளி கூற வனங்களெங்கும்
கூக்குரல் செய்து குயில்பாட மஞ்ஞைக் குழாநடிக்கத்
தேக்கிய வன்பி னுடன்கேட்டுக் கண்டு சிறந்தனனே. 87

சிறந்தேனுன் னன்பர் திருக்கூட்டங் கண்டுசெய் தீமையெல்லாம்
துறந்தேனி னோமைப் பதியடை யாதவர் தொல்லுறவை
மறந்தே னெனது மனத்திரு ணீக்கி மறுபிறவி
பிறந்தே னினிப்பிற வார்பெறும் பேறும் பெறுகுவனே. 88.

பெற்றவர் பூசித்து வேண்டிய பேறுகள் பெற்றனரேல்
உற்றவர்க் குற்றவ ராகுநின் னோமை யுறுகவராய்க்
கற்றறி மூடாக ளாகிக் கலங்கிக் கருத்தழிந்த
சிற்றறி வாளர் செவிக்குறு மோவுன்றன் சீர்த்திகளே. 89.

சீரார் கமலத் திருவடி தன்னைத் தியானித்துனின்
பேரா யிரமு மெடுத்தெடுத் தோதிப் பெருமையுடன்
ஆரா வமுதினை யுண்டவர் போல வகமகிழ்ந்தேன்
ஏராரு மோமைப் பதியில் வாழு மிறையவனே. 90.

இறையுவ னுக்குந் திருமாது கேள்வற்கு மேத்திடுஞ்சீர்
மறையவ னுக்கு மழித்தளித் தாக்கும் வரங்கடமை
குறையற வேமுன் கொடுத்தரு ளோமைக் குணேசனின்மேல்
நிறைதரு பத்தியி லாதவ ரென்செய்வர் நீணிலத்தே. 91.

நிலமுழு தாண்டும் பெறுபயன் யாது பினீடியவான்
உலகினை யாண்டும் பெறுவதுண் டோவுன்ற னோமையெனும்
தலமுறு வோரிடு குற்றேவலைத் தந்தலை யிற்கொண்டு
நலமுட னேபுரிந் தாற்கதி யாவரு நண்ணுவரே. 92.

யாவர்க்கு மேலவ ராய்முத் தொழிலு மியற்றுமந்த
மூவர்க்கு மேன்மை யொடுதவஞ் செய்யு முனிவரர்கள்
ஏவர்க்கும் பாதலத் தோர்க்குந் திசையி லிருப்பவர்க்கும்
தேவர்க்குஞ் சேமவைப் பாயுன்ற னோமை சிறப்புடைத்தே. 93.

உடையவ ராயிவ் வுலக முழுது மொளிருமணிக்
குடையவ ராய்நா வாகனமுற் றுக்குலா விச்செல்லும்
நடையவ ராய்வைகி வாழினு மோமையி னாதவுனை
அடையல ராயி னவர்நற் கதியடை யாதவரே. 94.

கதிமல்கு காசியிற் சென்றிறந் தாலுங் கமலையெனும்
நிதிமல்கு தெய்வத் தலத்திற் பிறக்கினு நேசமுடன்
துதிமல்கு பொன்னம் பலந்தரி சிக்கினுந் தொல்லுலகோர்
நதிமல்கு மோமைப் பரனைமுன் னார்க்கு நலமில்லையே. 95.

நலந்தரு நன்மனை யாட்டினற் புத்திரர் நல்குநன்னீர்
நிலந்தரு நெல்வளந் தந்திடும் பல்புகழ் நீடத்தரும்
கலந்தரு கின்ற நவமணி தந்திடுங் கல்விதரும்
குலந்தரு மோமைப் பதியினிற் றங்கிய குஞ்சரமே. 96.

சாதம் விளங்கிய வோமா புத்தினிற் றங்குதந்தி
இரதந் தருகதி தந்திடு மின்ப மிசையைத்தரும்
விரதமுஞ் சீலமுந் தந்திடும் வேத விதியுந்தரும்
நிரதிச யானந்த மீயுஞ்சித் தாந்த நெறிதருமே. 97.

நெறியார் சமய நிலையில ராயிந் நிலவுலகில்
வெறியார் குணமுடை யார்சில ரோமையின் மேவுறவும்
அறியார்நின் னன்பர் பணித்திடு மேவலை யாற்றிடவும்
ருறியா ரிவருன்ற னாரரு ளெங்ஙனங் கூடுவரே. 98.

கூடிக் குலாவிச் செறிதரு தொண்டர் குழாங்களெல்லாம்
நாடிப்பணிந்து நனுகித் தொழுது நயந்துநின்சீர்
பாடிப் பரவிப் பணிபுரி யோமைப் பதியிலுனைத்
தேடி யடைந்த வெனக்குத வாயுன் றிருவடியே. 99.

திருவளர் மார்பனுஞ் செங்கம லத்தனுந் தேடியின்னும்
குருவளர் வுற்றவுன் னுதியந் தங்கள் குறித்தறியார்
கருவளர் கின்ற கருத்துடை யேனிங்கைக் கண்பதுண்டோ
அருவள ரோமைப் புரியுடை யாயெனை யாண்டருளே. 100.

ஒமையந்தாதி முற்றிற்று.

உ

கணபதி துணை

ஓமையந்தாதி

அரும்பதவுரை விளக்கம்

(காப்பு)

ஓமை – ஓமந்தை என்பதன் மரூஉ வழக்கு; வீரகத்திப்பிள்ளை – ஓமந்தையிற் கோயில் கொண்டிருக்கும் விநாயகரின் பெயர்; நல்குவ –தருவன; கணேசன் கழலிணை ஏர்கொண்ட இன்சொற் பொருட்சுவை நல்குவ என முடிக்க. ஏர் – அழகு; சுவை என்பதனைச் சொற்கும் பொருட்கும் தனித்தனியே கூட்டுக; ஈசன் அருள் கார்கொண்ட கோட்டுக் கயிலைக் கணேசன் – சிவபெருமானது திருவருளே மழைமேகமாகச் சூழ்ந்துள்ள சிகரத்தையுடைய கயிலை மலையிலுள்ள சிவகணங்களின் தலைவராகிய விநாயகருடைய; கார் – மேகம்; கோடு – சிகரம்; கழலிணை – இரண்டு திருவடிகளும்; இவி "ஈசனருள்..... கணேசன்" என்னுந் தொடருக்கு, ஈசன் அருளிய, கரிய (திருமேனி) கொண்ட, (ஒற்றை) மருப்புடைய, கயிலையில் உறையும் கணபதி என்றும் பொருள் கூறலாம்.

(நூல்)

செய்புள் 1. 'தெருளாயது சற்றும் இல்லாது அயரும் சிறியன் உண்மைப் பொருளாய நின் இரு பாதாம் புயங்களைப் போற்றிட அருளாய்' என்று கொண்டு கூட்டுக. மருளாய் – மயக்கமாகி; தெருள் – தெளிவு, ஆயது என்பது சொல்லுருபு; அயரும் – சோர்வுறும்; பாதாம்புயங்கள் – திருவடித் தாமரைகள்; அம்புயம் – தாமரை.

செய்புள் 2. சாற்றும் நல் ஓமையில் தங்கி, உ(ள்)ளச் சிந்தை தனித்துப் போற்றும் நினைவுடையோர், செல்வம், கல்வி, புகழ், மெய்ஞ்ஞானம் நிரம்பி அருட்பயன் சேர்ந்திடுவார்; கூற்று வரினும் அஞ்சா நெஞ்சராகிக் குலாவிடுவார் என்று கொண்டு கூட்டுக சாற்றும் – உயர்ந்தோர் எடுத்துச் சொல்லும்; சிந்தை தனித்து – மனத்தில் நிறுத்தி; பொருந்து புகழ் – என்றும் நீங்குதலில்லாத புகழ்; தேற்று மெய்ஞ்ஞானம் – வீடுபேற்று நெறியைத் தெளிவிக்கும் மெய்யுணர்வு; அருட்பயன் – திருவருளின் பயனிய முத்தியின்பம். (முடிவில்) அருட்பயன் சேர்ந்திடுவார்; (உயிரோடு வாழுங்காலத்தில்) இயமன் வந்தாலும் அஞ்சாத மனவுரமுடையவராய் மகிழ்ந்திருப்பார் என்று பொருள் கொள்க.

செய்புள் 3. ஓர்த்து கொண்டேன் – துணிந்து கொண்டேன்; அனையே நிகர்த்தும் – அன்னையை ஒத்த; "நினையே அளவும் அளி இன்றித் தங்கினைச் செய்து திரிந்தனையே" எனத் தள்ளில் தஞ்சம் பிறிது இல்லை, சத்தியம் – "நீ அற்ப அளவாயினும் அருளில்லாமல், பொல்லாங்கு செய்து திரிந்தாயே" என்று தேவரீர் என்னைத் தள்ளி விட்டால் எனக்கு வேறு பற்றுக்கோடு இல்லை; இது சத்தியம். அளி – அருள், இரக்கம்; தஞ்சம் – பற்றுக்கோடு, அடைக்கலம்.

செய்யுள் 4. உனைத் துத்தியம் செய்பவர் கான்வழிச் செல்லில். மெத்திய பூதம், அலகை, நரி, வெய்ய பகடு, அத்தி, அடுபுலி, ஏனம், கரடி, அரவங்கள் துயரஞ் செயா எனக் கொண்டு கூட்டுக. துத்தியம் – துதி, வணக்கம்; கான்வழி காட்டுவழி; மெத்திய பூதம் – கொடுமை மிகுந்த பூதம்; அலகை – பேய்; பகடு – எருமை; அத்தி – யானை; ஏனம் – பன்றி.

செய்யுள் 5. சிரவம் கறுவி அமர்புரி ஓமைச் செழும் சுடரே – கவுதாரிப் புட்கள் சினங்கொண்டு ஒன்றுடனொன்று சண்டையிடுகின்ற ஓமந்தைப் பதியில் எழுந்தருளியிருக்கும் செழுமையான ஒளியுருவான விநாயகப் பெருமானே; சிரவம் – கவுதாரி; கறுவி – சினந்து. அரவு அம்புலியோடு உறவாட வேணி அணிந்தவன் – (தம்முட் பகை கொண்ட) பாம்பும் பிறைச்சந்திரனும் நட்புக் கொள்ளுமாறு தமது சடையிலே அவற்றை அணிந்திருக்கும் சிவபிரான்; சீர் பரவு அம்பலத்து நின்று ஆடும் பரமன் – புகழ் பரந்த நல்லியம்பலத்திலே நின்று ஆடும் கூத்தப் பிரான்; அணிந்தவனுகிய ஆடும் பரமன் பயந்த என்க. பயந்த – பெற்று அருளிய; துதிக்கர – தும்பிக்கையையுடையவரே (விளி); வம்பு கொண்ட குணத்தேனே – தியகுணமுடையேனுகிய என்னை: வம்பு என்பது புதுமை, தீமை என்று பொருள் படும்.

செய்யுள் 6. சுடர் சுடர் – சுடரும் சுடர்; சுடர் மூன்று – சந்திரன், சூரியன், அக்கினி; தொல் மைந்தன் – மூத்த புதல்வன்; தொடர் தொடர் நுண்ணிடை – மேகலை என்னும் மணிக்கோவை அணிந்த சிறிய இடையையுடைய; வல்லபை பாக – வல்லபை என்னும் சத்தியை இடப்பாகத்தில் உடையவரே; அடர் அடர் வேலவன் – போரிலே தாக்கிய வேற்படையையுடைய முருகன்; அடர் – போர்; எ(ன்)னை அஞ்சல் என்று – என்னை அஞ்சாதே என்று அபயம் அளித்து; படர் படராது – துன்பம் வருத்தாமல்; பண்ணவன் – கடவுள்.

செய்யுள் 7. பண்ணவர் – பிரமன், திருமால் போன்ற கடவுளர்; விண்ணவர் – இந்திரன் முதலிய தேவர்; அண்ண – அடைய; செங்காடு – திருச்செங்காட்டங்குடி என்னும் சைவத் திருப்பதி; கயமுகன் என்ற அசுரனைக் கொன்ற பழி நீங்க, விநாயகர் சிவபெருமானை இங்கு வழிபட்டார் என்பது புராணம். கயமுகன் இரத்தம் பெருகிச் செங்காடாக இருந்ததனுற் செங்காட்டங்குடி என்று பெயர் வந்தது என்றும் கணபதி வழிபட்டதனுற் கோயிலுக்குக் கணபதீச்சரம் என்று பெயராயிற்று என்றும் புராணங் கூறும்

செய்யுள் 8. அற்புதமான வடிவு – ஓம் என்னும் பிரணவத்தைக் குறிக்கும் ஆனைமுகத்தையுடைய வடிவம்; கற்பு – கல்வி. ஒருமை நெறி; சொற்புதர் - சொல் வன்மையுள்ள புலவோர்; பொற் புதவு – அழகிய கோபுர வாயில்; புதவு – கோபுர வாயில்.

செய்யுள் 9. பலவர் தமக்கு ஓமந்தை விநாயகர் அருள்புரிந்த நிறத்தினை இச் செய்யுளிற் குறிப்பிடுகின்றார்.

செய்யுள் 10. குறையும் பிறையணி ஈசன் – தேய்ந்துவரும் சந்திரனுக்கு அபயமளித்து, அப்பிறைச் சந்திரனைத் தலையில் அணிந்திருக்கும் சிவபெருமான். சூழ்ந்து – வலம் வந்து; கொக்கரக் கவி – மாம்பழம்; வயம் – வெற்றி. பிள்ளையார் தந்தையாரை வலம் வந்து, முருகனை நுண்மதியால் வெற்றி கொண்டு. மாங்கனியைப் பெற்ற வரலாறு இங்கே குறிப்பிடப்படுகின்றது. இறையும் – அற்பநேரமும்.

செய்யுள் 11. தன்னை உள்ளன்போடு வழிபடும் மெய்யடியார் குற்றஞ் செய்யினும், அக்குற்றம் அவரைச் சாராமற் காத்துப் பயனளிப்பது இறைவனது இயல்பு; இதனைச் சண்டேசுர நாயனார் வரலாறு விளக்கும். அந்த அருட்பண்பே இங்கு விநாயகருக்கும் உரியதாகக் கூறப்படுகிறது. கூந்துப்புரி குழகன் – நில்லையில் நடனமிடும் அழகராகிய பெரியான், குழகற்கு மூத்த புதல்வன் என்க. ஒத்து – வேதம்

செய்யுள் 12. உற்றவர்க்கு உற்ற உருவாயினை – உன்னை நினைந்து வழிபடுவோர்க்கு அவர் கருதிய உருவாகித் தோன்றுவாய்; இவ்வுலக பந்தம் அற்றவர்க்கு அற்ற ஒளியாகி நின்றனை – உலக பாசங்களை அறுத்த ஞானிகளுக்கு உருவமற்ற ஒளிப் பிழம்பாக நின்றருள்; ஆரணங்கள் – வேதங்கள்; வாரணமே – யானைமுகப் பெருமானே வாரணம் – யானை.

செய்யுள் 13 வாரணன் – சங்கினைக் கையில் உடையவனை திருமால்; திருமால் விநாயகருக்கு மாமன்; திருமாலுக்கு மகன் எனப்படும் மன்மதன் விநாயகருக்கு மைத்துனன்; மாரணம் செய்காரணன் – அழித்தற்றொழிலைச் செய்பவரும் மீண்டும் பிரபஞ்சம் தோன்றுவதற்குக் காரணமாயிருப்பவருமான சிவபெருமான். விநாயகருக்குச் சிவபிரான் தந்தை என்றும், உமையம்மை தாய் என்றும்; உமையம்மையின் தமையன் என்று சொல்லப்படும் திருமால் மாமன் என்றும், மன்மதன் மைத்துனன் என்றும் முருகன் தம்பி என்றும் நூல்கள் கூறும். ஒரு களங்கமுமில்லாத பரிபூரணரான விநாயகர் இவ்வாறு உறவு முறை கொள்ளும் புதுமை, வேதங்களாலும் உணர்தற்கரியது.

செய்யுள் 14. கரவாமல் – பிறர் பொருளைக் கவராமல்; விரவாமல் – கலக்காமல்; பரவாமல் – வணங்காமல்; ஏரம்பன் – ஆனைமுகக் கடவுள்.

செய்யுள் 15. ஏர் ஏறு மாதம் மும்மாரி பொழியவும் – மாதந்தோறும் மூன்று மழை பொழிவது நாட்டுக்கு வளந்தரும் என்பது நூலோர் வழக்கு; வேதமோதும் வேதியர்க்கு ஒரு மழையும், மாதர் கற்புடை மங்கையர்க்கோர் மழையும், நீதி தவறுது வேந்தற்கு ஒரு மழையுமென மாத மும் மழை பெய்திடும் என்ப. ஏர் – அழகு, வளப்பம்; குவை குவியல்; நேர் ஏறும் ஐம்புலத்தாறு ஒப்பல் – நேர்மை மிகுந்த தென் புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவகையிடத்தும் அற நெறி தவறுமல் போற்றுதல் (குறள் 43); வார் ஏறு வாவி – நீர் நிறைந்த வாவிகள்; மாதங்கம் – யானை, இங்கே பிள்ளையாரைக் குறிக்கும்.

செய்யுள் 16. மாதங்க வாமத்தன் – பெண் உடலை இடப்பாகத்துடையோனை சிவபெருமான்; வலவை – வல்லபை என்னும் சக்தி; ஒளையின் மேவிய பண்ணவன் – ஔந்தையில் உறையும் விநாயகக் கடவுள்; அங்கம் ஆறும் – வேதத்துக்கு அங்கமாகிய சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சோதிடம், சந்தோவிசிதி என்னும் ஆறு நூல்களும்.

செய்யுள் 17. ஏம் பொருளை – பிரணவப் பொருளாகிய பிள்ளையாரை; இணர் – மலர்; வணரும் குழல் அர மாதர்கள் – சுருளும் கூந்தலையுடைய தேவமாதர்கள்; கற்பதாரு – கற்பகதரு.

செய்யுள் 18. பல்வகை யோனிகள் – விலங்கு, பறவை, மனிதர் முதலிய பல வகைப் பிறப்புகள்; அருந்தும் – உண்ணும், அனுபவிக்கும்; சிற்பரன் – கடவுள்.

செய்யுள் 19. வெள்ளி வரை – கயிலைமலை; அழுபம் – அப்பம்; உகந்தவன் – விரும்பிய விநாயகர்; கயிலைமலை முதலிய தெய்வத் தலங்கள் இதற்கு இணையாகா என்று அடியவரெல்லாம் சாதித்துத் தங்கியிருந்து வழிபடச் சிறப்புப் பொருந்திய ஓ மந்தைப் பதியில் உற்றுரு என்க.

செய்யுள் 20. கந்திந்து – வாசனை வீசி; சந்தனக் கா சூழும் – சந்தன மரச் சோலைகள் சூழ்ந்திருக்கும்; தகர்த்து – உடைத்து; தனிப்படர்வோர் – தனி வழி செல்லு வோர்.

செய்யுள் 21. செய்தவிவினையோர் – தவினை செய்வோர் என மாறுக. முற் பிறப் பிற் செய்த தீவினையுடையோர் என்றும் பொருள் கொள்ளலாம். இவர் ஆணவ முனை தன்னை எங்ஙன் அகழுவரோ – உன்னை ஒகழும் இத் தீவினையோர் தமது ஆணவ முனையை எங்ஙனம் களைவார்களோ.

செய்யுள் 22. உ(ன்)னை ஒமை தன்னில் தெரிசித்தவர் திறத்தை அடைவர்; அறத்தை அடைவர்... பிறப்பையும் மாற்றுவர் என்க. திறம் என்பது சைவத்திறம்; நிறம் – ஒளி; பின் நின் ஆர் அருளையும் நேர்ந்து அடைவர்.

செய்யுள் 23 துகளினை மாற்றி – தூசி துடைத்து திருவலகிட்டு எனலுமாம்; ஆமயம் – கோமயம், சாணம்; ஆமயம் பூசி – மெழுக்கிட்டு; தொடை–பூமாலை; இங்கே கூறப்பட்டவை சரியைத் தொண்டுகளாம்; அத்தகைய தொண்டு பூண்டோர் சாலோக முத்தி அடைவர் என்பது நூற்றுணிபு. சாலோக்கிய பதம் – சாலோக முத்தி; அதா வது சிவலோகத்தில் இருத்தல்.

செய்யுள் 24. மலர் தூவுதல், அவி படைத்தல், நீப தூபமிடல் முதலிய நியமங் களோடு பூசனை புரிதல் கிரியை வழிபாடாம். இந்நெறி நிற்போர் சாமீப முத்தியடை வர்; சாமீப்பியம் – சாமீப முத்தி, அதாவது சிவனுக்குச் சமீபத்தில் இருத்தல்.

செய்யுள் 25. புடை பெயர்வு இன்றி – அசைதல் இல்லாமல்; அதாவது பது மாசனப போன்ற யோக நிலையில் அமர்ந்து என்றபடி. யோகநெறி நிற்பவர் சாரூப முத்தி அடைவர். சாரூப்பியம் – சாரூப முத்தி, அதாவது சிவனது உருவத்தைப் பெற் றிருத்தல்.

செய்யுள் 26. சிவஞானம் பதிந்தவர்...தம் கவலை அறச் சாயுச்சிய பதம் சார்ந் திடுவார் என முடிக்க. மல பரிபாகம் – ஆணவ முதலிய மலங்கள் நீங்குதற்குரிய பக்குவ நிலை; தொல்லறிவு ஒங்க – முன்னிருந்த பசுஞானம் கெட; சிங்கல் – கெடல்; சாயுச் சிய பதம – இறைவனோடு இரண்டறக் கலக்கும் அத்துவித முத்தி.

செய்யுள் 27. பதிதர் – தாழ்ந்தவர்; விதிதரு வேடம் – முறையான அடியவர் வேடம்; துதிதரும் உண்டியினை அவர்க்கு ஊட்டி – சிவனடியார்க்குக் கொடுக்கத்தகும் உணவினை அவர்களுக்கு உண்ணக்கொடுத்து; தொழும்பு – தொண்டு; மதிதரு யான், எனது என்னும் செருக்கு – தவினை உயர்வாக மதிக்கும் அகங்கார மமகாரமாகிய ஆண வச் செருக்கு. தாழ்ந்தவர் எவரினும் விநாயகருக்கு அடியவராய் அத்தகைய வேடம் தாங்கினவரை வணங்கி, உண்டி முதலியவற்றால் உபசரித்து, அன்னவர்க்குத் தொண்டு செய்வோர் ஆணவச் செருக்கு அகலப் பெறுவர் என்பதாம்.

செய்யுள் 28. உவர் ஆழி – உப்புநீர்க் கடல்; ஒமைப் பதியைத் தரியாதவர் தம் உயிருக்கு உறுதிப்பயனை (அதாவது வீடுபேற்றை) அடையாதவரே; ஒமைப் பதியை அடைந்தவர் உறுதிப் பயனையெய்துதற்குரிய தவமுடையவர் என்று நன்கு அனுமானிக்கத் தக்கவரே; தவர் – தவமுடையவர்.

செய்யுள் 29. நினக்கு மிக்கு ஆர் அன்பு என மாறுக. உன்பால் மிகுந்து பெருகும் அன்பு ஒன்றுமே நான் வேண்டுவேன். மைக் கார் அளக மலைமகள் – மைபோன்ற கரிய கூந்தலையுடைய பார்வதி அம்மையார்; மதாவளம் – யானை; விநாயகரைக் குறிக்கின்றது.

செய்யுள் 30. குலவும் – பொருந்தியுள்ள; கோது அகற்றி – குற்றங்களை நீக்கி; உளம் குலவுற்றிட – உள்ளம் மகிழ்ச்சிகொள்ள; களம் குலவும் கண்டத்து அண்ணல் – கரிய விடம் பொருந்திய கழுத்தையுடை சிவபெருமான்; களம் – கருமை, நஞ்சு; கண்டம் – கழுத்து.

செய்யுள் 31. சுற் பணியால் உயர் ஒமை – கல் வேலிப்பாட்டினால் உயர்ந்த ஓமந்தை; இனி, சுற்பு அணியால் உயர் என்று சொற்பிரித்தால், சுற்பாகிய அணியினால் உயர்ந்த .. என்றும் பொருள் கொள்ளலாம். கைக் களிறு – தும்பிக்கையையுடைய ஆன்யானை, என்றது பிள்ளையாரை; பொற்பணி பூணும் – பொன்னாலான கிம்புரி என்னும் அணிகலமணிந்த; கோடு – கொம்பு; எற்பணி – எதும்பை அணிந்த (என்பு + அணி); வேழந் தரளம் – மூங்கில் முத்து; நால்வாய் – தொங்குகின்ற வாய் (யானைக்குரியது). மூங்கில் முத்து என்பது சிவனைக் குறிப்பது. பஸ்மாசுரனுக்கு வரங் கொடுத்து, அவன் தம்மையே நீண்டவந்தபோது, சிவபிரான் மூங்கில் முத்தாக மறைந்த திருவிளையாடலை உட்கொண்டது. சிவபெருமான் ''செத்தார் எதும்பணிவான்'' என்பதனால் எற்பணி என அடை புனைக்கப்பட்டது.

செய்யுள் 32 கயம் – யானை; கங்கை ஆற்றினில் தோன்றி – விநாயகருக்குக் கங்கை பெற்றேன் என்னும் ஒரு பெயரும் உண்டு; இரசத வெற்பு – வெள்ளியங்கிரி, அதாவது கயிலைமலை; இரசதம் – வெள்ளி; இறைமையுடன் – தலைமையோடு; செங்காடு – கயமுகாசுரனைக் கொன்ற இடமாகிய திருச்செங்காட்டங்குடி; நாலரைக் காலது – இரண்டு கால்களையுடையது.

செய்யுள் 33. அரி படைத்த – அழகுடைய; பிரமன் படைத்த என்னிலும் பொருந்தும்; துடையை – பூந்தோட்டம்; நறை தூற்றும் – தேன் சிந்தும்; கரி – யானை; சில் அதிரதம் – வட்டவடிவான அதிரசம் எனப்படும் இத்திப்பான அப்பம்; வடை ஆதி உணவுகள் நின்றது – வடை முதலான உணவுகளைத் தின்றது.

செய்யுள் 34. ஒமையில் சித்தூரம் – ஓமந்தைப் பதியிலுறையும் யானை (பிள்ளையார்); வேழத்தைத் தின்றது – கருமையைத் தின்றது; ஒரு வேழத்தைக் கொன்றது முண்டு – கயமுகாசுரனைக் கொன்றதுமுண்டு; முன்னம் வள்ளி வரைப் புனத்துச் சென்றது – முன்னர் தம்பியாகிய முருகன் வேண்ட, வள்ளிநாச்சியாரை அச்சுறுத்தும் பொருட்டு யானையுருக்கொண்டு தினைப்புனத்திற் சென்றவர்.

செய்யுள் 35. சித்தூரம் – குங்குமப்பொட்டு; ஒடை – நெற்றிப் பட்டம்; முகரம் – முகத்தில் உள்ள துதிக்கை; அறுமுகன் முன்னவனும் உன் திருவடி; ஊரவர் வந்து தொழும் ஒமைப்பதி.

செய்யுள் 36. மறந்து நினைத்திலராகிய வானவர் – ஒருபோதுமே மறக்காமல் எப்போதும் நினைப்பவராகிய தேவர்; சித்தனையைத் துறந்து – உலக விடயங்களிற் படரும் சிந்தனையை விலக்கி; பணிகள் தொடங்காது – ஒமந்தைப் பதியிலே திருப்பணிகள் செய்வதைத் தொடங்காமல்.

செய்யுள் 37. உய்யும் பணிகள் – முத்தியடைவதற்கான திருப்பணிகள்; தூய்ய மலர் – தூய பூக்கள், ஆவது, வண்டுதாத புது மலர் என்றவாறு.

செய்யுள் 38. பிறமதம் புகுந்து... அலைவோர் ஒமைப்பதி தெருவருகே வருவாராயின், உன் அருளைப் பெறமாட்டார் என்று உலகத்தவர் சொல்லது அரிது; அன்னரும் உன்னருளைப் பெறுவர் என்றவாறு. சுறவு – சுறு மீன்.

செய்யுள் 39. அரி ஆர் விழி உமை – செவ்வரி பரந்த கண்களையுடைய உமாதேவியார்; ஐம்முகன் – ஐந்து முகங்களையுடைய சிவபெருமான்; அருள் புரியா – அருள் புரிந்து; பூசனையும் பரியா – பூசனையையும் அன்போடு ஏற்று. உமையவள் சிவபிரானுடன் சூதாடுகையில், பிராட்டி வெற்றிபெறவும் சிவனே வென்றார் என்று விட்டுணு பொய்ச்சாட்சி சொன்னதனால், உமையின் சாபத்துக்காளாகி, விட்டுணு மலைப்பாம் பாகிப் பாலிவனத்திலிருந்து, பின் கணபதியைப் பூசனை செய்து சாபநீக்கமடைந்த வரலாறு இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

செய்யுள் 40. உம்பர் மன்னனுக்காக – தேவர்களுக்கு அரசனான இந்திரன் பொருட்டு; குறுமுனி – அகத்தியர்; பாணி – கை; சிரகம் – கமண்டலம்; கொடி – காக்கை; காழி – சீகாழிப்பதி இங்கே குறிக்கப்பட்ட புராண வரலாறு: இந்திரன் வேண்டுகோளுக்கு இணங்கி, அகத்திய முனிவரிடம் இருந்த கமண்டல நீரை விநாயகப்பெருமான் காகவுருக்கொண்டு கவிழ்ப்ப, அந்நீர் காவிரி (பொன்னி) நதியாகப் பாய்ந்து, இந்திரன் சீகாழியில் வைத்த நந்தவனத்தைச் செழிப்பித்தது. கமண்டலத்தைக் கவிழ்த்ததனால் அகத்தியர் கோபங்கொண்டு குட்டவர, அவர் கைக்குத் தப்பி விநாயகர் அவருக்குக் காட்சி கொடுத்தார்.

செய்யுள் 41. தேசுறும் – திவ்விய ஒளிவீசும்; ஒரு காசு உதவி என்க.

செய்யுள் 42. காட்டு யானை விளாமரத்திலின்றும் விழும் கனியை விரும்பி உண்பதுண்டு. அன்பர் நிவேதிக்கும் விளாங்கனியை விநாயகராகிய யானை விரும்பி உண்டு ஓமைப் பதியில் அமர்ந்திருக்கும் என்ற கவிநயம் காண்க. வாரணம் – யானை.

செய்யுள் 43. நெய்த்நீபம் ஏற்றிச் சிறப்பித்தவர், இம்மையிலே போகம் அனுபவித்து இன்புறுவர்; அம்மையில் அழியாத சித்தியடைகுவர் என்க. கொம்மை – பெருமை; அம்மை – மறுமை.

செய்யுள் 44. செய்கள் – வயல்கள்; நத்து – சங்குகள்; இரையப்பெறும் – முரலும்; சித்திரான்னம் – பல்வகைச்சாதம்; புளி, எள், சர்க்கரை முதலியன கலந்து அட்ட அன்னம். சித்திரை மாதத்தில் ஓமையில் நண்ணிய நாதனுக்குச் சித்திரான்னம் நிவேதிப்போர் சூரியலோகத்தை அடைவர் என்றவாறு.

செய்யுள் 45. ஏறு – இடபம்; ஏறு பெறும் பெயர் உற்றிடும் மாதம் – வைகாசி எண்ணிரண்டாகக் கூறு உபசாரம் – சோடசோபசாரம்: தவிசளித்தல், கை கழுவ நீர் தரல், கால் கழுவ நீர் தரல், முக்குடி நீர் தரல், நீராட்டல், ஆடை சாத்தல், முப்புரி

நூல் தரல், தேய்வை (சந்தனம்) பூசல், மலர் சாத்தல், மஞ்சளரிசி தூவல், நறும்புகை காட்டல், விளக்கிடல், கருப்பூரமேற்றல், அமுதம் ஏந்தல், அடைக்காய் (வெற்றிலை, பாக்கு) தரல், மந்திர மலரால் அருச்சித்தல் என்பனவாம். தேறு மதி – தெளிந்தபுத்தி; அம்புலி வாழுமுலகு – சந்திரலோகம்.

செய்யுள் 46. மிதுன மதி – ஆனி மாதம்; உடுபதம் – நட்சத்திர உலகம் உலவும் மந்தித் திரள் பாய்தொறும் வானில் உயர்ந்த பல பலவின் பழங்கள் உதிர்ந்திடும் ஓசை என்பது இயற்கை வருணனை.

செய்யுள் 47. கடக மதி – ஆடி மாதம்; அவர் புரி திவினை யாவும் சிறுகிச் சிதைத் தொழிய என்க; சிறுகி – குறைந்து; மறுகுதல் – கலங்குதல்.

செய்யுள் 48. சிங்க மதி – ஆவணி மாதம்; தராதரன் – உலகைத் தாங்குபவன், இங்கே பிள்ளையாரைக் குறிக்கின்றது; பயம் – பால்; தனதன் – குபேரன்; அளகாபுரி– குபேரனது உலகம்.

செய்யுள் 49 கன்னி மதி – புரட்டாதி மாதம்; பண்ணியம் – பலகாரம்; எண்ணிய – நீணீத்த கருமங்கள்.

செய்யுள் 50. உய்திடும் – ஈடேறும்; கந்தலோகம் – முருகக்கடவுளுடைய உலகம்

செய்யுள் 51. பாங்கின் நிறைதரும் கார்த்திகை என்க. பாங்கு – அழகு; நதி யமுது – தயிர்ச்சாதம்; கோங்கு – ஒருவகை மரம், முள்ளிலவு; ஒரு கோட்டன் – விநாயகர், ஒற்றைக் கொம்புடையவர்.

செய்யுள் 52. கோடும் சிலை – வளைந்த வில்; சிலை மதி – தனு மாதம், ஆவது மார்கழி.

செய்யுள் 53. மகர மதி – தை மாதம்; பிரமபுரம் – பிரமனுடைய உலகம்.

செய்யுள் 54. கும்ப மதி – மாசி மாதம்; மாயவன் – திருமால்.

செய்யுள் 55. தெங்கம் பொழில் சூழ்ந்த உயர் ஓமைத் தலம் என்க. சூழ்ந்த + உயர் = சூழ்ந்துயர், நிலை மொழியீற்று அகரம் கெட்டது.

செய்யுள் 56. வயல் அருகு எங்கணும் வாழை நெருங்கும்; தாழை நெருங்கும் கனிகள் சிதைக்க வான் கரும்பு தரளம் சிந்தும் என்க. தாழை – தென்னை; தரளம் – முத்து; மாழை – மாமரம்; வாதம் எழுந்து ஈழை நெங்குமக்காலத்தில் – மரண காலத் தில் வாதம் மேலோங்கி இளைப்பிருமல் நெருங்கும்போது.

செய்யுள் 57. மஞ்ஞைகள் – மயில்கள்; அறல் – நீர்; மழை மேகங்களைக் கண்டு மயில்கள் மகிழ்ச்சியினால் ஆடுவது இயல்பு; அதிர்கின்ற மேகங்கள் எதிர் நின்று மஞ்ஞை கள் ஆடிடும் காரணம் என் என ஆராய்ந்திடாமல் அறல் பொழியும் என்க. கதிர் கின்ற நெஞ்சில் – மாசின்றி ஒளிரும் மனத்தில்.

செய்யுள் 58. களமர் – உளவர்; அங்ஙன் நில்லும் – அவ்வாறே நில்லுங்கள், அவ்விடத்தே நில்லுங்கள் எனினுமாம்.

செய்யுள் 59. கலையும் அலையும் நரித்தவன் – பிறைச் சந்திரனையும் கங்கையையும் சடாமுடியில் அணித்தவனுகிய சிவபெருமான்; கடாம் கவிழ் கைம்மலை – மதநீர் வழியும் யானை, ஆவது விநாயகர். கடாம் – யானையின் மதநீர்; கைம்மலை – கையையுடைய மலை என்பது யானையைக் குறிக்கும்.

செய்யுள் 60. முன்னவன் ஒமைப் பதி உறை உத்தமர் – மூத்த நாயனுராகிய விநாயகப் பெருமான் உறையும் ஒமைப்பதியில் வாழும் உத்தமர்; முன்னவன் என்பதற்கு, முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளான முதல்வன் என்றும் பொருள் கொள்ளலாம். தருக்குவர் – நாமார்க்கும் குடியல்லோம், நமனையஞ்சோம்... என்று இறுமாந்திருப்பர். அடியாரைக் கண்டு அவர் தாளில் அன்பு பெருக்குவர் என்க. பிறவி வினை அருக்குவர் – முற்பிறப்பில் ஈட்டிய வினைப்பயனை அருகச் செய்வர். அருக்குதல் – குறைத்தல், நீக்குதல்.

செய்யுள் 61; மானவர் – மக்கள், மானமுடையவர்; அவர் செய்யும் தானங்கள் எல்லாம் உத்தமமாகும் என்க. சத்திய வாசகம் கூறுவர்; அசத்தியத்தை மறந்தும் நினையார்கள்; சிவகதன் – சிவபெருமானுடைய மகன்; மத்த கஜமுகன் – மதம் பொருந்திய யானை முகத்தையுடையவர்.

செய்யுள் 62. ஒமையின் மைந்தர்கள் மானமுடையரே அன்றி ஈனமுறு குணம் உள்ளவரல்லர் என்க. இமயத் தந்த உமை, நாவம் தடவு குழல் உமை என்று அடைகளைத் தனித்தனி உமைக்குச் சேர்க்க. நானம்–கஸ்தூரி; உமை ஈன்றருள் நற்புதல்வன்.

செய்யுள் 63. பரன் உமை தந்த மைந்த, மகோதர, ஒற்றைத் தந்த, தந்தாயுத, மூடிகவான, பராபர, ஒமைப்பதிய என்று அனைவோரும் வந்தனை செய்து நின் நாமம் வழுத்தவர் என்க.

மகோதர – பெருவயிற்றனே; தந்தாயுத – கொம்பினை ஆயுதமாக உடையவனே; மூடிக வாகன – பெருச்சாளியை ஊர்தியாகக் கொண்டவனே.

செய்யுள் 64 வழுத்த நாவும், வணங்கச் சிரமும், தொழக் கையும் வழங்கி என நிரனிறையாகப் பொருள் கொள்க. மனத்து அழுத்தித் தரிசிக்கக் கண்கள் உதவின என்க. ஆமிரங்கள் பழுத்து உதிர் ஒமைப் பதி என்க. ஆமிரம் - மாங்காய், பதியில் நின் தொண்டு பரிவின் செய்து விழுத்தகவு எய்தவும் செய்தனை என்க. பரிவின் – அன்போடு; விழுத்தகவு – பிறருக்கில்லாத தனிச்சிறப்பு.

மூன்முமடியின் ஈற்றுச்சீரை பரிவிற் செ(ய்)து என ஒற்று நீக்கி அலகிடுக. அது புளிமாங்கனிச் சீராக அமையும். கட்டளைக் கலித்துறையில் பிறபாண்மை புளிமாங்கனி ஈற்றுச் சீராக வருதலும் உண்டு.

செய்யுள் 65. உடுண்டி விநாயகர், வக்கிரதுண்டர் என்பன விநாயகருடைய பெயர்கள். வக்கிர துண்டர் என்பது வளைந்த தும்பிக்கையை உடையவர் என்று பொருள்படும். சக்கிரன் – இந்திரன்; சிந்தாமணி விநாயகர் என்பது அக்கடவுளுக்கு வழங்கும் மற்றொரு பெயர்.

செய்யுள் 66. தூமத்துவசர் – புகைக்கொடியோர், என்பது விநாயகருடைய ஒரு திருநாமம். தூமாசுரன் என்பவனை அழித்தபோது, விநாயகமூர்த்தி தமது வாயிற் புகையுண்டாக்கி அவன் சேனை முழுவதையும் கொன்றமையால், தூமகேது (தூமத் துவசன்) எனப் பெயர் பெற்றார். பாலச்சந்திரர் – விநாயகருக்கு ஒரு பெயர்; விநாயகர் சிறு

பிள்ளையாய்ச் சென்று அனலாசுரனை விழுங்கி, அவன் வெப்பத்தைத் தாங்கிச் சந்திர னைப் போலக் குளிர்ந்திருந்தமையால் இப்பெயர் பெற்றார். வலவை கணேசர் – வல் லபை என்னும் சத்தியோடு கூடிய விநாயகர்; மகோற்கடர் – (பெரு மத யானை) என் பது விநாயகருக்கு ஒரு பெயர்; உபய மயூரர் – (இரு மயில்களையுடையவர்) சித்தி, புத்தி என்னும் இரு சத்திகளை இரு பக்கத்திலும் கொண்ட விநாயகர்; கசானன ரூபர் – யானை முகங் கொண்ட உருவமுடையவர்; தேவியல் – தெய்வத் தன்மையுள்ள.

செய்யுள் 67 வேதன் – பிரமதேவன்; பரனும் உமையும் பந்தனை செய்வர் – சிவ பெருமானும் உமாதேவியாரும் தத்தம் மனத்தினுள் விநாயகரைக் கட்டினவைப்பர், அதா வது நிறுத்தினைவைப்பர் என்றவாறு.

செய்யுள் 68. காயகர் – பாடகர்; நம் தாய் அனையாய் – எமக்கெல்லாம் தாய் போன்றவரே.

செய்யுள் 69 தாழாத் தலை – வணங்காத தலை; சூழாப் பதம் – வலம் வராத பாதங்கள்; துதித்து வாழாத நாவும், கண்டு வாழாத விழியும் என்க. மலர் பீதுறை பண்ணவன் – பிரமதேவன்.

செய்யுள் 70. 'அண்ணு, பண்ணுர் மொழிக் குறமாது எனைச் சேரப் பரிவுடனே உதவு' என்று அறுமுகன் ஏத்திட என்க. நண்ணு – நண்ணி.

செய்யுள் 71. கண்டு நிக்கும் மொழி – கற்கண்டை ஒக்கும் இனிய மொழி பேசும்; அயிராணி – இந்திராணி; கார்விண்டு – கருநிறமுடைய விட்டுணு; விரிஞ்சன் – பிர மன்; மண்டுதவம் – மிகுந்த தவம்; இந்திரன், விட்டுணு, பிரமன், விஞ்ஞவர், முனி வர் ஆகிய இவரெல்லாம் உன்றன் தொண்டு புரிவரென்றுல் நின்றன் மேன்மை சொல அரிதே என்க.

செய்யுள் 72 வஞ்சர் உளத்தில் உற்றுத் தரியான் – வசஞ்சகர் மனத்தில் நில்லாத என்; கரியான் – கடவுள்.

செய்யுள் 73 கட்டு ஆர் அளக மடந்தையர் – அள்ளிக் கட்டிய செறிவான கூந் தலையுடைய மகளிர்; வலிப்பட்டு ஆர் இருளை அடையும் பாதகர் – வலியில் அகப்பட்டு நிறைந்த இருளுவனை அடையும் பாவிகள். 'நிட்டும் வண்ணம்' – இதன் இடையி லுள்ள மகர ஒற்றை நீக்கி அலகிட அச்சீர் கூவிளங்காய்ச் சீராய் அமையும்

செய்யுள் 74. வரன் – மேலானவன்; பிரமன்பெறு கன்னியரை மணஞ்செய் சர் வேசுரன – பிரமனுடைய புத்திரிகளாகிய சித்தி, புத்தி என்னும் இருவரையும் திரு மணஞ் செய்த சர்வேசுவரராகிய விநாயகர்; விக்னகரன் – இடையூறுகளை நீக்குபவர்.

செய்யுள் 75. கடநாகம் – மதங்கொண்ட யானைகள்; துத்திப் படநாக பூடண – பொறியுடைய படத்தையுடைய பாம்பினை ஆபரணமாக அணிந்தவரே; இலம்போதர – தொங்கும் பெருவயிறு உடையவரே.

செய்யுள் 76. திரத்துவம் – அறிவுடைமை; மெய்கண்டதேசிகர் – சிவஞானபோ தம் அருளிய மெய்கண்டதேவர்; தேசிகன் – மெய்கண்டாருக்குக் குருவாயமைந்த பொல் லாப் பிள்ளையார்; சிந்தூரன் – யாரைத் தழுவினும் அவர் இறக்கவேண்டுமெனப் பிர மனிடம் வரம்பெற்று, விநாயகரால் அழிவுற்ற அசுரன்.

செய்யுள் 77. மலம் மலியும் குணத்தோர் – ஆணவமலம் மிகுந்த குணமுடையோர்; வலம் கலியும் பரசுராமன் – வெற்றி மிகுந்த பரசுராமர்; அவர் விநாயகரைப் பூசித்து அவர் அருளால் மிக்க வலிமையும் சிரஞ்சீவித் தன்மையும் பெற்றவர்.

செய்யுள் 78. நதி உகள் வானீ – நதியிலே துள்ளும் வாளீமீன்; குறுமாமுனி – அகத்திய முனிவர்.

செய்யுள் 79. மதனன் – மன்மதன்; அவனுக்குக் கிளியே குதிரை; தென்றற் காற்றே தேர்; மன்மதன் விநாயகரைப் பூசித்து அழகுமிக்க உருவையும், மக்கள், தேவர் யாவரையும் வென்று காமவேட்கை கொள்ளச் செய்யும் இறைமையையும் பெற்றவன் என்ப.

செய்யுள் 80. தினகர மண்டலம் – சூரிய மண்டலம்; கனகமதில் – பொன்மதில்; பனகவிராசன் – பன்னகவிராசன்; ஆதிசேடன் அனகவடிவுகொள் ஈசன் – பாவமற்ற தூய வடிவினரான சிவபெருமான்.

செய்யுள் 81. உமை சதுர்த்தி விரதம் அநுட்டித்த தபோபலத்தால் கங்கை மருவுமுன் எய்திச் சங்கரனை மணந்து இன்பஞ் சார்ந்தவள் என்க.

செய்யுள் 82. சயம்பு – தான்றோன்றியீசர்; விண்ணோர் ஆரும் உ(ய்)ய என்க, சிவபெருமான் முப்புரங்களை எரித்தழித்தது விநாயக மந்திர பலத்தினாலாம்.

செய்யுள் 83 வலாரி – இந்திரன்; பனிக்கதிரோன் – சந்திரன்; திரிபுரன், குசன், கர்த்தமன், வீமன், வல்லாளன், நளன் ஆகியோர் விநாயகக் கடவுளைப் பூசித்து வாழ்வுபெற்றவர் என்ப.

செய்யுள் 84 கிப்பிரப்பிரசாதன், சந்திராங்கதன், உருக்குமாங்கதன் காபிபன் ஆகியோரும் விநாயகரைப் பூசித்து இட்டசித்தி பெற்றவர் என்ப.

செய்யுள் 85 திரிகரண சுத்தி இல்லாதவரும் ஓமாபுரியை வலஞ்செய்து நித்தமும் அங்கே தங்கியிருப்பாராயின், நீயும் நல் நேயமுடன் அவருள்ளப் போதினில் புத்தமுதாகி உறைவாய் என்றவாறு. உள்ளப்போது – உள்ளமாகிய மலர்.

செய்யுள் 86 தண்டலை – சோலை; முதலடியின் ஈற்றுச்சீர் புரத்தி(ல்)வந்தே எனவகரவொற்று நீக்கி அலகிடப்படல் வேண்டும், அவ்வாறு அலகிடின், அது கருவிளங் காய்ச் சீராய் அமையும் காதார் வீழி வல்லபை – காதளவு ஓடிய கண்களையுடைய வல்லபை.

செய்யுள் 87. பதியில் நின்சீர் பசுங்கிளி வாக்கியமாகக் கூற என்க; மஞ்ஞை-மயில்; பசுங்கிளி கூறக் கேட்டு, குயில் பாடக்கேட்டு, மஞ்ஞைக்குமாம் நடிக்கக்கண்டு எனை இயைக்க.

செய்யுள் 88. எனது மனத்து இருள் நீக்கி மறுபிறவி பிறந்தேன்; இனிப் பிறவாப் பெறும்பேறு – மேலும் பிறவி எடுக்காத முத்தர் பெறும் வீடுபேறு.

செய்யுள் 89. பெற்றவர் – உன்பால் அன்பினைப் பெற்றவர்; சித்தி – மிகுபுகழ்.

செய்யுள் 90. ஆராவமுது – உண்ணுந்தோறும் இன்னும் உண்ணவேண்டும் என்னும் விருப்பத்தைக் கொடுக்கும் அமுது.

செய்யுள் 91· இறையவன் – உருத்திரன்; திருமாலு கேள்வன் – இலக்குமி நாயக னுனை நிருமால்; மறையவன் – பிரமன், இறையவனுக்கு அறிக்கும் வரமும், இலக்குமி கேள்வனுக்கு அளிக்கும் (கூக்கும்) வரமும், பிரமனுக்கு ஆக்கும் வரமும்என நிரனிறை யாகப் பொருள் கொள்க. குண + ஈசன் = குணேசன். குணம் – அருட்பண்பு.

செய்யுள் 92. பின் நீடிய வான் உலகினை ஆண்டும் பெறுவது உண்டோ? என்க. குற்றேவலைத் தமது தலைமேற்கொண்டு நலமுடன் புரிந்தால் யாவரும் சுதி நண்ணுவர் என்க.

செய்யுள் 93. சேமவைப்பாய் ஒமை சிறப்புடைத்து. சேமவைப்பு – சேமநிதி.

செய்யுள் 94. நர வாகனம் – குபேரனைச் சுமக்கும் வாகனம். ஓமையின் நாத, உ(ன்)னை அடையலாராயின் அவர் நற்கதியடையாதவரே என்க

செய்யுள் 95. காயிலில் இறந்தாலும், திருவாரூரிற் பிறந்தாலும், பொன்னம் பலத்தைத் தரிசித்தாலும் முத்தி கிடைக்கும் என்ப. கமலை – திருவாரூர் ஆலில், விநாயகப் பெருமானை நினையாதவருக்கு அந்த நலம் இல்லையாகும். முன்னர் – கருதா தவர், அணுகாதவர்.

செய்யுள் 96 குஞ்சரம் – யானை; இங்கே விநாயகப் பெருமானைக் குறிக்கும். குஞ்சரம் நலந்தரும்; நன்மனையாட்டி, நற்புத்திரர் நல்கும், நன்நீர் நிலந்தரும்; செல் வளந் தந்திடும்; பல்புகழ் நீடத்தரும்; நவமணி தந்திடும்; கல்வி தரும்; குலந்தரும் என்க. கலந்தருகின்ற – அனைகலங்களைத் தருகின்ற; கப்பல்களைக் கொண்டுவந்து தரு கின்ற என்னும் பொருள் கொள்ளலாம்.

செய்யுள் 97 சரதம் – உண்மை; தந்தி – யானை (விநாயகர்); நிரசெயர்னந் தம் – தனக்கு மேற்பட்டதொன்று இல்லாத பேரானந்தம், முதலடியின் ஈற்றுச்சீர் 'தங்குசுந்தி' என்றிருப்பின் கூவிளங்காய்ச் சீராகி அமையும். 'தங்குந்தந்தி' என்றிருப் பின் இரண்டாவது நகரவொற்றை நீக்கி அலகிடல் வேண்டும்.

செய்யுள் 98. நெறியார் சமயம் – முத்திக்கு வழியான சைவசமயம்; சமயநிலை யிலராய், வெறியார் குணமுடையார் சிலர், மேலறவும் அறியார், ஏவலை ஆற்றிடவுங் குறியார்; இவர் உன்றன் ஆருள் எங்ஙனம் கூடுவர்?

செய்யுள் 99. தொண்டர் குழாங்கள் எல்லாம் பணிபுரி ஒமைப்பதியில் உனைத் தேடி அடைந்த எனக்கு நின் திருவடி உதவாய் என்க. உதவாய் – உதவுவாய்.

செய்யுள் 100. திருவளர் மார்பன் – இலக்குமியை மார்பிலே தரித்த திருமால்; செங்கமலத்தன் – விட்டுணுவின் உந்திக் கமலத்தில் உறையும் பிரமன்; கருவளர்கின்ற கருத்துடையேன் – மீண்டும் பிறப்பதற்கு ஏதுவாகிய உலகப்பற்றுடையேன்; கருவளர் கின்ற. தாயின்கருவில் வளர்கின்ற; குருவளர்ஒற்ற – ஒளி வருகின்ற அருவளர் ஒமை – கடவுள் வாழ்கின்ற ஒமை.

சி. சிலம்புநாதபிள்ளை

சிலம்புநாதபிள்ளை யாழ்ப்பாணத்துக் கொக்குவில் எனுமூரினர்; சின்னத்தம்பியவர்களின் புதல்வர்; வண்ணை ம. அமரசிங்க உபாத்தியாயரின் மாணவர்.

வண்ணை ம. அமரசிங்க உபாத்தியாயர் நயினைதிவு ஸ்ரீ நாகபூஷணியம்மாள் மீது பாடிய நயினையுஞ்சல் 1880 ஆம் ஆண்டு ஆடி மாதம் அச்சிடப்பெற்றது. வண்ணை அமரசிங்க உபாத்தியாயரின் மாணாக்கருள் நாச்சிமார்கோவில் சி. ந. சதாசிவ பண்டிதரும் ஒருவரென்று கருத இடமுண்டு. அவர்தம் வண்ணையந்தாதி ஆசிரிய வணக்கம் '' அமரவரி'' என்று கூறல் கவனிக்கத்தக்கது.

சதாசிவ பண்டிதர் சிங்கப்பூரிலே வாழ்ந்தவர்; வண்ணை காமாக்ஷியம்மைமீது வண்ணையந்தாதி, வண்ணை நகரூஞ்சல் என்பனவற்றையும்; சிங்கப்பூர் முருகப்பெருமான் மீது சிங்கைநகரத்தந்தாதியும், சிந்திரகவிகளும் பாடியவர். இவை ஒரே தொகுப்பாக 1887 ல் சிங்கப்பூரிலே அச்சிடப்பெற்றன.

கொக்குவில் சிலம்புநாதபிள்ளை வவுனியாவிலே தபால் சுந்தேசார் அதிபராக விளங்கிய காலத்தில் (1880) இயற்றியது ஓமையந்தாதி. பிள்ளையவர்கள் பிற்காலத்தில் முனீச்சுரத்தில் அதிகம் தங்கியிருத்ததாகக் கேள்வி.

ஓமையந்தாதியுடன் சிலம்புநாதபிள்ளை வேறு சில பிரபந்தங்களையும் இயற்றியுள்ளார். இவற்றிலே,

(1) யாழ்ப்பாணம் தலைசை முத்துவிநாயகர் ஆசிரிய விருத்தமும், ஞானவைரவர் ஆசிரிய விருத்தமும்.

(2) உரும்பைக் கருணைமுக விநாயகர் ஊஞ்சல்.

(3) முனீச்சுரத்து வடிவழகியம்மை ஆசிரிய விருத்தமும், பதிற்றந்தாதியும்.

(4) முனீஸ்வரரூஞ்சல்.

(5) சிறிஸ்த அஞ்ஞானக் கும்மி மறுப்பு.

என்பனவும் இடம் பெறுகின்றன.

ஞானக்கும்மியும், யேசுமதபரிகாரமும் சுன்னாகம் அ. முத்துக்குமார கவிராசராற் புறச்சமய கண்டனங்களாகப் பாடப்பெற்றது. இவற்றை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதன்முதலாக இருமுறை பதிப்பித்தனர். இரண்டாவது பதிப்பு ஆங்கிரச ஸ்ரு ஆவி மீ (1872) வெளிவந்தது. தருமபுரவாதீன தம்பிரானுய் விளங்கிய கருவூர் ஆறுமுகத் தம்பிரான் 1836 ல் வெஸ்லி ஆபிரகாம் ஆனர். அவர் ஞானக்கும்மியை மறுத்து அஞ்ஞானக் கும்மி பாடினர். அது 1878 ல் அச்சிடப்பெற்றது. அதன் பிரசுரம் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றுள்ளது. சிலம்புநாதபிள்ளை கருவூர் வெஸ்லி ஆபிரகாம் பாடிய கும்மியை மறுத்து இயற்றியதே 'கிறிஸ்தவ அஞ்ஞானக்கும்மி மறுப்பு' என்பது. இது கொழும்பு புதினலங்காரி அச்சுக்கூடத்திலே பதிப்பிக்கப்பெற்றுள்ளது. ஆயினும், பதிப்பாண்டு பதிப்பிலே தரப்படவில்லை. உடுப்பிட்டி அ. சிவசம்புப் புலவர் ஓமையந்தாதியின் சிறப்புப்பாயிரத்தில் ''பரமத கண்டனப் பனுவலும்... .....செவ்விது செய்தோன்'' எனச் சுட்டுவது இக் கும்மியாயின் ஓமையந்தாதிக்கு (1880) முன் கும்மி அச்சிடப்பெற்றதாகலாம்.

சிலம்புநாதபிள்ளை வவுனியா ஓமந்தையிற் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் வீரகத்தி விநாயகப் பெருமான்மீது பாடிய ஓமையந்தாதி விக்கிரம ஸ்ரு ஐப்பசி மீ (1880) யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையில் நல்லூர் சயம்புநாதர் வீரசிங்கம் அவர்களாற் பதிப்பிக்கப்பெற்றது. இப்பதிப்பிற்கு அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் தலைசிறந்து விளங்கிய மூவர் சிறப்புப்பாயிரம் வழங்கினர். அவர்கள் உடுப்பிட்டி அ. சிவசம்புப் புலவர், சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், சைவ உதயபானு பத்திராதிபர் சு. சரவணமுத்துப் புலவர் என்போராவர்.

ஓமையந்தாதிப் பதிப்பில் இடம்பெறும் அக்கியோன் பெயர் கூறும் செய்யுளையும், கர்ப்பினியையும் நூலிலிருந்து பதினைந்து பாடல்களையும் இலங்கை சாகித்திய மண்டலம் 1966 ல் தொகுப்பித்த ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்திலே காணலாம். 1968 ல் வெளியிடப்பெற்ற இக் கவிதைக் களஞ்சியம் வித்துவான் பொன். கனகசபை, பண்டிதர் செ. துரைசிங்கம் என்போர் உதவியுடன் கலாநிதி ஆ. சதாசிவம் பொறுப்பிலே தொகுக்கப்பெற்றதாகும். இதனுள் இடம்பெறும் ஓமையந்தாதிப் பாடல் களைக் கொடுத்துதவியவர் வித்துவான் F. X. C. நடராசா.

அறுபதுகளின் ஈற்றிலே F. X. C. நடராசா 'ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு' எழுதத் தொடங்கியபோது, அதற்கு உதவியாக விளங்கிய காலத்தில் பல நூல்களுடன் இணைத்துக்கட்டப்பெற்றிருந்த ஓமையந்தாதியினைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது ஓமையந்தாதி வவுனியா ஓமந்தையில் எழுந்தருளியுள்ள தலமூர்த்தி மீது பாடப்பெற்றது

என்பதை அறிந்துகொண்டேன். அதனால் ஓமையந்தாதியை ஆர்வமுடன் பிரதிபண்ணி வைத்தேன். ஓமந்தையைச் சேர்ந்த ஒரு நண்பரிடம் அதனை வெளியிட முயற்சி எடுக்கும்படி கூறியபோது அவர் காட்டிய ஆர்வத்தினால் கையெழுத்துப் பிரதியை அச்சுக்கேற்ப ஆயத்தம் செய்யவேண்டிய நிலை உருவாகியது. கையெழுத்துப் பிரதியை திரு. வ. சிவராசசிங்கம் உதவியுடன் சீர்வரிசை நோக்கி தட்டச்சில் அடிப்பித்து வைத்தேன். முன்பு ஆர்வம் காட்டிய நண்பர் பின்பு தயக்கம் காட்டியதனால் ஏறக்குறைய இருபது ஆண்டுகள் தட்டெழுத்துப் பிரதி என்னிடம் தங்கிவிட்டது. சில ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட அநர்த்தங்களின் போது இவை யாவும் அழிந்துவிடுமோ என்று அஞ்சியதுமுண்டு.

தற்செயலாக திரு. எஸ். இரத்தினப்பிரகாசம் 'ஓமையந்தாதி' பற்றி எம்மிடம் விசாரித்தனர். 'ஓம்' எனும் பிரணவப் பொருளைப் பற்றியதாக ஓமையந்தாதி இருக்கலாம் என்று கருதிய நண்பர் அதனை அச்சிட விரும்பினர். ஓமையந்தாதியின் இயல்பினை எடுத்துக்கூறி அதன் ஆசிரியர் அவருடைய ஊரினர் என்பதை எடுத்துக்கூறினேன். சில மாதங்களுக்கு முன்பு அப்பிரதியினைக் கொடுப்பின் தாம் அச்சிட முயல்வதாகக் கூறினர். அவரிடம் கொடுத்த தட்டச்சுப் பிரதி இன்று அச்சுவாகனம் ஏறுகின்றது.

தமிழிலே எத்தனையோ நூல்கள் அச்சுவாகனம் ஏறுமலே அழிந்து விட்டன. ஒரு முறை அச்சுவாகனம் ஏறிய நூல் மறுமுறை பிரசுரமாகாது அழிவுற்றதுமுண்டு. பத்தொன்பதாம் நூற்றுண்டில் அச்சான பல நூல்கள் இன்று மறைந்துபோன நூல்களின் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டியனவாகிவிட்டன. திரு. இரத்தினப்பிரகாசம் இத்தகைய நூல்களைத் தேடிப் பிரசுரஞ்செய்ய எடுத்துக்கொள்ளும் முயற்சி போற்றப்படல் வேண்டும்; ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

பேராசிரியர் பொ. பூலோகசிங்கம்
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

கோக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் கோவிலில்

எழுந்தருளியிருக்கும்

வேணுகோபாலர் மீது பாடிய

ஒருபா ஒருபஃது

1990-04-05.

ஆக்கியோன்: செ. வேலாயுதரிள்கோ

இருநூன்று கனடாவில் வாழ்பவரும்,

கோக்குவிற்குப் பிறப்பிடமாகக் கொண்டவருமாவார்.

Apt. 31.
105, Roney Lane,
Syracuse,
New York 13210.

அணிந்துரை

அருள்மொழி அரசி, வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்.

சமயத்துறையில் ஆழங்காற்படுதல், அதிலும் சிறப்பாக நூல்கள் இயற்றுதல் எல்லோருக்கும் கைவரக் கூடிய கலையல்ல. அதற்கென்று சில தனிப் பண்புகள் தேவை. சிறப்பாக இறைநெறி நிற்றல், சமயக் காழ்ப் பின்மை, சமய நெறிப்பட்ட குடிவரவு மரபறியும் பண்பாடு, நீரமைய புலமை, பன்நூல் தெளிவு, ஆகியன இணைதல் வேண்டும் இத்தகு மாண்பினை எல்லாம், திரு. செ. வேலாயுதபிள்ளை அவர்கள் இயற்றிய கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வேலுகோபாலர் மீது பாடிய ஒருபா ஒரு பஃது நூலினைப் படிக்கும் போது அன்னரிடம் கண்டேன். எடுத்த பிரதிமைக் கீழே வைக்கத் தோன்றவில்லை. இழுத்துச் செல்லும் எழுத்தாற்றல்; இனிய நிரோட்டம் போன்ற தெள்ளிய நடை; சொற்களின் பொருளறிந்த கோர்வை; தத்துவங்களை எளிமையாகக் காட்டும் பாங்கு; கீதை ஆழ்வார்களின் பாசுரங்கள் இவற்றினின்று எழும் இனிய சுகானுபவம்; அனைத்துமே சிறப்பானவை.

தோற்றம் துடியதனில் தோயும் நிதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தமழுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

என்ற உண்மை விளக்கப் பாடல் ஆடல் வல்லானின் உருவ இலக்கணங்களை தெளிவுறுத்தும். அதைப் போன்றே கொக்குவில் கிருபாகர சுப்பிரமணிய சுவாமி கோயிலின் கோயிற் கொண்ட குழல் ஊதும் கோமானின் திருவுருவ தத்துவத்தை முதல்இருபதைந்து வரிகளில் ஆசிரியர் உணர்த்தும் பாங்கு உளங் கொளற் குரியது.

குழந்தைக் கண்ணனின் அவதாரச் சிறப்பு, ஒருத்தி மகனுய்ப் பிறந்து ஓர் இரவில் ஒருத்தி மகனுய் ஒளித்து வளர்ந்து கோகுலத்தில் செய்த சிறு குறுமபுகள்; தீங்குநினைத்த கஞ்சன் வயிற்றில நெருப்பென நின்ற நெடுமாலின் வீரச் செயலகள்; ஆங்கிரஸ முனிவர் கண்ணனுக்கு ஆன்ம ஞானம் போதித்தது; அதற்கு ஆசிரியர் தருகின்ற அற்புத விளக்கங்கள்; எல்லாமே எழுது சித்திரங்களாக விளங்குகின்றன.

இத்துணை அழகாக சிந்திக்கும் திரு. செ. வேலாயுதபிள்ளை அவர்களுக்கு ஒரு மயக்கம், அது என்ன தெரியுமா. . சைவத்திலும், சைவசித்தாந்தக் கொள்கைகளிலும் ஆழ்ந்த பிடிப்புக் கொண்ட தான் திருமாலைப் பற்றி, வைணவ சித்தாந்தங்களின் உயர்வு பற்றி எழுத முயல்வது நேர்மையாகும்; இந்த சிக்கலான நேரத்தில் தான் ஒளவையாரும் மெய்க்கண்ட தேவரும் வந்து சித்தத்தில் அவருக்குத் தெளிவை ஏற்படுத்தினர். நமது நன்றியை திரு. செ. வேலாயுத பிள்ளைக்குத் தெரிவிப்பதற்கு முன்னர் இவ்விருவருக்கும் தெரிவிக்க வேண்டும். இவர்கள் இல்லையெனில் இச் சிறந்த நூலை அனுபவிக்கும் போது நமக்குக் கிட்டாமலேயே போயிருக்கும்.

பொற்குடத்திற்குப் பொட்டு மிட்ட பொலிவுடன் இரகுவைக் எழுத்தாகிய "உ" கரத்தில் துவங்கி, "உலகே" என இப்பாடல் நிறைவுற்றிருப்பதும் காக்கும் கடவுளாகிய கண்ணபிரானின் திருவருட் செயலே இந் நூலாசிரியர் கொக்குவிற் பெருமான் மீது ஆராத பக்தி கொண்டவர். "உண்ணும் நினும் உயினும்" அவனையே உவக்கின்றவர் கிருபை

யின் ஆகரமாகிய அந்தக் கருணைக் கந்தனே திருப்பள்ளி எழுச்சி பாடி துயில் நீக்கி, அவன் அருள் கேட்டு நிற்கும் இவ் வருளாளரின் சிந்தனை முழுதும் கந்தனும், கண்ணனு மாக வியாபித்து நிற்கின்றனர்.

நிறைவாக

"ஏழை நாட்டிற் இன்தமிழ் சைவம்
வாழ வென்றும் வரந்தரல் வேண்டும்
வறுமையும் பிணியும் வன்செயல் யாவும்
சிறுமையும் நீங்கிச் சீரொடு மக்கள்
ஒற்றுமை பேணி ஊறுகள் போக்கிக்
கற்று வல்லராய்க் கடவுட் பணித்து
சிவாரச்சியத்தை நவமாயாக்கி
மங்கல மாக வாழ
இங்கருள் புரிவாய் ஏழுற வுலகே."

என்று கண்ணன் முன் கரம் ஏந்தி நிற்பது கல்நெஞ்சையும் உருகச் செய்யும்

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே"

'லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

என்று எண்ணக் குன்றின் உச்சியில் ஒளிவிடும் ஆசிரியப் பெருமகனது சால்பை, சான் றாண்மையை வாழ்த்துவதல்லது வேறு வகையறியேன்.

வணக்கம்.

கொழும்பு. 13
13-5-1990.

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் கோவிலில்

எழுந்தருளியிருக்கும்

வேணுகோபாலர் மீது பாடிய

ஒருபா ஒருபஃது

[1]

உலக முவப்ப வுன்றிய விடது
மலரடி காத்தல் மாண்பினைக் காட்டவும்;
மறுபால் மடக்கிய வலக்கால் மண்ணீல்
குறுவிரல் மருவக் குதியினை உயர்த்தி
நாவால் இளம்பசு நக்குபு நிறுத்திய 5

பூவார் சேவடி புவியின் உயிர்களை
உய்ய வைக்கும் செய்கையை உணர்த்தவும்;
பின்புற மாதுவப் பெற்றத்திற் சார்ந்து
நின்ற கோலம் நீணிலத் துயிர்களை
அன்பினிற் சார்ந்தே அந்தமி லாப்பேர் 10

இன்ப மளிக்கும் இயல்பினைக் காட்டவும்;
அரையினி லணிந்த அம்பொன் னுடை
தரையினில் நின்னடி சாரும் அன்பருக்(கு)
அருநிதி பலவும் தருவன் யாவையும்
ஒருபெரும் பூட்கை குறிப்பால்
உணர்த்தவும்; 15

மல்லார் மார்பில் வயங்கும் மாலை
எல்லா வுலகையும் எழின்முத் தாரமாக்
கோத்துச் சூடிய கொள்கையை
உணர்த்தவும்;
பூத்த தாமரை புரையும் செவ்வாய்
இதமுற வேய்ங்குழல் எழிற்கையிற் பற்றி

இதமுற இசைக்கும் ஏழிசைக் கானம்
காதலின் உயிர்களைக் களிகொள மயக்கி
நோதல் போக்கும் நோன்றுள் தலைப்படும்
அத்து விதமெனும் முத்தி நுகர்ச்சி
இத்தனித் தென்பதை இன்பா
யுணர்த்தவும்; 25

---

1. **விளக்கக் குறிப்பு:** இம் முதற் செய்யுள் வேணுகோபால மூர்த்தியைத் தியானிக்கும் வகையில் அமைந்தது.

அடி 5. நக்குபு – நக்கும்வண்ணம் 8. பெற்றம் – பசு. 15. பூட்கை – கொள்கை.

16 – 18. இக்கருத்து கீதையில் கண்ணன் கூறியதை ஒட்டியது (பகவத்கீதை vii 7.)

19. பூத்த தாமரை புரையும் – மலர்ந்த தாமரைப் பூவை ஒத்த.

23. நோதல் போக்கும் நோன்றுள் – பிறவித் துன்பத்தினின்றும் விடுவிக்கும் வலிய திருவடி ('உறுதர்த் தாங்கிய மதனுடை நோன்றுள்' என்னும் திருமுருகாற்றுப்படையையும் நோக்குக.)

25. இறைவனோடு இரண்டறக் கலக்கும் முத்தியின்பம் இத்தகையது என்பதை வேய்ங்குழல் இசையால் வேணுகோபாலர் உணர்த்தினர் என்பது கருத்து.

உச்சியின் முடித்த ஒளிர்மயிற் பீலி
செச்சை யணிந்த செல்வேட் செல்வன்
என்னின் வேறலன் என்னும் உண்மையை
முன்னர்க் கீதையில் மொழிந்தவா
றுணர்த்தவும்;
நீலமேனி நெற்றிக் கண்ணோன் 30

பாலமர் தேவியும் பகலில் யாலைத்
தெளிந்தோர் கண்ட தேற்றம்
தெருட்டவும்;
மறைகளுக் கெட்டா மாயபீலி யாயினும்
நிறையழ கோடு நெடுமால் நீயே
மானுறு கொக்கூர் மருகன் கோயிலில் 35

வேணுகோ பாலனுய் விளங்குவை அடியார்
கண்ணினுங் கருத்தினுங் கலந்துள கடவுள்
எண்ணிற் பலரலன் ஒருவனே என்னும்
மெய்யுணர் வெய்தி மேலாம்
வைதிக நெறியினில் வாழ்தற்
பொருட்டே. 40

[2]

பொருளொடு புவனமும் பொறியொடு
நனவும்
அருளினிற் படைத்தாங் காருயி ருயற்கென
வகுத்துக் காக்குநின் வண்மை யுணராது
பகுத்தறி வதனைப் பாழ்வழிச் செலுத்தி
அறநெறி மறந்தங் கல்லவை பெருக்கி 5

மறநெறி போற்றும் மாந்தர் மிக்குழி
நிலமகள் பாரம் பொருஅள் நினது
மலரடி பரவி மாநிலப் பாரம்
தீர்த்தருள் கென்று திருநெடு மாலே
கூர்த்த துயருடன் குறைவேண் டுதலும் 10

---

26 – 29. 'வீரர்களுக்குள் கந்தன் யானே' என்று பகவான் கீதையில் முன்னர்க் கூறியவாறே, உச்சியில் மயிற்பீலியை அணிந்தமையால் அவ்வுண்மையை வேணுகோபாலர் உணர்த்துகிறார் என்றவாறு. செச்சை – முருகன் அணியும் மாலை; வெட்சிப்பூமாலை, 30 - 32, நீலமேனி – வேணுகோபாலரது நீலமேனி என்க. நெற்றிக்கண்ணோன் – சிவபெருமான்; (அவன், பாலமர் தேவி – அச் சிவபெருமானது இடப்பாகத்தில் உறையும் உமாதேவியார். உமையாளும் நீலமேனியுடையாள்; திருமாலும் நீலமேனியுடையான். புராணங்கள் திரு மாலே உமையாளின் தமையன் என்று கூறுவது மரபு. அதாவது உமை என் னும் சத்தியின் ஆண்வடிவமே திருமால் என்பது. இந்த உண்மையை அப் பர் சுவாமிகள் அறியலால் தேவியில்லே ..... என்று அன்று அழகாகப் பாடி யுள்ளார். சமயவாதியர் சிவனேவேறு; திருமால் வேறு என்றவாறு கூறிக் குழப்பஞ் செய்துள்ளனர். ஆழ்வார். மெய்யுணர்ந்த சான்றோர் (அப்பர், முத லாழ்வார் மூவர், நம்மாழ்வார் போன்றோர்) சிவனும் திருமாலும் வேறல் லர், ஒருவரே என்ற உண்மையைக்கண்டு பாடியுள்ளனர். அக்கருத்தே இங் கும் வலியுறுத்தப்படுகிறது.

35. மானுறு கொக்கூர் முருகன் கோயில் – மாட்சிமைப்பட்ட கொக்கூர் திரு பாகர சிவசுப்பிரமணியர் கோயில் – இங்கே மருகன் என்றது முருகன் திருமா லுக்கு மருகன் என்னும் புராணக்கொள்கை பற்றியது

2. (வி – ரு) இச்செய்யுளில் கண்ணன் அவதாரம் கூறப்படுகிறது. [தனு–உட

அடி. 1. பொருள் – போகப் பொருள்கள்; பொறி – கண் முதலிய அறிகருவிகள்;
2. ஆருயிர் உயற்கென – அரிய உயிர்கள் விடுபேறு எய்துதற்பொருட்டு.
3. அல்லவை – அறமல்லாச் செயல்கள், அடி 7 – 19 வரை; திருமால் பூபாரம் தீர்க்கவே கண்ணனய் அவதாரமெடுத்தார் என்பது. நீ பாரதவம்மில் யாவ ரையும் நீறுக்கிப், பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணு' என்பது வில்லி பாரதம்.

காத்தற் கடவு ளாதலிற் கருணையின்
நீத்திற மொழிக்கத் திருவுளங் கொண்டே
மண்ணிடை வந்து வசுதேவ னென்னும்
புண்ணிய னுக்கவன் பொற்புடை மனையாம்
தேவகி வயிற்றிற் சிருடன் றங்கி 15

ஆவணித் திங்கள் அட்டமித் திதியில்
உரோகிணி நாளில் உற்றதன் ளிரவில்
விரோதி மாமன் விதித்த சிறையில்
அஞ்சன வண்ணத் தழகனுய்ப் பிறந்து
கஞ்சன் றனது வஞ்சங் கடக்கெனக் 20

காவலர் உறங்கவும் கபாடந் திறக்கவும்
தேவர் களிக்கவுந் திருவுளத் தெண்ணி
அற்புதம் நிகழ்த்தினை அக்கணந் தந்தையும்
பொற்புடன் எடுத்துனைப் புறங்கொண் டேகத்
திருவாய்ப் பாடியிற் சிறுறு நந்தன் 25

அருமை மனையாம் அசோதைபாற் கரந்து
வைத்தவ ளின்றபெண் மகவை யெடுத்துக்
கைத்தலத் தேந்திக் கடுகி மறைதலும்
கண்விழித் தெழுந்த காரிகை யசோதை
கண்கொளா நின்னெழில் கண்டுளங் களித்துக் 30

காயாம் பூநிறக் கடவுள் நீயெனத்
தாயா யெடுத்துத் தாலாட்டி வளர்க்கக்
கருமுகில் வண்ணக் கண்ணனுய் வளர்ந்தனை;
அருமையிற் கிடைத்த அமுதென வாய்ச்சியர்
பெருமை பேசப் பிறங்கினை காண்பவர் 35

கண்ணினுங் கருத்தினுங் கலந்துபே ரின்பம்
உண்ணிறைத் தோங்க ஒப்பிலா வாடல்
புரிந்தனை புவியில் விரிந்ததுன் புகழ்
பருவ மழைபெயப் பல்வளஞ் சுரக்குஞ்
மருத நிலஞ்சேர் மாண்புறு கொக்குவிற் 40

பதிநனி மகிழ்ந்த பாலகோ பாலா
துதிசெயு மடியவர் துயரந் துடைக்கும்
வேணுகோ பாலநின் விழுப் புகழ்
பேணு மின்பம் பேரின்ப மாமே.

---

18. விரோதி மாமன் – கஞ்சன்; தேவகியின் தமையன்; வட மதுரையில் அரசாண்டவன்; தங்கையின் வயிற்றிற் பிறக்கும் பிள்ளையால் தனக்கு மரணம் நேருமெனச் சோதிடர் கூறியதனால், தங்கையையும் கணவனையும் சிறையில் வைத்து. அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளை அவ்வப்போதே கொன்று வந்தவன். கண்ணன் மாமன் வஞ்சனையை வென்று, ஆயர்பாடியில் கரந்து வளர்ந்தான்; 21. கபாடம் – கதவு;

25. நந்தன் – நந்தகோபன்; 26. அசோதை – யசோதை ('யசோதா' என்று வட மொழிப் பெயர். தமிழ்நூல்களில் அசோதை என்றே பெரும்பாலும் வழங்கி வருகிறது.) 26 – கரந்து வைத்து தேவகிக்குக் கண்ணன் பிறந்த அன்றிரவே ஆயர்பாடியில் நந்தகோபன் மனைவியான அசோதைக்குப் பெண்மகவொன்று பிறந்தது; திருமால் திருவுளக் குறிப்பினால் வசுதேவர் தம் குழந்தையை அசோதையிடம் வைத்துவிட்டு, அவள் துயின்றுகொண்டிருந்த வேளையில் அவளது பெண்குழந்தையைக் கொண்டு சென்று கஞ்சனுக்குக் காண்பித்தார் என்பது வரலாறு.

29. 30. மகவின்ற னையினுல் துயின்ற அசோதை, கண்விழித்துப் பார்த்தபோது கண்கொள்ளா அழகுடன் விளங்கிய கருநிறக் குழவியே தன் குழந்தையென நம்பிப் பேரானந்தங்கொண்டு, அதனைத் திருமாலின் அவதாரமாகப் பேணி வளர்த்தாள். 31. காயாம்பூ நிறக் கடவுள் – திருமால். காயாம்பூ நீலநிற முடையது 33. கண்ணனுய் வளர்ந்தமை – வடமொழியில் கிருஷ்ணன் என்பது பாகத மொழியாக வந்து தமிழிலே 'கண்ணன்' என வழங்குகிறது. கிருஷ்ணன் என்பதற்குக் கருநிறம் – உள்ளவன் என்பது பொருள். இவி 'க்ருஷ்' என்பது விகாரியடியாக வந்த பெயர் எனக்கொண்டு, அன்பரைத் தன் பால் இழுப்பவன் (க்ருஷ் = இழு) என்றும் விளக்கங் கூறுவர் தமிழில் 'கண்ணன்' என்பது 'கண்' அடியாகப் பிறந்த பெயராகக் கொண்டு, கண்போன்றவன், கண்ணில் நிறைந்து நிற்பவன் என்றெல்லாம் கூறுவாரும் உளர். 35. பிறங்கினை – விளங்கினை. 37. ஆடல் – திருவிளையாடல்.

[3]

ஆம்ப றுறுந் தேம்பொதி கிளவி
ஆயர் மகளிர் நேயங் கூர
அள்ளி யணைத்துத் தெள்ளமு தூட்டிக்
குஞ்சி திருத்திக் கொஞ்சி மகிழ்ந்து
பூத்துகின் மெத்தை ஆய்ந்து விரித்துத் 5

தொட்டிலில் வைத்துத் துயில்கொள நாவால்
தாலே லோவெனத் தாலாட்டுப் பாடக்
காலைப் பிடித்துக் கவிவாய்க் கொணர்ந்து
பெருவிரல் சுவைக்குந் திருமிகு கோலம்
கண்ணிற் கண்டவர் புண்ணியப்
பேறெனப் 10

பற்பல வாய அற்புதம் புரிந்தனை
அதிசயக் குழந்தை இதுவென அயலெலாம்
பேசிய செவிப்படக் காய்சின மாமன்
சுஞ்ச னேவிய வஞ்சப் பூதனை
தாயென வந்து தழுவி முலைதரப் 15

பேயவள் பாலுடன் பிணங்குயி ரொருங்குண்
டிறென் றின்றி வீறுகொண் டிருந்தனை;
மண்ணினை யாட்டில் மகிழ்ந்துழி யொருநாள்
மன்சிறி தாங்குநின் மலர்வாய்க் கண்ட
ஒண்ணுத லசோதை ஒஒ கண்ணு 20

மண்ணுண் டாயோ வாய்திற வென்று
கைச்சிறு கோல்கொண் டச்சுறுத் துதலும்
உண்டிலன் என்றுவாய் விண்டங் காந்தை
அகில வுலகமும் ஆங்கே காட்டித்
திகில்கொள வைத்துத் திருமால் நீயெனக் 25

குறிப்பா லுணர்த்தினை; கோபியர் மனைதொறும்
உறிப்பால் வெண்ணெய் உண்டனை திருடி;
ஆச்சியர் குறைசொல அசோதை கடிந்தொரு
தாம்பால் உரலொடு தளைந்துவைத் திடுதலும்
தேம்பி யழுது தாம்பினை யிர்த்துத் 30

---

3. (வி – கு.) – (இச் செய்யுள் குழந்தைக் கண்ணன் குறும்புகள் கூறுவது)

அடி 11. ஆம்பல் நாறும் தேன் பொதி கிளவி ஆயர் மகளிர் – ஆம்பல் மலரின் நறுமணம் வீசுகின்ற, தேன்போலு இனிமைபொருந்திய சொற்களைப் பேசுகின்ற ஆய்ச்சியர்; நாளும் பால், தயிர், நெய் ஆகியவற்றை உண்டுவருதலால் ஆயர்மகளிருடைய வாய் அவர்கள் பேசும்போது ஆம்பல் மணம் வீசும் என்க. கிளவி – சொல்: இங்கே இடவாகு பெயராய் வாயைக் குறிக்கின்றது. 4. குஞ்சி – (ஆண்) தலைமயிர். 8. கவிவாய்க் கொணர்ந்து – கொவ்வைக் கனிபோன்ற வாய்க்குக் கொண்டுவந்து 10. அக்காட்சியைக் கண்டவர் அது தமது புண்ணியப் பேறு என்று ஆனந்தங்கொள்ள, என்க. 13 பேசிய – பேசிய பேச்சுகள். 16. பேயவள் பேயாகிய அவள்; பிணங்கு உயிர் – மாறுபட்ட உயிர், கண்ணனை முலையூட்டிக் கொல்ல வந்தவளாதலின் அவளுயிர் பிணங்குயிரெனப்பட்டது 17 ஒருங்கு – உண்டு ஊறு + ஒன்று இன்றி 23. உண்டிலன் நான் உண்ணவில்லை; வாய்விண்டு-வாயைத் திறந்து விடைகூறி; அங்காந்து – வாயை நன்றாகத் திறந்து; வாய் விள்ளல் – மெல்லத் திறந்து விடை கூறுதலையும், அங்காத்தல் வாயை முற்றாகத் திறந்து காட்டுதலையும் குறிக்கும் 24–26, கண்ணன் வாயை அங்காந்து காட்ட அங்கே அகில உலகையும் அசோதை கண்டு திகில் கொண்டாள்; அவளுக்கு 'நான் திருமாலின் அவதாரம்' என்பதனைக் குறிப்பாக உணர்த்தினாய். கோபியர் – இடைப் பெண்கள். 26. உறிப்பால் வெண்ணெய் திருடி உண்டனை – உறியின்கண் வைத்திருந்த வெண்ணெயை என்க. 27. கடிந்து – கோபித்து எச்சரித்து, 28. தாம்பு – கயிறு; தயிர் கடையும் கயிறு, தளைந்து – கட்டி, 30. ஈர்த்து – இழுத்து.

தவழ்ந்தவ ணிண்ற தருவிரண் டுடே
உவந்துசென் றுரசூ புன்வி யிழுத்து
மருதவை வீழ்த்தி மாமுனி யாணையின்
தருவாய் நின்றவர் சாபந் தீர்த்தனீ;
ஆயர் பாடியில் அணைவருங் கனிப்பிற் 35

ரேயப் பலப்பல துடுக்குகள் செய்தனீ
சிறுமியர் பலருந் தேன்குட மொய்க்கும்
எறும்பெனச் சூழ்ந்திடக் குறும்புசெய் தலரை
அழவழ வைத்தே ஆனந்த மூட்டினீ;
பழமுதிர் சோலை பயிலுங் கொக்கூர் 40

வாணர் வாழ வந்திலி தமர்ந்து
வேணுகோ பாலநின் விளோயாட் டெல்லாம்
எண்ணு மன்பர் இதயம்
வெண்ணை யாக்கி விருத்தயர் வாயே.

[4]

வாய்மொழி போற்றும் வான்முகில் வண்ணை,
தாய்வயிறு துலக்கிய தாமோ தரநீ
ஆயர் சேரியில் ஆநிரை மேய்க்கும்
மாயக் கண்ணையுய் மயிற்பீலி யணிந்து
பீதக வாடை பிறங்க வுடுத்துத் 5

தாதவிழ் மலர்த்தார் தயங்கச் சூடி
அருங்கல வருவின் அழகனுய்த் தோன்றித்
திருந்திய வேய்ங்குழல் செங்கையிற் பற்றி
அடிமலர் சேப்பப் படியில் நடந்து
காலிகள் பின்னே காடுசார் நிலஞ்சென்று 10

தோலெடுத்தடிக்கும் கொடுமை தவிர்த்து
நிறைபசும் புல்லும் நீரும் நிழலும்
கறவைகள் தமக்குக் கனிவுடன் காட்டி
ஆங்கொரு மரக்கிழ்ப் பாங்கா யமர்ந்து
நீங்குழல் எடுத்துத் திருவாய் வைத்துச் 15

சிறுவிரல் தடவச் செவ்வாய் கொப்பளிப்பக்
குறுவெயர் புருவங் கூடலிப்பச் செங்கண்
கோட லுதிக் குழலிசை யெழுப்பிக்
காடக மடங்கலுங் கானவெள் ளத்தில்
திளைக்க வைத்தனீ திப்பிய விசையால் 20

---

31 தவழ்ந்து + அவண் + நின்ற + தரு + இரண்டு + ஊடே – அவண் – அவ்விடத்தில்; தரு இரண்டு – இரட்டை மரங்கள்; அவை மருதமரங்கள் என நூல்கள் கூறும். 34. மாமுனி ஆணையின் – முனிவரொருவரின் சாபத்தால் இருவர் இரட்டை மரமாகி நின்றனர் என்றும், குழந்தைக் கண்ணன் அம் மரங்களை விழுத்தி அவ்விருவருக்கும் சாபவிமோசனம் அளித்தான் என்றும் புராணங் கூறும். 35. கனிப்பில் தோய – இன்ப வெள்ளத்தில் மூழ்க. 40. பழம் உதிர் சோலை – கனிகள் உதிர்ந்து விழுகின்ற சோலைகள். கொக்கூர் வாணர் – கொக்குவிற் பதியில் வாழ்வோர்; வாழ்நர் என்பது மருவி வாணர் என நின்றது. 43 – 42. உன் திருவிளையாடல்களைச் சிந்திக்கும் அன்பர்களுடைய இதயத்தை வெண்ணெயாகக் குழையச்செய்து அந்தப் புதுவெண்ணெயை விருந்தாக உண்பாய்.

4. (வி – சு) (இச் செய்யுள் கண்ணன் குழலிசைச் சிறப்புக் கூறுவது.)

அடி 1 வாய்மொழி – வேதம்; நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி எனவுங் கொள்ளலாம். 2. தாய்வயிறு 'தாயைக்' குடல்விளக்குஞ்செய்த தாமோதரன் என்பது ஆழ்வார் வழக்கு. 5. பீதக ஆடை – பட்டாடை, பீதாம்பரம். [குழலூதுங் கண்ணன் கோல வருவினை பெரியாழ்வார் பாடல்களை அடியொற்றியது.] 8. திருந்திய வேய்ங்குழல் – குற்றமில்லாத மூங்கிலாற் செய்யப்பட்ட குழல். 9. சேப்ப – சிவப்ப, படியில் – நிலத்தில். 10. காலிகள் – பசுக்கள் காடுசார் நிலம் – முல்லை நிலம். 13 கறவைகள் – பால்தரும் பசுக்கள். 17. குறுவெயர் .. – புருவத்தில் வெயர்வை அரும்பித் தோன்ற, செங்கண் கோட – தாமரைபோலுய சிவந்த கண்கள் வளைந்து ஒருங்க. 19. காட்டகம் என்பது காடக என விகாரப்பட்டது. கானவெள்ளம் – இசைவெள்ளம். 20. திப்பிய – தெய்வத்தன்மையுடைய.

முளைத்தன புதுப்புல் முதுமரம் தளிர்த்தன;
பூத்தன மரங்கள் புதுமதுச் சொரிந்தன;
ஏத்துவ போல இறைஞ்சின கொம்பர்
காலப் பறவைகள் வானிற் பறந்து
சூழ்ந்து வந்து தாழ்ந்து கிடந்தன; 25

ஆக்கள் நின்றுங் கரைவில வாகி
நோக்கி நின்றிசை நுகர்ந்தன செவியால்;
காட்டு விலங்குகள் கேட்டு மயங்கி
வேட்ட மறந்து விரவி நின்றன;
புலியின் மருங்கிற் புல்வாய் நின்றன; 30

வலியவை தம்மொடு மெலியவை மேவின;
மயிலும் பாம்பும் மகிழ்ந்துற வாடின;
குயிலும் கழுகும் குலாவி மகிழ்ந்தன;
இயற்கையிற் பகையாய் இயங்குவ
வின்னணம்
இயற்பகை மறந்துநின் றிசைவயப்
படநீ 35

முல்லையிற் பொழிந்த முறைமையிற்
பின்னும்
நல்லியற் கன்னியர் நசையொடு சூழ்வரப்
பிருந்தா வனத்திசை விருந்து வழங்கினை;
குழலிசைக் குருகிய மழலைமென்
மொழியார்
காதலிற் கசிந்து கண்ணீர் உகுக்க 40

ஆதித் தவர்க்கெலாம் ஆன்ம நாயகனுய்
ஆரா வின்பம் அளித்தனை; ஆயினும்
பேராக் காதற் பின்னைப் பிராட்டிக்குத்
தலையளி செய்தனை, தமிழொடு சைவம்
நிலைபெறுங் கொக்கூர் நீள்பதி மேவி 45

வேணுகோ பாலனுய் விளங்குவை
பேணுநர்க் கருளப் பேரின்ப விசையே.

---

21. பசுக்கள் மேய்ந்த நிலத்தில் குழலிசையால் புதுப்புல் உடனே முளைத்தன என்க. முதுமரம் – இலைகள் உதிர்ந்து பட்டுப்போகின்ற மரங்கள்; 23. மரங்கள் கண்ணனைத் தொழுவன போலக் கொம்பர்கள் தாழ்ந்தன என்க.

26 – 27. பசுக்கள் நின்ற இடத்திலேயே அசைவிற்று நின்று, உன்பக்கம் முகந் திருப்பி உன்னையே நோக்கியவண்ணம் தம் செவிகளால் இசையை நுகர்ந்தன, என்க நின்றிசை நோக்கி – நின் + திசை நோக்கி எனவும்; நோக்கி நின்று + இசை நுகர்ந்தன எனவும் கொள்ளலாம். 28 வேட்டம் – வேட்டையாடுதல், பிறவிலங்குகளைக் கொன்று உண்ணும் மறவிலங்குகள் இரை தேடுவதை மறந்து அத்தகைய விலங்குகளோடு கலந்து நின்றன என்க. விரவி – கலந்து.

30. புல்வாய் – மான்; 34. இன்னணம் இவ்வண்ணம்; இவ்வாறு. 36. முல்லை – காடும் காடுசார் நிலமும் 37. நல்லியற் கன்னியர் – கோபியர்; இவர்கள் ஒழுக்கந் தவறியவரல்லர் என்பதற்காக நல்லியற் கன்னியர் எனப்பட்டனர். நசையொடு – ஆசையோடு. 37 – 42. ஆயர் கன்னியர் கண்ணன் குழலிசை கேட்டு உருகி, அவன்பாற் காதல் கொண்டு கண்ணீர் வடித்தனராக, கண்ணன் அவர்களுக்கெல்லாம் தான் ஆன்மநாயகனுய் அன்பு செய்தான் என்பது கருத்து வடமொழிப் பாகவத புராணத்திலும் பிறநூல்களிலும் கண்ணன் கோபியர்களுடன் காதல் லீலைகள் புரிந்து களித்தான் என்று கூறப்படினும், தமிழ்ப் புலநெறி வழக்குப்பற்றி இவ்வாறு கூறினும். 43. பின்னைப் பிராட்டி – வடமொழி நூல்கள் இவள இராதை என்று கூறும். தமிழ்நூல்களில் இவள் பின்னை, நப்பின்னை என்று கூறப்படுகிறாள் 45 – 47. பேணுநர் அன்பருக்குப் பேரின்ப இசை அருளும் தமிழும் சைவமும் நிலைபெறும் கொக்கூரில் பதியில் வேணுகோபாலனுய் விளங்குகின்றாய் என்பது கருத்து, பேரின்ப இசை – இறைவனோடு உயிரை சேரவைக்கும் அதய்வீக இசை. வழிபடுவோரின் உள்ளத்தை உருக்கிப் பண்படுத்தி இறைவனோடு இசைவுறச் செய்யும் இசை என்பது குறிப்பு.

[5]

இசைவுறு மன்பர் இதய மீர்க்குந்
திசைமுகற் பயந்த திருமால் மண்ணில்
அவதரித் தெம்மை ஆட்கொண் டெமது
பவவினை தீர்க்கப் பாலனு யினையென்(று)
ஆயர் பாடியில் அனைவரும் போற்ற 5

மாயமாய்த் தோன்றி மண்டலித் தெழுந்த
காட்டுத் தீயினைக் கடிதின் விழுங்கி
மாட்டினங் காவலர் வாட்டம் போக்கினை;
கஞ்சன தேவலால் வஞ்சகச் சகடன்
பாயுங் கன்றைநின் பக்கற் செலுத்தி 10

மாய விளங்கனி மரமாய் நின்றுனைக்
கொல்லும் சூழ்ச்சி குறித்தன னாக
நல்ல விளங்கனி நாம்பெற் றோமென
நக்கு நண்பரொடு பக்கல் நின்ற
கன்று குணிலாக் கனியுக வெறிந்து 15

கொன்றனை சகடனைக் கொல்கன் றுடனே;
கண்ண, நீபுரிந்த கைவண்ண மெத்தனை;
எண்ணுதோ றுள்ளம் இறும்பூ தெய்துமே;
புனித யமுனைப் பொய்கையின் நன்னீர்
இனிதுணும் பசுக்கட் கிடர்விளைத்
தாங்குக் 20

கடுவிடங் கான்றுவாழ் காளிங்கன் தலைமீது
திடுமெனக் குதித்துத் திருநட மாடி
ஆங்கதன் கொற்றம் பாங்கா யடக்கிப்
பாதலத் தேகெனப் பகைதணித் தருளினை;
மாத மூன்று மழைபெய வேண்டியும் 25

ஆனினம் வாழவும் வானவர் கோனுக்கு
ஆய ரெடுக்கும் ஆண்டு விழவினை
நீயுனக் கெடுக்கென நிகழ்த்தினை யதனால்
சீற்றங் கொண்ட தேவர் கோமான்
காற்றுக ளனைத்தையுங் கடிதி
னழைத்தே 30

ஆயர் தம்மோ டானினம் யாவும்
மாயும் வண்ணம் மழைபொழி வீரென
ஏவிட அவைதாம் இருங்கடல் உறிஞ்சிச்
சோவெனச் சோனு வாரி தொடர்ந்து
பொழிதலும் ஆயர் புகல்நீ எம்மை 35

---

5. (வி – கு.) இச் செய்யுள் கண்ணன் அற்புதச் செயல்கள் கூறுவது.

அடி. 1 – 2. இதயமீர்க்கும் திருமால் என்றுகொண்டு கூட்டுக. கிருஷ்ணன் என்னும் வடசொல்லும் அன்பர் இதயத்தை ஈர்த்திழுப்பவன் என்றும் விளங்கங் கூறுவர். திசைமுகன் பிரமன். பயந்த – பெற் ; பிரமன் – திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றியவன். 4. பவவினை – பிறப்புக்குக் காரணமான வினை. பாலன் என்பதற்குப் பசுக்களைக் காப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம், 8. மாட்டினம் காவலர் வாட்டம் – மாடுகளினதும் கோபாலரதும் வாட்டம் என்க 10 பாயுங்கன்று – பாய்ந்து கொல்வதாகக் சகடனால் விடப்பட்ட ஆன்கன்று. 11. மாய விளங்கனி மரம் – நச்சுக்கனிகளுடன் கூடிய விளமரம். 14. நக்கு – சிரித்து, நண்பரோடு நக்கு என்க. நல்லரிய கனி, என்றது இகழ்ச்சிக் குறிப்பு, 15. குணில் – குறுந்தடி ; கன்றையே குணிலாகப் பற்றிக் கனிகள் விழ எறிந்தான் கண்ணன்- 18. இறும்பூது – வியப்பு, ஆச்சரியம். 19. யமுனைப் பொய்கை – யமுனைநதிக் கரையில் உள்ள பொய்கை; 21. கடுவிடம் கான்று-கொடிய நஞ்சைக் கக்கி' 22. தலைமீது திடுமெனக் குதித்து - கண்ணன் பொய்கைக் கரையில் நின்ற ஒரு மரத்தில் ஏறிக் காளிங்கன் தலைமீது திடீரெனக் குதித்தான் என்க. 24 பாதலத்து ஏகுஎன - நீ உனது உறைவிடமான பாதலத்துப் போ என்று பகை தணிக்து அருளினை – கருடனுக்கு அஞ்சி அப்பொய்கையில் வந்து தங்கின பாம்பின் பகையைத் தணித்து, அதாவது கருடன் மீண்டும் தாக்காதவாறு தடுத்து அதனைக் கொல்லாது மீண்டும் பாதலத்துக் கேகி நாகராசனாய் வாழுமாறு அருள்செய்தாய். 26 – 28. ஆயர் ஆண்டுதோறும் இந்திரனுக்கு எடுக்கும் விழாவை நீ உனக்கே எடுக்குமாறு சொன்னாய் 35. ஆயர், நீயே எமக்குப் புகல்; எம்மை அழிவின்றும் காப்பாற்றுவாய்; அபயம் அளிப்பாய், கோபாலா' என்று இரந்து கேட்க நீ குறுநகை புரிந்து, கோவாத்தன மலையைக் குடையாக எடுத்துப் பிடித்து மழையைத் தடுத்தாய்.

அறிதலிற் காப்பாய் அபயந் தருவாய்
கோபா லாவெனக் குறுநகை புரிந்து
கோவர்த் தனகிரி குடையா குகவெலா
எடுத்துப் பிடித்தே தடுத்தனை மழையை;
பொதுவர் ஆனெடு புகுந்தந் நிழறனீ 40

விதிமுறை யுனக்கே விழுவயர்ந்
தார்த்தார்;
இந்திரன் வெள்கி இறைநீ யென்றே
அந்தரத் திழிந்துவந் தடியினை வணங்கிச்
செற்றந் தணிந்தேன், செருக்கொழித்
தேனென்
குற்றம் பொறுத்தருள் கோவிந்தா
வென 45

இரத்திட வவர்க்கு வரத்தந் தனைநீ;
குயில்பயில் சோலைக் கொக்கூ ரான்கண்
மயிலுகந் தூரும் மருகனுக் கெடுத்த
பொற்புறு கோவிலிற் பொலிவை நின்
அற்புதம் யாரே அறியகிற் பாரே. 50

[6]

பாரக மடங்கலும் ஓரடி வைத்துத்
தாவி முன்னர் மூவுல களந்த
வாமனன் நீயே காமுறு கண்ணை
பாரதம் பண்ணப் பாரினில் வந்தநீ
ஆரண முதலா அருங்கலை பலவும் 5

ஓதா துணரும் உணர்வினை யாயினும்
நாதா ஏலுகோர் நன்முறை பேணிச்
சாந்தீப னென்னும் தவமுனி தன்பாற்
போந்து பணிந்து பொருந்துவ புரிந்து
குருகுல வாசம் குசேலனெடு செய்து 10

பெருகு நட்பிற் பிணிப்புண்டு பின்னர்
ஒங்கிய சிறப்பின் ஆங்கிர சன்பால்
அணுகி யந்தணர் அருமறை வேள்வியின்
நுணுகியல் பெல்லாம் நுவலக் கேட்டும்
ஆய்தவ மிகை அந்தண்மை நேர்மை 15

வாய்மை யெனவை வழுவா தொழுகல்
குரவருக் காகும் கொடையெனக் கேடும்
மரபினில் உலகியல் மறைதனை
குணர்ந்தபின்
ஆன்ம ஞானம் அவன்பாற் கேட்டனை;
ஆன்மா நீயே அதுநீ ஆவாய், 20

---

40. பொதுவர் – ஆயர். 41. விழுவயர்ந்து ஆரவாரித்தனர். 42. வெள்கி– வெட்கங்கொண்டு. 46. இரந்திட – செருக்கடங்கிப் பணிந்த இந்திரனுக்கு விண்ணரசை மீண்டும் அளித்து வரந்தந்தாய். 47. முருகனைத் திருமால் மருகன் என்பது நூல் வழக்கு.

6. (வி – கு.) இச் செய்யுள் கண்ணன் முனிவர்பால் அணுகி மெய்யுணர்ந்தமை கூறுவது. அடி 4 பாரதம் பண்ணை – பாரதப் போரை நடத்த; பாரில் தீயரை அழித்துப் பூபாரம் தீர்க்கவென்றும் (பார் + அதம் + பண்ணை) குறிப்புப் பொருள் கொள்ளலாம். 5. ஆரணம் – வேதம். 6. ஓதாது உணரும் உணர் வினை – இயற்கையறிவுடையாய் 8. கண்ணன் சாந்தீப முனியிடம் குசேலரோடு குருகுலவாசம் செய்தமை பாகவதத்தில், குசேலோபாக்கியானத்திற் கூறப்பட்டுள்ளது, நட்பிற் பிணிப்புண்டது குசேலரோடு. 12. கண்ணன் கோர ஆங்கீரசனிடம் ஆன்மஞானம் பெற்றமை சாந்தோக்கிய உபநிடதத்தில் (சாந. உப. iii. 16. 6.) கூறப்பட்டுள்ளது, 14. வேள்வியின் நுணுகு இயல் பெல்லாம் – நுட்பமான விளக்கம் யாவும். 15. ஆய்தவம் – ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கும்; அந்தண்மை – கொல்லாமை, அகிம்சை: வேள்வி செய்யும் புரோகிதருக்குச் செல்வத்தைக் கொடுக்கும் உண்மையான காணிக்கை, தவம், தானம், நேர்மை, அகிம்சை, சத்தியம் எல்லாம் இவற்றைக் கடைப் பிடித்தலேயாம் என்று ஆங்கிரசன் உபதேசித்தான். 18 உலகியல் மனவே தத்தின் கருமகாண்டம் – இது வேள்வி செய்வதை விளக்குவது.

மொழியுமிம் மூன்றையும் முடிவினில் ஓர்க;
அழிவில் லாய்நீ, அசைவில் லாய்நீ
உயிர்முதல் நீயே உறுதி யிவையெனச்
செயிரறத் தெருட்டத் தெளிந்தனை;
பின்னர்
ஒப்பில் சிவமுனி உபமன் னியன்பால்

திப்பிய மாஞ்சிவ தீக்கை பெற்றுச்
சிவோகம் பாவனை சிறப்பாச் செய்து
சிவமே பிரமம் செம்பொருள்
மெய்ப்பொருள்
உவம னிலாப் பொருள் உள்பொருள்
ஒருபொருள்
பரம்பொருள் அதற்குப் பலபெயர்
பேசுவர்

அரன் அரி அம்மை ஆமிவர் ஒருமைத்
திறந் தெளிந் தன்றே திருவாய் மலர்ந்தே
அறந்தெரி வித்தனை ஆண்டகை நீயே
கொத்தலர் மணங்கமழ் கொக்குவிற்
பதியிற்
பத்தர்கட் கருளும் பான்மையில்
வேணு

கோபால னாகக் கோயில் கொண்டது
பூபாரந் தீர்க்கப் புரிந்ததின் புணர்ப்பே.

அடி 20 சாந்தோக்கிய உபநிடதத்தில் கோர ஆங்கிரசன் கண்ணனுக்கே கூறிய ஆன்ம விளக்கம்; நீயே ஆன்மா (உன உடலன்று); அது (= பிரமம் என்னும் பரம் பொருள்) நீ (= ஆன்மாவாகிய நீ); ஆவாய் (= ஆகுவை) 'தத்துவம் அளி' (தத்துவமசி) என்பது உபநிடதங்கள் கூறும் மகாவாக்கியம். இதற்கு வேதாந்த வித்தகர் வெவ்வேறாக விளக்கங் கூறுவர்; ஏகான்மவாதக் கோட்பாட்டை நிறுவிய சங்கரர் ஆன்மாவே பிரமம்; இரண்டும் ஒன்றே; இரண்டல்ல என்று 'அத்துவிதம்' என்பதற்கு விளக்கங் கூறுவர். விசிட்டாத்துவிதக் கோட்பாட்டை நிறுவிய இராமானுசர். (எனது உயிர் எனது உடலுக்கு ஆன்மாவாய் இருப்பதுபோல,) விட்டுணு எனக்கு ஆன்மாவாய் இருக்கிறார்' என்று விளக்குவர். இராமானுசர், (பிரமம் என்பது விட்டுணுவே (+ கடவுளே) என்று கொள்வர். 'துவைதம்' என்னும் இருமைக் கோட்பாட்டை நிறுவிய மத்துவர் கடவுள் வேறு; ஆன்மா வேறு என்று கொள்வர்; 'தத்துவமசி' என்னும் மகாவாக்கியத்துக்கே மத்துவர், கூறும் விளக்கம் இது: எனது, உனது என்னும் வேற்றுமையை நாம் விடவேண்டும் எல்லாப் பொருளுப் கடவுளது ஆணைக்குக் கட்டுப்பட்டனவே என்று கொள்ள வேண்டும் என்பது 'துவைதாத்துவிதம்' என்னும் இருமையொருமைக் கோட்பாட்டை நிரவிய திம்பார்க்கர், உயிர் (சீவன்), உலகம் (சகம்), கடவுள் என்னும் இம்மூன்றும் தனித்தனி வேறானவை; ஆயினும் உயிரின் இருப்பும் செயற்பாடும். உலகத்தின் இருப்பும் செயற்பாடும் கடவுளின் விருப்பத்திலே தங்கியுள்ளவை என்று விளக்குவர். சுத்தார்த்துவிதக் கோட்பாட்டை நிறுவியறல்லவர் மாயையால் மறைக்கப்படாத தூய நிலையிலே உயிர் (சீவன்) முழு முதற் பிரமத்தின் வேறானதன்று; இரண்டும் ஒன்றேயாகும் என விளக்கங் கூறுவர். இனி, சுத்தாத்துவித சைவசித்தாந்தம் கோட்பாட்டை நிறுவிய மெல்கண்டதேவர், உயிர், (பசு) முதல்வன் (பதி), தனை (பாசம்) என்பன மூன்றும் வேறுவேறான மூப்பொருள்கள் என்றும், பாசத்தின் நீங்கிய உயிர் பதியின் தன்மைபெற்றுப் பதியோடு இரண்டறக் கலக்கும் என்றும்; அந்த முத்தி நிலையிலும் பதி ஆண்டானே என்றும், உயிர் அடிமையே என்றும் மிக நுட்பமாக விளக்குவர். 'தத்துவமசி' என்பதை ஆன்மாவின் பாவனை, (தியானம்) என்று கொள்ளவேண்டும் இதற்கு நேராகச் சைவசித்தாந்திகள் சிவோகம் பாவனை (சிவ + அகம் = சிவனே நான்) செல்வர். தீயிற் காய்ச்சிய இரும்பு தன் நிறம் மாறித் தீயின் நிறமாகவே மாறுவதுபோலச் சிவத்தை அணுகிய உயிர், மலம் முற்றாக அற்றுப்போகச் சிவமாக நிற்கும். இந்தப் பேருண்மையை மணிவாசகப்பெருமான் 'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட

அத்தன்' என்று அருமையாக விளக்கியுள்ளார். மெய்கண்டார் சங்கரரின் கொள்கையை மறுப்பார்போல, 'தன்னை அறிவித்துத் தான்தானாச் செய்தானைப் பின்னை மறத்தல் பிழை' என்று சைவசித்தாந்தக் கொள்கையை வலியுறுத்துகிறார்.

அடி: 21 – 22: அழிவில்லாய் நீ (அக்ஷிதம் அளி;) அசைவில்லாய் நீ (அச்யுதம் அளி;) உயிர் முதல் நீயே (பிராண ஸம் ஜீவிதம் அளி) [சாந்தோக்கிய உபநிடதம், III, 17, 6.]

24 – செயிர் அற – சந்தேக விபரீதம் அற்றுப்போக, ஐயந்திரிபில்லாமல்

25 – கண்ணன் உபமன்யு முனியாற் சிவதீக்கைபெற்ற வரலாறு மாதவச்சிவஞான முனிவரால் அவர் இயற்றிய சிவஞானபோதம் சிற்றுரையிலும் சிவஞான மாபாடியத்திலும் கூறப்பட்டுள்ளது. "கண்ணன் உபமன்னியு முனியாற் சிவதீக்கை பெற்றுத் தன்னையுந் தலைவனையு முணர்ந்தோனாதலிற சிவோகம்பாவனையைத் தலைப்பட்டோனாதல் அறிக. அருச்சுனன் கண்ணன்மேலிட்ட போதுகள் முதல்வன் திருமுடிமேற் கண்டது (பாரதம், துரோபணபருவம் 81–2)... இவ்வொற்றுமைபற்றியன்றே முதல்வனது விச்சுவரூபத்தைத் தான் நாட்டியதும். 'யானே யுலகமெல்லாம்' என்றதும், 'ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுக என்றதும்." (சிவஞானபாடியம பக்கம் 118–சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு.)

27 – 32. கண்ணன் தெளிந்த உண்மை: சிவம் என்றும், பிரம்மம் என்றும், செம்பொருள் என்றும், மெய்ப்பொருள் என்றும், உவமனிலாப்பொருள் என்றும், உள்பொருள் என்றும் ஒருபொருள் என்றும், பரம்பொருள் என்றும் மெய்நூல்கள் கூறும் முழுமுதற் பொருள் ஒன்றே; அதுவே கடவுள்; அதுவே தெய்வம, அவ்வச்சமயத்தார் அதற்குச் சிவன், விட்டுணு முதலிய பல பெயர்கள் கூறுவர், அரன் – சிவன்; அரி – விட்டுணு; அம்மை – சத்தி. சைவர் கூறும் சிவனும், வைணவர் விட்டுணுவும, சாக்தர் கூறும சக்தியும் எல்லாம் ஒரு தெய்வமே எனனும் இந்துமதத்தின் உயிர்நிலையான உண்மைமையைத் தெளிந்து, கண்ணன் பாரதப்போரில் அருச்சுனனுக்குக் கீதை உபதேசித்தான் என்பது. அரன், அரி, அம்மை ஆம் – இவர் ஒருமைத் திறம் தெளிந்து அன்று (பாரதப்போரில்) திருவாய் மலர்ந்து அறம் தெரிவித்தனை (அர்ச்சுனற்கும் உலகுக்கும கீதையாகிய அறத்தைக் கூறினாய்.

33. ஆண்டகை – புருடோத்தமன் என்பதற்கு நேரான தனித்தமிழ் வழக்கு.

34, கொத்தலர் மணம் கமழ் – குலைகுலையாகப் பூக்கும் மலர்களின் நறுமணம் வீசும் கொக்குவில். பல்வேறு சமயச் சான்றோர் தம் சமயப்படி தெய்வம்பற்றிக கூறும் கொள்கைகள் நிலவும் கொக்குவில் என்பது குறிப்புப் பொருள்.

36 – 37. கொக்குவிற் பதியில் வேணுகோபாலனாய் நீ கோயில் கொண்டது, முன்னம் பூதேவிக்கு நீ கொடுத்த வாக்குப்படி, தீயோரை அழித்து நல்லோரைக காத்துப் பூபாரந் தீர்க்கும் உன் திருவுளக் குறிப்போ என்பது பொருள். கொக்குவில் முதலிய இடங்களில் அண்மையில் நிகழ்ந்த போரழிவுகளை உட்கொண்டவை இச்செய்யுள் அடிகள் புணர்ப்பு – சூழ்ச்சி, திட்டம், அது கடவுளுக்கு ஆகுங்கால் அவரது திருவுளக் குறிப்பை உணர்த்தும்.

[7]

புணர்ப்பு வல்ல போல்லாக் கஞ்சனை
வணங்குதல் விரும்பி வன்படை கொண்டு
வடபால் மதுரை வாயிலை யடைந்து
மடமார் நெஞ்சனை மண்டமர்க் கழைத்தாய்:
முன்னுட் கணியர் மொழிந்ததை யெண்ணித்
தன்னுட் கலங்கினும் தறுகண் மையினால்
வெல்வது குறித்துக் கொல்களி றதனை
மல்லர் பலரொடும் ஒல்லையி னேவிட
மதம்பொழி களிறும் மருப்பிவிற் கோத்துனை
வதஞ்செயு மாறெதிர் வருவது கண்டு
வீறுகொண் டெழுமில வெஞ்சின மடங்கல்
ஏறென முழங்கி யிருங்கையால் மருப்பைப்
பற்றி முறித்துப் பத்தெனக் களிற்றை
ஏற்றி யுதைத்தும் எதிர்வரு மல்லரை
முறைமுறை பற்றி நெறநெற நெரித்தும்
கறங்கெனச் சுழன்று மறங்கெட மிதித்தும்
கொன்று குவித்தொரு குன்றென நின்றனை;
கண்ட கஞ்சன் கதங்கொண் டெழுந்து
திண்டிறற் படையொடு செருக்களம் புக்குப்
போருக் கனழக்கப் பொருபடை யொடுநீ
நேருக்கு நேர்நின்று நெடுஞ்சமர் புரிந்து
வஞ்சனை யினியும் வைத்தலா காதென
தெஞ்சி லெண்ணி நேமியை விடுத்துக்
கொன்றவ ரசுங் கொண்டனை: ஆங்கே
மண்ணு மங்கல விழாக்கொண்டு மதுரையில்
ஒண்ணுதற் றேவியர் ஒருங்குட னமர
அரியணை யேறி அரசுவீற் றிருந்தே
உரிமையிற் செங்கோல் ஓச்சி யிருந்தாய்:
சத்திய பாமை சாரதி யாகிக்
கைத்திறங் காட்டக் கடுஞ்சமர் புரிந்து

---

7. (வி-ரு.) 1. புணர்ப்பு – சூழ்ச்சி; 2. வணக்குதல் – பணியச்செய்தல்; 3. வட பால் மதுரை – வடமதுரை (இது தென்னாட்டு மதுரையின் வேறானது). 5. கணியர் – சோதிடர்; மொழிந்தது – உன் தங்கையின் வயிற்றில் உதிக்கும் ஒரு வனால் நீ கொல்லப்படுவாய் என்பது. 6. தறுகண்மை – அஞ்சாமை; 7. கொல்களிறு – குவலயாபீடம் என்னும் யானை; 8. ஒல்லையின் – விரைவாய்; 9. மருப்பு கொம்பு; 11. மடங்கல் ஏறு – ஆண்சிங்கம்; 12 இருங்கை – வலிய கை; 16. கறங்கு - காற்றாடி; 17. ஒரு குன்றெனக் குவித்து என்றும், குன்றென நின்றனை என்றும் கொள்க. 18; கதம் – கோபம்; 19. செருக் களம் – போர்க்களம். 21 நேருக்கு நேர்நின்று வஞ்சனை கொண்ட கஞ் சன் இதுவரையும் மறைந்து நின்று கண்ணனைச் சூழ்ச்சியாற் கொல்ல முயன்றான், கண்ணன் இப்போது அவனுக்கு எதிரே நின்று போர்செய்து கொன்றான். 23; நேமி – சக்கராயுதம்; 25. மண்ணுமங்கல விழா – முடிசூட்டு விழா.

26. ஒண்ணுதல் – ஒளிபொருந்திய நெற்றியையுடைய; தேவியர் – சத்திய பாமை, உருக்குமணி ஆகியோர்; 27. அரியணை – சிங்காசனம்; 28. உரி லின் – கண்ணனுடைய தந்தையாகிய வசுதேவன் குந்திதேசத் தரசனாகிய சேனன் மகன்; தாயாகிய தேவகி, போஜகுலத் தலைவனாகிய தேவன் மகள்; ஆக கண்ணன் இருவழியாலும் அரசகுலத்தவன்; தேவகியின் தமையனான கஞ்சன் வஞ்சனையால் சகோதரியையும் அவள் கணவனையும் சிறையில்வைத்து, அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளைக் கொன்று வந்தவன். இப்போது போரிலே கஞ்சன் இறந்தமையால் மது அரசு கண்ணனுக்கு உரிமையாயிற்று.

நரகனே யடுங்கால் நயந்தவன் வேண்ட
வரமா யொளிவிழா வகுத்தனே யுலகில்;
மானமர் கண்ணி மகிழும் வண்ணம்
வானவர் தருவினே மண்மிசைக்
கொணர்த்தாய்;
உடுத்த கந்தையில் முடித்த அவலொடு 35

நட்புக் கந்தாக நாடிய குசேலனைக்
சட்டித் தழுவிக் கட்டிலி லமர்த்தி
அகத்தெழு மகிழ்ச்சி முகத்தில் மலர
ஒப்புட னுபசரித் துப்பிலா அவலைக்
கெழுமிய நட்பாற் கேட்டுச் சுவைத்துச் 40

செழுஞ் செல்வ மளித்துச் செல்கென விடுத்தாய்;
மதுரை மன்னு மன்னுயிர்க் கெல்வாம்
பொதுநீதி நீயெனல் பொருந்தக்
கொக்கூர்ப்
பதி மகிழ்ந்து துறைவாய் பணிந்து
துதிசெய் வார்துயர் துடைப்பதுன்
கடனே. 45

[8]

கடன் மடை திறந்தெனக் காதல் பெருகத்
திடமுறு ஞானச் செழுஞ்சுடர் மாறன்
கவிப்பா வழுதிசைக் கறியொடு கலந்து
குவிக்க வுண்ட குழலூதுங் கண்ணு
மக்க ளுளங்களில் மறைந்துள நீயே 5

கொக்குவிற் பதிவிற் கோயில் கொண்டாய்;
தொன்மது ரையினைத் துறந்து முன்னுள்
மன்று துவாரகை மகிழ்ந்தர சாண்டாய்;
வாணன் சோவரண் வலிதெரிந்
தவன்றன்
ஆனவ மடக்கி அரிருத்தனே மீட்டாய்; 10

---

31. நரசன்–நரகாசுரன். சத்தியபாமை சாரத்தியச் சாமர்த்தியத்தினால் கண்ணன் நரகாசுரனைப் போரில் வென்றுன் என்பது அடுங்கால் – கொல்லும் வேளையில்; அவன் நயந்து வரம் வேண்ட என்க. 32. ஒளிவிழா – தீபாவளிக் கொண்டாட்டம்; 33. மானமர் கண்ணி மான்போல் மருளும் கண்களையுடைய சத்தியபாமை; 34 வானவர் தரு – பாரிசாதம்; 36. நட்புக் கந்தாக – குசேலர் தம் வறுமை காரணமாக அரசனுகிய கண்ணனிடம் இரந்துபோக நாணினர்; சுசீலையின் வேண்டுதலால் இசைந்து கண்ணனேடு தாம் கொண்ட நட்புமிழுக இழுக்கச் சென்றார். 37. கட்டில் – அரசு கட்டில், அரியணை; 39. உப்பிலா அவல் – வறுமை காரணமாகப் புல்லரிசி கொண்டு உப்பின்றிச் செய்த அவல். 40. கெடு மிகநெருங்கிய; கேட்டுச் சுவைத்தாய் – குசேலர் கொண்டுவந்த அவலைக் கொடுக்கக்கூட அதனைக் குறிப்பால் உணர்ந்த கண்ணன், தானே கேட்டுப் பெற்று உண்டு களித்தான்.

8. (வி – கு.) அடி 1. கடல் மடை திறந்தாற்போலப் பிரபத்தியாகிய காதல் பெருக என்க. 2. மாறன் – நம்மாழ்வார்; 3. கவிப்பா + அழுது + இசை. கறியொடு:– புலமை நிறைந்த பாடலாகிய அமுதினை இசையாகிய கறியுடன் கலந்து மிகுதியாகக் குவிக்கக் கண்ணன் உண்டான் என்பது கருத்து. நம்மாழ்வார் பாடியவை: திருவாய்மொழி, பெரிய திருவந்தாதி' திருவிருத்த திருவாசிரியம் ஆகியன. 7. தொல் மதுரை .....சராசந்தனுக்கு அஞ்சிக் கண்ணன் மதுரையை விட்டுத் துவாரகைக்குப் போனன் என்று பாரதம் கூறும் ('சண்ட முகிலுருமேன சராசந்தன் றனக்கஞ்சி – வண்டுவரை யருணுக வட மதுரை கைவிட்ட – திண்டிறல்மாதவன்' எனச் சாத்தகி கூற்றாக வருகிறது. 9 – 10. வாணாசுரன் சோவென்னும் வலிமை வாய்ந்த அரண் அமைத்துச் செருக்குடன் கண்ணனைப் பகைத்திருந்தான்; வாணனுடைய மகளாகிய உஷை (உஷா) என்பாள், கண்ணனுடைய பேரனுகிய அநிருத்தன்மேற் காதல்கொண்டு தந்தை அறியாமலே தன் காதலனைத் தன் அந்தப் புரத்தில் மறைத்து வைத்திருந்தாள்; அதறிந்த வாணன் அநிருத்தனைச் சிறை செய்து அரணில் வைத்திருந்தான்; கண்ணன் அந்த அரணைத் தாக்கியழித்து, வாணன் செருக்கை அடக்கி, அவன் மகள் உஷையை அநிருத்தனுக்கு மணஞ்செய்து வைத்தான்,

அத்தை மக்களாம் ஐவர் நண்பனுய்
எத்தனே யிடரி னிருந்தவர்க் காத்தாய்;
கற்றைக் குழலைப் பற்றி யிழுத்துக்
கண்ணிலான் மைந்தன் கௌரவ ரவையிற்
பண்ணின் மொழியாள் பாஞ்சாலி
துகிலே 15

உரிகையில் ஒலமென் றுனையலள் அழைக்க
அரிவையின் மானம் அன்றுநீ காத்தாய்;
பாண்டவர் பொருட்டாய் ஆண்டகை நீயே
நூற்றுவர் பாற்றா தேற்று நடந்தாய்;
ஆங்கவர் பொறிக்கிடங் கமைத்துனே
வீழ்த்த 20

ஒங்கி யுருத்தெழுந் துள்ளுறை மல்லரை
மிதித்துத் துவைத்தாய், வீட்டுமர் ராதியர்
துதித்துனே வேண்டத் தொல்லுருக்
கொண்டாய்;
தூது முடித்துச் சூழ்ச்சிகள் செய்து
வேத முழங்க மாதவ மீண்டாய்; 25

பொருபடை யேந்திப் போர்செய்
யேனென்(று)
அரவக் கொடியோற் கருஞ்சூ ளுரைத்துப்
பணிவுட னிருந்த பார்த்தன் றனது
மணிநெடுந் தேரை மண்டமர் தன்னில்
நடத்து வேனென நாடக மாடினே; 30

கபட நாடகக் கள்வ நின்
அபர விபல்பினே அறிதலோ வரிதே.

---

11. அத்தை – குந்திதேவி; அவள் கண்ணனுக்கு அத்தை முறையினள். ஐவர் பாண்டவர். கண்ணன் பாண்டவ சகாயன் எனப் பெயர் பெற்றுள்ளான். அவன் பாண்டவரைக் காத்தமை மகாபாரதத்திற் காணலாம். 14. கண்ணிலான் – திருதராட்டிரன்; மைந்தன் – துச்சாதனன், கௌரவர் – துரியோதனனுதியோர்; நூற்றுவர் என்போரும் இவரே, நூற்றுவர்பால் நூறு + ஏற்று + நடந்தாய். 21. ஒங்கி – விகவருணமெடுத்து; உருத்தெழுந்து வெகுண்டு நிமிர்ந்து. உள்ளுறை மல்லர் – பொறிக்கிடங்கிலே மறைத்து வைக்கப்பட்ட மல்லர் 24. தூது முடித்துச் சூழ்ச்சிகள் செய்தன —(1) பாரதப்போரைத் தவிர்க்குமாறே தருமன் கண்ணனைத் தூதனுப்பினன்; ஆனல், கண்ணனே பாரதப்போர் நிகழ்வதையே விரும்பினன்; ஏற்றுவந்த தூதை விரைவாக முடித்துப் போர் நிகழ்வதை உறுதிசெய்தான்; (2) விதுரன் மனையில் விருந்துண்டு; அவன் போரில் பங்குபற்றுமல் விலகி முறிக்க வழிசெய்தது; (3) கர்ணனிடமிருந்து கவசகுண்டலங்களை இந்திரனை ஏய்த்து இரந்து பெறச் செய்தது; (4) கர்ணன் அருச்சுனன்மீது நாகக் கணையை இருமுறை ஏவாதிருக்க குந்தியைக்கொண்டு வரம்வாங்குவித்தது (5) அசுவத்தாமனைத் தனியே அழைத்து அவனுடு நடந்து செல்கையிற் கண்ணன் தன் கணையாழியை மெல்ல நழுவவிட்டான்; அசுவத்தாமன் குனிந்து நிலத்திலிருந்த கணையாழியை எடுத்துக் கண்ணனிடம் கொடுக்க, கண்ணன் வானத்திலே பரிவேடம் இருப்பதை அசுவத்தாமனுக்குக் காட்டினன்; துரியோதன் முதலியோர் அவையிலிருந்து இதைப் பார்த்து; அசுவத்தாமன் பூமியையும் வானத்தையும் சாட்சியாகக் கண்ணனுக்கு ஏதோ சத்தியஞ்செய்து கொடுத்துள்ளான் என்று, அசுவத்தாமன்மீது ஐயங்கொண்டு, அவனுக்குப் போரிலே படைத்தலைமை மறுத்தனர் (பார்க்க; பாரதம் திருட்டினன் தூது). 26 பாண்டவரும் கௌரவரும் போருக்குப் படை திரட்டியபோது, கண்ணனது உதவியை நாடித் துரியோதனனும் அருச்சுனனும் துவாரகைக்குச் சென்றனர். இவர்கள் வருவார்கள் என்பதை முன்கூட்டியே அறிந்த கண்ணன், தன் தலைமாட்டிலும் கால் மாட்டிலும் இரண்டு ஆசனங்களை வைத்துவிட்டு, நித்திரை செய்பவன் போற் பாசாங்கு செய்தான்; முதலிற் சென்ற துரியோதனன் செருக்கினல் தலைமாட்டில் அமர்ந்தான்; அருச்சுனன் பணிவோடு காலமாட்டில் அமர்ந்தான்; சற்று விழித்த கண்ணன் முதலில் அருச்சுனனையே கண்டான். அருச்சுனன் 'அதோ அண்ணன் வந்துள்ளான்' என்று துரியோதனனைக் காண்பித்

தான். இருவரும் கண்ணனின் உதவியைக் கேட்டனர். நான் கண் விழித்து, முதற் காண்பவருக்கே உதவி செய்வதாக முடிவு செய்து விட்டேன்' என்று தந்திரமாகச் சொல்லிக் கண்ணன் தன் படைகளை யெல்லாம் துரியோதனனுக்குத் தருவதாகவும், தான் மட்டும் பாண்டவருக்குத் துணை போவதாகவும், போரிலே ஆயுத மேந்தி, போர் செய்வதில்லை யென்றும் துரியோதனனுக்கு வாக்குறுதி யளித்தான். அருச்சுனன் தனக்குச் சாரதியாக இருக்குமாறு வேண்டக் கண்ணன் உடன்பட்டான். இவை தவிர, இன்னும் பாரதப் போரில் பாண்டவர் வெல்லும் வண்ணம் பல சூழ்ச்சிகள் செய்தான்: (1) விடுமளைக் கொல்வதற்காக, சிகண்டி என்பானை அருச்சுனனது தேரில் அமரவைத்து, வில்லை வைத்து வாளா விருந்த வீட்டுமர் மீது அருச்சுனன் சிகண்டிக்குப் பின்னிருந்து அம்புவிடச் செய்தமை; (2) துரோணரைக் கொல்லுவதற்காக, அசுவத்தாமன் இறந்தான்' என்று தருமனைக் கொண்டு பொய் சொல்லச் செய்வித்தமை; (3) கர்ணன் அருச்சுனன் மீது நாகக் கணையை ஏவியபோது அருச்சுனனது தேரை நிலத்தில் அழுத்தி, அருச்சுனன் தலையைக் காப்பாற்றியமை; (4) கண்ணன் உயிரை விடுவதற்காக, அவனிடமிருந்து அவன் செய்த தருமம் முழுவதையும் தானமாகப் பெற்றமை; (5) இறுதியிலே துரியோதனனும் வீமனும் தண்டேந்திச் சமர் புரிகையில், துரியோனனது துடையில் அடிக்குமாறு வீமனுக்குக் குறிப்பாக உணர்த்தி, துரியோதனனைக் கொல்வித்தமை; 31. மாகாபாரதம் முழுவதும் கண்ணனுடைய கபட நாடகங்கள் பேசப்படுகின்றன. இதனால் அவன் 'கபட நாடக சூத்திரதாரி' என்றும் பெயர் பெற்றுள்ளான். சூத்திரதாரி என்பவன் நாடகத்தை ஆட்டுவிப்பவன்; பாரத நாடகம் முழுவதையும் கண்ணனே பின்னணியில் நின்று நடத்தியுள்ளான்.

32. அபரவியல்பு — கடவுளுக்குப் பரம் (மேலானது) என்றும், அபரம் (கீழானது) என்றும் இரண்டு இயல்புகள் இருப்பதாக இந்து சமய நூல்கள் கூறும். இறைவனது மேலான இயல்பு சொரூபலக்கணம் எனப்படும்; அது சொல்லையும் மனத்தையும் கடந்த பிரமம் (சிவம்) ஆகிய நிலை: கீழான இயல்பு உலகுயிர்களோடு விரவி நிற்கும் நிலை; இது தடத்தலக்கணம் எனப்படும். இறைவன் உலகைப் படைத்து, உயிர்களுக்கு உடம்பு முதலியவற்றை உதவி, உலக வாழ்வில் அழுந்துமாறு மறைத்து (திரோதானம்), இறுதியில் முத்தி கொடுக்கின்றான். இச் செயலை ஒரு நோக்கில் பார்க்குமிடத்து இறைவன் வஞ்சகம் செய்பவனாகவும் தோன்றுகின்றான். காத்தற் தொழிலைச் செய்யும் விட்ணுவின் நிலையிலே, இறைவன் கபடநாடக சூத்திர தாரியாகக் காட்சி யளிக்கிறான். பாரதத்தில் இடம் பெறுங் கண்ணனின் இந்தக் கபட நாடகக் கூறையில் கைதேர்ந்த வனைக் காட்சியளிக்கின்றான். மக்கள் தமது சிற்றறிவைக் கொண்டு முற்றறிவுடைய கடவுளின் செயல்களை விளக்க முயல்கையில் இத்தகைய முரண்பாடுகள் தோன்றுவது இயல்பே. கடவுளின் இயல்பை முற்றாக அறிவது அரிது.

[9]

அருமறை முதல்வ நீ ஆரமர் கருதிக்
குருசேத் திரத்திற் குழுமிய விருபெரும்
படைகளுக் கிடையே பார்த்தன் றேரைக்
கடவி நிறுத்தக் கௌரவர் பக்கம்
குலமூ தாதையும் குரவரும் கேளிரும் 5

நலமுறு நண்பரும் நானில வேந்தரும்
அணிவகுத்து நிற்பதை அருச்சுனன்
பார்த்துத்
துணிவுடன் இவரைக் கொன்று
தொலைத்து
குருதி தோய்ந்த கொடுநில மாள்வது
கருதேன் கண்ணெனக் காண்டீபநுழுவ 10

உளமு முடலும் ஒருங்கே நடுங்கித்
தளர்வுறு மெல்லையில் தனஞ்சயன் தேறி
அறப்போர் புரிவதில் ஆர்வங் கொண்டு
சிறப்பாய்த் தன்கடன் செய்தற்
பொருட்டுப்
போத நிறைந்த கீதையைப்
பொழிந்தாய் 15

உயிர்க்கிரங் கினையோ, உடற்கிரங்கினையோ
உயிர்க்கழி வில்லைமற் றுடற்கே யழிவு;
உடுத்த கந்தையை உதறித் தளரி
அடுத்தொரு புதிய ஆடை யணிந் தாங்கு
நைந்த வுடலை நீக்கி நவமாய் 20

இந்த வுயிர்தான் எடுக்குமற் றோருடல்;
பிறந்தவர் இறத்தலும் இறந்தவர்
பிறத்தலும்
இயல்பென வறிந்தும் இரங்குவ தெவனே?
அயர்ந்தனை கொல்லோ, ஆரிய னலையோ?
மக்கள் யாக்கை மண்ணி லெடுத்தோர் 25

தக்கதங் கடமையிற் றவறுத வினுக்கமாம்;
ஆதலின் அருச்சுனன் அழுங்குத லொழிவாய்;
மேதகு போர்வினை மிடுக் கொடு முடிப்பாய்;
வில்வினை யொடுப்பாய், வெல்கணை தொடுப்பாய்;
நல்லியல் யோக நடுநிலை நிற்பாய்; 30

---

9. (வி – கு.) இச் செய்யுள் கண்ணன் அருச்சுனற்கு உபதேசித்த கீதையின் பொழிப்பைக் கூறுவது. அடி 1. அருமறை முதல்வன்–திருமால், 5. குலமூதாதை – விட்டுமர்; குரவர் – துரோணரும் கிருபரும்; கேளிர் – உறவினர், 9. கொடு நிலம் – கொடுமையாள் எய்திய நாடு; நிலம் + ஆள்வது எனக் கொள்க, 10. காண்டீபம் – அருச்சுனனது வில். 12. எல்லை – வேளை; தனஞ்சயன் – அருச்சுனனது பெயர்களுள் ஒன்று; 15. போதம் – மெய்யறிவு; பொழிந்தாய் என்பதனால் கீதை மழையாகவும், கண்ணன் கருமுகிலாகவும் உருவகிக்கப் பட்டிருத்தல் ஏகதேச வுருவகம். 18 - 21 பகவற் கீதை; ii, 22 மொழி பெயர்ப்பு 22 – 24, கீதை; ii, 27 – இன் கருத்து. 24 – 30 இவ்வடிகளிற் கூறப்படுங் கருத்துக்கள் கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில் வருவன. ஆரியனலையோ நீ ஆரியன் அல்லவா? உற்ற போரில் உறுதி தளர்ந்து மனம் மடிதல் ஆரியனுக்கு அடுக்காத பண்பு என்று கண்ணன் கூறுகிறான் (கீதை ii, 2)

26. தக்க தம் கடமையில் – ஒவ்வொருவரும் செய்யத்தக்க – செய்ய வேண்டிய கடமை களினின்றும், 27. அழுங்குதல் – செயலற்று அழுதல். 28. மேதகு போர்வினை – மேன்மை தங்கிய அறப்போர்; மிடுக்கு – ஆண்மை. 30. நல்லியல் யோக நடு நிலை – இன்பத்துன்பங்கள், இலாப நட்டங்கள், வெற்றி தோல்விகள் ஆகியவற்றைச் சமமாக நோக்கும் நிலை (கீதை: ii, 38)

நன்றே செய்வாய், நவைதவிர்த் திடுவாய்
என்று நெருட்டி இன்னு மவற்குச்
செயலே பிறவி சேர்ப்ப தென்றெண்ணிச்
செயலை விடுப்பது மயலா மென்றும்,
செயலி லுலகம் இயலுவ தாதலின்

செயற்பா லனசெயல் சிறப்பா மென்றும்,
எல்லா மீசன் செயலெனத் தெளிந்து
நல்லார் பலனில் நாட்ட மிலாதே
பற்றற் றவராய்ப் பணிசெய்வ ரென்றும்
கருமயோ கத்தின் பெருமை யுரைத்தாய்;

நூல் பல கற்று நுண்ணறி வதனைச்
சால்புற வளர்த்தல் ஞானமா காதென்றும்,
உலகுயி ரிறையென நிலவுமுப் பொருளின்
இயல்பினைத் தேறி ஹதயந் திருந்திச்
செயல் சொல் லிவறெடு சிந்தனை மூன்றும்

தூய வாக்கியுயிர்த் துரிசுகள் போக்கி
உள்ளம பண்பட் டுயிர்தொறு நிற்கும்
வள்ள லிறையென வழிபட் டுலகின்
பற்றுக ளற்றிறை பற்றினைப் பற்றி
நிற்றல்மெய் யறிவென நினைப்பா யென்று

ஞானயோ கத்தின் நன்மை யுரைத்தாய்;
ஹனமில் ஞானத் துறுதியி னிற்றல்
மானவர் பலர்க்கு மாட்டா மையினால்
பத்தியா லென்னைப் பணிபவர்க் கெல்லாச்
சித்தியுஞ் சிறப்பா முத்தியு மளிப்பேன்,

---

31 நவை – போர் செய்யாமையால் வரும் வசை. 32 – 33 கருமங்கள் செய்யின் அவற்றின் பலனை அனுபவிக்க மீண்டும் மீண்டும் பிறவி யெடுக்க வேண்டியிருத்தலால், கருமங்களை விட்டுச் சன்னியாசங் கொள்வது, மயக்கமான அறிவின் விளைவென கீதையில் கண்ணன் மக்கள் ஒவ்வொருவரும், பற்றின்றிச் செயல் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறான் 42. சால்புற – நிறைய. 43. மூப் பொருள் – உலகம் (பாசம், சடப் பொருள்), உயிர் (பசு பாசத்தால் கட்டுண்டது), இறை (பதி, சத்துப் பொருள்). சைவசித்தாந்தம் இவற்றை விரிவாக ஆராய்ந்து தெளிவாக்குகின்றது. 44. இதயம் திருந்தி – மக்கள் வெறும் மூளையறிவை மட்டும் வளர்ப்பதாற் பயனில்லை. மூளையறிவோடு இதயமும் திருந்தி இறைவனுக்கு நல்ல இடமாக வேண்டும் 45. செயல், சொல், சிந்தனையாகிய மூன்றும் என்க இவை திரிகரணம் எனப்படும். 46. உயிர்த் துரிசுகள் – உயிரைப் பற்றித்திருக்கும் மலங்கள் 46 – 47. உயிர் தொறும வள்ளலாகிய இறை நிற்குவதைத் தேறி அவ்விறையை வழிபட்டு என்க. 49. உயிர், உலகுக்கும் இறைக்கும் இடையே நின்று சார்ந்ததன் வண்ணமாவது; ஆதலால், இயல்பான உலகப் பற்றை விடுதற்கு இறையைப் பற்றி நிற்றல் வேண்டும் (பற்றுக பற்றற்றான் பற்றினை) அப் பற்றைப் பற்றுக பற்று விடற்கு' என்னும் திருக்குறளை நோக்குக) 53. மானவர் – மனிதர்; மாட்டாமை – இயலாமை. 55. சிறப்பாம முத்தியென்க; சிறப்பு என்பதும் முத்தியை உணர்த்தும்; சிறப்பாகிய முத்தியெனப் பொருள் கொள்க

எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
சிக்கென வென்னைப் பற்றி யெனையே
புகலெனப் புகுந்து பொய்யா தொழுகின்
மிகவுயர் கதியாம் மேனிலை பெறுவர்;
நல்லார் தமக்கும் பொல்லார் தமக்கும்

நானடு நிற்பேன், நலமுந் செய்வேன்
இன்னு மிவியார் எனக்கிலை யாயினும்
என்னுர் வலர்பால் யானிருப் பதுபோல்
அன்னு ரென்பால் அமர்ந்திவி திருபர்;
பத்தி நெறியே பலர்க்குநன் முதலின்

அத்தகு நெறிமே லாகுமென் றறிகெனப்
பத்தி யோகப் பயனெடுத் துரைத்தாய்:
நிறைநிலை யெல்லை இறைநிலை யதனை
எய்துவ துயிர்கட் கீடேற்ற மென்றும்,
மெய்ந்நிலை யறியா மேனிலை யென்றும்,

புகுவ தாவதும் போதர வில்லதும்
மிகுநலமாவதும் மேதக வுடையதும்
இறைமய மாகி நிறைபிர மத்துள்
இரண்டறக் கலந்திடுந் தின்பத் துய்ப்பதும்
ஒருநிலை யாவதும் உயர்முத்தி யாமென

விள்ளற் கரிய வீட்டியல் விண்டாய்;
கொள்ளற் குரிய கொள்கைக ளிவையென
விதந்து கூறி விட்டுனு வென்னும்
இதந்தரு கடவுள் யானே யென்றுய்;
அறந் தேய்ந் துலகில் மறந்தலை யெடுக்கும்
காலத் தெல்லாம் ஞாலத் திழிந்து

---

56 – 59. கீதை ix, 32, 60 – 64; கீதை: ix, 20, 61. நான் நடு நிற்பேன் இன்னுர் – வெறுக்கப் படுபவர்; இவியர் என்பதன் எதிர்ச் சொல். 63. என் ஆர்வலர் பால் – என் மீது பத்தி கொண்டவரிடம். 68. நிறை நிலை எல்லை இறை நிலை - உயிர்கள் பக்குவப்பட்டு நிறைவு பெறும் முடிந்த நிலை, இறைவன் மயமாகி இறைவனோடு கலக்கும் முத்திநிலை, 71. புகுவதாவதும் போதர வில் வதும் – புகத் தக்கதும், புகுந்தபின் மீள வேண்டாததும் முத்தி நிலை. 76 விள் டாய் – வாயால் உரைத்தாய்.

77 – 78. கரும யோகம், ஞானயோகம், பத்தியோகம் என்று கொள்ளத் தக்க கொள்கைகளை விதந்து கூறியென்க; மக்கள் ஈடேறுவதற்கு இவற்றுள் ஒன்று மட்டும் போதாது; மூன்றும் தம்முள் ஒத்தியல வேண்டும். விட்டுனு வென்னும் இதந்தரு கடவுள் – காத்தற் கடவுளாய், கருணை வடிவாய், உயிர் களுக்கு இன்பந் தரும் கடவுள். 80. அறந்தோய்ந்து..... (கீதை iv. 7, 8)

நல்லோர்க் காக்கவும் அல்லோர்த் தடியவும்
ஊழி தோறும் உடலெடுப் பேனென
வாழி யுறுதி வழங்கி யவற்கு
யானே தெய்வம், யானே யெல்லாம்
ஏனைய விடுத்துநீ யெனைவழி படுகென் (று)

எல்லா வுலகமும் எல்லா வுயிர்களும்
எல்லாக் காலமும் எல்லா நிகழ்வும்
ஆ இ நிற்குநின் அளப்பரும் வடிவைத்
தேகி யருச்சுனன் தெருளக் காட்டி,
வெருக்கொளப் பழைய உருக்கொடு நின்றனை;

மெய்யறி வித்தனன், செய்தகு செய்கென
அன்று நீ பார்த்தற் கருளிய கீதை
என்றுமில் வுலகில் இயங்கும் மக்கடம்
அவலக் கவலைக் கருமருந் தாகித்
தவலா ஞானம் தருதலிற் கண்ணே

திக்கெலா மேத்தும் திருவுடை யாய் நீ
கொக்குவிற் சிருபா கரன்கோட் டத்தில்
உறைதலி னெமக்கினிக் குறையொன் றில்லை,
அன்று போலவே இன்றும்
நின்றெம் முளத்தில் நிறைந்திருப் பாயே.

இங்கே கண்ணன் தன்னே விட்டுணுவே யெனக் கூறி, அவதாரக் கொள்கை யைக் கூறுகின்றன். ஞாலத்து இழிந்து – பூமியில் இறங்கி (அவதாரம்) அல் லோர் – தியவர்கள் தடியவும் – தண்டிக்கவும். வாழி உறுதி – இங்கே வாழி என்பது கண்ணன் கூறிய உறுதியை வாழ்த்துவதற்காக நிற்கும் இடைச் சொல் அவற்கு – அருச்சுனனுக்கு. 87 – 89. கண்ணன் அருச்சுனற்குக் காட்டிய திருப் பெருவடிவம் (விசுவரூபம்) கூறப்படுகிறது. 90. தேகி அருச்சுனன் – மனித உடலோடு நிற்கும் அருச்சுனன் (ஊனக் கண்ணால் இவ் விசுவரூபத்தைக் காணலரிதாகவும், கண்ணன் அருளினால் அருச்சுனற்குக் காட்டினன் என்க) 91. வெருக்கொள – அவ்வடிவத்தைக் கண்ட அருச்சுனன் அச்சம் கொள் ளவே. பழைய உருக்கொடு – முத்திய கண்ணனாகிய உருவத்தைக் கொண்டு. 92. மெய்யறி வித்தனன் – யான் உனக்கு மெய்ப் பொருளை அறிவித்தேன்; செய்தகு செய்க என – நீ இனிச் செய்யத் தக்கதை செய்வாய். இவ்வாறு கண்ணன் அருச்சுனனுக்குக் கூறுவதால் அறியப்படுவது. கடவுள் மனிதனுக்கு ஆறும் அறிவாகிய பகுத்தறிவைக் கொடுத்து சித்தனைச் சுதந்திரத்தையும் (Free Will) அளித்திருக்கிறார்; நீதும் நன்றும பிரிய உலகத்தில், மனிதன் நியதை விலக்கி நல்லதை நாடு சுதந்திரம் உடையவன்; அவ்வாறு சுதந்திர மாகத் தெரிவு செய்வதற்கும் பல இடையூறுகள் உள்ளன; மனிதன் தன் கொள்கையில் உறுதியாய் நின்று, வரும் இடையூறுகளை வென்று, விடாமுயற் சியால் தனது இலக்கை அடைய வேண்டும் என்பது. 94 – மக்கடம் = மக் கள் + தம 95. அலவலக் கவலைக்கு அருமருந்தாகி 96 தவலா ஞானம் – தவிர்தல் இல்லாத ஞானம், அஃதாவது எப்போதும் தக்க ஞானம். 100 – 101. கண்ணன் அக்காலத்தில் அருச்சுனனுக்குக் கீதை உபதேசித்துப் பாரதப போரை நிறை வேற்றிச் செயற்கரும் செயல் செய்த பெரியோன் மட்டுமல்லன்; அவன் எங்கும் உள்ளான்; ஒவ்வொருவர் உள்ளத்திலும் உள்ளான்; அன்று அருச்சுன னோடு அளவளாவியது போலவே, இன்றும் எம்மோடு பேச ஆயத்தமாயிருக் கிறான்; அவன் கடந்த காலத்து ஆளல்லன்; மக்கள் ஒவ்வொருவர் உள்ளத் திலும் உணர்வாய் விளங்குகின்றன்; எமது உயிருணர்வால் பற்றக் கூடிய ஒரு பொருளாக உள்ளான்.

[10]

பாயிரு ளகற்றும் பரிதியே போல
ஆயிரத் தலேப்பட் டவல முற்ற
பார்த்தனுக் கருளிய மூர்த்தீ வாழி
பிறவா யாக்கைப் பெரியோ னென்றே
இறவாத் தமிழ்நூல் ஏத்துஞ் சிவனே

மெய்த்தே வென்றும் மேலோர் பிறரைப்
பொய்த்தே வென்றும் புகலக் கேட்டும்;
பிறந்திருந் திறக்கும் பெற்றியர் தம்மை
மறந்துந் தேவென மதிக்லா கதென்றும்,
தாயின் வயிற்றில் தங்கிப் பிறத்தல்

ஆயின், கடவுட் கடுக்கா தென்றும்,
அவதா ரக்கோள் தவறு மென்றும்
சித்தாந்த சைவர் செப்பக் கேட்டும்,
எத்தா லுந்தெளி விலாதே னெங்ஙன்
கண்ணீனைக் கடவுளாக் கருதுவ தென்றே

எண்ணிப் பலநாள் இருதலேப் பட்டு
வருகையி லவ்வை வாய்மொழி நினைவில்
திருமாற் கடிமை செய்யெனச் செப்பவும்,
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுகெனப்

---

10. (வி. கு.) இச்செய்யுள் ஆசிரியனது தயக்கம், தெளிவு, வணக்கம். வேண்டுதல் கூறுவது அடி 1. பாயிருள் – பரவியுள்ள இருள், 2. ஆயிரத் தலேப்பட்டு – பல தலேப்பட்டு, சித்தம் ஒருவழிச் செல்லாது பலவளிப்பட்டுத் தடுமாறி 5. சிலப் பதிகாரம், மணிமேகலே, ஆகிய பழந் தமிழ் நூல்கள் தமிழகத்துக் கோயில் சனைக் கூறுமிடத்துச் சிவபெருமானேப் பிறவா யாக்கைப் பெரியோன் என்று குறிப்பிடுவதோடு சிவனுக்கே முதலிடம் கொடுக்கின்றன. பிற தெய்வங்களுக்குப் பின்னேத் தமிழ்ப் பிரபந்தங்கள் பாடப் படினும், சிவனுக்கு அவ்வாறு பாடும் மரபில்லே பிறந்து இறக்கும் பிற தெய்வங்களேப் பொய்த் தேவு என்னும், சிறு தேவர் என்றும் சைவ சமய குரவர் முதலிய சான்றோர் கூறுவர் 11. ஆயி ன் – ஆராயுங்கால் 12. அவதாரக் கோள் – அவதாரக் கொள்கை. பிறப்பும் இறப்பும் இல்லாத இறைவன், மண்ணிலே ஒரு தாயின் வயிற்றிலே தங்கிப் பிறப்பான் என்னும் அவதாரக் கொள்கையை, வைணவரும் பிறரும் (கிறித்தவர்) ஒப்புக்கொள் வாரெனினும், சைவ சித்தாந்திகள் ஒப்புக் கொள்ளார், 14 – 16 சைவசித்தாந்தக் கோட்பாடே சிறந்ததென நம்பி வந்தமையால், கண்ண னேக் கடவுளாக எங்ஙனம் கருதிப் பாடுவேன் என்று, எவ்வாற்றலும் தெளி யாமையினல், பலநாளாய்ப் பாடுவதா, விடுவதா என்று இருதலேப் பட்டிருந்தேன் 17 – 18 "சிவாய நமவென்று சித்தி கதிருப் பார்க்கு, அபாயம் ஒருநாளும் இல்லே" என்று பாடிய ஔவைப் பிராட்டியே "திருமாலுக் கடிமை செய்" என்று அறிவுறுத்துகிறார். 19 – 20 இவை மெய்கண்டாரது சிவஞான போதத் தில் இறுதிச் சூத்திரத்தில் வரும் அடிகள். மால் அற – உயிரறிவைப் பற்றி யிருக்கும் மல மயக்கம் முற்றுக அற்றுப்போக; நேயம் மலிந்தவர் வேடம் – அறியப்படு பொருளாகிய பதியை உள்ளவாறு அறிந்து அப்பதியில் இடைய றுத அன்பு நிறைந்த சிவன் முத்தரின் கோலம்; அதாவது, சீவன் முத்தரைச் சிவனுகவே கருதி வழிபட வேண்டும் என்பது.

பொய் கண்டார் காணு மெய்கண் டுரைத்த
ஐயன தாணை அகத்திருந் தூக்கவும்,
பார்த்தன் நின்மே விட்ட மலர்கள்
தீர்த்தன் சிவன்மேற் கண்ட திறத்தால்
சிவனும் பாவனைச் சிலந் தேறியும்

அவதா ரத்தின் ஆழ மறிந்தும்
உள்ளத் தெளிவெனக் குண்டாய் துன்றன்
வள்ளற் பண்பென வழுத்தி யொருபா
ஒருபது பாட உறுதி கொண்டேன்;
முதனடு விறுதியாய் மூவராய் நிற்கும்

முதற்பொரு ளொன்றே செயற்படு முறையால்
அயனரி யரனென அப்பெயர் கோடலின்,
பயனிலை நோக்கிச் சிறக்கும் பாங்கில்
படைப்போன் படைத்தவை பரிந்து காக்கும்
இடைநிலை நிற்கும் இறைவ நீ விண்டுவாய்க்

23-25. அருச்சுனன் கண்ணன் மேலிட்ட மலர்கள் சிவபிரான் முடிமேல் காணப்பட்டமையால் (வில்லிபாரதம், துரோண பருவம், 81. 2) கண்ணன் தன்னைச் சிவமாகப் பாவனை செய்தவன் (சிவோகம் பாவனை) சிவன்முதலன் என்னும் திறப்பைத் தெளிந்தமையாலும்.

26. அவதாரத்தின் ஆழம் – கடவுளுக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை என்பதைக் கண்ணனே சொல்லுகிறான். (கீதை: iv, 6.) ஆயினும் மண்ணிற் பிறவியெடுக்கும் ஒரோயொருவர் பால் அவ்வக் காலங்களிலே கடவுட் பணிகள் விசேடமாகக் காணப்படும்; பின் முந்தர் இத்தகையோர் அத்தகையோரை மக்களில் ஒருசாரார் ''கடவுளே மனிதனாய் அவதரித்துள்ளார்'' என்று நம்புவர்; பிறர் (சைவர்) கடவுள் மனிதனிடம் அநிட்டித்து நிற்கிறார் என்பர். சிவன் முத்தனாகிய கண்ணனைக் கடவுளோடு ஒப்பக் கருதி வழிபடுவது தக்கதேயாம். ஆழம் – ஆழ்ந்த கருத்து.

அடி 30 – 32: முதலும் நடுவும் முடிவுமாகி, முறையே பிரமா, விட்டுணு, சிவன், என்னும் மும் மூர்த்திகளாய் நிற்கும் கடவுளாகிய முழுமுதற் பொருள் ஒன்றே; தொழிற் படுகின்ற முறையால், படைக்கும் போது பிரமா (முதல்) என்றும் காக்கும் போது விட்டுணு (நடு) என்றும் அழித்து அருள் செய்து மீளப் பிறப்பிக்கும்போது சிவன் (முடிவு) என்றும் ஒரு பொருளே மூவேறு பெயர் பெறுகின்றது. 33. பயநிலை – இறுதி நிலை, உயிர்கள் முடிவான பயனையெய்தும் நிலை அதுவே சிவகதி. அந்த நிலை கைகூடும் போது பூமியிலே சிவராச்சியம் (Kingdon of Good) நிறுவப்படும். சிறக்கும் பாங்கு – மலர்ச்சியடையும் (Evolution) முறை. உலகும் உயிருமாய்த் தோன்றுவது, படிமுறையில் வளர்ச்சியடைந்து சிவராச்சியமாகிய முடிவுநிலை நோக்கிச் செல்கின்றது என்க. 35. இடை நிலை – நிதி எனப்படும் நிகழ்கால நிலை; விட்டுணுவாற் காக்கப்படும் நிலை. விண்டு – விட்டுணு.

கடை நிலைக் குயிர்களைக் கடவுவை யாதலின்,
சிவனி யென்னச் செப்புதல் சாலும்;
அவநெறி விடுத்த அப்ப ரடிகளும்
அரியே யரற்குச் சத்தியா மென்றனர்;
பொய்கைபேய் பூதமும் பொருவறு சிறப்பின்

மெய்யுணர் மாறனும் விண்டுவும் சிவனும்
இருவரங் கத்தாற் றிரிவரே யெனினும்
ஒருவ னங்கத் தொருவனுள் ளானென
அறுதியிட் டுரைத்தனர், அப்பெரி யோருரை
உறுதியாய் நம்பி உன்னே வழுத்துவன்.

கண்ண போற்றி மணி வண்ண போற்றி,
வெண்ணெ யுண்ட பண்ணவ போற்றி,
கண்ணுள் ளிருக்கும் விண்ணவ போற்றி,
உண்ணு நீரினும் உள்ளாய் போற்றி,
தண்ணெலி நல்கும் தயாநிதி போற்றி,

---

36. கடைநிலை–சிவகதியாகிய முத்தி நிலை. விட்டுணு, உலகுயிர்களைக் காத்து முத்தி நிலைக்குச் செலுத்துபவர். கடவுதல் – செலுத்துதல். 37. சிவன் + நீ என்னச் செப்புதல் பொருந்துவதே. முடிவு நிலையிலுள்ள சங்காரகாரகனே அழித்து, மீண்டும் தோற்றுவித்தலால், அவனே அழிவில்லாத முழு முதல்வன் என்றும், பிரம விட்டுணுக்கள் படைப்புகளோடு அழித்து மீளப் பிறத்தலால் பிறப்பிறப்புள் ளவராவர் என்றும், மெய்கண்டார் தமது முதற் சூத்திரத்தில் "அந்த மாதி என்மனார் புலவர்" என்னுந் தொடராற் குறிப்பர். இக் கருத்துப் பற்றியே சம்பந்தரும் மாணிக்க வாசகரும் பிரம விட்டுணுக்களாலும் அறியப்படாதவன் சிவனெனக் கூறுவர்; கட்டறுத்து வீடு பெற்ற இம் மெய்ஞ்ஞானிகள் கூறுவது அவர்களுக்கு ஒக்கும்; சிற்றறிவுடைய நாம் திருமாலையும் சிவனுகவே வழிபட வேண்டும் என்பது அடியேன் கருத்து. 38 – 45: சமணம் விட்டுச் சைவத் துக்கு மீண்ட அப்பர் சுவாமிகள் அரியே (விட்டுணுவே) சிவனுக்குத் தேவி (சத்தி) என்று பாடியுள்ளார்; சிவமும் சத்தியும் பின்னமில்லாத வராகையால் சிவனுக்கும் விட்டுணுவுக்கும் ஒற்றுமை கூறலாம் என்பது, இனி வைணவ ஆழ்வார்களுள், பொய்கை, பேய், பூதம் என்னும் முதலாழ்வார் மூவரும் சிவனுக்கும் விட்டுணுவுக்கும் வேற்றுமை பாராட்டவில்லை; ஆழ்வார்களுள் தலைசிறந்தவரும், மெய்யுணர்ந்த முழு ஞானியுமாகிய நம்மாழ்வார் (மாறன்) திருமாலையும் சிவனையும் ஒப்பாகவே வைத்துப் பாடியுள்ளார். சிவனும் விட்டுணுவும் "இரு வரங்கத்தாற் றிரிவரேனும் ஒருவன் ஒருவனங்கத் தென்றும் உளன்" என்பது பொய்கை யாழ்வார் கூற்று முதலாழ்வார் மூவர்க்கும் நம்மாழ்வார்க்கும் இக்கருத்து ஒக்குமாதலின், பொதுவாகக் கூறப்பட்டது. 45. வழுத்துவன் – போற்றுவேன். 47. பண்ணவன் – தேவன்.

49. உண்ணும் நீரினும் உள்ளாய் – நீரினும் என்னும் உம்மை பிறபொருள்களிலும் உள்ளாய் என்பதைக் குறிக்கும் எச்சவும்மை. 51. யசோதைக்குக் குழந்தைக் கண்ணன் வாயைத் திறந்து உலகமுழுவதும் காட்டியதைக் குறிப்பது.

மண்ணை வாயில் வைத்தாய் போற்றி,
கோவினம் காத்த கோவே போற்றி,
ஆவியி னுறையும் அருளே போற்றி,
மூவடி யாலுல களந்தாய் போற்றி,
யாவரும் விரும்பும் எழிலே போற்றி,

பவவினை தீர்க்கும் பராபரா போற்றி,
சிவகதி காட்டுந் தேவே போற்றி,
போற்றி போற்றி புண்ணியா போற்றி,
கொக்கூர் உறையுங் கோபா லாவுனைத்
திக்கு நோக்கித் தெண்டனிட் டுரைப்பது.

கேட்டருள் புரிவாய், நாட்டினைக் காப்பாய்
சூழ நாட்டில் இன்றமிழ் சைவம்
வாழ வென்றும் வரந்தரல் வேண்டும்.
வறுமையும் பிணியும் வன்செயல் யாவும்
சிறுமையு நீங்கிச் சீரொடு மக்கள்

ஒற்றுமை பேணி ஊறுகள் போக்கிக்
கற்று வல்லராய்க் கடவுட் பணிந்து
சிவராச் சியத்தை நவமா யாக்கி
மங்கல மாக வாழ
இங்கருள் புரிவாய் ஏழுற வுலகே.

57. சிவகதி மேலே 36 ம் அடியின் விளக்கக் குறிப்பு பார்க்க. 63. என்றும் வாழ எனை மாறுக. 66. ஊறுகள் – ஒற்றுமைக்கு இடையூறாய் இருப்பவைகளைப் போக்கி. 68. சிவராச்சியம் – முடிவதில்லை. அந்த மங்கலமான அரசு மண்ணிலே உண்டாகும் வண்ணம் புதிய ஆட்சிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்பது கருத்து. இயேசு பெருமான் 'Thy Kingdom Come' என்று வேண்டுகிறார். கிறித்தவர்கள் கடவுளின் இராச்சியத்தைப் பூமியிலே உண்டாக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். இது எல்லாச் சமயத்தாருக்கும பொதுவான வேண்டுகோள். சிவம் என்றால் மங்கலம் என்பது பொருள். மக்கள் யாவரும் மங்கலமாக வாழும் வகையில் அமைந்த இராக்கியமே இங்குச் சிவராச்சியம் எனப்பட்டது. இதனால் தனியொரு சமயம் விதந்து கூறப்படவில்லை. எல்லாச் சமயத்தவருக்கும் ஏற்புடையது. 70. ஏழுற உலகே – உலகம் பாதுகாவலோடு இருக்க.

கொக்கூர் வேணுகோபாலர் ஒருபா ஒருபது முற்றிற்று.

பின்னிணைப்பு

'புதுக்கோவிற் பிரபந்தத்திரட்டு' என்னும் இத்தொகுப்பு நூலை 1989 வைகாசித் திங்களில் அச்சிட்டு வெளியிட நாம் ஒழுங்குகள் செய்திருந்தும், வெளியீடு பல தவிர்க்கமுடியாத காரணங்களால் தடையுற்றது. காலந்தாழ்ந்ததும் நன்மையாக முடிய முருகப்பெருமான் திருவருள் புரிந்திருக்கிறார். 1990-04-20 இல் கனடா தேசத்திலிருந்து எமக்குக் கடிதமொன்று வந்தது. புதுக்கோயிலில் எழுந்தருளி அருள் பாலித்துக்கொண்டிருக்கும் வேணுகோபாலர் மீது பாடிய ''ஒருபாவொருபது'' என்னும் பிரபந்தத்தின் கையெழுத்துப் பிரதியை நாம் கேட்டுக்கொண்டபடி அன்பர் செ. வேலாயுதபிள்ளை அவர்கள் அக் கடிதத்துடன் இணைத்திருந்தார்கள். பாடல்களைப் படித்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தோம். இப் பிரபந்தத்திற்கு அருள்மொழி அரசி, வித்துவான் திருமதி வசந்தா வைத்திய நாதன் அவர்கள் அணிந்துரை வழங்கியிருக்கிறார்கள்.

முன்னர் வெளிவந்த ''கொக்கூர் ஒருபா ஒருபஃது'' என்னும் பிரபந்தத்தை எளிய தமிழில் கந்தப்புராணக் கருத்துக்கள் யாவும் அடங்கியதாய் திரு. வேலாயுதபிள்ளை அமைத்திருந்ததை அறிஞர்கள் பலர் போற்றினர். இதேபோல் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பரத்துவம் முழுவதும் அடங்கியதாய் ''வேணுகோபாலர் ஒருபாவொருபது'' என்னும் பிரபந்தமும் அமைந்திருப்பது இவ்வாசிரியரின் தமிழ்ப் புலமையையும், மெய்ந்நூல் விளக்கங்களையும், சைவ சித்தாந்த கோட்பாட்டின் முக்கியத்துவத்தையும் நன்கு விளக்குகின்றன.

''கடம்பணிந்த மலர்மார்பும் கரங்கொண்ட தனிவேலும்
இடம்பெறவே எழிற்கொக்கூர் எழுந்தருளும் இறைவனவன்
உடம்பினுளே உயிர்க்குயிராய் உளன்கண்டாய் மடநெஞ்சே
இடம்பெயர்ந்து நெடுந்தூரம் இருப்பினுமென் இரங்கலையே.''

என்று ''பதிற்றுப்பத்தந்தாதி''யில் பாடியிருக்கும் இவ்வாசிரியரை எங்ஙனம் புதுக்கோவில் முருகன் ஈர்த்திழுத்திருக்கிறார் என்பதை யாம் சொல்ல வேண்டியதில்லை, அவர் பாடல்களை சான்று பகரும். இவ்வன்பருக்கு எமது அன்பளாவிய நன்றியையும், கடமைப்பாட்டையும் தெரிவித்து முருகன் சகல நலன்களையும் அவருக்கும் அவர் குடும்பத்தினர்க்கும் வழங்க வேண்டுமென்று இறைஞ்சுகிறோம். இறையருளாலே உணர்த்தும் இந்தத் தெய்வத் திருநூற் பணியை ஆசிரியர் விடாது தொடர்ந்தும் செய்ய வேண்டுமென்பதே எமது பிரார்த்தனை!

''குற்றங் களைந்து குணமாக்கிக் கொள்ளுதலே
கற்றறிந்த மாந்தர் கடன்.''

வெள்ளவத்தை, **செ. இரத்தினப்பிரகாசம்**

அச்சுப்பதிவு: போதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில்.